# ஸ்ரீ மணிகண்ட நாதம்

## பதிப்பு - III



இலங்கை

யாழ்ப்பாணம் கந்தர்மடம்

**ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை**

வெளியீடு - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சாமியே சரணம் ஐயப்பா

இலங்கை யாழ்ப்பாணம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை

# SRI LANKA JAFFNA
# SRI AYYAPPA MANIKANDA SABAI

**18 வது ஆண்டு நிறைவு மலர்**

**தலைமையகம்:**
இல. 48 2 ஆம் ஒழுங்கை
கந்தர் மடம்
யாழ்ப்பாணம்
தொ.பே : 0776 391055

சபையினுடைய 23 ஆண்டு நிறைவினை முன்னிட்டு
2020ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : ஸ்ரீ மணிகண்ட நாதம்
முதற்பதிப்பு : தை 2008
இரண்டாம் பதிப்பு : கார்த்திகை 2015
மூன்றாம் பதிப்பு : மார்கழி 2020
வெளியீடு : இலங்கை யாழ்ப்பாணம்
ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை
இல. 48, 2ஆம் ஒழுங்கை,
கந்தர்மடம்
யாழ்பாணம்
தொலைபேசி 077639 1055
கணினி வடிவமைப்பு : ஸ்ரீ வித்யா கணினி அச்சகம்,
இணுவில்.
அச்சிட்டோர் : கஜானந்த் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்
இணுவில்

Book : Sree Manikanda Natham
1st Edition : 2008
2nd Edition : 2015
3rd Edition : 2020
Published By Sri Lanka, Jaffna
Sree Ayyappa Manikanda Sabai
No. 48, 2nd Lane,
Kantharmadam
Jaffna
Tel- 0776391055



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 01. | மனிதனை மனிதன் ஆக்கும் சபரிமலை யாத்திரை | 1 |
| 02. | ஐயப்பன் தர்மத்தின் ஒளி | 4 |
| 03. | ஐயப்பன் உருவில் அத்வைதம் | 5 |
| 04. | ஸ்நானங்கள் | 5 |
| 05. | விபூதி அணிவதன் சிறப்பு | 7 |
| 06. | விபூதி வாங்கும் போது பணிவோடு வாங்க வேண்டும் | 8 |
| 07. | காவி உடை அணிவதன் நோக்கம் | 9 |
| 08. | விரதம் அனுஷ்டிப்பது எப்படி | 9 |
| 09. | விரதம் என்பது எது தெரியுமா | 10 |
| 10. | பூஜை முறைகள் | 11 |
| 11. | ஐயப்பனை வணங்கும் தத்துவங்கள் | 12 |
| 12. | ஐயப்பன் யாத்திரை தத்துவம் | 13 |
| 13. | சபரிமலை தத்துவம் | 15 |
| 14. | சுவாமி ஐயப்பன் | 16 |
| 15. | சுவாமி என்றால் என்ன | 17 |
| 16. | பதினெட்டுப்படி தத்துவமென்ன | 18 |
| 17. | பதினெட்டாம் படியின் தத்துவம் | 19 |
| 18. | பதினெட்டாம் படி பூஜை | 19 |
| 19. | பதினெட்டுப் படிகள் புதுப்பித்தல் | 20 |
| 20. | ஐயப்பனின் திருமேனி தத்துவம் | 21 |
| 21. | ஐயப்பனின் சின் முத்திரை | 21 |
| 22. | சாஸ்தாவின் ஆறு ஆதாரங்கள் | 22 |
| 23. | குரு அருள் பெற வேண்டும் | 24 |
| 24. | சபரிமலையின் பெயர் எப்படி வந்தது | 26 |
| 25. | இருமுடியின் புனித தன்மை | 27 |
| 26. | இருமுடிக்கு வேண்டிய பொருட்கள் இருமுடி பை அளவு விபரம் | 29 |
| 27. | நெய் அபிஷேகம் | 30 |
| 28. | பிரமச்சாரி ஆவது எப்படி | 30 |
| 29. | அங்கப்பிரதட்ஷணம் | 32 |
| 30. | தானத்தில் சிறந்தது அன்னதானம் | 33 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. வஸ்த்ர தானம் செய்வதால் பிறவிப்பிணி நீங்கும் 34
32. பாத பூஜை மகிமை 35
33. நவக்கிரகத்தின் ஆட்சி 36
34. திருவாதிரையும் திருவோணமும் 37
35. கன்னி பூஜை என்றால் என்ன 38
36. திருவாபரணப் பெட்டி 39
37. ஐயப்பன் ஆபரணம் பூணுவது ஏன் 40
38. மகர ஜோதி தரிசனம் 41
39. எரிமேலியின் வரலாறு 42
40. பேட்டை துள்ளல் எதற்காக 43
41. சபரிமலைக்கு இளம் பெண்கள் வரலாமா (நீதிமன்றம் தீர்ப்பு) 44
42. மாலை அணிந்த ஐயப்பன் இல்லங்களில் நமது பெண்களின் கடமைகள் 46
43. மற்ற காலங்களில் வீட்டில் ஐயப்பனை வழிபடலாமா 47
44. ஐயப்பனை தேடி ஆறு வாரங்கள் 48
45. அருள் மிகு ஐயப்பன் வரலாறு 50
46. மாலை அணியும் முறைகள் 62
47. மாலை அணிந்துகொள்ளும் போதும் மாலை கழற்றும்போதும் மந்திரம் 62
48. முக்கிய விரத முறைகள் 63
49. சபரிமலை யாத்திரை 63
50. பாதைகள் 69
51. சபரிமலை சாஸ்தா மூல மந்திரங்கள் 70
52, வைரவர் வழிபாடு 72 - 94
53. கணபதி தோத்திரங்கள் 95 - 102
54. சிவன் தோத்திரம் . 103 - 109
55. விஷ்ணு தோத்திரங்கள் 110 - 124
56. நாகராஜா தோத்திரங்கள் 125 - 126
57. அம்மன் தோத்திரங்கள 127 - 140
58. முருகன் தோத்திரங்கள் 141 - 154
59. வைரவர் பாடல் 155 - 158
60. ஆஞ்சநேயர் தோத்திரங்கள் 159 - 164
61. ஐயப்பன் தோத்திரங்கள் 165



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு 165
பந்தளம் தந்திட கற்பத்தருவே கற்பூரநாதா 166
ஸ்ரீ சபரிவாச பாஹிமாம் 167
பகவான் சரணம் 167
ஓம் குருநாதா ஐயப்பா 168
ஜீவன் என்பது உள்ளவரை 169
இருமுடி தாங்கி ஒருமனதாகி 170
மறக்க முடியல 172
சன்னதியில் கட்டுங் கட்டு 172
திம்தகத் தோம் 173
வானவர் காவலன் சன்னதி 174
அந்தமலை இந்தமலை 175
சுவாமியே சரணம் ஐயா 176
என்ன மணக்குது 177
தள்ளாடி தள்ளாடி 179
கட்டும் கட்டு பள்ளிக்கட்டு 180
எங்கே மணக்குது 181
அவருமில்லே இவருமில்லே 182
மோகினி தன் மோகன 184
மணிகண்ட நாயகனே 184
ஐயப்பனே ஐயப்பனே 185
இருமுடி கட்டு 186
வந்த கடன் தீர வில்லை 187
ஐயப்பா தேவா 188
சாஸ்தா என்றழைக்கவா 188
ஆடிவா அழகா பொன்னையா 189
பம்பா நிதக்கரையின் சாமி 190
தேவன் நீயது 191
சந்தனமுனா சந்தனம் 192
எங்கசாமி 193
வந்தோமையா சபரி வந்தோமையா 193
பவனி வருகிறார் 194
குழத்துப் புழை பாலகன் 195
இருமுடியை சுமந்து வந்தேன் 195



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே எங்கே 196
தாலாட்டுப் பாடவா 197
உன்னைத் தோழனென்பதா 199
சரணம் சரணம் ஐயப்பா 199
படியேறி வரவேண்டும் 201
இருமுடி ஏந்தி வந்தோம் 202
ஐயனோட ரூபமாக 203
இறைவா சபரீசா 205
ஈசா சபரிமலை 206
லாகி லாகி 206
கந்தர் மடம் வந்து 207
அவனி எங்கும் 208
அச்சன் கோயில் அரசன் 209
அம்மாவும் நீயே 209
சாமி சரணம் என்றால் 210
ஐயா என்று அழைக்கவா 211
மலையே மலையே 212
நடைவழி திறந்தது திருவடி மலர்ந்தது 213
அச்சங் கோவில் அரசே 215
மலைபோன்ற வாழ்வருள்வாய் 216
பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால் 217
பந்தளம் தந்திட நேரனையா 217
பச்சைப்பிள்ளை 218
அலையும் மனதினிலே அமைதி தாராயோ 218
சத்திய சோதி 219
காடுமலை கவலை இல்லை 220
சரணம் சொல்லி கூப்பிடுவோம் 221
பூப்பறிக்கிற ஐயப்பா பூ தாறேன் ஓடிவா 222
அப்பா அப்பா 224
குருபதம் தொழுதே கூட்டமாய் வருவோம் 225
இந்த கான கருங்குயிலின் 226
எங்கே ஓடுது 227
பம்பாவாசா 229
எமனையும் வெல்லலாம் 230



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பா ஐயப்பா 231
கற்பூர சுடர் ஒளியே 232
ஊரும் மறந்தேன் உறவும் மறந்தேன் 232
கொடி மரம் 234
எங்க பகவான் 234
ஐயப்பன் அழகைப் பாருங்க 234
ஆடிபாடி வந்திடுவோம் 235
அருள் மழை பொழிவாய் 236
பெருவினை தீர்க்க இருமுடி தூக்குக 237
தரிசனம் கண்டேன் 238
சாதி மத பேதமில்லை 239
கன்னி சாமி நீ 240
தேன் மலரே தெள்ளமுதே ஓடிவா ஐயப்பா 242
பள்ளிக்கட்டு பள்ளிக்கட்டு 243
துளசி மாலை தாங்கும் 244
சபரி கிரி சாஸ்தா எங்கே 248
அம்பலத்து மன்னவனை 249
ஐயப்பனே துணை 250
தேவாதி தேவன் 252
அன்னதானப் பிரபுவே 252
ஐயனார் அப்பன் சங்கிலி கறுப்பன் 254
கைகொடுத்துக் காப்பாய் ஐயப்ப தேவா 256
அப்பனுக்கு மலையுண்டு 257
கண் திறந்து பாரப்பா 258
உலகாளும் ஐயன் 259
ஐயா சாமிமாரே 260
அழகுமலை வாழும் ஐயப்பா 261
ஐயன் அருள் உண்டு 262
கல்லும் முள்ளும் 263
எங்கிருந்தாலும் நான் வருவேன் 264
ஆனைபுலி ஆடிவரும் 265
காடு மலை கடந்து வந்தோம் 266
பதினெட்டுப்படியேறிப் பாவங்களைத் தீர்ப்போம் 267
விழிகிடைக்குமா 268



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆனை அலை இற நீலி மலை | 268 |
| கன்னிச்சாமி | 270 |
| காந்தமாமலை வாழும் | 271 |
| சதாசிவன் மகனே | 272 |
| அருள் நாடிக் கும்பிடுவோர் பலகோடி | 274 |
| தேடுகின்ற கண்களுக்குள் | 275 |
| ஜாதிமத பேதமில்லை | 276 |
| பம்பா நதியே | 277 |
| மாயவன் பாதம் சரணடைவோம் | 278 |
| பம்பா விளக்கே | 280 |
| சுவாமியே சரணம் ஐயப்பா | 281 |
| வாபர் சாமி | 282 |
| வில்லும் அம்பும் | 284 |
| மாமலை சபரியிலே | 285 |
| ஓடிவா ராஜா! நீ ஓடி வா சுவாமி | 286 |
| யாரை நம்பி யாரு | 287 |
| சந்தனப்பூ வாசம் | 288 |
| எப்படியும் உன் படிக்குத் தப்பாமல் வந்திடுவோம் | 290 |
| பெருவழியில் நடந்தவர்க்கும் பேரருள் புரிந்திடுவாய் | 291 |
| ஐயப்பா சாமியும் ஆறுமுக சாமியும் | 292 |
| விரதம் இருக்கும் | 295 |
| அழகானவர் பேர் சொல்லி ஆடுமயிலே | 296 |
| சரணம் சொன்னால் மரணம் இல்லை | 296 |
| கார்த்திகையில் மாலையிடும் | 297 |
| பிள்ளையார் பிறப்பார் மணிகண்டன் | 298 |
| மலையா ஆலயமாம் | 299 |
| ஆனந்த நிலை பொங்கும் சபரிமலை | 301 |
| இதயம் என்றும் உனக்காக | 301 |
| என்ன வேண்டி | 302 |
| ஓம் ஓம் ஐயப்பா | 304 |
| அருள் செய்யப்பா! சாமியே! | 306 |
| சரணம் விளித்தால் மரணம் இல்லை | 307 |
| எத்தனை கண் இருந்தாலும் | 308 |
| ஓங்கார நாதத்திலே | 308 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| காடுமலை கடந்து வந்தோம் | 309 |
| மூணு கண்ணுத் தேங்கா | 310 |
| நல்முத்து மணிமாலை | 312 |
| கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா | 313 |
| பம்பை நதிக்கரையே | 314 |
| புறப்படுவோம் புறப்படுவோம் | 315 |
| பால் முகம் கண்டோம் | 316 |
| குருசாமி சரணம் | 317 |
| பொடிநடையா பொடிநடையா | 320 |
| மலையாம் மலையாம் சபரி மலையாம் | 321 |
| பந்தள ராஜனை தேடி | 322 |
| சபரியில் மட்டும் தானா ஐயன் இருப்பான் | 324 |
| மலைராஜன் திருக்கோவில் | 327 |
| ஓம் அரிகரசுதனே சரணம் ஐயப்பா | 328 |
| பம்பை மன்னன் | 329 |
| மோகினி தந்த | 330 |
| சரணம் ஒலிக்குதையா | 331 |
| துளசி மணிமாலை கட்டி | 332 |
| கானக மலையின் | 332 |
| ஐந்து மலை ஆளுகின்ற சபரிசா | 333 |
| எங்கே பயணம் | 334 |
| சபரிமலை சாஸ்தாவே ஐயப்பா | 335 |
| ஏற்றிவிடப்பா | 336 |
| நீயல்லால் துணையுமில்லை | 337 |
| காத்து ரக்ஷிக்கணும் | 337 |
| பேட்டை துள்ளி | 338 |
| மணிகண்ணடன் அருளுக்கு | 339 |
| சஞ்சலங்கள் தீர்த்து வரும் சபரிமலை வாசா | 340 |
| பம்பா நதிக்கரையோரம் | 341 |
| சபரிகிரி வாழும் ஈசா | 342 |
| குருவின் குருவே | 343 |
| வா! வா! ஐயப்பா! வந்தாரு ஐயப்பா | 345 |
| போனால் சபரிமலை | 347 |
| எங்கிருந்தாலும் உன்னைப் பணிவேன் | 348 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிமலை சரணமழை 349
சாமியப்பா ஐயப்பா 350
ஐந்து மலையில் 351
ஐயப்பன் நாமத்தை 352
மலை மலை மலை 354
சபரிமலை 355
கார்த்திகை அதிகாலை நீராடி 358
எங்கெங்கும் ஐயப்ப கோஷம் 358
அழகான சபரிமலை ஆண்டவா 359
பம்பை கரைதனிலே 360
மார்கழிமாதம் ஊர்வலம் 360
பொன்னூஞ்சல் ஆடுகிறார் 361
எங்கும் நிறைந்தாயே 362
சபரி வந்தோமையா 363
சபரிமலை என்று ஒரு மலை 364
மஞ்சள் மாதா 364
18ம் படி பூப்பாடல் 366
ஸ்ரீ ஐயப்பன் கவசம் 370
ஸ்ரீ தர்மசாஸ்தா அஷ்டோத்ரே சத நாமாவளிகள் 375
அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக் கோவை 379
கருப்பன் வாறான் 383
கறுப்பு கறுப்பு கறுப்பு கறுப்பு 384
எங்க கறுப்பு சாமி 386
கறுப்பண்ண சாமி 391
பதினெட்டாம் படிப்பாடல் 393
சாஸ்தா ஆராத்தி தீப மங்களம் 397
தர்மசாஸ்தா காயத்ரி 399
ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம் 399
வழி நடைப்பாடல் 401
மங்களம் 405
ஹரிவராஸணம் சுவாமியே சரணம் ஐயப்பா 406
விரத நாட்களில் சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பூஜைகளும், பூஜைக் கட்டுப்பாடுகளும் 408
கட்டுப்பாடுகள் 409



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வாமியே சரணம் ஐயப்பா



# ஆசியுரை

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஸத் குருவே சரணம்

*"யதா யதாகி தர்மஸ்ய க்வானிபவது பாரத்"*
*"அப்யுத்தான மதர்மஸ்ய ததாத் மானம் ஸ்ருஜாம்யஹம்"*

அந்தர் முகமான ஆன்மீக யாத்திரையின் பஹிர்முக பிரதிபலிப்பாக விளங்கும் சபரிமலை யாத்திரையின் தத்துவார்த்த அடிப்படையில் ஸ்ரீ மணிகண்டன் மீது இந்த 23வது ஆண்டு மலர் பஜனைப் பாடல்கள் சரண கோசங்களுடன் வெளியிடப்படுவது கலியுகத்தில் நாம சங்கீர்த்தனமே சிறந்தமேஷ ஸாதனமென்பது ஆன்றோர்கள் உபதேசித்துள்ள அருள் வாக்கு. எமது சபையால் அனுசரிக்கப்பட்டு வரும் பாஹவத சம்பிரதாயத்தைப் பின்பற்றி கலியுக ப்ரத்யக்ஷ தெய்வமாம் ஸ்ரீ ஹரிஹர புத்திரன் மீது ஒரு புதிய பஜனைப் பத்ததி உருவாக்கப்பட வேண்டும் என்ற எனது ஆசை நல்ல பல பக்தர்களின் மனதில் இருந்து வந்தது. அது தற்போது சாமியை வேண்டி நல்லாசி கூறுகிறேன்.

ஸாக்ஷாத் விஷ்ணு ஸ்வயம் மாதா
பிதா யஸ்ய மஹேவர:!
தம் வந்தே ஸ்ர்வ பூ தேசம்
சாஸ்தாரம் கருணாநிதிம்

**சிவஸ்ரீ நா.பா.ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்**
**நம்பிக்கைப் பொறுப்பாளர், பிரதமகுரு**
**ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்,**
**செட்டியந்தாழ்வு, கந்தர்மடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

கந்தர்மடம் ஸ்ரீ மணிகண்ட சபையினர் செய்து வரும் சபரிமலை யாத்திரைப் பணிகளின் சிகரமாக அமைந்தது இந்த "ஸ்ரீ மணிகண்ட நாதம்" நூல் வெளியீடு ஆகும்.

புதிதாக மாலை அணிந்து யாத்திரை செய்ய விரும்பும் கன்னிச் சாமிமார்களுக்கும், ஐயப்பன் வழிபாடுபற்றித் தெரிந்து கொள்ள விரும்பும் மற்றும் அடியார்களுக்கும் மிகவும் பயனுள்ளது இந்த நூல். சபரிமலை ஐயப்பனின் வரலாறுகள், விரதமுறைகள், இவற்றில் பொதிந்திருக்கும் அரிய தத்துவங்கள் யாவற்றையும் இந் நூலின் முதற்பகுதி தெளிவாக விளக்குகிறது.

இரண்டாம் பகுதி, பஜனைப் பாடல்களின் தொகுப்பு. நாற்பத் தொரு நாள் மண்டல விரதம் இருக்கும் ஐயப்ப சுவாமிமார்கள் தினமும் பஜனைகள் படிப் பாடி ஆடி மகிழ்வதற்கேற்ற பழைய புதிய பாடல்கள் பலவற்றையும் இங்கு காண முடிகிறது.

மணிகண்ட சபையினரின் சேவைகளைப் பாராட்டி, இந்நூல் வெளியீடு சிறக்க நல்லாசி கூறி அமைகின்றோம்.

சுவாமியே சரணம் ஐயப்பா.

**பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா**
**(கோப்பாய் சிவம்)**
**அமைப்பாளர்,**
**சர்வானந்தமய பீடம்**
**இணுவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானிலிருக்கும் மணிகண்ட சபையினர்



சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக்குருக்கள்
(போஷகரும் ஸ்தாபகரும்)
சிவஸ்ரீ பா.சாந்தஸ்வரூபக்குருக்கள்
கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம்
ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை



சிவஸ்ரீ நா.பா.பாலஸ்கந்தரூபக்குருக்கள்
குருசுவாமி
(23 வரு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர்மடம்
## ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை



சிவஸ்ரீ பாலகணேசக்குருக்கள்
(நித்ய குருசுவாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிகண்ட சபைக்கு ஆதரவு நல்கிய குருசுவாமிகள்



சிவஸ்ரீ தாணு.
வாசுதேவக் குருக்கள்
உரும்பிராய்
சிவதர்ம சாஸ்தா
தேவஸ்தானம்



சிவஸ்ரீ
சுந்தரேஸ்வரக்குருக்கள்
நவிண்டில் சுந்தர
ஐயப்ப ஆஞ்சநேயர்
தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிகண்ட சபையினை வளர்த்த சுவாமிகள்



அமரர்
திரு.சி.அமிர்தகடேஸ்வரன்
செல்வம் சுவாமி
வண்ணார்பண்ணை
(முன்னாள் செயலாளர்)



அமரர்
திரு.லோகநாதன் சுவாமி
முன்னாள்
ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தர்மடம் மணிகண்ட சபை ரூபன் குருசுவாமி அவர்களின் 18ஆம் மலை மணிகண்டநாதம் இறுவட்டு வெளியீட்டு விழாவில் யாழ்ப்பாணத்து குருசுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை மனிதன் ஆக்கும் சபரிமலை யாத்திரை

சபரிமலை யாத்திரை என்பது விரதமிருந்து கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தும் புனித யாத்திரை மட்டுமல்ல. அது இந்து சமயத்தின் அனைத்து கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்ட ஆன்மீகப் பயணத்தைக் கற்பிக்கிறது. சபரிமலை யாத்திரை செல்பவர்கள் முதற்கட்டமாக சிறந்த குருவை நாடவேண்டும்.

ஞானகுருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதே சிறந்த ஆன்மிக நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும், ஆணவம் கொண்டவர்களிடம் ஆண்டவன் தன்னை வெளிப்படுத்துவதில்லை

தன்னிடம் சபரிமலை யாத்திரைக்கு மாலை போட்டுக் கொள்ளும் சீடனை, குரு தனது குழந்தையைப்போல் கருத வேண்டும். மாலை தரிப்பது முதல் யாத்திரை முடியும் வரையில் ஒரு குருவுக்கு அடங்கி இருக்கவேண்டும், இது ஒரு பக்தனின் ஆணவத்தை அடக்குகிறது. பணிவை வரவழைக்கிறது. பணிவுள்ள இதயத்தில் இறைவனின் திருவருள் வந்து தங்குகிறது. சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் காவி, கருநீலம், கறுப்பு நிற ஆடைகளை அணிகிறார்கள். இது தியாகம், துறவு புலனடக்கம், இல்லறத்தில் துறவறம் ஆகியவற்றின் சின்னமாகவும் ஏழை பணக்கார பாகுபாட்டை அகற்றும் சிருடையாகவும் திகழ்கிறது. இங்கு ஆணவம் அறுக்கப்படுகிறது.

சவரம் செய்யப்படாத முகம் உடல் பற்றை நீக்கும் வகையில் அழியும் தன் உடலை அலங்கரிக்கும் தன்மையை விலக்குகிறது. எளிய உணவு, ஏழ்மை எப்படி இருக்கும் என்பதை வசதி படைத்தவர்கள் உணர்வதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. மேலும் உணவுக்கட்டுப்பாடு நமது நாவையும் மனத்தையும் நாம் அடக்குவதற்கு ஒரு பயிற்சியைத் தருகிறது. இந்த யாத்திரையை மேற்கொள்பவர்கள் தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். அப்போது, "ஐயப்பா என் உடல் தூய்மை அடைவது போல் எனது உள்ளமும் தூய்மை அடைய வேண்டும்" என்ற ஒரு பிரார்த்தனையும் செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மிகவும் உன்னதமான ஒரு பிரார்த்தனை அல்லவா! குளிர்ந்த உள்ளத்தில் காமம், கோபம், போன்ற மன விகாரங்களுக்கு இடமில்லை. தூய உள்ளத்தில் இறைவன் குடிகொள்வது இயலபாகவே நடைபெறுகிறது. இதற்குமேல் மனிதப் பிறவியில் வேறு என்ன தேவை?

ஐயப்ப பக்தர்கள் "சுவாமியே சரணம் ஐயப்பா!" என்று கூறுவது, இறைவா நான் உன்னிடம் பரிபூரணமாகச் சரணடை கிறேன் என்பதை குறிக்கிறது. இந்த உண்மையை உணர்ந்தே அந்த வாசகத்தைக் கூற வேண்டும். சபரிமலைக்குச் செல்பவர்கள் அனைவரையும் சாமி, சாமி என்று அழைப்பது வேடிக்கைக்காக அல்ல. அதன்மூலம் "நானும் ஐயப்பன், இந்த உலகில் நான் காண்பதெல்லாம் ஐயப்பன் சொரூபம்" என்ற ஞான நிலை ஏற்படுவதற்கு ஒரு பயிற்சிக் களம் கிடைக்கிறது. சகோதரத்து வத்தையும் இது வளர்க்கிறது. மாலை அணிந்த பக்தர் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவில் அன்னதானம் போன்ற வற்றைச் செய்யவேண்டும். அவ்வாறு பூஜை, ஜபம், தியானம் செய்வது அலைபாயும் நமது மனம் அடங்கி இறைவனைத் தியானம் செய்வதற்கு மிகவும் சிறந்த நேரம் என்று பெரியோர்கள் அனைவரும் கூறியிருக்கிறார்கள். நிராடிய பின்பு பூஜையில் ஈடுபட வேண்டும். தூய ஆன்மீக வாழ்க்கையில் பிரமச்சரியம் தலையாய முக்கியத்துவம் பெறுகிறது.

உடலால் மட்டுமன்றி உள்ளத்தாலும் பிரமச்சரிய வாழ்க்கை வாழ்வதுதான் ஆன்மபலம் அளித்து இறைவனிடம் நாம் நெருங்கிச் செல்ல உதவும் என்பது அனுபவத்தில் புலப்படும்.

உணவு, உடை, படுக்கை, அலங்காரம் போன்றவற்றில் ஐயப்ப பக்தர் ஒவ்வொருவரும் எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டும், இது அவர்களின் ஆணவத்தை நீக்கும் புலனடக்க பயிற்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். சபரிமலை யாத்திரை சமயத்தில் கடைப்பிடிக்கும் சுய கட்டுப்பாடுகளை யாத்திரைக்குப் பிறகும் கடைப்பிடிப்பது நமது ஆன்மாவைப் பக்குவப் படுத்துவ தற்கும் மிகவும் பெரிய அளவில் நமக்கு உதவி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரை புறப்படும் சமயத்தில் "ஆண்டவனே நான் பரிபூரணமாக உன்னைச் சரணடைகிறேன். இதோ நான் உடைக்கும் இந்தத் தேங்காய் சிதறுவது போல் இந்தப் பிறவியில் எனக்கு நானே ஏற்படுத்திக் கொண்ட பந்தபாசம், ஆணவம் போன்றவைகளும் சிதறிப்போக அருள்வாய்" என்ற பிரார்த்தனையை உட்பொருளாகக் கொண்டே விடலைத் தேங்காய் உடைக்கப்படுகிறது

கல், முள், ஏற்றம், இறக்கம் உடலை உறைய வைக்கும் பனி, பாதாளங்கள், உயிரையே பறிக்கத் தயாராக வரும் கொடிய மிருகங்கள் ஆகியன சேர்ந்ததுதான் சபரிமலை யாத்திரை. இவற்றையெல்லாம் கடந்துதான் அந்த ஐயப்பனைத் தரிசிக்க முடியும். மனித வாழ்க்கையில் இவைபோன்ற ஏற்றத் தாழ்வுகள், கஷ்ட நஷ்டங்கள், காமம், கோபம் போன்ற மிருகங்கள் அனைத்தும் உண்டு. அதில் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு உரிய ஒரே வழி ஆண்டவனைச் சார்ந்து வாழ்வதுதான் என்பதே இந்த யாத்திரையின் உட் பொருளாகும்.

மனித வாழ்க்கையின் நோக்கமே இவை எல்லாவற்றையும் கடந்து இந்தப் பிறவியிலேயே இறைவனின் திருவடிகளைச் சேர்வதே ஆகும். எல்லா விதமான உலகியல் மயக்கங்களையும் கடந்துசென்று இறைவனிடம் பரிபூரணமாகச் சரணடைந்தால்தான் மெய்ஞானம் பெறமுடியும். இதனையே சபரிமலையில் 18 படிகளைக் கடந்து சென்று ஐயப்பனைத் தரிசிப்பது உணர்த்துகிறது

இந்த யாத்திரைக்குரியவை அனைத்தும் மன ஒருமைப்பாட்டுக்கும் மனத்தூய்மைக்கும், இறைத்தன்மை அடைவதற்கும், அகங்காரத்தைப் போக்குவதற்கும் துணை புரியும் வகையில் அமைந்துள்ளன. இறைவனை அடைவதற்கு ஜாதி, மதம், செல்வம், வறுமை, வயது போன்றவை எதுவும் தடையில்லை என்பதனை சபரிமலை யாத்திரை விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் தர்மத்தின் ஒளி

மனத்துய்மையின்றி, சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை உடல் தூய்மையும் உள்ளத்தூய்மையுமின்றி பகவானை வழிபடுவதில் பிரயோசனமில்லை. பரிசுத்தமான உடம்புடனும், மனதூய்மையான உள்ளன்போடும் பகவானை வழிபடுவோருடைய வேண்டுகோளை பகவான் செவி சாய்க்கிறார். உள்ளத் தூய்மை அற்றவர்களும் மற்றவர்களுக்குச் சமய போதனை செய்கிறார்கள். ஆனால் முடிவில் அவர்கள் முயற்சி தோல்வி அடைந்தே தீரும். பகவானை வழிபடுவது உளங்கனிந்த பக்தியின் சின்னமாகும். பகத்தியும் தூய்மையும் நமக்கு உண்மையில் வேண்டுவன.

மனத்தூய்மை குறையுள்ளவன் கோவிலுக்கு போவானே யானால் அவன் செய்த பாவங்களோடு மற்றொரு பாவத்தையும் செய்கிறான். புனித ஸ்தலங்களுக்கு சென்றால் அவன் செய்த பாவங்கள் நீங்குவதாகும். உங்களை தேடி வரும் ஆன்மாக்களுக்கு உங்கள் சக்திக்கு இயன்றவரை மனத்தூய்மையுடன் உதவிபுரிய வேண்டும். பிறருக்கு உதவிபுரியும் குணத்தினால் உங்கள் மனம் தூய்மையடைகிறது. சித்த சுத்தி அடைய முடியும். பகவான் எப்பொழுதும் நம் உள்ளத்தில் குடிக்கொண்டு இருக்கிறார். எவன் ஒருவன் தன்னலமின்றி பிறருக்கு வாழ்கின்றானோ அந்த அளவுக்கு ஆன்மீக ஞானம் அடைகிறான்.

தர்மம் எங்கிருந்தாலும் உண்மை ஒளியை நாடுகின்ற உள்ளங்கள் அதைத்தேடி அது கொலு வீற்றிருக்கும் இடத்திற்கு செல்லும். அந்த உலகாளும் தர்மம்தான் கலியுக வரதனாக, கண்கண்ட தெய்வமாக ஐந்துமலை நடுவில் சபரிமலை அடிவாரத்தில் மனிதனாக வளர்ந்து, இறைவனடி சேர அவன் கடந்து வரவேண்டிய 18 தத்துவங்களையும் 18 படிகளாக அமைத்து, உண்மை நீதி இவைகளால் அவற்றிற்கு காவல் அமைத்து அதன் மேல் சர்வஜ்ஞ பீடத்தில் பிரமச்சாரியாக சின் முத்திரையோடு ஜோதிஸ்வருபனாகக் காட்சி அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் உருவில் அத்வைதம்

இந்து மதத்தின் மாபெரும் தத்துவங்கள் அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம். அத்வைதம் என்பது நானே பிரம்மம் என்பதாகும். விசிஷ்டாத்வைதம் என்பது ஜீவன் வேறு பிரம்மம் வேறு என்பதாகும். துவைதம் என்பது பிரம்மமும் ஜீவனும் வேறு என்றாலும் ஒரு நிலையில் அவைகள் ஒன்றுபடுகின்றன என்பது. முப்பெரும் தத்துவங்களில் ஓர் உருவமாகத் திகழ்பவர்கள் ஸ்ரீ ஐயப்பமார்கள் மாலை அணிந்து விரதம் தொடங்கிய நாளிலிருந்து அத்வைத தத்துவப்படி அஹம் பிரம்மாஸ்மி என தானே கடவுளாகத் திகழ்கிறார். அவரை அனைவரும் சுவாமி என்று அழைத்து சரணம் கூறுகின்றனர்.

அடுத்து, விரதம் முடித்து சபரிமலை ஸ்ரீ ஐயப்ப தரிசனத்திற்கு செல்லும் நேரத்தில் ஜீவன் வேறு பிரம்மம் வேறு. முயற்சித்தால் ஜீவன் பிரம்மனைக் காணலாம் என்று விசிஷ்டாத்வைதத் தத்துவத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறார்.

ஸ்ரீ சுவாமி ஐயப்பனைக் கண்டு அவனருளில் சங்கமிக்கும் நேரத்தில் பிரம்மமும் ஜீவனும் வேறென்றாலும் ஒரு நிலையில் அவைகள் ஒன்றுபடுகின்றன என்ற துவைத தத்துவத்திற்கு உதாரணமாய்த் திகழ்கிறோம். இப்படி அர்த்தமுள்ள இந்து மதத்தின் முப்பெரும் தத்துவங்களின் உருவகமாக திகழ்பவர்கள் தான் ஸ்ரீ ஐயப்ப பக்தர்கள்.

## ஸ்நானங்கள்

ஸ்நானங்களில் பலமுறைகள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி இந்து தர்மங்கள் விவரிக்கின்றன. நதி, குளம், முதலியவை களில் மூழ்கி ஸ்நானம் செய்வது, கிணற்றிலிருந்த ஜலம் எடுத்து ஸ்நானம் செய்வது, வெந்நீர் ஸ்நானம் செய்வது, விபூதியினால் உடம்பு பூராகவும் பூசிக் கொள்வது போன்ற பலமுறைகள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் இவைகளில் மூழ்கி ஸ்நானம் செய்வது உத்தமம். கிணற்றிலிருந்து ஜலம் எடுத்து ஸ்நானம் செய்வது மத்திமம். ஸ்நானம் செய்ய முடியாத நிலையில் விபூதி ஸ்நானம் விதிக்கப்பட்டிருக்கிறது.

சமுத்திர ஸ்நானம் தினந்தோறும் செய்யக்கூடாது. பருவகாலங்கள் செய்ய வேண்டியது. ஆனால் இராமேஸ்வரம் போன்ற பெரிய க்ஷேத்திரங்களில் என்றைக்கும் ஸ்நானம் செய்யலாம்.

விஞ்ஞான ரீதியாக பார்க்கும்போது விடியற் காலையில் குளிர்ந்த நேரத்தில் அடிக்கும் காற்றில் ஓசோன் அதிகமாக கலந்து இருக்கிறது. ஆகையால் தண்ணீரில் ஒரு விதமான ஈர்ப்பு சக்தி அதிகமாகக் கலந்திருக்கிறது. அதிகாலையில் ஸ்நானம் செய்தால் நல்லது என்று தெரிகிறது

ஆகையால் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த ஜலத்தில் ஸநானம் செய்வது பிரம்ம முகூர்த்தம் என்று அழைக்கிறார்கள். விடியற்காலை 4.30 மணிக்குமேல் 6 மணிக்குள் ஸ்நானம் செய்வது உத்தமம். குளிர்ந்த நீரை உள்ளுக்குள் அருந்தி எல்லாம் வல்ல சக்தியை நினைவு கூர்ந்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

அகல்யா திரௌபதி தாரா மண்டோதரி ததா
பஞ்ச கன்யா ஸ்மரேன் நித்யம் பாப விமோச்சனம்

என்று அதிகாலையில் மூன்று தரம் உச்சரித்தால் நாம் அன்றாடம் செய்யும் பாவங்கள் நிவர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபூதி அணிவதின் சிறப்பு

விபூதி தரிப்பதால் இம்மையில் செய்த பாவம் நீங்குவதுடன் அநேக ஜென்மங்களில் செய்த பாவங்களும் நீங்குகிறது.

கள் குடித்தல், திருடுதல், பிரம்மஹத்தியைச் செய்தல் முதலிய பாவங்களைச் செய்தவனும் விபூதியை அணிந்து ஸ்ரீ ருத்திரத்தை ஜபித்தால் சகல பாவங்களிலிருந்து நீங்குகிறான்.

கௌதமருக்கும் அகலிகைக்கும் நடந்த விவாகத்தில் குழுமியிருந்த சகல தேவர்களுக்கும் அந்த அகலிகையின் பேரழகில் மயங்கி அறிவையிழந்து மோகமதிகரித்து கலிதமானது. அந்தப் பாப பரிகாரத்தின் பொருட்டு தேவர்கள் துர்வாசரை அடைத்து விண்ணப்பித்தனர். துர்வாச முனிவர் விபூதியை அளித்துகொள்ளும்படி கூறினார். அவ்விதமே சகல தேவர்களும் விபூதியை அணிந்து அந்தப் பாவத்திலிருந்து விடுபட்டனர். இதனை பிருஹஸ்யா பாலத்தில் ஸ்ரீ கௌதம விவாககாலே என்று தொடங்கிச் செல்லும் வசனங்களால் கண்டு தெளிக.

விபூதி தரிப்பதனால் நோய் நீங்குகிறது. விபூதி தரிப்பதினால் பூதப் பிரேத பிசாசு முதலியவை அஞ்சி நடுங்கி அலறியோடுகின்றன. விபூதி தரிப்பதினால் நோய் நீங்குகிறது. விபூதி நரிப்பதினால் சுத்தம் ஏற்படுகிறது. மயிர், புழு இவை அடைந்த அன்னத்தின் தோஷம் நீங்கும் பொருட்டுச் சுகத்திற்காக விபூதி போடுகின்றனர்.

விபூதி அணிவதினால் சிவனடியார்களாக ஆகின்றோம் விபூதி அணிந்து சிவ சாயூஜ்ய பதவி அடைந்த பெரியோர்கள் எண்ணிலர், சுதாமன் என்ற வேதியனும், அவன் தம்பியும் சிவனடியார்களாகிய பிரம்ம விஷ்ணுக்களை கடிந்து பேசினர். ஆதலால் பிரம்ம விஷ்ணுக்கள் அண்ணனையும் தம்பியையும் முறையே ஊமையாகவும் முடவனாகவும் ஆக்கிட அதனை விபூதி கொண்டு ததீசி முனிவர் போக்கி நற்கதி அளித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூன்பாண்டியனுடைய வெப்பு நோயை விபூதியினால் ஞானசம்பந்த சுவாமிகள் தீர்த்தருளினார். விபூதியைப் பற்றி நான்கு வேதத்திலும் அவற்றின் விரிவுகளாகிய உபநிடதங்களிலும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. விபூதியின் சிறப்பைக் கூற எண்பத்தேழாவது உபநிடதமாகிய பஸ்மஜாபால உபநிடதம் என்று ஒன்று தனியாக உள்ளது

நினைப்பதற்கு ஒண்ணாத பெருமையுடைய மஹா விபூதியை நம் சைவ சமயத்தில் பிறந்த ஒரு சிலர் அணிவதில்லை. விபூதி, உருத்திராட்சம் அணிவது நவ நாகரிகமில்லையென்றும் அறியாமையால் கூறுகின்றனர்.

விபூதி அணிவதினால் மும்மூர்த்திகளுக்கும் தலைவனாகிய சிவனாருடைய அடியார்களென்று விளங்குகிறது. பிரம்மதேவர் சிருஷ்டி செய்யும்போது விபூதியின் பெருமையைக் கூறி அதை அணிந்துகொள்வதற்காகவே நெற்றியைக் குறுக்காகப் படைத்தார். ஔவை, "நீறில்லா நெற்றி பாழ்" என்றனர்.

## விபூதி வாங்கும் போது பணிவோடு வாங்க வேண்டும்

கோயிலில் விபூதிப் பிரசாதம் வாங்கும்போது ஒற்றைக்கையை மாத்திரம் நீட்டி வாங்கக்கூடாது. வலதுகையின் கீழே இடது கையைச் சேர்த்து விபூதியை வாங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவி உடை அணிவதின் நோக்கம்

இது ஞானம் என்னும் நெருப்பை அடையாளம் காட்டுவது. நெருப்பால் சுடப்பட்டால் பழுப்பு நிறம் வந்து விடுகிறது. ஞானம் என்னும் நெருப்பு தீயவர்களை சுட்டு அழிக்கிறது. அப்படிப் புடம் போடப்பட்டவர்களை இந்த உடை அடையாளம் காட்டுகிறது. பருத்தியினால் தயார் செய்த உடைகள் நம் உடலுக்கு நல்லது. மேலும், காவி, நீலம், கறுப்பு இவை நம்முடைய உணர்ச்சிகளுக்குச் சாந்தம் அளிக்கின்றன. இந்த ஆடைகளை அணிந்தால் அப்படி ஒரு தூய்மையுடன் வாழவேண்டிய உணர்வு தானாகவே வந்துவிடும்

பொலிஸ்காரர், நர்ஸ் ஆகியோரை அடையாளம் காண ஒரு தனி உடை தேவைப்படுகிறது. துறவிகளுக்கு அடையாளமாக இப்படி பழுத்து விட்ட நிலமையே பழுத்த இலையின் நிறமான காவியுடை உணர்த்துகிறது.

ஆகவேதான் காடுகளிலும், மலைகளிலும், மரத்தடிகளிலும், சிறந்த ஆலயங்களிலும் வாசம் செய்கின்ற துறவிகள் காவி உடை தரித்துக்கொள்கிறார்கள். மேலும் இம் மகிமையை விளக்கயே நமது ஆலயங்களிலும் கொடி ஏற்றங்கள் நடைபெறும் பொழுது அந்தக் கொடிச்சீலைகளிலும் வரைந்திருக்கும் படங்களும் காவியினாலேயே வரையப்படுகின்றன.

## விரதம் அனுஷ்டிப்பது எப்படி

விரதம் என்பது ஓர் உறுதிதான். ஒரு காரியத்தைக் கட்டாயமாக செய்து முடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டால் அதுவே விரதம். அவ்விதம் விரதம் பூணும்போது உப்பை விடுகிறோம், உணர்வை விடுகிறோம், தூக்கத்தை விடுகிறோம்.

பிறர் சொல்லும் கொடூரப் பேச்சுக்களைப் பொறுப்பதும் எந்த உயிர்களையும் கொல்லாமல் இருப்பதும்தான் விரதம். பிறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றத்தை மன்னித்து விடுவது மனிதத் தன்மை. மறந்து விடுவது தெய்வத் தனமை. காப்பது விரதம் என்பது ஔவையார் திருவாக்கு. கொல்லா விரதம் குவலய மெல்லாமோங்க என்பது முதுமொழி. விரதத்தை நோன்பு என்று சொல்வதுண்டு. நோன்பு அல்லது விரதம் இருந்தால் அனுஷ்டிப்பவரது மனம் பக்தி பரிசுத்தமாகிறது. அத்துடன் ஞானமும் கை கூடுகிறது.

விரதமிருந்தால் ஆன்மா ஈடேறுகிறது. செய்த பாவம் ஒழிகிறது. சக்திக்கும் தகுந்தபடி விரதம் அல்லது நோண்பு இருந்து சக்திக்குத் தகுந்தபடி தர்மம் செய்வதும் முக்கிய வழிகளாகும். விரதத்தை நித்திய விரதம், நைமித்திக விரதம் என்று இரு வகையாகப் பிரிக்கலாம்.

மனித ஜென்மம் நினமும் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளான அருள் உடமை, இன்னா செய்யாமை, தீயோரிடம் சேர்க்கை வைத்துக் கொள்ளாமை, கோபமில்லாமை, நலலவை பேசுவது, தவம் இருப்பது போன்ற ஒன்பது விதமாக செய்கைகள் நித்திய விரதமாகும். இதை அனுசரித்தால் நமது ஆன்மா ஈடேறுகிறது.

படிப்பிலும் பணத்தாலும் கடவுளைக் காணமுடியாது பக்தியினால்தாள் கடவுளைக் காணமுடியும்,

## விரதம் என்பது எது தெரியுமா

'நானு'டன் தீர்மானிக்கும் விரதமும் விரதமல்ல. 'நானு'டன் செய்யும் பூஜையும் பூஜையல்ல, 'நான்' இருக்கும் ஆசாரமும் ஆசாரமல்ல. 'நான்' என்பது கூடாத விரதமே பக்தியாகும் என்றபடி, நான் எனது என்பதை விட்டுவிட்டு உண்பதில், உறங்குவதில், உடுப்பதில், உணர்வதில் உறைவதில், விழிப்பதில், தூங்குவதில், பேசுவதில், பார்ப்பதில், நடப்பதில், ஓடுவதில், ஓட்டுவதில், வாழ்வதில், நினைப்பதில் கடைசியாகச் சேர்வதில் அகண்டானந்த ஸஹஜ ஸன்மார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்விகாத்மீக உத்கருஷ பக்தியால் மனம் மெய் மொழியால் செயலால் சரணடைவதே முன்னுரையாகும்.

கடவன் எங்கோ இல்லை. தன்னுள்ளேயே பார். பார்த்துப் பார்த்து உன்னிடமுள்ள ஒருகோடியே அறுபத்தி நான்கு அணுக்களில் பக்தி பகவானை நிரப்பினால் அதில் மகத்தான பரம்பொரும் பரமாணுவை காணலாம். அதன் பின்புதான் வெளியே இறைவனைக் காணும் தகுதியும் ஆற்றலும் கிடைக்கும். இறை அருளைத் தாங்கும் சக்தியை இறைவனே கொடுக்கவேண்டும். ஒருதடவை கண்டுவிட்டால் விலகமாட்டார். நம்மை விட்டுவிடமாட்டார் இறைவன்.

## பூஜை முறைகள்

பூஜை செய்பவர் வெள்ளை வஸ்திரமோ, நீல வாஸ்திரமோ தரித்துக் கொள்ளவேண்டும், விபூதி தரித்து பிறகு உருத்திராக்ஷமோ. துளசி மாலையோ அணிந்து கொள்ள வேண்டும். பிறகு பூஜைக்கு உட்கார வேண்டும்.

பகதி, பணிவு, ஜீவகாருண்யம், போதுமென்ற எண்ணம் இவை உள்ள பக்தர்கள் எந்தவித பூஜை நடத்தினாலும் தர்மசாஸ்தா திருப்பதி அடைகிறார். பக்தி இல்லாதவர்கள் எவ்விதம் பூஜித்தாலும் அவர் திருப்தி அடைவதில்லை. பெரிய பூஜை பண்ணுகிறவன் என்ற ஆணவம் உடையவனும் பூஜைக்கு வேண்டும் பொருள்கள் போதாதென்று சொல்லுகிறவனும் பூஜை நடத்தத் தகுதி உடையயவன் அல்லன். ஒன்றுமில்லாதவர்கள் துளசியையும் தண்ணீரையும் மட்டும் வைத்து பூஜித்தாலும் போதுமானது.

பூஜை சமயத்தில் மணி அடிக்கிறார்கள். அதன் அடிப்படை நோக்கமென்ன? அகரர்களை விரட்டுவதற்காகவும் தேவர்களை அழைப்பதற்காகவும் பூஜை சமயத்தில் மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கிறோம். இது விளக்கேற்றப்படும் சமயத்திலே இருள் விலகி ஒளி தொற்றுவது போல் ஒரு சமயத்தில் நடைபெறுகிறது. மணி அடித்தால் சுவாமி வந்துவிடுவார் என்ற கருத்து நிலவுகிறது. ஆதலால் இறைவனை நாம் எழுந்தருளச் செய்யும் பூஜை காலத்தைத் தவிர மற்றச் சமயத்தில் மணி அடிக்கக் கூடாது.

## ஐயப்பனை வணங்கும் தத்துவங்கள்

ஹரிஹரன் இருவருக்கும். பிறந்த புத்திரன் ஐயப்பன் என்று கூறுகிறோம். அவர்கள் இருவருடைய சக்தியும் ஹரிஹர புத்திரருக்கு உண்டு, எல்லாவிதமான ஆக்க சக்திகளையும் அவர் நாராயணனைப் போல் காப்பாற்ற வல்லவர். சாஸ்தாவை வணங்கும் பக்தர்களிடமும் நாம், இந்த பண்பை காணலாம். வாழ்க்கையில் நம்மை உலகப்பற்றோடு இணைக்கும் ஆசைகளை இவர்கள் ஒதுக்குகிறார்கள். இறைவனை வழிபடும் உணர்வை மிக உன்னதமாக ஒற்றுமையாக இணைந்து போற்றிக் காப்பாற்று கிறார்கள், அவர்கள் அந்த வழிபாட்டில் ஒரே குறிக்கோளுடன் ஒரே நோக்கத்தில் முனைந்து செயற்படுகிறார்கள். இது அவர்களுக்குத் தனியான வேகத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

ஐயப்பனின் திருக்கோயில் மலைமீது இருக்கிறது. அதுவும் காட்டுவழியில் கரடுமுரடான, கல்லும், முள்ளும் நிறைந்த பாதையின் முடிவில் இருக்கிறது. அதை அடைய இவற்றைப் பொருட்படுத்தாமல் பக்தி உணர்வுடன் வழி நடந்தாக வேண்டும். வாழ்க்கையில் இப்படிக் கர்ம சிரத்தையுடன் கடவுளை அடையப் பக்தி உணர்வை மேற்கொண்டு நடந்தால்தான் முத்தி கிட்டும் என்பதை அது உணர்த்துகிறது. அப்படி நடப்பவர் உலக பந்தங்களை நாடுவதில்லை. இதைப்போல் ஐயப்ப பக்தர்களும் உலகப் பற்றைத் தூண்டும் ஆசைகளை ஏற்பதில்லை. மற்ற ஆலயங்களைப் போல அன்றி ஐயப்பனை நாடிச் செல்பவர்கள் கடுமையான விரதத்தை மேற்கொள்வது ஆண்டவனின் கருணையை முழுமையாக அடையத் தவம் இருப்பது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் இருப்பவர்கள் ஆண்டவனின் அருளை நாடி சரணம் அடைந்து விடுவதைப் போல இவர்களும் ஐயப்ப சுவாமி சரணம் என்று சொல்லி மனதைப் பக்குவப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்கள் கறுப்பு உடையையும் காவித்துணியையும் மட்டுமே நாடுகிறார்கள். கறுப்பு என்பது இருளை ஏற்று அதிலிருந்து ஞான ஒளியை நாடிச் செல்வதைக் குறிப்பது காவி நிறம். தூய்மையைப் பெற நெருப்பின் சக்தியில் இணைந்து புறப்படும் வைராக்கியத்தைக் குறிப்பது. இவை இரண்டையும் உடல் ஏற்பதின் மூலம் உள்ளம் சாந்தியான, விரக்தியான உணர்வைப் பெறத் தயாராகிறது. மலை ஏறி இறுதியில் படிகளை எட்டும் வரையில் பக்தர்கள் வேறு எதையும் சிந்திப்பதில்லை, வாழ்க்கைப் பாதையில் இறுதியில் முத்தியை நாடுபவன் இறை அருள் ஒன்றறை மட்டுமே துணைக் கொண்டு செல்வதை இது காட்டுகிறது. அப்படி வாழ்க்கையை நடத்தி சொல்பவன் இறுதியில் கடவுளின் அருளைப் பேரொளி யாகக் கண்டு மகிழ்கிறான ஐயப்பப் பக்தர்கள் கடைசியில் பெறும் ஜோதி தரிசனம் இதையே உணர்த்துகிறது

## ஐயப்பன் யாத்திரை தத்துவம்

ஐம்புலன்களை அடக்கித் தன்னை யோகநிலைக்கும் கொண்டு வந்த பிரம்மச்சாரிய அம்சமே ஐயப்ப தத்துவமாகும். நமது இந்திரியங்களை அடக்கி பரமாத்மாவின் நினைவு கொண்டு ஒடுங்குதே சாஸ்தா என்பதாகும். மஹாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுக்கும் காலத்தில் சிவபெருமான் மோகினியைப் பார்த்த நேரத்திலே இச்சா, கிரியா, ஞானா ஆகிய முப்பெரும் சக்திகளும் ஒன்று சேர்ந்து ஒளிபாய்ந்த நிலையில் உருவானதே ஹரிஹர அம்சமான ஐயப்பன் ஆகும்

சிவ சக்தியும், விஷ்ணு சக்தியும் சேர்ந்த பரம்பொருள் தன்மையானது, பஞ்சபூதத் தன்மையாகவே மாறிவிட்டது. அத்துடன் பஞ்ச ஸ்தலமாகவும் பெருமையாகக் கொள்ளப்பட்டது. குளத்துப் புழை ஆரியங்காவு, எரிமேலி, சபரிமலை, காந்தமலை ஆகிய ஐந்தும் ஐயப்ப தத்துவத்தில் சிறந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழத்துப்புழை - பூமியின் தோற்றமாகும்
ஆரியங்காவு - தண்ணீரின் தோற்றமாகும்
எரிமேலி - அக்கினியின் அம்சமாகும்
சபரிமலை - வாயு அம்சமாகும்
காந்தமலை - ஆகாய அம்சமாகும்

இந்த ஐந்து நிலைகளிலும் நாம் ஹரிஹர புத்திரனைக் காண்கின்றோம்,

ஹரி மாதத்தில் மார்கழி என்றான். ஹரிக்கு உகந்தது துளசி. ஆம்! மார்கழி மாதம் துளசிமாலை அணிந்து கொண்டு பிரம்மச்சரிய விரதம் பூண்டு மண்டல பூஜை செய்து சபரிமலை யாத்திரை செல்ல உறுதி கொள்கிறோம்.

முக்கண்ணன் ஹரன். அவனே சிவன். அவனை உணர்த்தவே அவனது அம்சமான முக்கண்களை உடைய தேங்காயை இருமுடியில் முன் முடியாக வைக்கிறோம். ஐயப்பமார்கள் மண் ஆசை, பெண் ஆசை பொன் ஆசை ஆகிய மூன்றும் கனமாக, பாரமாக, சுமையாக வைத்துத் தங்கள் தங்கள் தலையில் ஏற்றி வைத்துக் கொண்டு விட்டார்கள்,

சிவபெருமான் நெருப்பின் அம்சம். ஜோதி ரூபமாகவும் காட்சி அளிப்பான், மகாவிஷ்ணு நீரின் அம்சம். குளிர்ச்சியாகவே இருப்பவன். நெருப்புக்கும் - தண்ணீருக்கும் இடையில் தோன்றியவனே ஹரிஹர புத்திரரான ஐயப்பன்.

சூரியன் தனுர் மாதமான மார்கழியைக் கடந்தவுடன் உத்திராயாண புண்ணிய காலமான தைமாதமான மகரத்திற்குப் பிரவேசிக்கும் காலம்தான் சபரிகிரி நாதனைக் கண்குளிரக் காணும் நன்நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தைப்பிறந்தால் வழி பிறக்கும்' என்று ஆன்றோர் வாக்கின்படி நமக்கும் நல்வழி உதயமாகி விட்டது. மும்மலங்களை தலையின்மேல் ஏற்றித் தவிக்கும் நாம் சின்முத்திரை காட்டி அருளும் ஐயப்பனை நாடிப்போய் பதினெட்டுப் படிகளையும் கடந்து பாரச்சுமையை இறக்கி விடுகிறோம். இனிமேல் நமக்கு எவ்வித தலைக்கனமும் இல்லை.

குளத்தூர்பாலன், ஆரியங்காவில் ஆனந்தரூபன், எரிமேலியில் வாழ் ஏழைபங்காளன் ஐந்துமலைத் தவன், ஹரிஹர புத்திரன், கலியுகவரதன், கருணாகரத்தேவர், சத்தியப் பரிபாலகன், சற்குண சீலன், சபரிமலை வாசன், வீரமணிகண்டன், விண்ணவர்தேவன், விஷ்ணு மோகினி பாலன், சாந்த சொரூபன், சற்குருநாதன், நற்குணக் கொழுந்தன், உள்ளத்தமர்வன், கற்பக தருவான ஐயப்பன் ஆகிய பதினெட்டு நிலைகளில் அவனை உள்ளம் உருக நினைத்து நமது கண்கள் முன் நிறுத்தி அவனது பாத கமலங்களில் முடியை இறக்கி அருளைப் பெற செய்வதே ஐயப்ப யாத்திரை தத்துவமாகும். அதுவே ஐயப்பன் சரணம்.

## சபரிமலை தத்துவம்

சிவபெருமான் முழுமையானவன். அதாவது பரிபூரணன். சிவபெருமானுக்கு மூன்று கண்கள். சிவனை நினைவு படுத்தும் வகையில் மூன்று கண்களை உடையதாகத் தேங்காய் இருக்கிறது.

காக்கும் கடவுளான திருமால் காமதேனுவைப் போல விளங்கி கேட்பவருக்குக் கேட்டதை எல்லாம் கொடுத்தருள் கிறவர். எனவே தேவபகவான் காமதேனு திருமாலை நினைவுபடுத்தும் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது.

கேட்டதை எல்லாம் கொடுக்கக்கூடிய மற்றொன்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பக மரம் என்று போற்றுகின்றோம். தென்னை மரம் கற்பக மரத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. தென்னை மரத்திலிருந்து எடுக்கும் தேங்காயைச் சிவபெருமானாகவும், பசுவிலிருந்து பெறப்படும் நெய்யைத் திருமாலாகவும் சபரியாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் கருதுகிறார்கள்.

## சுவாமி ஐயப்பன்

விஷ்ணுவின் திவ்ய ரூபத்திலிருந்து வைத்த கண்ணை வாங்க முடியாமல் எவரும் சொக்கிக் கிடக்க வேண்டியதாகிறது. ஸ்ரீராமனாகவும் கிருஷ்ண பரமாத்மாவாகவும் அவதரித்த போதும் இந்த ஜகன் மோகன சௌந்தரியம் அவரை விட்டு நீங்காமலே இருந்திருக்கிறது.

இப்படிப்பட்டவர் மோஹினி என்றே உருவம் கொள்ளும் போது எத்தனை அழகாக இருந்து எல்லோர் உள்ளங்களையும் மோகிக்க வைத்துக் கொள்ளை கொண்டிருப்பார். பரம ஞானியாக தபோமயமாக ஜ்வலித்துக் கொண்டிருந்த பரமேஸ்வரனின் மனத்தை மஹாவிஷ்ணுவின் மோகினி ரூபமானது மயக்கிவிட்டது என்று புராணங்கள் சொல்லுகின்றன. மோகினியாக வந்த நாராயணனின் காருண்ய லாவண்யமும் பரமேஸ்வரனின் சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன் ஒரு மஹாதேஜஸ் - ஒருபெரும் ஜோதி பிறந்தது. இந்தத் தேஜஸே ஐயப்பனாக உருக்கொண்டது.

ஐயன் என்பது ஆரிய என்பதன் திரிபு ஆர்ய என்றால் மதிப்பிற்குரியவர் என்று பொருள். ஹரிஹர புத்திரனாகிய சாஸ்தாவை மதிப்பிற்குரியவராக, ஆரியராக, ஐயனாராக குறிப்பிடுகிறோம், இதிலே வேடிக்கை பொதுவாக தமிழ்நாட்டில் அய்யர் (குருக்கள்) பூஜிக்காத கிராமக் கோயில்களில் உள்ள ஸ்வாமிநாதன் அய்யராக அய்யனாராக இருக்கிறார். கொஞ்சம் கூட இப்பொழுது பேசப்படுகிற இன வித்தியாசங்கள் முன்னே இல்லை என்பதற்கு இதுவே ஒரு அடையாளம்.

சபரிமலையில் ஓரிடத்தை ஆரியன் காவு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியனுடைய காடாகவே சொல்லுகிறார்கள். தேசத்தில் எத்தனையோ ஸ்வாமிகளுக்குக் கோவில் இருந்தாலும் சாஸ்தாவைத் தவிர எவருக்குமே அய்யர் - ஆரியன் என்ற பெயர்கள் இல்லை. சாஸ்தா என்பதே தமிழ்ச் சாத்தன். தமிழகத்தில் இருக்கப்பட்ட அநேக சாத்தனூர்களில் முக்கியமான தெய்வம் சாஸ்தாவான ஐயப்பன்தான்.

தமிழநாட்டில் கிராமத்துக்குக் கிராமம் ஐயனார் கோவில் உண்டு. கேரளத்தில் கிராமதேவதையாக இல்லாமல் வேறுவிதத்தில் ஐயப்பன் வழிபாடு வெகுவாக பரவி வளர்ந்திருக்கிறது.

- காஞ்சி பரமாச்சாரியார்.

## சுவாமி என்றால் என்ன?

சுவாமி என்றால் என்ன? சிவம் என்கிற வார்த்தைக்கு உடைமை, சொத்து என்ற அர்த்தம். கோவிலைச் சேர்ந்த சொத்தை கேரளத்தில் தேவஸ்வம் என்கிறார்கள் அல்லவா? உடைமைக்கு சொந்தக்காரர் யாரோ அந்த உடையவர்தான் சுவாமி. சுவாமி என்பதற்கு நேர் தமிழ் வார்த்தை உடையார் என்பது. முற்காலத்தில் கோயில் சுவர்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுக்களிளெல்லாம் திருச்சிற்றம்பலமுடையார். திருவேங்கடமுடையார், திருநாகேஸ்வர முடையார் என்பது போலவே உடையார் என்ற பெயரில் தெய்வங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குருவும் சுவாமியும் ஒன்று என்பதால்தான் வைணவர்கள் ஸ்ரீ ராமானுஜரை உடையவர் என்றே சொல்லுகிறார்கள். சுவாமி என்றால் சொத்துக்கு உரிமைக்காரர் என்றேன். என்ன சொத்து? சகல பிரபஞ்சமும் தான். அதிலுள்ள நாமும் அவன் சொத்துதான். உள்ளதனைத்தும் அவன் ஒருவனுக்கே உடமையாகும். எல்லாவற றையும் செய்கிற ஒரே ஒருத்தருக்குத்தான் அதெல்லாம் சொந்தம். அதனால்தான் அவர் உடையவர் சுவாமி என்று அழைக்கப் படுகிறார். நாமும் அவரது உடமைகள்தான். நம் சொத்து என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நினைத்துக் கொண்டிருப்பதை அப்படியே சுவாமியின் சொத்தாகிய நாமும் நம்மை அவன் இஷ்டப்படி நடத்தட்டும் என்று விட்டுவிட்டால் நமக்கு எந்த பாரமும் இல்லை. ஒரே ஆனந்தம் தான்.

## பதினெட்டாம்படி தத்துவமென்ன?

ஏகாக்ஷரத்தையும் - அஷ்டாக்ஷரத்தையும் பக்கத்தில் எழுதினால் பதினெட்டு வரும். (1- 8 - 18) ஏகாக்ஷரம் என்பது ஹ்ரீம் என்கிற புவனேஸ்வரி மந்திரம். அஷ்டாக்ஷரம் விஷ்ணு வினுடையது. சிவசக்தியுடன் கலந்த விஷ்ணு சக்தியே இந்த பதினெட்டு படிகள் என்பன.

புராணங்கள் பதினெட்டு, சித்திகள் பதினெட்டு, ஸ்மிருதிகள் பதினெட்டு, தேவ அசுரர் போர் பதினெட்டு நாள், தர்மத்தை நிலைநாட்ட பாரதப்போர் பதினெட்டு நாள், கீதையின் அத்தியா யங்கள் பதினெட்டு. இதைப்போல் மனித வாழ்வை இயக்கும் பதினெட்டு அம்சங்களில் அடிப்படையில் அமைக்கப்பட்டவை.

ஐயப்பன் சந்நிதானத்தில் உள்ள பதினெட்டுப் படிகளும், ஐந்து பஞ்சேந்திரியங்கள், எட்டு ராகங்கள், மூன்று குணங்கள், ஞானம் ஒன்று, அஞ்ஞானம் ஒன்று என்ற பதினெட்டையும் தாண்டி வருகின்ற பக்தனுக்குத்தான், ஐயனை வழிபடத் தகுதி உண்டு. பற்றுதல் இல்லாமல் பகவானை பூஜித்தால் அவன் திருவருள் நமக்கு கிடைக்காது.

(இன்னொரு விளக்கம்) - நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், நான்கு உபாயங்கள், நான்கு வர்ணங்கள் இவற்றை அந்த பதினெட்டு படிகளும் குறிப்பிடுவதாக சில பெரியோர்கள் கூறுவதுண்டு.

காவல் தெய்வங்கள் இருக்குமிடமெல்லாம் பதினெட்டுப்படி அமைப்பது ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. ஐயப்பனின் ஆலயப்படிகள் அவற்றை அறிந்தும் கடந்தும் மெஞ்ஞான நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றால் ஐயப்பனின் அருட் பாதம் கிட்டும் என்பது தத்துவ உண்மை.

## பதினெட்டாம் படியின் தத்துவம்

காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம், வித்தை, அவித்தை, சத்யம், தர்மம்.

தத்துவங்கள், புலன் ஐந்து, பிரான் ஐந்து, மனம் ஒன்று, புத்தி ஒன்று, ஆங்காரம் ஒன்று, இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காணமுடியும்.

## பதினெட்டாம்படி பூஜை

ஐயப்பன் ஆலயத்தில் படிப்பூஜை செய்து வழிபடுவது வழக்கம். அதற்கென ஏற்பட்டுள்ள கட்டணத்தைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் விரும்பிய நாட்கள் பதினெட்டாம்படிக்குப் புஸ்ப அலங்காரம் செய்தால் பண்ணிய பாவங்கள் நீங்குவதுடன் புண்ணிய பலன்களையும் அடைவார்கள் என்பது ஆன்றோர்களின் வாக்கு.

ஐயப்பன் ஆலயத்தில் பதினெட்டுப் படிகளையும் வனத் தேவதைகளும், பூத கணங்களும், காவல் தெய்வங்களும் காவல் காத்து வருவதாக ஐதிகம். சபரிமலையில் ஆண்டுதோறும் படிப்பூஜை நடப்பதுண்டு. அதன் தார்ப்பரியம் என்னவெனில் நமது நாட்டிற்கு சுபீட்சம் ஏற்படவும், படிபூஜை செய்வதானால் மக்களுக்கு ஒழுக்கமும், வாழ்க்கையில் தூய்மையும் ஐயப்பனின் கிருபா கடாட்டமும் கிடைக்கவும் வேண்டுதலாகும்.

பதினெட்டுப் படிகளின் மேலும் ஐயப்ப பக்தர்கள் ஒவ்வொரு படியாக ஏறிவந்து பகவானை தரிசிப்பவர்களின் பாத தூளிகள் பட்ட காரணத்தினால் அந்த திருப்படிகளுக்கு புனிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுள்ளது. பக்தர்கள் வேண்டுதல் செய்து அவர்களின் குறைகள் நீங்கப் பெற்று பல கோடி பக்தர்கள் இருமுடி சுமந்து பயபக்தியுடன் பதினெட்டாம்படிகளில் தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டி வழிபடுவது என்பது ஐயப்பனின் திருவடிகளை வணங்கு வதற்கு ஒப்பாகும். அந்த பக்தர்களின் திருவடிகள் பட்ட இடம் அந்த படிகளாகும்.

ஸ்ரீ ராமபிரானின் பாதத்தின் துகள்கள் பட்டதும் பாதத் தூளிக்கு மகத்துவம் அதிகம் என்பதை நாம் அறிவோம். அது போல ஐயப்ப பக்தர்களின் பாதத்தூளிக்கும் மகத்துவம் இருப்பதால் சான்றோர்கள் படிப்பூஜை செய்யும் முறையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இத்திருப்படிக்குச் செய்யும் வழிபாடு திருவடிகளுக்குச் செய்யும் வழிபாடாகும். படிப்பூஜை செய்வதனால் இகபர சௌபாக்கியமும் பக்தர்களுக்கு பகவான் வாரி வாரி வழங்குவார் என்பது திண்ணம்

## பதினெட்டுப் படிகள் புதுப்பித்தல்

ஸ்ரீ ஐயப்ப தரிசனத்தில் படிவழிபாடு மிக முக்கியமானது. ஆண்டவனுக்கு உரிய அத்தனை சிறப்புகளும் பதினெட்டாம் படிகளுக்கு உண்டு. தர்மசாஸ்தாவை அடைவதற்குரிய பதினெட்டுத் தத்துவங்களின் குறியீடுகளாக இந்தப்படிகள் அமைந்துள்ளன. தொடக்கத்தில் பதினெட்டுப் படிகளும் சிலை வடிவங்களாக இருந்தாகவும் சொல்லப்படுகிறது.

ஐயப்ப ஆலய பழைய படிகளை எடுத்துவிட்டு புதிய படிகள் அமைத்து திருப்பணி செய்யும் தீர்மானம் ஒன்று ஆலய நிர்வாகத்திற்கு இருந்தது. ஆனால் ஜோதிடர் கணிக்கையில் பழைய படிகள் நீக்கக்கூடாது என்ற தெய்வ வாக்கு வெளிப்பட்டது. எனவே பழைய படிகளை அப்படியே பஞ்சலோகத் தகடுகளால் மூடிவிடுவதென் திரமாளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தடி நீளமும் ஒன்பது அங்குலமும் அகலமும் கொண்ட பதினெட்டாம் படிக்கு அழகான முறையில் சிறந்த வேலைப்பாடு களுடன் தகடுகள் வேயப்பட்டன. படிகளின் மேல்பாகம் ஒற்றை அங்குல கனத்தில் மூடப்பட்டுள்ளது. படிகளுக் கிடையேயான ஒரு அங்குலம் கனத்திலும் இருபுறங்களும் முக்கால் அங்குலம் கனத்திலும் தகடுகள் அமைந்துள்ளன. இந்த வேலைகளுக்கு ஐயாயிரம் கிலோ பஞ்சலோக தகடுகள் தேவைப்பட்டது

சுமார் பதினான்கு லட்சம் ரூபாய் செலவில் முடிக்க திட்டமிட்ட இத்திருப்பணிக்குத் திருவாங்கூர் தேவஸ்தானவாரியம் பத்துக்கிலோ தங்கமும், முப்பது கிலோ வெள்ளியும் வழங்கி யுள்ளது. திருவனந்தபுரம் கோமளவிலாஸ் மெட்டல் இண்டஸ்டிரீஸ் என்ற வர்த்தக ஸ்தாபனம் குறைந்த மதிப்பீட்டு விண்ணப்பம் அளித்து இப்பணியை ஏற்றுக் கொண்டது. இந்த ஸ்தாபனத்தின் உரிமையாளர் பி. மாதவன் தம்பி திருவனந்தபுரம் சேவாசங்கக் கிளைத் தலைவராவார்.

## ஐயப்பனின் திருமேனி தத்துவம்

ஐயப்பன் அமர்ந்திருக்கும் திருக்கோலத்தை யோகநிலை என்பர். அத்துடன் அதற்கு வேறு சில விளக்கங்களையும் மகான்கள் அளிக்கின்றனர். ஐயப்பன் அமர்த்திருக்கும் கோலத்தில் வலதுபுறம் சின்முத்திரையுடன் அமர்ந்திருக்கிறது. இடது புறத்தை கவனித்தால் ஒரு பெண் நளினமாகக் கையை வைத்திருப்பது போலிருக்கும். நாராயணனும் அம்பாளும் கருணையான தாய்மை அம்சம். சிவனின் சின் முத்திரையும் நாராயணனின் மோகினித் திருவருவாம் இணைந்ததே ஐயப்பனின் தோற்றம்.

## ஐயப்பனின் சின் முத்திரை

சின் முத்திரை என்னும் சொற்றொடர் ஞான அடையாளம் எனப் பொருள்படும். சித் - ஞானம். முத்திரை அடையாளம். எனவே ஞானப் பொருளின் அடையாளமாக குறிப்பாக திகழ்வது சின் முத்திரை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷிகள், யோகிகள் போன்ற மகாதவசிகள் தவம் செய்யும் போது பெருவிரல் நுனியுடன் ஆள்காட்டியிரல் நுனியைச் சேர்த்தும் நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் மூன்றையும் நீக்கி முத்திரை காட்டுவார்கள். அதுவே சின்முத்திரையாகும்.

சபரிமலையில் ஸ்ரீ ஐயப்ப சுவாமி வலது கரத்தால் சின் முத்திரை காட்டி பக்தர்க்கு அருளாசி வழங்குவதையும் காண்கிறோம். பெருவிரல் நுனி இது பிரம்மத்திலிருந்து தோன்றுவதே ஜீவன். தன் பணியை முடித்தபின் முடிவில் ஒடுங்குமிடம் எதுவோ அது பிரம்மம் ஆகும். பிரம்மம் இல்லையேல் ஜீவன் இல்லை. ஜீவர்களின் உற்பத்தியில்லையேல் பிரம்மத்திற்கும் வேலையில்லை, பிரம்மம் எதனுடனும் சேராமல் பிரம்மாகவே தனித்து இயங்கும். அதனால் சிருஷ்டி ஏற்பட வழியே கிடையாது. இவ்விரண்டு காரியங்களையும் குறிக்கவே பெருவிரல் நுனியுடன் ஆள்காட்டி விரல் நுனியையும் சேர்த்து நமக்கு உணர்த்துகின்றனர் ஆன்றோர். ஆனால் இந்த காரியம் ஒழுங்காக நடைபெற வேண்டுமெனில் விலக்கப்பட வேண்டியவை ஆணவம், கன்மம், மாயை ஆகும். ஏனைய மூன்று விரல்களும் இம் மூன்றையுமே குறிப்பனவாகும். இதுவே தவசிகளிடமிருந்தும் ஞானாசிரியர்களிட மிருந்தும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மையாகும்.

## சாஸ்தாவின் ஆறு ஆதாரங்கள்

ஸ்ரீ தர்ம சாஸ்தாவினுடைய அற்புத சரித்திரங்களில் பந்தள ராஜாவின் கதைதான் தற்போது பிரபலமாயிருந்து வருகிறது. பக்தியில் திளைக்கும் ஐயப்பமார்களை நல்வழிக்கு கொண்டு செல்ல அது ஒன்றே போதுமானது. ஆனாலும் சாஸ்தா ஆராதனையின் தத்துவமும் தெரிந்து இருப்பது நல்லதுதான். யோகிகள் சாஸ்தாவை வழிபட்டு இருக்கிறார்கள். யோக சாஸ்த்திரத்தில் குண்டலினி சக்தியை எழுப்பி ஆறு ஆதாரங்கள் மூலமாக மேலே எடுத்துச் சென்று சகஸ்ரதளத்தில் அதை இருத்திப் பிரம்மத்தோடு ஐக்கியமான யோகிஸ்தர்கள் தர்ம சாஸ்தாவின் பிரதிஷ்டைகளுக்கும் யோக சாஸ்திர ரீதியில் விளக்கம் சொல்லி இருக்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சொரி முத்தையனார் கோவில் - மூலாதாரம்

2. அச்சங்கோவில் - சுவாதிஷ்டானம்

3. ஆரியங்காவு - மணிபூரகம்

4. குளத்துப்புழை - அநாஹதம்

5. பந்தளம் - விசுக்தி

6. சபரிகிரி - ஆக்ஞா

என்று ஆறு இடங்களில் சாஸ்தாவை யோக சாஸ்திரத்தை யொட்டிப் பிரதிஷ்டை செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. காந்த மலை ஜோதிதான் ஜோதி சொரூபமான ஸஹஸ்த்ரளம். இந்த ஆறு ஸ்தலங்களுக்கும் சென்று ஐயப்பனைத் தரிசிக்க வேண்டும் என்ற கொள்கையும் சில ஐயப்பமார்களிடையே இருந்து வருகிறது.

பூலோகத்தில் அவதரித்த காலத்தில் குழந்தையாக குளத்துப்புழையிலும், பாலனாக ஆரியங்காவிலும், கிராத மூர்த்தியாக எரிமேலியிலும், தவவடிவமான தர்ம சாஸ்தாவாகச் சபரிமலையிலும், மாளிகைப்புரத்தின் பிரார்த்தனைக்கு இணங்கிக் காந்தமலையில் ஜோதிஸ்வருபனாகவும் தரிசனம் அளித்து மஹா சாஸ்தா என்று கொண்டாடப்பட்டு கைலாயத்தை அடைந்து பூர்ணா புஷ்கலா சகிதனாக இருந்து வருகிறார்

முதலாம் பஞ்சகம் - குளத்துப்புழை - குழந்தை

இரண்டாம் பஞ்சகம் - ஆரியங்காவு - பாலன்

மூன்றாம் பஞ்சகம் - அச்சங்கோவில் - அரசர்

நாலாம் பஞ்சகம் - எரிமேலி - கிராதமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் பஞ்சகம் - சபரிமலை - சாஸ்தா

ஆறாம் பஞ்சகம் - காந்தமலை - ஜோதீஸ்வரூபன்

சாமியே சரணம் ஐயப்பா

## குரு அருள் பெற வேண்டும்

பக்தி என்பது மூன்று வகைப்படும். ஈஸ்வரனுக்கு நேராகச் செய்யும் பக்தி ஈஸ்வர பக்தி. அடியார்களுக்கு செய்யும் பக்தி அடியார் பக்தி. ஆச்சாரியாரிடம் செய்யும் பக்தி குருபக்தி என்று சொல்லுவார்கள். இந்த மூன்றிலே மிகவும் சிறந்தது குருபக்தி யாகும்

ஒரு வேளை சாப்பிடுபவள் யோகி. இரு வேளை சாப்பிடுபவள் போகி. மூன்று வேளை சாப்பிடுபவன் ரோகி. ஆகாரம் அதிகமாக சாப்பிட்டால் துன்பப்படுவார்கள். எவன் ஒருவன் நாவை வெல்லுகிறானோ அவன் சாவை வென்றுவிடுவான்.

நமது உடம்பை வளர்க்கிறவர் டாக்டர், அறிவை வளர்க்கிறவர் குருநாதர், டாக்டரிடம் போனால் டொனிக் தருவார். குருநாதரிடம் போனால் அறிவைக் கொடுப்பார். ஞானத்தைக் கொடுப்பவர் ஆச்சாரியர் ஒருவரைத் தவிர வேறு யாருமில்லை. இதை மனத்திலே நன்றாகப் பதிய வைக்க வேண்டும். ஆச்சாரியார்தான் பார்வையினாலேயே ஞானத்தைக் கொடுப்பார். வாக்கினாலேயே வாழ வைப்பார். நீ சௌக்கியமாக இரு என்றால் போதும் வேறு ஒன்றும் தேவையில்லை. ஆகவே நம் வாழ்க்கையிலே சிறந்த ஞானாச்சாரியனைப் பெற்று விட்டால் நிச்சயம் பிறவிக்கடலைத்தாண்டி விடலாம்.

குருநாதர் பல வருடங்கள் தவம் செய்து அந்தத் திருவருளைச் சேர்த்து வைத்திருக்கிறார். அதனைத் தன் சீடனுக்கு பாய்ச்சி விடுகிறார். ஆகையால்தான் சிவ பக்தியைக் காட்டிலும் குருபத்தியே சிறந்தது என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தினிடத்துச் செய்த பாவம் ஆச்சாரியனிடத்துத் தீரும், ஆச்சாரியனிடத்துச் செய்த பாவம் எங்கும் தீராது. அதற்கு முடிவே கிடையாது. அவர் சீடன் தலையில் கை வைத்தால் ஞானம் வந்து விடுகிறது. ஞானத்தை விலைக்கு வாங்க முடியாது. ஞானத்தைக் கொடுக்கிறவர் ஞானக் குருநாதர். எல்லோருக்கும் குருபக்தி அவசியமாகும். குருநாதரை நினைக்க வேண்டும். வணங்க வேண்டும். குருநாதர் இருக்கிற திசைநோக்கிப் பக்தி செய்ய வேண்டும்.

அருணகிரிநாதர் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்தார்கள். முருகப்பெருமானே ஞானக்குருவாக வந்தார். ஆகவே பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இறைவன் குருவாக வருகிறான். அந்த கடைசி நிலைதான் குருபக்தி. குருபக்தியினால் உயர்ந்தவர்கள் எண்ணில்லாதவர்கள். ஆகவே சிறந்ததொரு எளிமையான மார்க்கம் இது. குருபக்தி செய்வோமானால் ஆச்சாரியனுடைய கருணை நமக்கு கிடைக்கும். ஆகையால் குருநாதரை வணங்கினால் இறைவனை வணங்கியப் புண்ணியமும் வரும். குருநாதருடைய உள்ளத்திலே ஆண்டவன் இருக்கிறார்.

நன்றாகப் பழுத்த ஞானிகள் இறைவனை உள்ளுக்குள்ளே நேருக்கு நேராகக் காண்பர். அவர்களுக்கு இதய கமலத்தே உள்ள ஜோதியை வணங்கி புண்ணியம் கிடைக்கும். ஆகவே நாம் செய்கிற புண்ணிய பாவங்கள் எல்லாம் ஆண்டவன் அளந்து வைக்கிறான். ஆண்டவனிடத்திலே நாம் எல்லோரும் பக்தியுடன் இருக்க வேண்டும். எனவே இறைவனை வணங்குதல் வேண்டும். கப்பலில் பிரயாணம் செய்ய மாலுமி எப்படி அவசியமோ அப்படி ஆச்சாரியன் அவசியம். பிறவிக் கடலில் தத்தளிக்கின்ற நமக்கு ஞானத்தை ஒரு விநாடியில் குரு தருகிறார். எல்லா பொருள்களையும் கடையில் வாங்கலாம் ஆனால் ஞானத்தை விலைக்கு வாங்க முடியாது. குருவின் அனுக்கிரகத்தால் மட்டுமே பெறமுடியும்

குருவே ஆத்மா. குருவே உயிர். குருவே சிவன். குருவே தெய்வம். குருவே பந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலையின் பெயர் எப்படி வந்தது

ஸ்ரீமத் இராமாயணத்தில் சபரி என்ற பிராட்டியாரின் பங்கு என்ன என்பது எல்லோர் மனதிலும் ஞாபகம் இருக்கும். ஆனால் அவளுடைய வரலாறு சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். அதிலும் இளம் சந்ததியர்களுக்காக இதை இங்கே குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது

இராமாயணத்தில் வரும் சபரி என்பவள் ஒரு வேடர் குலத்தலைவனின் புத்திரி. இவளுக்கு வேடர் குலத்தினருள் விவாகம் செய்விக்க ஏற்பாடு செய்தபோது பிராணிகளை வேட்டையாடிக் கொல்லும் குலத்தினரை வெறுத்து வீட்டைவிட்டு வெளியேறி தண்டகாரண்யம் புகுந்து ஒரு தபசியாக மாறினாள்

தண்டகாரண்யத்தில் மதங்க முனிவர் ஆச்சிரமம் அமைத்து தவம் செய்துகொண்டு வரும் நாளில் அவருடைய ஆச்சிரமங் களைச் சுத்தம் செய்து அவருக்கும் பணிவிடை செய்து, தானும் தவத்தில் ஈடுபட்டு வரும் காலத்தில் மதங்க முனிவருக்கு காலம் கிட்டிவிட்டதை யோக சக்தியால் அறிந்து சபரியிடம் "நீ எனக்கு வெகுகாலம் பணிவிடையில் ஈடுபட்டவளாய் உன் காலத்தைக் கடத்தி விட்டாய். நான் தியானித்துவரும் திருமால் மானிடருபராக ஸ்ரீராமன் சீதாதேவி லக்ஷ்மணருடன் சித்திரகூடத்தில் வசித்து வருகிறார். அவர்கள் சில காலங்களுக்குள் இவ்வாச்சிரமம் தேடி வருவார்கள். எனக்கு பதிலாக நீ இருந்து அவர்களைக் கண்டு உபசரிக்கும் பாக்கியம் உனக்கு கிடைக்கும்" என்று சொல்லி தாம் பேணி வந்த மூன்று அக்னியும் ஜொலிக்க தனது பூத உடலை தானே அக்கினியில் ஹோமம் செய்து விட்டதாக வரலாறு உள்ளது.

குரு சொன்னதுபோல் சில நாட்களில் ஸ்ரீ ராம சந்திரபிரபு சீதா பிராட்டியுடனும், லக்ஷ்மணருடனும் மதங்கவனம் வந்தபோது அவர்களை உபசரித்து தான் ருசிப்பார்த்த பின்புதான் இராமனாகிய திருமாலுக்கு, உபசரிப்பாள். குருவார்த்தையையும் நிறைவேற்றிதான் குருவின் மோட்சலோகத்தை அடையவேண்டும் என்று ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமபிரானை பிரார்த்தித்துக் கொண்டாள். அப்புனிதவதியின் பெயரால் இம்மலைக்கு சபரிமலை என்று பெயரிடப்பட்டது.

## இருமுடியின் புனித தன்மை

நியமங்கள், நிபந்தனைகள், கட்டுப்பாடு, வழிபாட்டு முறை என்பவை யாவும் எல்லா மதங்களிலுமே உண்டு. அவற்றை எல்லாம் கடைப்பிடிப்பதன் நோக்கம் மனிதகுலம் வாழ்க்கையில் ஒழுக்கத்தோடும் தன்னலமற்ற தியாக உணர்வோடும் நிறைவான சுபிட்சத்தோடும் வாழ வேண்டும் என்பதுதான். தத்துவங்களும் எத்தனையோ உண்டு, ஆனால் அவை நடைமுறையில் கையாளப்படும் போதுதான் உயிரோட்டம் பெறக்கூடியவை யாகின்றன.

"ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது" என்பார்கள். எழுத்தும் சொல்லும் செயல்வடிவம் பெறும்போதுதான் பயன் உண்டாக முடியும். நம்முடைய இந்து மதத்தில் ஜீவ தத்துவங்கள் பல இருக்கின்றன. அவற்றை எடுத்துச் சொல்லுகின்ற வேதங்கள் உண்டு. அவற்றின் கிளைகள் உண்டு. இதிகாசங்கள் உண்டு. பிரபந்தங்கள் உண்டு. பெரியவர்களின் சரித்திரங்கள் உண்டு.

இவற்றில் எல்லாம் சொல்லப்பட்டவைகளின் சாரம் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவது. எல்லோரையும் சமமாகக் கருதுவது, ஒழுக்கம் மேற்கொள்வது, வாய்மை காப்பது, ஈகை போன்ற உன்னதமான பண்பு நெறிகள். அவற்றை நடைமுறையில் கையாள்வதற்கு விடாமல் நமக்குக் குறுக்கே நிற்பவை தன்னலம் ஆசைகள் அகந்தை முதலியவை.

நெருப்புச் சுடும் என்று தெரிந்தும் அதனைத் தீண்டி அதற்கும் பலியாகிறவர்கள் உண்டு. அவர்கள் விட்டில் பூச்சிகளுக்கு நிகரானார்கள். அவர்களிலிருந்து மாறுப்பட்டு புனித நெறியைப் பேணுகிறவர்கள் யாரோ அவர்களே தங்களை அழித்துக் கொள்ளாமல் வாழ்கிறவர்கள் ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரு நிலையினரையும் ஒன்று சேர்ந்து ஒரு நிலையினராக்க ஒரு தத்துவம் பிறந்தது. அதுதான் இருமுடி தத்துவம், நாற்பத்தி நான்கு ஆண்டுகள் சபரிமலை சென்று ஐயனை சேவித்து வந்திருக்கும் நான் நாற்பத்தி ஐந்தாவது முறை என் பயணத்தைத் தொடங்குகிற நேரமிது. கடந்த பயணங்களில் கண்ட காட்சிகள் பெற்ற அனுபவங்கள் ஏராளம். அவை யாவும் இருமுடித் தத்துவத்தின் மகத்துவங்கள்.

லக்ஷக்கணக்கான மக்கள் இந்த தத்துவத்தை அனுபவ ரீதியில் செயற்படுத்துகின்ற ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார்கள். கார்த்திகை மார்கழி இரு மாதங்களில் மிகவும் கட்டுப்பாட்டுடன் கூடிய விரதம் இருக்கிறார்கள். சாதாரணமாக அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்கின்ற பலவிதப் பழக்கங்களையும் துறக்கிறார்கள்,.யாருக்கும் அடங்காதவர்கள் கூட இயற்கையாகவே தங்களைத் தாங்களே அடக்கிக் கொள்கிறார்கள்.

இருமாதங்கள் இப்படி ஒரு பெரும் பகுதிக் காலம் ஒரு புனிதமான காலகட்டமாக ஒவ்வொரு ஆண்டிலும் லட்சக்கணக்கான மனிதர்களின் வாழ்வில் அமைகிறதென்றால் இது வியக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி தான். அதைக் கைவிட என்னால் ஆகாது என்றெல்லாம் சாதாரணக் காலங்களில் பிடிவாதம் சாதிப்பவர்களும் கூட இந்த இரு மாதகால வரம்பில் எதையுமே கைவிடுவதற்குத் தயாராகின்ற ஒரு பக்குவத்தைப் பெற்று விடுகிறார்கள்.

இறைவனை அடையும் நிலையை உணர்த்துவது. மானிடராய்ப் பிறந்த நாம் இறைவனைத் தேட ஆரம்பிக்கும் போது இறைவன் மீதுள்ள பக்தி ஒரு முடியாகவும் நம் உலகத் தேவைகள் ஆகிய லௌகிகம் ஒரு முடியாகவும் இருக்கிறது. இரண்டு அம்சங்களுடனேயே தான் நாம் இறைவனைத் தேடுகிறோம். அந்தத் தேடலில் மெய்ஞ்ஞானம் கிட்டக்கிட்ட நம் லௌகிகப் பற்றுக் குறைந்து மறைந்து போகிறது இறைபக்தி ஒன்றுதான் மிஞ்சுகிறது. அப்பொழுதுதான் இறைவனடியும் தரிசனமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடிக்கு வேண்டிய பொருட்கள்

முன்முடிக்கு வேண்டிய சாமான்கள் மஞ்சள் பக்கெட், திருவிளக்கு, குங்குமம், விபூதிப்பக்கெட், சூடம், ஊதுபத்தி, பன்னீர், காதோலை, கருகுமணி, வெற்றிலை, பாக்கு, காணிக்கை, எலுமிச்சம் பழம், கற்கண்டு, பேரிச்சம்பழம், முந்திரிப்பருப்பு, பசுநெய், நெய் தேங்காய், விடலைக்காய், பச்சையரிசி, அப்பளமாவு, கரட் முதலியன.

பின் முடிக்கு உள்ள சாமான்கள் மஞ்சள் பொடி, அரிசி, பருப்பு, கடலைப்பருப்பு, உழுத்தம்பருப்பு, புளி, பூண்டு, சீரகம், மிளகு, வெந்தயம், மிளகாய் வற்றல், மிளகாய் பொடி, மல்லிப்பொடி, பெருங்காயம், உப்பு, அப்பளம், ரவை, அவல், வெல்லம், சவ்வரிசி, சேமியா, முந்திரிப்பருப்பு, கிஸ்மிஸ்பழம், ஏலக்காய், எலுமிச்சம்பழம், பால்டின், தேயிலை, காபிதூள், சீனி நல்லெண்ணெய், டால்டா முதலியன.

தேவைக்கு தகுந்த காய்கறிகள், உருளைக்கிழங்கு, கருணை, சேனை, கரட். சிறுகிழங்கு, வாழைக்காய், மாங்காய், முருங்கைக்காய், பின்ஸ், கோஸ் பெல்லாரி, வெங்காயம், மிளகாய், மல்லி, கறிவேப்பிலை, இஞ்சி இலை முதலியவை.

சோல்னாப் பைக்குள் உள்ள சாமான்கள், பேட்டரிலையிற், பற்பொடி, சோப்பு, திருநீறு, சந்தனம், குங்குமம், வேஷ்டி துண்டு, சட்டை, அண்டவெயர், ஸ்வெட்டர், கம்பளி, பிளாஸ்டிக் பை, பேப்பர், சிறுகத்தி வெட்டரிவாள், வாட்டார் கேரியர், தின்பண்டங்கள், தீப்பெட்டி, ஐயப்பன் படம், தேவைக்கு தகுந்த பணம் முதலியன.

## இருமுடி பை அளவு விபரம்

இருமுடி பை பெரியது 36"x 12" அளவுள்ளது. சிறிய பை அளவு 9"x 6" அளவுள்ளவை. இருமுடியைக் கட்ட நூல் கயிறு 5 முழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய் அபிஷேகம்

நெய்த்தேங்காய் - தனி நெய்யையோ தேய்காயையோ நிவேதனமாக்காது நெய்த் தேங்காயை ஐயப்பனுக்கு நிவேதன மாக்கியது ஏன்?

முக்கண் கொண்ட தேங்காய் சிவனை உருவகப்படுத்தும். பசு நெய் கோபாலனாகிய மஹாவிஷ்ணுவை உருவகப்படுத்தும். சிவன், விஷ்ணு இருவருடைய அருள், கதிரொளியின் கூட்டு சக்தியே சாஸ்தாவாகிய ஐயப்பனாதலால் நெய்யும், தேங்காயும் சேர்த்து அவருக்கு நிவேதனப் பொருளாகின்றன. அதனால்தான் தேங்காயில் நெய் அடைத்துக் கொண்டு வருகிறார்கள்.

குருநாதர் பகவானுக்கு சுத்தமான நெய் பார்த்து வாங்க வேண்டும். தற்பொழுது கலப்படம் செய்யப்பட்ட நெய் வாங்கி இருமுடி கட்டி அபிஷேகம் செய்கிறார்கள். அது இறைவனுக்கு உகந்ததல்ல. இறைவன் கருணை நமக்கு கிடைக்காமல் போகும். சுத்தமான பசுநெய்யாக இருந்தால் தேங்காய் உடைத்தவுடன் நெய் கெட்டியாக நிச்சயமாக இருக்கும். கலப்பட நெய்யாக இருந்தால் நெய் தண்ணீராகத்தான் இருக்கும் என்பதில் சந்தேக மில்லை. இதில் ஐயப்பமார்களின் விரதத்தை சோதித்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. மனமார பகவானை பிரார்த்தனை செய்தால் நிச்சயம் நமக்கு இறைவனுடைய கருணை கிடைக்கு மென்பது ஆன்றோர்களின் வாக்கு.

## பிரம்மச்சாரி ஆவது எப்படி

பிரம்மச்சாரிகளுக்கென்று சில நியமங்கள் இருக்கின்றன. உணர்ச்சிகளைத் தூண்டிடும், உணவு, அளவுக்கு மீறிய தூக்கம், மிதமிஞ்சிய உடற்பயிற்சி, சோம்பல், தீயவர்களின் தொடர்பு. வீண் பேச்சுகள் ஆகியவற்றைப் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்க விரும்புவர்கள் அறவே தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மச்சாரியம் பழக விரும்புபவர்கள் தங்களது தேவைக்கும் அதிகமான சக்தியை உடலில் சேரவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி அதிகமான உயிரச்சத்து உடலில் சேர்ந்து விட்டால் சில நாட்களுக்கு உண்ணாவிரதம் இருந்து அதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் எப்பொழுதும் மனம் புத்தி உணர்வுகள் ஆகியவற்றை உன்னத நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அடுத்து உடல் தூய்மை. உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும், உடலையும் ஆடைகளையும் சுத்தமாக உபயோகப்படுத்த வேண்டும்.

தூய்மை உள்ளத்தோடு தொடர்பு கொண்டால், பிரம்மச்சாரியத்தை முறையாகக் கடைப்பிடித்து வாழும் தூயவர்களோடு சகவாசம் கொண்டால், பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடிக்கும் விஷயத்தில் முயன்று போராடிக் கொண்டிருக்கும் சாதகர்களுக்கு அது ஆழ்ந்த ஊக்கத்தை அளிக்கும் வழிகாட்டி யாக இருந்து உதவும்.

ஒன்றே ஒன்று. இத்தகைய தூயவர்களின் தொடர்பினால் சாதகர் லாபமடைய வேண்டுமானால் அவர் ஒழுக்கமற்றவர்களின் உறவை ஒதுக்க வேண்டும். பிரமச்சரியத்தைக் கடைப்பிடிப்பதில் தீய சக்திகளின் உறவு இடையூறு விளைவிக்கும். அதைவிடக் கேடு விளைவிப்பது வேறொன்றும் கிடையாது என்றுகூடத் திட்ட வட்டமாகச் சொல்லலாம். இருந்தாலும் உடலளவில் மட்டும் காமத்தைக் கட்டுப்படுத்த முடியாது. காமம் மனிதனின் இயல்பில் ஆழமாக வேரூன்றிய ஒன்றாகும். அதை மனதளவில் சமாளிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கப் பிரதட்ஷணம்

ஆண்டவனின் பாததூளி மகிமை யாவரும் அறிந்ததே. இராமன் பாதம் பட்டமாத்திரத்தில் கல்லும் பெண்ணானதையும் ராமனது பாதுகைகள் ஒரு சாம்ராஜ்யத்தையே ஆண்டதையும் ராமாயணம் மூலம் அறிகிறோம். ஆனால் இறைவனது பக்தர்களின் பாததூளியோ அதைவிட மிகவும் பெருமை வாய்ந்தது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பெரியோர்களது பாததூளிகளை தன் சிரசில் தரித்துக் கொண்டதாக பல நிகழ்ச்சிகள் மகாபாரதத்தில் காணப்படுவதாகக் கூறுவர்.

தம்மில் பலர் அநேக திருத்தலங்களில் அங்கப் பிரதட்சிணம் செய்வதைக் காண்கிறோம். அதன் உட்கருத்து யாது? ஆலயங்களில் அநேக மெய்யடியார்களின் பாதம் பட்டு அவர்களது பாதத்துளிகள் அங்கே படிந்திருக்கும். இறைவனின் பெயரைச் சொல்லியவாறு தரையில் படுத்து இருகைகளையும் தலைக்கு மேலே நீட்டி உள்ளங்கைகளை இணைத்துக் கூப்பிக்கொளர்டு உடல் உறுப்பு எல்லாம் தரையில் படுப்படியாகப் படுத்து உருண்டு புரண்டவாறே ஆலயத்தின் திருச்சுற்றில் வலம் வருவதால் மெய்யடியார்களின் பாதத்துளிகள் உடலில்படுவதால் உள்ளம் அமைதி காண்கிறது. உடல் தூய்மையாகி விடுகிறது. இந்த நம்பிக்கையில் தான் அங்கப் பிரதட்சிணம் செய்யும் வழக்கம் நம்மிடையே நிலவி வருகிறது.

இவ்விதம் அடியார்களின் பாததூளி நம் உடலில் படுவதால் புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிட்டுவதாகவும் அது நமக்கு எல்லா நலன்களையும் தருவதாகவும் பாவங்களை போக்குவதாகவும், பிறவிப் பிணியை அகற்றுவதாகவும், ஆழ்வார் களும், அடியார்களும் பகர்கின்றனர். அத்துகள்கள் உலக மனைத்தையுமே காப்பாற்றுவதாக பெரியாழ்வார் தனது திரு மொழியில் கூறியுள்ளார். பாததூளி படுவதால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே என்று வலியுறுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானத்தில் சிறந்தது அன்னதானம்

மனித வாழ்க்கையில் எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடா என்பதற்கு பல தர்மங்கள் சொல்லப்பட்டுள்ளது. பிரம்மச்சாரி, சந்நியாசி இவர்களைவிட இல்லறம் நடத்துபவனுக்குத் தான் பல தர்மங்கள் செய்ய சந்தர்ப்பமும், வாய்ப்பும் உள்ளது. இவர்களிடம்தான் சிலர் பலவிதமான தர்மங்கள் கேட்டு வருவார்கள். இவர்களுக்கு பலவித தர்மங்கள் செய்து புண்ணியம் சம்பாதிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.

நாம் தர்மங்கள் என நினைக்கும்போது தன்னிடம் உள்ளதை யார் யாருக்கு என்ன வேண்டுமோ அதை மனமுவந்து கொடுப்பதாகும். எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கலாம். இவைகளில் பசிப்பவர்க்கு சாப்பாடு போடுவது மிகப்பெரிய தர்மமாக சொல்லப்பட்டுள்ளது. ஒருவனுக்கு பசிக்கொடுமை என்பது மிகப் பயங்கரமானது அவனுக்கு எதைக் கொடுத்தாலும் போதும் என்று சொல்லமாட்டான். ஒரு மூட்டை நிறைய பவுண் கொடுத்தாலும் இன்னும் இரண்டு பவுண் கொடுத்தால் இடுப்பில் சொருகிக் கொண்டு போகிறேன் என்பான்.

ஒருவனுக்கு சாப்பாடு போட்டால் வயிறு நிரம்பிவிட்டால் போதும் வேண்டாம் ஐயா என்று கும்பிடுவான். அது மாத்திரம் அல்ல, வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு பசி அடங்கியவன் முகத்தைப் பாருங்கள். எத்தனை திருப்தியோடு சந்தோஷப்படுகிறான். எப்படி வாழ்த்துகிறான் பாருங்கள். வேறு எதைக் கொடுத்தாலும் இத்தனை திருப்தி அடைய மாட்டார்கள்.

ஒருவரிடத்தில் உள்ளதை தானே வைத்துக் கொண்டு பிறருக்குக் கொடுக்காமல் தானே சாப்பிடுவது மற்றவர்களுக்கு தெரியாமல் ஒளித்து வைத்துக் கொண்டு அன்னம் அருந்துவதும் பாவம் என்று சொல்லுகிறார்கள். பூஜை, தெய்வ வழிபாடு செய்தாலும் தானதர்மம் முக்கியம். பொதுவாக அன்னதானத்தைப் போல் உயர்ந்தது எதுவுமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா தானங்களிலும் மிக சிறந்தது அன்னதானமாகும். அது எல்லோரையும் மகிழ்விப்பதும் புண்ணியத்தைத் தேடிக் கொடுப்பதுவும் சக்தியையும் புத்தியையும் கொடுப்பதுமாகும். மூன்று லோகங்களிலும் அன்னநானத்தை விடச் சிறந்த தானம் கிடையாது. அன்னத்திலிருந்து பிராணிகள் உற்பத்தியாகின்றன. அன்னம் இல்லையேல் மரணம் அடைகின்றன.

## வஸ்தரதானம் செய்வதால் பிறவி பிணி நீங்கும்

நாம் செய்யும் தானங்களில் சிறந்தது அன்னதானம், அதே மாதிரி சிறந்த தானம் வஸ்திரதானம் அப்படி செய்தால் நோய்கள் நீங்கும். மற்ற தெய்வங்களின் அனுக்கிரகம் கிடைக்கும் என்று வேதங்கள் கூறுகின்றன.

பஞ்சு பிரிக்கப்படும் போது அக்கினியின் தொடர்பு, காயப் போடும்போது காற்றின் தொடர்பு, நீளமான நூல்களில் ஆதித்தியர்களுடைய தொடர்பு, இடையிலுள்ள முடிச்சுகளில் பித்ருக்களின் தொடர்பு, முறுக்கு நூல்களில் மற்ற தெய்வங்களின் தொடர்பு, இடைவெளிகளில் நட்சத்திர தேவதைகளின் தொடர்பு அடங்கியுள்ளன.

அதனால் வஸ்திரதானத்தினால் எல்லா தேவதை, பித்ருக்களின் அனுக்கிரகத்தை அடைந்து க்ஷேமங்கள் உண்டாகுமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வஸ்திரதானம் ஒருவர் மற்றவர்க்கு செய்வாரேயானால் ஆயுள் விருத்தி ஏற்படும் என்பது திண்ணம், கம்பளி தானம் செய்தால் வாய்வு ரோகம் நீங்கும்.

ஒருவருக்கு செல்வம் கிடைப்பது அரிது. அதை நல்ல முறையில் தானம் செய்வது அதனிலும் அரிது. தகுந்த நேரத்தில் தானம் செய்வது அதனிலும் அரிது. தானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது அதனிலும் அரிது. தர்மம் ஒன்றுதான் கடைசிவரை காக்கும் சொத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்தரதானம் செய்தால் ஆயுள் விருத்தி ஏற்படும். பூமிதானம் செய்தால் பிரம்மலோகத்தை தரும். வெண்கல பாத்திரத்தில் தேனுடன் தானம் செய்தால் புத்திர பாக்கியம் உண்டாகும். நெல்லிக்காயை தானம் செய்தால் ஞானத்தை தரும். கோவிலில் தீபதானம் செய்தால் சக்கரவர்த்தி பதவியையும் தரும். அரிசி தந்தால் பாவம் போகும். பழம், தாம்பூலம் கொடுத்தால் ஸ்வர்க்கத்தைத் தரும், கம்பளிதானமை செய்பவர்க்கு வாய்வு ரோகம் நீங்கும், கடலை தானம் செய்தால் சந்ததி விருத்தி உண்டாகும்.

## பாதபூஜை மகிமை

குருமார்களுக்குப் பாதபூஜை செய்வது இந்துக்களின் பண்பாடு. ஒரு மனிதனின் பாதங்களைக் கழுவி பூஜை செய்வதா? இது அடிமை மனப்பான்மை அல்லவா? என்று நவீனப் படிப்பாளிகள் சிலர் கேட்கிறார்கள். மேலான பரம்பொருளை நாம் அடைவதற்காக நமக்கு மார்க்கமாக இருந்து உதவுபவர்தான் குருநாதர். அவர் நம்மை வழிநடத்திக் செல்வார் என்பது மட்டும் நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.

ஆனால் அந்த மேலான பொருளுக்கு நம்மை இட்டுச் செல்பவரின் பாதங்கள் நமக்கு கண்கூடாகத் தெரிகின்றன. மேலான பொருளை மனதால் தியானித்து கண்கூடாகத் தெரியும் குருநாதரின் பாதங்களை அந்த மேலான பொருளின் குறியீடாக கருதி அவற்றுக்கு பூஜை செய்கிறோம். நாம் பாதபூஜை செய்யும்போது குருநாதரும் அந்த பூஜை பாதங்களுக்காகத்தான் செய்யப்படுகிறது என்று கருதுவதில்லை. தன் பாதங்களுக்கு செய்யப்படும் பூஜையை எல்லாம் அவர் தான் உணர்ந்துள்ள மேலான பரம் பொருளுக்கு சமர்ப்பணம் செய்துவிடுகிறார். ஆணவம் என்ற வேண்டாத குணத்திலிருந்து நம்மை விடுவிக்கும் ஓர் அற்புதமான நடைமுறைதான் பாதபூஜை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகத்தின் ஆட்சி

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்பன நவக்கிரகங்கள். கிரகம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு ஆகர்ஷிப்பது - பற்றி இழுப்பது என்று பொருள். உலகைப் படைத்துக் காத்து அழித்து வரும் பரம்பொருள் ஒன்று இருக்க நவக்கிரகங்களின் அவசியம் என்ன?

நம் நாடு பரந்து விரிந்த பாரதநாடு. பல்வேறு மாநிலங்கள் ஒன்று சேர்ந்த நாடு. இந்நாட்டைப் பரிபாலனம் செய்ய ஜனாதிபதி இருக்கிறார். அவருக்குக் கிழ் பிரதமர், அமைச்சரவை இருக்கிறது. ஜனாதிபதி எல்லா அதிகாரங்களும் பெற்று இருந்த போதிலும் மாநிலங்களை நிரவகிக்க கவர்னரை நியமித்து கண்காணிக்கிறார். கவர்னர்கள் மூலம் ஜனாதிபதி, பிரதமர் ஆட்சிப் பொறுப்பை ஆற்றுகின்றனர்.

மனித உடலும் ஒரு நாடுதான். இந்நாட்டிற்குச் சகலலோக நாயகரான பரம்பொருளே தலைவரானாலும் அந்த சரீரத்தில் ஒவ்வொரு கிரகத்தை பரம்பொருளின் பிரதிநிதியாக நியமித்து இருக்கிறார்.

இந்த நவக்கிரகங்கள் ஒவ்வொரு மனிதன், தான் முன் பிறவியில் செய்த வினைகளை அனுசரித்து அதற்குத் தக்க பலன்களைத் தத்தம் தசா புத்திகள் நடக்கும்போது கொடுக கின்றனர்.

கிரகங்கள் மனிதன் என்ற தராகக் கோலுக்கு இருபுறமும் இருக்கும் புண்ணிய பாவங்கள் இடத்தை விட்டு மாறாது மனிதனுக்கு ஒரே சமயத்தில் சுகத்தையும் துக்கத்தையும் கொடுத்து வருகின்றன. துயரங்களைக் கண்டு கலங்கக் கூடாது. நல்வினையைச் செய்து வருங்காலத்தைச் செம்மைப்படுத்திடல் வேண்டும். உதாரணமாக ஒருவன் ஒரு பாங்கில் பணம் போட்டு வைக்கிறான். பணம் போடுகிறவன் நல்லவர், கெட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் வங்கிக்காரர்கள் போட்டு பணம் இருக்கும் வரை கேட்ட பொழுதெல்லாம் கொடுக்கின்றனர்.

இதுபோலவே பூர்வ ஜென்மத்தில் செய்த நல்வினைகள் இருக்கும்வரை அதற்கு தகுந்த பலன்களைத் தருகின்ற பிரதிநிதிகளே நவக்கிரகங்கள். வங்கியில் கடன் பட்டவன் நல்லவன் ஆனாலும் அவன் கடன் முழுவதையும் தீர்க்கும் வரையில் வங்கிக் காரர்கள் அவனை வருத்தி வசூலிப்பதுபோல பூர்வ ஜென்மத்தில் செய்த பாவம் தீரும்வரை இந்த ஜென்மத்தில் செய்த பாவம் தீரும்வரை இந்த ஜென்மத்தில் நல்லவனாக இருந்தாலும் அவனுக்கு இறைவன் கஷ்டங்களை கொடுத்து வருகிறார்.

உடலில் உள்ள நோய்களைக் குணப்படுத்தும் வகையில் பகவான் மருத்துவர்களையும் மருந்துகளையும் படைத்துள்ளார். நோய் வரும்போது மருத்துவரை நாடுகிறோம். அதுபோல கஷ்டங்கள் வரும்போது இறைவனை வழிபடுகிறோம். அப்படி இல்லாமல் எப்பொழுதும் இறைவனை வழிபட்டு வந்தால் கிரகங்கள் நமக்குத் துணை செய்யும். நவக்கிரகங்களையும் அவற்றால் பூஜை செய்யப்பட்ட மூர்திகளையும் சேர்த்தே வழிபடல் வேண்டும். நவக்கிரகங்களால் இறைவன் திருவருளும் ஒருசேரக் கிடைக்கும். ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தலாம். நவக்கிரகம் துணை செய்யும். நமக்கு எல்லா தெய்வங்களின் அருள் நோக்கமும் கிட்டும்.

## திருவாதிரையும் திருவோணமும்

நட்சத்திரங்கள் இருபத்தேழில் திரு என்ற அடைமொழி பெற்ற நட்சத்திரங்கள் இரண்டு. அவை ஆறாவது நட்சத்திரமாகிய திருவாதிரையும் இருபத்திரெண்டாவது நட்சத்திரமாகிய திரு வோணமும் ஆகும். திருவாதிரை ஈசனுக்கு உகந்தது. திருவோணமோ திருமாலுக்குரியது.

சிவபெருமான் ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் அழைக்கப் பெறுகிறார். திருவாதிரை நோன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாதத்தில் பிறைமதி நாளில் மேற்கொள்ளப்படுவது. அப்பொழுது நடராஜப் பெருமானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும், தில்லையில் நடைபெறும் ஆருத்திரா தரிசனம் காண திரளாக மக்கள் கூடுவர். ஆருத்திரா என்பது ஆதிரை.

திருவோணம், இது மகர ராசியில் உள்ளது. இதை மேல்நாட்டவர் இலத்தீன் மொழியில் ஆக்விலா (igula) என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். அதன் பொருள் கழுகு என்பதாகும். இந்த நட்சத்திரக் கூட்டத்தின் அமைப்பு கழுகு போன்று காட்சி அளிப்பதால் அப்பெயர் பெற்றது. இது வட அர்த்த கோளத்தில் உள்ள நட்சத்திரம்.

திருமால் திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தார். அதனால்தான் இந்த நட்சத்திரத்திற்கு திரு அடைமொழி தரப்பட்டுள்ளது. திருவோண நட்சத்திரத்தில் சங்ககாலத்தில் விழாக் கொண்டாடப்படுவது வழக்கம்.

## கன்னி பூஜை என்றால் என்ன?

சபரிமலையில் குடி கொண்டிருக்கும் ஐயப்பனை தரிசிப்பதற்கு வருடாவருடம் ஐயப்பமார்கள் சபரிமலைக்கு வருகிறார்கள், அப்படி புதிதாக வருகிற ஐயப்பமார்களை கன்னிச் சாமிகள் என்று அழைக்கிறோம், கன்னி ஐயப்பன் கார்த்திகை மாதம் ஒன்றாம் தேதியில் குருநாதரின்மூலம் மாலை அணிந்து நாற்பத்தியொரு நாள் விரதமிருந்து சபரிமலைக்கு பெரிய பாதை வழியாக போகிறார்கள். போகிற வழியில் பம்பையில் ஒருநாள் தங்கி கன்னி ஐயப்பமார்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ தர்ம சாஸ்தா வழிபாடு செய்கிறார் கள் அதன்பின் ஐயப்பமார்களுக்கு அன்னதானம் செய்வது வழக்கம், அதற்குத்தான் சக்தி பூஜை அல்லது கன்னி பூஜை என்று பெயர்.

புண்ணிய நதியான பம்பையில் இப்பூஜை செய்வதால் பகவான் ஐயப்பனே நேரில் வந்து பக்தர்களுடன் தானும் சக்தி பூஜை செய்வதாக ஐதீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் சக்தியிட்ட இலையையும், குருநாதர் இலையையும் பக்தர்கள் ஏலம் விடுகிறார்கள். ஏலம் எடுத்தவர்களின் தலையில் தூக்கிவைத்து சுவாமி திந்தகத்தோம் ஐயப்பத் திந்தகத்தோம் என்று ஆவேசமாக ஆடி பம்பை நதியில் இலைகளைப் போட்டு நீராடிவிட்டு குருநாதரிடம் ஆசிபெற்றுக் கொள்கிறார்கள்.

ஏலம் விட்ட பணத்தை சன்னிதானத்தில் உண்டியலில் காணிக்கையாக செலுத்தி விடுகிறார்கள், சக்திபூஜையை செய்த கன்னி ஐயப்பமார்கள் விரும்பும் வரங்களை பெற்று மன நிம்மதியான நல்வாழ்வை அடைவார்கள் என்பது திண்ணம்

## திருவாபரணப்பெட்டி

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கி வரும் ஸ்ரீ சபரிகிரி தர்ம சாஸ்த்தாவின் திருவாபரணம் ஒவ்வொரு வருடமும் அவருடைய வளர்ந்த இடமான பந்தளத்திலிருந்து அவருடைய இன்றைய வம்ச பரம்பரையின் மூலமாக பாத யாத்திரையாகவே கொண்டுவரப்பட்டு மகர சங்கராந்தியன்று ஐயனுக்கு அணிவிக்கப்பட்டு கற்பூர ஆரத்தி செய்யப்படுகிறது. அப்பொழுதுதான் மகரஜோதி தரிசனம் தெரிவது ஐயப்ப பக்தர்கள் பலர் அறிந்தது.

சபரிமலை சாஸ்தாவிற்கு திருவாங்கூர் தேவஸ்தானம் மற்றும் பல மெய்யன்பர்கள் எத்தனையோ விதமான திருவாபரணங்களை அளித்துபோதிலும் தெய்வத்தின் பரிபூரண கிருபா கடாட்சத்துடன் ஐயப்பன் அணியப் பெற்றதும் தொன்மை யானதும் பந்தளத்தில் இருக்கும் திருவாபரணமே ஆகும்.

அகில இந்தியாவில் பல்வேறு திசைகளிலிருந்து பல லட்சக்கணக்கான ஐயப்பமார்கள் பல்வேறு புண்ணிய ஸ்தலங்களை தரிசித்துவிட்டு சபரிமலை சென்று ஐயனை தரிசிக்கிறார்கள். இந்த பக்தகோடிகளுக்கு அடியேனின் அன்பு விண்ணப்பம். ஒரு தடவையாவது நீங்கள் பந்தளத்திற்கு சென்று ஸ்ரீ ஐயப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவழ்ந்து விளையாடிய அவருடைய ஆதிகாலத்து இல்லத்தையும், அவர் நீந்தி விளையாடிய திருக்குளத்தையும், அவர் படித்த ஏடுகளையும் தரிசிக்க வேண்டும் என்பதே. பந்தளம் ஒரு சிறிய அழகிய ஊர். உணவு விடுதிகளும் உள்ளன. புனலூரில் இருந்து ஒரு மணி நேரம் பிரயாணத்தில் கார், பஸ் மூலமாக பந்தளத்தை சென்றடையலாம்

## ஐயப்பன் ஆபரணம் பூணுவது ஏன்

சபரிமலையில் துறவு பூண்டு யோக நிலையில் ஐயப்பன் எழுந்தருளியிருக்கிறார். அப்படி இருந்தும் மகர விளக்கின் போது பந்தள மகாராஜாவின் அரண்மனையிலிருந்து ஆபரணங்கள் வருவதும் அதை அணிந்து அவர் காட்சி தருவதும் சிறப்பு பூஜை நிகழ்ச்சிகளாகும். துறவியான சுவாமி ஆபரணங்கள் பூண்டு காட்சி தருவதேன்? அதற்கு ஓர் அபூர்வ காரணம் உண்டு.

ஐயப்பன் அவதார நோக்கத்தின் நிமித்தம் பந்தள நாட்டை விட்டு சபரிமலைக்கு புறப்படும்போது எல்லோரிடமும் தனித்தனியாக விடைபெற்றுக் கொண்டு வந்தார். அவர்களுக்குள் அவரது குருவும் ஒருவர். அந்த குருவிடம் சுவாமி உங்களுக்கு நாள் குரு தட்சணையாக என்ன தரவேண்டும் என்று கேட்டார் ஐயப்பன்.

குரு நெகிழ்ந்து போய் பெருமானே எனக்கு இப்பிறவியில் நீ எனது மாணக்கர் என்று கூறும் பேறே எனக்கு குரு தட்சணை என்றார். அவருடைய மனைவியோ, ஊமையாகவும் குருடனாகவுமிருந்த நங்கள் குழந்தையை குணப்படுத்தித் தரவேண்டும் என்று வேண்டினார்.

குருபத்தினியின் கோரிக்கைப்படி அந்த குழந்தை பிணி நீங்க செய்கார். அப்பொழுது தம்முன் நிற்பது தெய்வம் என்ற உணர்வைக் கடந்து, நெகிழ்ந்து அய்யனே நீ தங்கமும் ரத்தினமும், ஜொலிக்க மகாராஜனாய் இருக்க வேண்டும் என்று ஆசிரவதித்துவிட்டார் குரு. எல்லாவற்றையும் கடந்த சுவாமிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் சுவர்ண ரத்தின ஆபரணங்கள் என்ற உணர்வு அந்த குருவுக்கு அப்பொழுது தோன்றவில்லை.

எனினும் குருவின் ஆசிதானே. அது பொய்த்து விடக் கூடாதே. அதனால் ஆண்டுக்கு ஒரு முறை மகரவிளக்கு விழாவின் போது (தைமாதம் ஒன்றாம் தேதி முதல் தைமாதம் நாலாம் தேதி வரை) பந்தளராஜன் பரம்பரையினர் கொண்டுவரும் ஆயிரம் சவரனுக்கு மேற்பட்ட தங்க, ரத்தின ஆபரணங்களை அணிந்து காட்சி தருகிறார் ஸ்ரீ ஐயப்பன்,

## மகரஜோதி தரிசனம்

மகர தீப தரிசனத்தின் பின்னணியை யாரும் ஆராய முடியாது என்பது உண்மையா? அதே சமயத்தில் அதே போல் பிற இடங்களிலும் ஜோதி தென்படுவதாகக் கூறப்படுவது ஏற்பதற்கு உரியதா?

தேவர்கள் வந்து ஐயப்ப சுவாமியை பூஜித்து தீப ஆரத்தி எடுக்கும் தருணத்திலேயே மகரஜோதி தென்படுகிறது என்பது ஐதிகம். ஜோதியில் மூலாதாரம் என்ன என்பதைக் காண பலர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். யாராலும் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

சபரிமலை ஐயப்பன் ஆலயத்தைப் போலவே பல்வேறு இடங்களிலும் ஐயப்பன் ஆலயங்கள் தோன்றிவிட்டனவே. அவற்றிலும் அதேபோல் பூஜைகள் நடைபெறுகின்றனவே. அவற்றையும் நீங்கள் அதே அறிவு மகிமையுடன் ஏற்றுக் கொள்ள முன் வருவீர்களா?

கேரள மாநிலத்திலேயே பதினெட்டு தலங்களில் அச்சங்கோவில், ஆரியங்காவு போன்ற ஐயப்பன் ஆலயங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் பக்தர்கள் செல்லுகிறார்கள். பக்திக்கும் வழிபாட்டுக்கும் அங்கேயும் செல்லலாம். ஆனால் சிரத்ரையுடன் விரதம் இருந்து தலயாத்திரையாக வரக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிமை மிகுந்த தலம் சபரிமலை ஐயப்பன் ஆலயம் மட்டும்தான். இப்போது தமிழ்நாட்டிலும் பிற ஊர்கள் பலவற்றிலும் ஐயப்பன் ஆலயங்கள் தோன்றியுள்ளன. அவை பக்தர்கள் சௌகரியத் துக்காக ஏற்பட்டிருக்கின்றன. சபரிமலை ஐயப்பன் ஆலயத்தின் விக்கிரகத்தைச் செய்து கொடுத்த சிற்பியே இருபத்தெட்டு விக்கிரகங்களைச் செய்து கொடுத்திருக்கிறார். ஆனால் அதேபோல் அவரால் செய்ய முடியவில்லை .

சபரிமலை ஐயப்பனை வந்து தரிசித்து பக்தியைக் கொட்டியவர்கள் எத்தனைக் கோடி மக்கள். நெய்யும், பாலும், இளநீருமாகச் செய்யப்பட்ட அபிஷேகம் எத்தனை மடங்கு. பம்பை ஆறும் கானகச் சூழநிலையுமாக அங்கே அமைந்துள்ள சாந்நித்தியப் பெருமை பிற இடங்களில் தரிசிக்கக் கிடைக்குமா? அந்த மகிமையைத் தேடி வருபவர்கள் அங்கேதான் வரவேண்டும் என்கிறார் மேல் சாந்தி நாராயணன் நம்பூதிரிகள்.

## எரிமேலியின் வரலாறு

கேரளத்தை கலக்கிய கடற்கொள்ளைக்காரன் இஸ்மாயில் கோத்திரத்தில் பர்ஹுவியா வகுப்பில் வாபேட் என்னும் ராஜ்யத்தில் பாத்திமாவின் மகனாகப் பிறந்தவர் வாபர் ஒரு அரேபிய முஸ்லிம். இவர் மந்திர ஜாலங்களால் பெரிய பெரிய வீரர்களெல்லாம் அடிமையாக்கிக் கொண்டார்.

கொள்ளையடிப்பதில் பெரும் தொகையை ஏழைகளுக்கு வாரி வழங்கினார். இவரது ஆற்றலை உணர்ந்த ஐயப்பன் இவரை வென்று நண்பராகிக் கொள்ள நினைத்து கடும் போர் ஒன்றை நடத்தி வாபரை வென்றார். பின் வாபரிடம் இனியசொல் பேசி ஆறுதல் கூறி நல்வழிகாட்டி நண்பராக்கிக் கொண்டார். வாபர் முஸ்லீம் மதத்தை விட்டு இந்துமதத்தில் சேர முயன்றபோது உலகிற்கு பணியாற்ற மதம் எதுவாயினும் கவலையில்லை. மதம் மாற வேண்டாம் என ஐயப்பன் தெளிவாக்கினார். இதையெல்லாம் நாம் சொல்லவில்லை. ஐயப்பனின் சுயசரிதை சொல்லுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பன் கோவிலில் நானும் வாபரனும் ஒன்றுதான். மஞ்சமாதா என்னுடைய சக்தி. கடுசப்தன் (கடுத்தை) என் பக்கத்தில் இருப்பவன் என்றும், அறிந்து கொள்ளுங்கள். என்னுடைய பக்தர்கள் இவைகளை எல்லாம் பத்தியோடு வழிபடட்டும்.

கலியுக வரதனான தர்ம சாஸ்தாவிற்குப் பூர்ணா, புஷ்கலா என்ற இரு தேவிமார்களும், சத்யகன் என்ற புத்திரனும் உள்ளனர். அவர் வெள்ளை யானைமீது ஆரோகணித்து கையில் செண்டு என்னும் ஆயுதம் தரித்து இருப்பதாக ஐதிகம்.

## பேட்டை துள்ளல் எதற்காக?

கார்த்திகை மாதம் பிறந்தவுடனே பக்தர்கள் மாலை அணிந்து ஐயப்பனுடைய ஆலயத்திற்கு செல்வதற்கு ஆயத்தமாகிறார்கள். எங்கு பார்த்தாலும் ஐயப்பமார்கள் சுவாமியே சரணம் ஐயப்பா என்று சரணம் விளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

விரத காலத்தில் ஐயப்ப சுவாமிகள் பிரமச்சரிய விரதம் மேற்கொள்கிறார்கள். அத்தோடு தம்மை தவறான பாதையில் செல்லாமல் தன்னையே கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். இருமுடிக்கட்டி புறப்படும் சமயம் மற்றவர்களிடம் நான் போய் வருகிறேன் என்பதாக யாரிடமும் சொல்லாமல் எல்லாப் பொறுப்பினையும் பகவானிடம் ஒப்படைத்துவிட வேண்டும். பெருவழிப் பாதையில் செல்பவர்கள் எரிமேலி போய் சேருவார்கள். எரிமேலியில் பேட்டை துள்ளல் ஆடிவிட்டு தர்ம சாஸ்தாவை வணங்கி ஆற்றில் நீராடி முடிப்பதுதான் வழக்கம். எதற்காக பேட்டை துள்ளல் ஆடவேண்டும் என்பதாக கேள்வி நமக்குள் எழுகிறது. அதிலும் ஐயப்ப பக்தர்கள் ஒவ்வொருவரும் கலர் பவுடர் மூலம் பல வண்ணப்பூச்சுக்கள் பூசி பலவண்ண பலூன்களை தலையில், கையில் கட்டிக் கொண்டு மற்றவர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலையில் தன்னை மறந்து சுவாமி திந்தகத்தோம் ஐயப்ப திந்தகத்தோம் என்று சொல்லி மெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து பேட்டை துள்ளல் ஆடுகிறார்கள். காரணம் நமது சரீரத்தில் சூழ்ந்திருக்கும் பந்த பாசங்களையெல்லாம் ஒழிப்பதைத்ததான் இது காட்டுகிறது.

கடைசியாக பகவானை தரிசிப்பதற்குமுன் தங்களிடம் மிஞ்சி இருக்கும் நான் என்ற ஆணவத்தை ஒழித்து குழித்தோண்டி புதைத்துவிட்டு பகவானிடம் தன்னை அர்ப்பணித்து கொள்கிறார்கள் என்பதாக தத்துவ ஞானிகளும் பெரியவர்களும் தெரிவிக்கிறார்கள். ஆத்ம சக்தியுடன் பகவானை நினைத்து வணங்கிவிட்டு மறுநாள் காலை பெருவழிப்பாதையில் சபரிமலை புறப்படுகிறார்கள் ஐயப்பமார்கள். அவர்கள் நினைத்த காரியங்கள் சித்தியாவதுடன் பகவானின் அருளுக்கு பாத்திரமானவர்களாக ஆக்கப்படுகிறார்கள்

## சபரிமலைக்கு இளம் பெண்கள் வரலாமா? நீதிமன்றம் தீர்ப்பு

ஸ்ரீ சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் கோவிலுக்கு பத்து வயதிற்கும் ஐம்பது வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் வருவதைத் தடைசெய்யக்கோரி கேரளா உயர் நீதிமன்றம் திருவிதாங்கூர் தேவஸ்தம் போர்டுக்கு உத்தரவு அனுப்பியுள்ளது. இதை நடைமுறைப்படுத்த தேவஸ்தம் போர்டுக்கு காவல்துறையின் உதவி உட்பட அனைத்து உதவிகளும் செய்ய நீதிமன்றம் கேரள மாநில அரசையும் கேட்டுக் கொண்டுள்ளது.

சங்கணாச்சேரியைச் சேர்ந்த திரு எஸ். மஹேந்திரன் என்பவரால் வயது வந்த பெண்கள் சபரிமலை வருவது சம்பந்தமாக ஒரு கடிதம் கேரள உயர் நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பொது மக்களின் விருப்பத்தை கருத்திற் கொண்டு அக்கடிதத்தை ஒரு மனுவாக ஏற்று உயர் நீதிபதிகள் திரு கே. எஸ். பரிபூரணம், திரு கே. பி. பலநாராயணமாரா ஆகியோர் உட்பட்ட டிவிசன் பெஞ்ச் விசாணைக்கு ஏற்றுக் கொண்டது. தற்போது நடைமுறையிலுள்ள ஆசாரங்கள், நம்பிக்கை, பழக்க வழக்கங்களுக்குட்பட்டு பெண்கள் சபரிமலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது சம்பந்தமான விளக்கங்கள் அதில் கேட்கப்பட்டிருந்தது. இதைத்தவிர முக்கியஸ்தர்களின் மனைவிகளுக்கும் விசேட சலுகைகள் சபரிமலை சன்னிதானத்தில் வழங்குவதாகவும் மனுவில் குறிப்பிட்டு இருந்தார்.

திருவாங்கூர் முன்னாள் தேவசியம் போர்டு கமிஷனர் திருமதி சந்திரிகா என்பவர் தனது மகன் மற்றும் தம் உறவினர்களுடன் (பெண்கள்) உட்பட சபரிமலை சந்திதானத்திறகு வந்து தனது பேரக்குழந்தைக்கு முதல்சோறு ஊட்டும் நிகழ்ச்சியை நடத்தியது சம்பந்தமாகவும் திரு எஸ். மஹேந்திரன் தமது மனுவில் முக்கியமாக குறிப்பிட்டிருந்தார்.

பெண்கள் சபரிமலை வருவது சம்பந்தமான சமயம் சார்ந்த விளக்கங்கள் கேட்டு உயர்நீதிமன்றம் விசாரணை செய்து, தற்போதைய சபரிமலை தந்திரி ஸ்ரீ நீலகண்டராகு கேரளாவைச் சேர்ந்த தந்திரி முக்கியஸ்தர்கள் மற்றும் அகிலபாரத ஐயப்ப சேவாசங்கங்கள் பொது செயலாளர் திரு. கேபி.எஸ். நாயர் பந்தளம் அரணமனையைச் சேர்ந்த ஸ்ரீ ரவிவர்மராஜா ஆகியோரை நீதிமன்ற சாட்சிகளாக விசாரணை செய்தது இவ்விசாரணைக்குப்பின் 10 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் சபரிமலைக்கு வருவதை தடை செய்தால் போதுமானது என்று திருவாங்கூர் தேவசியம் போர்டு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டதை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

அண்மையில் நடைபெற்ற தேவப்பிரஸ்னத்தின்போது மேற்குறிப்பிட்ட வயதிற்கு உட்பட்ட பெண்கள் சபரிமலை வருவதை ஐப்பன் விரும்பவில்லை என்று கூறப்பட்டதை பக்தர்களும் கோயில் நிர்வாகிகளும் அனுசரிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. தேவ பிரசன்னத்தில் கூறப்பட்டிருப்பதற்கு எதிராக செயல்பட யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதையும் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சபரிமலை யாத்திரிகர்கள் 41 நாள் தொடர்ந்து விரதம் அனுஷ்டித்த பின்தான் கோவிலுக்கு வரவேண்டும் என்பது மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுப் பெண்களால் மேற்குறிப்பட்ட வாறு விரதம் அனுஷ்டிக்க இயலாது என்பதுவும் அவர்கள் கோவிலுக்கு வருவதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் ஒரு நைஷ்டீக பிரம்மச்சாரி விரதம் அனுஷ்டித்து வருவதாலும் இளம் வயது பெண்களின் வருகையினால் சிறு அளவில் கூட பிரம்மச்சாரியத்துக்கு பங்கம் ஏற்படுவதை தவிர்க்கும் எண்ணத்துடனும் வயதுப் பெண்கள் வருவதை உயர்நீதிமன்றம் தடை செய்து தம் தீர்ப்பில் கூறியது.

பத்து வயதிற்கும், 50 வயதிற்கும் உட்பட்ட பெண்கள் புனிதமான சபரிமலையில் ஏறுவதையும் ஸ்ரீ ஐயப்பன் சபரிமலை சன்னிதானம் சென்று தரிசிப்பதையும் தடை செய்வதின் மூலம் இந்துக் கோயில்களின் நுழைவு சட்டத்தின் 16, 25, 26 என்ற பிரிவுகளுக்கு பாதிப்பு எதுவும் இல்லை என்றும் உயர்நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## மாலை அணிந்த ஐயப்பன் இல்லங்களில் நமது பெண்களின் கடமைகள்

வழக்கம்போல் கார்த்திகை மாதம் நம்மை நெருங்கிவிட்டது கடந்த பல மாதங்களாக ஐயனை மறந்தவர்கள்கூட கார்த்திகை என்றதும் புத்துயிர் பெற்றுவிடுவார்கள், தங்கள் வீட்டு ஐயப்பமார்கள் சபரிமலை நினைவுபடுத்தியும் வீடு சுத்தம் செய்து ஐயப்பமார் களுக்கு தேவையான எல்லா ஒத்துழைப்புகளும் முன்னமே செய்ய ஆரம்பிப்பது நமது வீட்டு பெண்கள்தான், ஐயப்பமார்கள் நல்ல முறையில் விரதம் இருப்பதற்கு அவர்கள் மலைக்குச் சென்று திரும்பும்வரையில் தீவிர விரதத்துடன் இருப்பதும் நமது வீட்டு பெண்கள்தான். தங்கள் வீட்டியுள்ள பெண்கள் பரிபூரண ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஐயப்பனும் நிம்மதியாக சபரி மலைக்கு சென்று வர இயலாது. மொத்தத்தில் ஐயப்பமார்களுக்கு ஐயன் தரிசனம் கிடைத்தாலும் அதன் பலன் முதலில் தங்கள் வீடுகளிலிருக்கக்கூடிய பெண்களையே சாரும் என்பதில் ஐயமில்லை. இப்படி பலனடைபவர்கள் உண்மையிலே நமது வீட்டு பெண்களே ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான சஞ்சலமில்லாமல் ஒரே மனதுடன் தங்கள் துயரங்களை ஒப்புவித்து வணங்கக்கூடிய ஒரே இந்துக் கோவில் ஸ்ரீ ஐயப்பன் கோவில்தான் என்பதில் சந்தேகமில்லை. நமது பெண்கள் விரதம் இருந்து மாலை போட்டு சபரிமலைக்கு போக வேண்டியதில்லை. போகாமலே அதன் பலனை அடைந்துவிடலாம். சுவாமிமார்கள் தங்களின் விரத மகிமையால் தாம் நினைத்த காரியங்கள் சித்தியாவதுடன் ஐயப்பனின் கிருபாகடாக்ஷமும் பெருமைகளும் ஒவ்வொரு ஆண்டும் வித்தியாசமான முன்னேற்றம் ஏற்படும் என்பதில் உன்னிப்பாகப் பார்த்தால் நன்றாகப் புரியும். இதையெல்லாம் நினைக்காமல் பெண்கள் மாலை அணிந்து சபரி மலைக்கு வருவதினால் பல இன்னல்களுக்கு ஆளாவதுடன் ஐயனின் விரதத்தின் மகிமையை நிறைவேற்ற இயலாமல் போய் விடுகிறது. ஐயப்பன் ஆலயம் பல சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சபரிமலை பிரயாணம் செய்ய வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள்.

## மற்றக் காலங்களில் வீட்டில் ஐயப்பனை வைத்து வழிபடலாமா

நான் ஒரு கிரகஸ்தன். எனக்கு தெய்வபக்தி அதிகம். குறிப்பாக ஐயப்பன்மீது அதிக பற்றுள்ளவன், வருடா வருடம் சபரிமலைக்குப் போய் வருகிறேன். வீட்டில் ஐயப்பன் படத்தை வைத்து பூஜித்து வருகிறேன். மற்றக் காலங்களில் ஐயப்பனைப் பூஜிக்க கூடாது என்பதாக பலபேர் என்னிடம் சொல்லுகிறார்கள். ஐயப்பனை தினந்தோறும் பூஜை செய்ய முடியாது கோவிலுக்கு போய்விட்டு வந்தவுடன் யார்கண்ணிலும் படாமல் பெட்டியில் வைத்துவிட வேண்டும் என்கிறார்கள். அப்படித்தான் செய்ய வேண்டுமா?

ஐயப்பமார்களின் புலனடக்கமே பக்திநெறியின் சாரம். அது இறைவனை அடைவதற்குரிய மார்க்கம். பக்தி உணர்வோடு அனுபவத்தின் மூலமாகத்தான் நாம் அதனை அடையமுடியும். இறைவன் நம்மோடு எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ அருள் எப்பொழுதும் உன்னுடன் இருக்கிறது. மௌனமான மனதோடு, ஒரு கடவுளை உன் இதயத்துள் ஒருமைப்படுத்து. நீ விரும்பும் உதவியும் வழிகாட்டுதலும் கூட உனக்கு வராது என்பதுதான் ஐயப்ப தர்மம்.

## ஐயப்பனைத் தேடி ஆறு வாரங்கள்

ஹரிஹர புத்திரன் அருள் பாலிக்கும் ஸ்ரீ தர்ம சாஸ்தா அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாக எழுந்தருளியிருப்பவன் சபரிமலை ஐயப்பன்.

சபரி என்ற மங்கை தவம் புரிந்து முத்தி பெற்றமலை அது. கேரள மாநிலத்திலுள்ள சபரிமலைமீது அமர்ந்து சகல கோடி பக்தர்களையும் காப்பாற்றும் சபரிகிரி வாசனைத் தரிசனம் செய்வதற்கு மலை யாத்திரை புறப்படுகிறோம். கார்த்திகை முதல் நாள் தக்க குருசுவாமியிடம் மாலையணிந்துகொள்கிறோம். துளசி மணிமாலையை நமது கழுத்தில் அணிவித்து அன்றுமுதல் ஐயப்ப விரதத்தைத் தொடங்கி வைக்கிறார் குருசுவாமி. முதல் முறையாக மலைக்குச் செல்பவர்கள் கன்னி ஐயப்ப சுவாமி என்று அழைக்கப்படுகின்றனர்.

துளசிமணி மாலையணிந்ததும் துன்பமெல்லாம் சென்றது போன்ற ஒரு புதிய தென்பு மனதில் ஏற்படுகிறது. பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டிப்பதால் சௌந்தர்ய ரூபமாக முகமும் அகமும் விளங்குகிறது. அதிகாலை நீராடி ஐயனின் தியானத்தில் ஆழ்ந்து மாலை வேளைகளில் பஜனைகள் புரிந்து மனதை ஒரு நிலைப்படுத்துவதால் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது.

புலனடக்கமே பக்தி நெறியின் சாரம். அதுவே இறைவனை அடைவதற்குரிய மார்க்கம். பக்தியுணர்வோடு அனுபவத்தின் மூலமாகத்தான் நாம் அதனை உணரமுடியும். ஒரு மண்டலமாக நாற்பது நாள் விரதமிருந்து டிசம்பர் மாதம் இறுதியில் நடைபெறும் மண்டல பூஜைக்கு செல்வோர் சிலர். அதற்கடுத்த தை மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் மகர விளக்கைக் காணச் செல்வோர் பலர். இதில் மகர விளக்கைக் கண்டுவிட்டு வருவதுதான் புண்ணியமாகும். நாமும் மகர விளக்கை தரிசனம் செய்வோம்.

சற்குரு நாதனாக சகல ரோக நிவாரணனாக இருக்கும் சாஸ்தாவைக் காணப் புறப்படும் நாளும் வருகிறது. மலைக்கு செல்ல இருமுடிக் கட்டப்படுகிறது. முன்முடியில் ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்வதற்கு வேண்டிய பொருள்களும் பின் முடியில் வழிப்பயணத்தின்போது காட்டில் நாம் சாப்பிடுவதற்கு வேண்டிய உணவு வகைகளும் இருக்கின்றன.

சுவாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஐயப்பன் வரலாறு

அழகு கொஞ்சும் கேரளத்தை உருவாக்கிய பரசுராமர் பல்வேறிடங்களிலிருந்தும் பிராமணர்களை அங்கு குடியேற்றினார். பின்னர் பதினெட்டு மலைகளில் தர்ம சாஸ்தாவின் திருக்கோயில் களையும் பதினெட்டு கடலோரப் பகுதிகளில் ஸ்ரீதேவியின் அருட்கோயில்களையும் அமைத்தார். அந்தப் பதினெட்டு மலைக் கோயில்களுள் சபரிமலை சாஸ்தா கோயில் மிக முக்யத்துவம் வாய்ந்தது. எரிமேலி தர்ம சாஸ்தா கோயில், அச்சன்கோவில், ஆரியங்காவு, குளத்துப்புழை, பொன்னம்பலமேடு முதலியன அந்தப் பதினெட்டுள் சிலவாகும். ஏனையன் எங்கு அமைக்கப் பெற்றன என்பது இதுவரை சரியாக அறியப் பெறவில்லை. நாம் அறியக் கிடைத்து அருளைக் குவிக்கும் சபரிமலை சாஸ்தாவின் அருமை பெருமைகளைத் தெளிவாகவும், விரிவாகவும் இங்கு அறிந்து அருள் பெறுவோம்.

துர்க்கையால் கொல்லப்பட்ட மகிஷாசுரனின் தங்கை மகிஷி என்னும் அரக்கி தன் அண்ணனின் மரணத்தால் கோபமுற்று தேவர்களைப் பழிக்குப் பழிவாங்க எண்ணி, பிரம்மனை நோக்கித் தவம் இயற்றி வரம் பெற்றாள். அரிஹரனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்னும் வரம் பெற்று, மகிஷி தேவர்கள் கொடுமைப் படுத்தினாள். இவளிடம் இருந்து தப்பித்து நிலைத்து வாழ எண்ணி அமுதுண்ண விரும்பிய தவர்களும், பிற அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து இறுதியாக அமுது பெற்றனர். ஆனால் அமுதினைத் தேவர்களிடமிருந்து அசுரர்கள் பறித்து உண்ணத் தொடங்கினர் தேவர்களின் வேண்டுதலுக்கிணங்கிய திருமால் அழகிய கன்னி (மோகினி) அவதாரம் உருக்கொண்டு அசுரர்களை மயக்கி, எமாற்றி அமுதினை தேவர்கள் அனைவருக்கும் பரிமாறினார். பின்னர் இந்தக் கன்னி உருக்கொண்ட திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்த திருக் குழந்தைக்கு தர்ம சாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். தர்ம சாஸ்தாவின் தோற்றம் சிவ வைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலமாகத் தமிழ் நாட்டிலும், கேரளத்திலும் வழிபட்டு வந்த திராவிடப் பரதேவதைகளான மாசாத்தான், கண்டன்தாத்தா, சாத்தப்பன் முதலியவை சாஸ்தாவையே குறிப்பன. இந்தத் தேவதைகளின் வழிபாடு ஆரிய பிராமணர்களின் சைவ வைணவக் கொள்கைகளாலும் தழுவப்பெற்று மாற்றியமைக்கப் பெற்ற புத்த மதத்திற்கே உரியதான சரணம் போடும் முறையும், கூட்டம், கூட்டமாக யாத்திரை செல்லுதலும், பகவான் பகவதி சரணம் விளித்தலும், புத்த மதத்திலிருந்து தழுவிக் கொள்ளப் பெற்ற வழக்கங்களாகும்.

குளத்துப்புழையில் கொஞ்சும் பாலனாக, ஆரியங்காவில் இல்லறம் பூண்டு, ஆண்டு தோறும் திருக்கல்யாணக் காட்சி தரும் சாஸ்தாவாகவும் அச்சன் கோவிலில் பூர்ணாவும் புஷ்கலாவும் சேவை புரிய தியானத்திலிருக்கும் ஐயனாகவும் அருள் பொழிகிறார் அரிகரசுதனான தர்மசாஸ்தா.

சபரிக்கோயில் 1950-ல் தீயோர் சிலரால் தீயிடப்பட்டது. மீண்டும் பக்தர்கள் பலரால் மிகப் பொலிவுடன் நிர்மாணிக்கப் பெற்றது.

**ஐயப்பன் அவதாரம்:**

கேரளத்தில் சேரப் பேரரசு வீழ்ந்து சிற்றரசர்கள் ஆட்சியில் பாண்டிய தேசக் கொள்ளையர்கள் சபரிக் கோயிலைக் கொள்ளையடித்து, சாஸ்தாவின் மூல விக்கிரகத்தை நாசப்படுத்தி பூசாரியைக் கொலை செய்தனர். கொள்ளையர் தலைவன் உதயன் என்பவன் பந்தளம் அரண்மனையிலிருந்து அரசகுமாரியைக் கடத்திச் சென்று தன் பாளையத்தில் சிறை வைத்தான். பூசாரியின் மகன் ஐயந்தன் (சேனன்) மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்கவேண்டி பொன்னம்பல மேட்டில் தவம் செய்தான். அவன் கனவில் சாஸ்தா தோன்றி, “நீ உதயன் பாளையத்திலிருந்து அரசகுமாரியை மீட்டு வந்து அவளை மணம் புரிந்து கொள்வாயாக. உங்களிருவருக்கும் பிறக்கும் குழந்தை மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்கும்.” எனக் கூறவே அதுபோல் அரசகுமாரியை ஐயந்தன் மீட்டுவந்து மணம் புரிந்தார். மார்கழித் திங்கள் சனிக்கிழமை உத்திர நட்சத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமிதிதி விருச்சிக லக்கினம் கூடிய நன்னாளில் அவர்களுக்கு அழகுமிகு ஆண் மகவு பிறந்தது. சபரியில் பரசுராமர் பிரதிஷ்டை செய்தது தர்ம சாஸ்தா. சாஸ்தாவின் அவதாரம் ஐயப்பன். அவதாரம் தானே தவிர ஐயப்பன் சாஸ்தாவினின்றும் வேறுபட்டவர் அல்லர்.

அவதாரத்தின் நோக்கம் இரண்டு (1) உதயன் முதலிய துஷ்டர்களை ஒழித்து அவர்களால் சிர்குலைக்கப் பெற்ற சபரிக் கோயிலைச் சீர்திருத்தி சாஸ்தாவை நிர்மாணித்தல், (2) சாதி சமய வேறுபாடின்றி, ஏழை, செல்வர் பேதமின்றி, காமக்குரோதங்களை நீக்கி பிரம்ம தத்துவத்தைச் செயலாக்கி சமயக் கொள்கைகளைப் பின்பற்றும் தீர்த்த யாத்திரையாக்கி சாஸ்தாவின் வழிபாட்டில் ஆர்வம் ஏற்படுத்தப் போதனை அளித்தல்.

ஐயந்தனிடம் சீரும் சிறப்புமாக ஐயப்பன் வளர்ந்து வருங்கால் ஒருநாள் ராஜசேகரன் எனும் பந்தள மன்னன், பம்பா நதியோரம் வேட்டையாட வந்தான். குழந்தைப் பேறு இல்லாத மன்னன், வனத்தினிடையே குழந்தை அழும் ஒலி கேட்டுத் திடுக்கிட்டு, ஐயந்தனின் பர்ணசாலையை அடைந்து தொட்டிலில் கிடந்த ஐயப்பனை தூக்கி வாரித் தழுவிக்கொண்டான், குழந்தையும் மன்னனை மிகுந்த பாசத்துடன் கட்டித் தழுவிப் பிரியமறுத்தது. ஐயந்தனும், அவதார நோக்கத்தை நிறைவேற்ற மன்னனிடம் வளர்வதே இறையருள் என்பதை தன் யோக ஞானத்தால் உணர்ந்து மன்னனிடம் குழந்தையைக் கொடுத்தருளினார். மன்னனும் மகிழ்ந்து ஏற்று நாடு திரும்பினார்.

ஐயப்பன் கல்வி, வேதம், போர்முறை முதலிய சகல கலைகளையும் தெளிவாக கற்றார். குருதட்சிணையாக குருநாதர் மகளின் குருடு, ஊமைத்தன்மைகளை நீக்கினார். இவ்வாறு ஐயப்பனின் புகழ் அதிகமாகி வரும்பொழுது, ராணிக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. மன்னன் ஐயப்பனுக்கு முடி சூட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தான். மந்திரி நாட்டைத் தான் ஆள சதி செய்து, மணிகண்டனை அழிக்கத் திட்டமிட்டான். வேட்டுவன் நாடாள்வதா? எனப் பிரச்சாரம் செய்தான். அது பயனற்றுப் போகவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வினைகளால் மணிகண்டன் உடம்பு புண்ணாகச் செய்தான். பரமசிவன் துறவியாக வந்து குணப்படுத்தினார். பின்னர், தன் மகன் பிறந்த நாள் விழாவிற்கு மணிகண்டனை அழைத்து அமைச் சன் விஷம் கொடுத்தான். அதனை மணிகண்டன் கருட பஞ்சாட்சரம் ஜபித்து வென்றார். பிறகு அமைச்சன், ராணியின் நல்ல உள்ளத்தைக் குழப்பி, அவள் மகன் ராஜேந்திரனுக்குத்தான் பட்டம் சூட்ட வேண்டும் என வாதாடினான். அவன் சதிக்கு உடந்தையாகி ராணி தீராத தலைவலி என நடித்து அது புலிப்பாலினால்தான் தீரும் என்றாள். தாயின் தலைவலியைத் தீர்க்க புலிப்பால், கொண்டுவர் ஐயப்பன் புறப்பட்டார். மிகுந்த கவலைக்குப்பின் மன்னன் ஐயப்பனை வழியனுப்பி, உணவு கட்டி எடுத்துச் செல்லும் படியும், முக்கண்ணனாகிய சிவனை நினைத் துக் கொள்ள முக்கண்ணுடைய தேங்காயை உடன் எடுத்துச் செல்லும்படியும் பணித்தார். மன்னன் தந்த பொருட்களை ஐயப்பன் "இருமுடிக்" கட்டாக அமைத்து வில்லும் அம்பும் ஏந்திப் புறப்பட்டார். அமைச்சன் மகிழ்ந்தான். மன்னர் மனக் கவலையை பரமசிவன் பொறுப்பில் விட்டு நிம்மதியடைந்தார்.

ஐயப்பன் காட்டு வழியில் பொன்னம்பல மேட்டில் தவமியற்றி வந்த தாய்தந்தையரைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர், புலிக்கூட்டம் ஒன்றைத் திரட்டிக்கொண்டு புலியின் மீது அமர்ந்து புலிப்பாலுக்காகத் தாய்ப்புலியுடன் மற்ற விலங்குகளும் பின் தொடர ஐயப்பன் பந்தள நாடு திரும்பினார். இதுகண்ட மக்கள் ஐயப்பனை தெய்வமென வியந்து வழிபட்டுப் போற்றினர். ஐயப்பன் மன்னன் அடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆனால் மன்னன் ஐயப்பனைத் தெய்வம் என உணர்ந்து வணங்கி தந்தை மகன் என்ற உறவில் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டார். புலிக்கூட்டத்தை திருப்பி அனுப்பி மக்கள் அச்சம் போக்க வேண்டினார். அதன்படி ஐயப்பன் ஆணையிட விலங்குகள் வனம் திரும்பின. அமைச்சர் தன் தவறு உணர்ந்து ஐயப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். தாயும் தான் செய்த தவறுக்காக வருந்தினாள். ஐயப்பன் ஆறுதல் கூறினார். ஐயப்பனிடம் அரசரும், குருவும் மக்களும் உபதேசம் கேட்டனர். இதனாலேயே குருவின் குரு என ஐயப்பன் அழைக்கப்படுகிறார். சாஸ்தாவை பிரதிஷ்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நோக்கத்துடன் செல்வதாகவும், மீண்டும் சந்திப்பதாகவும் கூறி ஐயப்பன் பந்தளத்திலிருந்து விடைபெற்றார்.

ஐயப்பன் முதலில் காயங்குளம் மன்னரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பெருந்தொல்லை கொடுத்து வந்த வாபர் என்னும் கடற்கொள்ளைக்காரன் பற்றிக் கேட்டறிந்தார். வாபர் இஸ்மாயில் கோத்திரத்தில் பாத்திமாவின் மகனாகப் பிறந்த ஒரு அரேபிய முஸ்லீம். வாபர் தன் மந்திர இந்திரஜாலங்களில் பல பெரும் வீரர்களை வென்று அடிமைகளாகச் சேர்த்துக் கொண்டார். தொழில் கப்பல் ஓட்டுவதும். உப்பு வியாபாரமும். ஆனால் கொள்ளையடிப்பதில் கிடைக்கும் பெரும் பொருளை ஏழைகளுக்கு வாரி வழங்கினார். வாபரின் ஆற்றலையும் நல் உள்ளத்தையும் அறிந்த ஐயப்பன் அவரை வென்று நண்பராக்கிக் கொள்ள முடிவுசெய்தார். கருநாகப் பள்ளிக் கடற்கரையில் வாபரை எதிர்த்துப் பெரும்போர் நடத்தி ஐயப்பன் வென்றார். வாபர் ஐயப்பனின் திறமையையும் பெருமையையும் உணர்ந்து அடிபணிந்தார். வாபரை இனிய சொல் பேசி ஆறுதல் கூறி தர்மசாஸ்தா சிலையை நிர்மாணிக்கும் பணியில் வாபரும் அவர் படைகளும் ஐயப்பனுடன் சேர்ந்து பணியாற்ற முடிவு செய்தனர். அதற்காக வாபர் முஸ்லீம் மதத்தை விட்டு, இந்து மதத்தில் சேர்ந்து விடுவதாக கூறினார். அதற்கு ஐயப்பன் "உலகிற்கு பணியாற்ற மதம் எதுவாயினும் கவலையில்லை. மதம் மாற வேண்டாம்" எனக் கூறித் தெளிவாக்கினார்.

பின்னர் ஒருமுறை பந்தளத்தை தாக்கிய உதயனை ஐயப்பனும் வாபரும் எதிர்த்துப் போரிட்டு, பின்வாங்கி ஓடச் செய்தனர். ஐயப்பனின் வீரத்தைப் புகழ்ந்து பந்தள மன்னன் ஐயனின் இரு கைகளுக்கும் "விருச்சிருங்கலை" எனும் பொற் சங்கிலி வழங்கிக் கௌரவித்தான். ஐயப்பன் வாபரை சேனா நாயகராக்கி படைகளுடன் எருமேலியில் தங்கி மேற்கு தேசங்களிலிருந்து சபரிமலைக்கு வரும் படைகளுக்குத் துணையாக இருக்கும்படி செய்தார்.

ஐயப்பன் அம்பலப்புழை, செம்பகேசரி, சேர்த்தலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாவூர், பரப்பனோடு, சாலக்குடி முதலிய இடங்களுக்குச் சென்று சிறு சிறு உட்பூசல்களை ஒழித்து, உதயனை எதிர்த்துப் போரிடப் பெரும் படை திரட்டி போர் பயிற்சிகள் அளித்து பல படைக்குழுக்களை ஏற்படுத்தினார் பந்தளம், அம்பலப்புழை, ஆலங்காடு ஆகிய மூவிடங்களிலும் தலமைச் சங்கங்கள் அமைத்து மற்ற இடங்களை இவற்றில் கிளைகளாக முறைப்படுத்தினார். சேர்தலை தண்ணிர் முகத்தில் ஈழக் குடும்பத் தலைவனான சீரப்பன் சிறமுப்பனுடன் தங்கி படைகளுக்கு ஆயுதப் போர் கற்பிக்கும் காலத்தில் சீரப்பன் மகள் ஐயப்பன் பால் காதல் கொண்டாள். நித்தியப் பிரமச்சாரியான ஐயப்பன் அவளுக்கு ஞான உபதேசம் செய்து மனம் தெளிவித்தார். பந்தள மன்னனிடமிருந்து பெற்ற இரு பொற் சங்கிலிகளையும் அவளுக்கு வழங்கினார். அவற்றை கையில் அணிந்தவுடன் அவளுக்கு உலகாசைகள் விட்டொழிந்தன இறுதியாக சபரியில் சென்று முத்தி பெற்றாள். சில காலத்திற்கு பின்னர் இந்தச் சங்கிலிகளின் மகிமையை அறிந்த பந்தள மன்னன் ஒருவன் ஏராளமான பொருள் கொடுத்து சீரப்பன் குடும்பத்திலிருந்து அவற்றை விலைக்கு வாங்கிவிட்டான் என்று கூறப்படுகிறது. இன்றும் சபரிமலை வழிபாட்டு வெடி வைக்கும் உரிமை சீரப்பன் பரம்பரைக்கு கொடுக்க பெற்று வருகிறது.

ஐயப்பன் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரைக்கு வந்து மன்னனைக் கண்டு ஞானோபதேசம் செய்து ஒரு குறிப்பிட்ட நாள் சபரிக்கு வரும்படி அழைத்தார். மன்னர் ஈழதேசத்திற்கும் விஜய செய்தார்.

எரிமேலியில் வாபரைச் சந்தித்து அடுத்துவரும் மகர சங்கராந்தியன்று சாஸ்தா பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் நாற்றிசைகளிலிருந்தும் வரும் படைகளும் எரிமேலியில் சந்திக வேண்டும் என்றும் கூறித் திட்டங்களை விளக்கி வாபரை முன்பே மலைக்கு அனுப்பி படைகள் தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வைத்தார். பின்னர் பொன்னம்பல மேட்டில் தவம் செய்து வந்த பெற்றோர்களைக் கண்டு சாஸ்தா பிரதிஷ்டையை தன் தந்தையாகிய ஐயந்தன் செய்யவேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிக்கொண்டார். ஐயந்தனும் அதனைப் பெரும் பேறாகக் கருதி ஏற்றுக்கொண்டார்.

ஐயப்பன் புலிப்பாலுக்காகச் சென்றபோது கொண்டு சென்றதைப் போலப் படையினரும் பக்தர்களும் இருமுடிக் கட்டு ஏந்திச் சென்றது. ஆன்மீக உணர்ச்சியால் பக்தர்களும் படையுடன் கிளம்பினர். மகரசங்கிராந்திக்கு 41 நாள் முன்பிருந்தே பூரண பிரமச்சாரிய விரதம் ஏற்று பஜனைகள் செய்து புறப்பட்டனர். பயிற்சிபெற்ற பெரியோர்கள் குருமார்களாகப் பணியேற்றனர். சரணம் விளித்து படை கிளம்பிற்று. அம்பலப்புழை பக்தர்கள் கருட தரிசனம் பார்த்துக் கிளம்பினர். இன்றும் வேட்டையாடும் போது அம்பலப்புழை பக்தர்களுக்குக் கருட தரிசனம் தவறாமல் கிடைக்கின்றது. அம்பலப்புழை. ஆலங்காடு சங்கங்களிலிருந்து புறப்பட்ட படையினரின் ஆர்வத்தை ஐயப்பன் பாராட்டினார். இந்த இடங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு இன்னும் பம்பையில் விருந்தும் சன்னிதியில் "வாரி" (விடுதி) உரிமைகளும் தரப்படுவதே இதற்குச் சான்று.

பலமலைகளையும் வனங்களையும் கடந்து எல்லோரும் மகரசாந்திக்கு 19 நாட்கள் முன்னரே எரிமேலி வந்தடைந்தனர். பேட்டைத் துள்ளல் எனும் விழா நடத்தினர். முதலில் எரிமேலி கடைவீதிக்குச் சென்றனர். ஐயப்பன் ஆணைப்படி ஆயுதங்கள், காய்கறிகள் வாங்கினர். பெரிய ஆர்ப்பாட்டத்துடன் ஒரு கம்பளி சுற்றி கரி, குங்குமங்களை உடம்பில் பூசி காட்டு இனத்தார் போல் வேஷமிட்டு "ஐயப்பன் திந்தகத்தோம்" எனக் கோஷம் போட்டு வாத்தியங்கள் முழங்க வாபர் வணங்கும் இஸ்லாம் மத ஆலயத்தை வலம் வந்து, பின் சாஸ்தா கோயிலை வலம் வந்து ஆனந்தக் கூத்தாடினர். பின்னர் சபரிமலை நோக்கிப் புறப்பட்டனர். எரிமேலியைத் தாண்டியதும் பெரியகாடு தொடர்ந்தது. இதனை சாஸ்தாவின் நந்தவனம் என ஐயப்பன் போதித்தார். இலை கிள்ளிப்போட்டு வன தேவதையையும் கானகத்தையும் வணங்குமாறும், வனவிலங்குகளை துன்புறுத்தக் கூடாது என்றும் போதித்தார். எரிமேலிக்கு மூன்று மைல் கிழக்கேயுள்ள சாந்தியும் சுகமும் தருகின்ற பேரூர்த்தோட்டில் ஓய்வு எடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரி மலைக்கும் எரிமேலிக்கும் இடையில் பலமலைகளின் உச்சியில், உதயன் தாவளங்கள் (இருப்பிடம்) நிறுவியிருந்தான். முதலில் இஞ்சிப்பாறைக் கோட்டையைக் கைப்பற்ற அதனைக் காத்துவந்த புதுச்சேரி முண்டன் எனும் கொள்ளைக் காரத் தலைவனுடன் போரிட முடிவு செய்தனர். கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைத் தாண்டி செங்குத்தான அமுத மலை உச்சியில் அமைந்திருந்த கோட்டையினைத் தாக்கும் முறையினை ஐயப்பன் காளைகட்டி எனும் இடத்தில் படையினருக்கு கற்பித்தார். தன்பயணத்துக்கு வைத்திருந்த காளையைக் கட்டியதால் இவ்விடம் "காளைகட்டி" என அழைக்கப்படுகிறது. இங்கு ஐயப்பன் ஓய்வெடுப்பதற்காக அமர்ந்த கல்லை இன்றும் தொட்டு வழிபட்டு வருகின்றனர்.

காளைகட்டியிலிருந்து கிழக்கே ஒன்றரை மைலில் அழுமையாறு ஓடுகிறது. இது பம்பையில் சேரும் சிற்றாறு. இதன் கரையில் படைகள் தங்கி தானமேளம் போட்டு பஜனை முடித்து இரவு தங்கினர். இஞ்சிப்பாறையில் போர் நடக்கும்போது உதயனின் தலைப்பாறை படைகள் உதவிக்கு வந்துவிடாமலிருக்க ஒரே சமயத்தில் தலைப்பாறை கோட்டையையும் முறியடிக்க ஐயப்பன் திட்டமிட்டார். பந்தளம் படையைச் சேர்ந்த சின்னக் கடுத்தை (கொச்சுக்கடுத்தை) ராமன், கிருஷ்ணன் ஆகியோர் பொறுப்பில் ஒரு படையினை தலைப்பாறையை தாக்க ஆணையிட்டார் ஐயப்பன். ஐயப்பன் ஆணைப்படி அகழியை தாண்ட வீரர்கள் அழுமையாற்றில் குளித்துவிட்டு பெருங்கற்களையும் மரக்கிளைகளையும் அகழியில் போட்டனர். பாலம்போல் அமைத்து படையினர் சரணம் விளி போட்டுக்கொண்டு கோட்டைக்குள் புகுந்தனர். பல வித்தைகள் காட்டியும் பயனில்லாமல் புதுச்சேரி முண்டன் கோட்டைவாசல் திறந்து ஓட்டம் பிடித்தான். அவன் தப்பி ஓடி கரிமலை கோட்டைக்குச் சென்று உதயனுக்கு உதவி புரியவிடக் கூடாது என ஐயப்பன் ஆணையிட்டிருந்ததால் வாபர் முண்டனைத் தொடர்ந்து சென்று கடும் போர் புரிந்தார். இறுதியில் கடும் போருக்குப் பின் வாபர் முண்டனை வெட்டி வீழ்த்தினார். இதனால் அந்த இடத்தில் ஓடுகின்ற நதிக்கு புதுச்சேரி ஆறு எனப் பெயர் வழங்கிவருகிறது. பின்னர் படை தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியிலந்தோடு அடைந்து இரவு தங்கியது.

அதே நேரத்தில் தலைப்பாறைக் கோட்டையின் மேலிருந்து பந்தள வீரர்களைத் தாக்கும் எதிரிகளை வில்லாளி வீரனாகிய இராமன் அம்புமாரி பொழிந்து அழித்தான். சிறந்த மல்யுத்த வீரனாகிய கிருஷ்ணன் எதிரிகளைப் பிடித்து அப்பளமாக நொறுக்கித் தவிடு பொடியாக்கினான்.

''ஆனைச்சடுக்கம்'' எனும் மல்யுத்த முறையால் கோட்டையின் கோபுர வாசலை அழித்தான். எதிர்க்க இயலாத வெள்ளைக்காரர்கள் தப்பியோடினர். இராமனுக்கு, "தலைப்பாறை வில்லன்" என்றும் கிருஷ்ணருக்கு "தலைப்பாறை மல்லன்" என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன. போர் நடந்த இரு இடங்களிலும் ஒரே சமயத்தில் ஐயப்பன் காட்சியளித்து உபதேசம் கூறி உற்சாகம் ஊட்டியதாகக் கூறப்படுகிறது. சில சமயம் குதிரை மீதும், சில சமயம் யானை மீதும் பல இடங்களில் பல விதங்களில் ஐயப்பனைப் பார்த்ததாக வீரர்கள் கூறினார். பார்த்தசாரதியைப் போல் ஐயப்பன் போர் நடத்தினாரே தவிர புரிந்தார் இல்லை

பொழுது விடிந்ததும் படைகள் கரிமலையைச் சுற்றி வளைத்தன. உதயன் திகைத்தான். எனினும் தளராமல் போர் புரிந்தான். "சரணம் ஐயப்பா, சரணம் ஐயப்பா" என்று குரல் எழுப்பிக் கொண்டு கரிமலைக் கோட்டையைப் படைகள் தாக்கின. ஐயப்பன் ஆணைப்படி கோட்டைக்கு வெளியில் நின்ற மரங்களை வெட்டி கோட்டை மீது சாய்த்தனர். மரங்கள் மீது ஏறி கோட்டை வாயிலைத் திறந்து படை நுழைந்தது. சின்னக் கடுத்தை உதயனை எதிர்த்துப் போரிட்டு வாளால் வெட்டி வீழ்த்தினார். மாலைப் பொழுதிற்கு முன் மலை உச்சியில் ஐயப்பன் கொடி பறந்தது. அமைதி நிலவியது

மாலை வேளையில் கரிமலை இறங்கி, பம்பா நதிக்கரை வந்தனர். இரவில் ஓய்வுக்கு முன் ஐயப்பன், எல்லோருக்கும் நன்றி செலுத்தினார். வெற்றிச் செருக்குறாமல் இருக்கும்படி வேண்டினார். ராமபிரான் பாததூளி ஏற்ற புவாணியம் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித நதி பம்பை. இதன் கரையில் இருந்த மதங்க முனிவருக்கும் அவர் சீடர்களுக்கும் தொண்டாற்றி இறுதியில் இராமபிரான் அருள் பெற்று சபரியில் முத்தியடைந்த வேடப் பெண்ணான "சபரி" வாழ்ந்ததும் இந் நதிக்கரையில் தான். மறுநாள் காலை பம்பையில் நீராடி பிதுர்களுக்கு சிராத்தம் ஊட்டியபின் உணவருந்தினர். மதியச் சாப்பாடு சிறந்த விருந்தாக அமைந்தது. சிலர் விறகு பொறுக்கி வரச் சென்றனர். சிலர் தீபங் காட்டி ஏற்பாடு செய்தனர். ரதம் போல் சப்பரங்கள் செய்து அதனுள் தீபம் ஏற்றினர். ஐயப்பன் எல்லோருடனும் எல்லா வேளைகளிலும் கலந்துகொண்டார். அப்பளமும் பழங்களும் கட்டி உயரமான மரக்கிளைகளில் தொங்கவிட்டு வனதேவதைகளுக்கு நெய்வேத்தியம் படைக்கச் செய்தார். பெரும் விருந்து மிகச் சிறப்பாக நடந்தது. வனதேவதைகளும், சித்தர்களும் மாறுவேடம் பூண்டு வருவர் என ஏழைகளுக்கும், இரப்போருக்கும் உணவளிக்கச் செய்தார். இதுபோல் இன்றும் இதை பக்தர்கள் "சக்தி பூஜை" எனக் கொண்டாடி வருகின்றனர். மாலையில் தீபம் ஏற்றி பஜனை நடத்தினர். பம்பையின் மணல் திட்டில் நெருப்பு மூட்டி வலம் வந்தனர். பம்பையில் தீப ஒளி அழகு இன்றும் கண்கொள்ளாக் காட்சியாக சிந்தை கவருகிறது

**அவர் உபதேச மொழிகளாவன,**

பற்றற்ற கருமம் செய்வோமானால் மனம் மாசுபெறாது. தூய மனத்தில் ஞானம் ஒளிரும், ஞானம் வாழ்வின் லட்சியம், நற்கருமத்திற்கு இடையூறாவது காமம், வெகுளி, பேராசை முதலியன. இவற்றை அழிக்க கடவுள் தியானம் அவசியம். தியானத்தில் மனம் நிலைபெறும்போது சாந்தியும், பேரின்பமும் உண்டாகும். கடவுளிடம் சரணாகதியடைதலே பக்தியின் இறுதி மொழி - சரணம் ஐயப்பா என்ற சரணாகதி மந்திரத்தை தூய மனதுடன் ஓதுகிறவன் முக்தி பெறுவான். பதினெட்டுப்படி ஏறி தருமசாஸ்தாவின் சன்னதி எட்டியதும் கடவுள் தரிசனம் கிடைக்கிறது. இந்தப் பதினெட்டுப் படிகளும் பதினெட்டு தத்துவங்கள் ஆகும். அவையாவன: புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காண இயலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய மன்னரும் சாஸ்தா பிரதிஷ்டை காண ஏற்கனவே ஐயப்பனால் அழைக்கப் பெற்றதால் அவரும் படைகளுடன் வருகை தந்திருந்தார். பிரதிஷ்டை ஐயப்பனின் தகப்பனார் ஜயந்தன் செய்து வைக்க ஏற்பாடாகி இருந்தது.

பொழுது புலர்ந்ததும், உரல்குழி தீர்த்தமாடி பக்தர்கள் தேங்காய் உடைத்து "சரணம் ஐயப்பா" என்று கூவிக் கொண்டே பதினெட்டுப் படிகளும் ஏறிக் கடந்தனர். எல்லோரும் உச்சி எட்டியதும், பெற்றோரின் திருவடிகளில் ஐயப்பன் விழுந்து வணங்கினார். பாண்டிய மன்னனுக்கும் தந்தையாக இருந்த பந்தள மன்னனுக்கும் நமஸ்காரம் செய்தார். பாண்டிய மன்னன் தன் குல தேவதையான ஸ்ரீ மதுரை மீனாட்சியம்மனையும் பிரதிஷ்டை செய்யும்படி ஐயப்பனை வேண்டினார். அதன்படி சாஸ்தா கோவிலுக்கு வடதிசையில் ஒரு கல்மேடு கட்டும்படியும், அதன்மேல் மண்டபம் கட்டி ஸ்ரீ மீனாட்சியம்மனைத் தானே பிரதிஷ்டை செய்யப் போவதாகவும் அது, வரும் காலத்தில் மாளிகைப்புறம் என்ற பெயரில் அழைக்கப்படும் என்றும் பதில் விடுத்தார்.

முகூர்த்தம் நெருங்க பக்தர்கள் திரள் திரளாக கோயிலை நெருங்கினர். மிகுந்த அமைதி நிலவியது. ஒவ்வொரு கணமும் ஐயப்பனின் பொலிவு பெருகி ஐயப்பனை சுற்றி ஒளி வட்டம் அதிக பிரகாசமாயிற்று. எங்கிருந்தோ திடீரென ஒற்றைக் கருடன் "கிருஷ்ணா" எனக் கத்திக்கொண்டு வட்டமிட்டுப் பறந்தது. பிறகு ஐயப்பன் மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மனை பிரதிஷ்டை செய்து அம்மனின் அருள் என்றென்றும் இங்கு நிலைத்திருக்கும் என்றும், இந்தக் கோவிலுக்கும், சாஸ்தா கோவிலைப் போலவே பெருமை உண்டு என்றும் கூறினார். பிறகு எல்லோருக்கும் அருள் காட்டிப் பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்.

இனிமேல் சபரிமலை மிகச் சீரும் சிறப்புமாக விளங்கும். இன்னும் ஏராளமான பக்தர்கள் ஆண்டு தோறும் தவறாமல் சபரி யாத்திரை வருவார்கள், நாம் கைக்கொண்ட முறைமைகளைப் பின்பற்றி ஒரு மண்டலம் (41 நாள்) விரதமிருந்து புறப்பட்டு எரிமேலி, காளைகட்டி இஞ்சிப்பாறைக் கோட்டை, கரிமலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிபீடம், சரம் குத்தி ஆல் வடு, பதினெட்டாம் படி இவைகளைக் கடந்து முக்கியமான இடங்களில் நாம் செய்த சடங்குகளை தவறாமல் செய்து சாஸ்தாவின் அருள் பெறுவார்கள். பம்பா தீர்த்தமாடி, பித்ரு தர்ப்பணம், குரு தட்சணை, தீபக்காட்சி, நதிபூஜை முதலியன செய்து புண்ணியம் பெறுவர்.

சங்கநாதமும் வாத்தியங்களும் முழங்க, சாஸ்தாவின் விக்கிரகத்தை திருக்கோவிலுக்குள் எடுத்துச் சென்று ஐயப்பனின் தந்தையான ஐயந்தன் பீடத்தின் மேல் ஏற்றி வைத்தார். உடனே திடீரென ஒரு மின்னல் ஒளி பளிச்சிட்டது. ஐய்யப்பன் நின்ற இடத்திலிருந்து ஒரு திவ்ய பிரதிமை கிளம்பி விக்கிரகத்தில் அடங்கிவிட்டதை மக்கள் உணர்ந்தனர். ஐயப்பன் மாயமாய் மறைந்துவிட்டார். சாஸ்தா விக்கிரகத்தில் ஐயப்பன் ஐக்கியமாகி விட்டார். எல்லோரும் தம்மை மறந்து சரணம் ஐயப்பா எனக் கூவி கைகூப்பித் தொழுதனர். சாஸ்தா கோவிலை வலம் வந்தனர். படைவீரர்களும் பக்திப் பெருக்கால் கண்ணீர் சிந்தி பரவச மடைந்தனர். சற்று நேரத்தில் சபரிமலை முழுவதும் சாந்தி நிலவியது

ஐயப்பனின் பெற்றோர் பொன்னம்பல மேட்டுக்குத் திரும்பி மீண்டும் தவமேற்றனர். பாண்டிய மன்னருக்கு பந்தள மன்னர் விடை கொடுத்தார். சபரிமலைக் கோயிலின் நிர்வாகத்தை பந்தளமன்னன் ஏற்றார். கோயிலின் பாதுகாப்புக்கு வாபர், சின்னக்கடுத்தை, இராமன், கிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப் பெற்றனர். ஓர் உத்தம பிராமணரைக் கொண்டு பூஜைகள் நடததிப் பின் கோவிலைப் பூட்டிச் சாவியை பெற்றுக்கொண்டு பந்தள மன்னர் நாடு திரும்பினார். மக்களும் உள்ள நிறைவோடு ஊர் திரும்பினர்.

இத்தகு சிறப்புமிக்க ஐயப்பனின் வரலாற்றினை அறிந்து உண்மை உணர்ந்து ஐயப்பனின் புகழ் பாடும் பக்தர்களும் அன்பர்களும் ஐயப்பனின் பேரருளைப் பெற்று நல்வாழ்வு வெறுவார்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை அணியும் முறைகள்

சபரிமலை தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்கள் ஒரு மண்டல முன்னதாக, அதாவது கார்த்திகை மாதம் முதல் தேதியே முத்திரை மாலையான உருத்திராட்சம், துளசிமணி இவைகளில் ஒன்றை குருநாதர் மூலம் தெய்வ சந்நிதியிலோ அல்லது வீட்டிலோ பூஜை செய்து அணிந்து கொள்ளலாம். மாலை அணியும்முன் தாய், தந்தையரை வணங்கி மாலை அணிந்து கொள்ளவேண்டும். மலை சென்று வந்தவர்கள் குருவாகக் கிடைக்காவிட்டால் ஆலயம் சென்று கடவுள் பாதத்தில் மாலையை வைத்து அர்ச்சகரிடம் தட்ஷிணை கொடுத் அர்ச்சனை செய்து தாய், தந்தையரை வணங்கி, அர்ச்சகரிடமிருந்து மாலையை வாங்கி ஐயப்பனையே குருவாக நினைத்தும் மாலையைத் தரித்துக் கொள்ளலாம்.

## மாலை அணிந்து கொள்ளும் போது சொல்லும் மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர முத்ராம் நமாம்யஹம்
சாந்த முத்ராம் சத்ய முத்ராம் வ்ரத முத்ராம் நமாம்யஹம்
சபர்யாக்ரம சத்யேன முத்ராம் பாது ஸதாபி மே
குருதஷிணயா பூர்வம் தஸ்யா அநுக்ரஹ காரிணே
சரணாகத முத்ராக்யாம் த்வன் முத்ராம் தாரயாம்யஹம்
சின்முத்ராம் கேசரி முத்ராம் பத்ர முத்ராம் நமாம்யஹம்
சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோ நம

இதைச் சொல்லிச் சரணம் கூப்பிட்டுப் பின் மாலை அணிந்து கொள்ள வேண்டும்

## மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலாரோஹி திவ்ய தர்சன காரண
சாஸ்த்ரு முத்ராத் மஹாதேவ - தேஹி மே வ்ரத மோசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய விரத முறைகள்

ஐயப்ப பக்தர்கள் முக்கியமாக அனுஷ்டிக்க வேண்டிய விரதம் பிரம்மசர்யம். காலை மாலை குளித்து சுவாமி படம் அல்லது, ஆலயத்தில் சுவாமி முன் தவறாமல் சரணம் கூப்பிடுதல், சுத்தமான உணவையே உட்கொள்ளுதல், எப்பொழுதும் ஐயப்பன் நினைவாகவே இருத்தல், ஸத்வ குணத்தையே வளர்த்தல் இவையாகும். மற்றவர்கள் செய்யும் பூஜைகளில் கலந்து கொள்வதும் மிக நலனைத் தரும். மற்றவர்களிடம் உரையாடத் தொடங்குமுன் ஸ்வாமி சரணம் என்று கூறிப் பேசுதல் வேண்டும். எல்லோரிடமும் எப்பொழுதும் மரியாதையாகவும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

## சபரிமலை யாத்திரை

1. சபரிமலை பெருமானைக் காண ஆர்வங்கொண்டு செல்லும் பக்தர்கள் பல நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முதல் தடவையாக சபரிமலைக்குச் செல்லும் ஐயப்ப பக்தனுக்கு கன்னி ஐயப்பன் என்று பெயர்.

2. நல்ல நாள் சனிக்கிழமை அல்லது உத்திர நட்சத்திரத்தில் பெரிய ஐயப்பனை (பல தடவை கோவிலுக்குச் சென்றவரை) அணுகிப் பணிந்து அவரது ஆசியோடு ருத்திராட்ச மாலையோ அல்லது துளசி மாலையோ அணிய வேண்டும்.

3. பின் ஒரு மண்டலம் அதாவது நாற்பத்தொரு நாள் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அந்தக் காலத்தில் பக்தர்கள் பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்க வேண்டும். எப்பொழுதும் “ஐயப்பா சரணம் சுவாமியே சரணம்” என்று மனம் உருகிச் சொல்லி வணங்க வேண்டும். சத்வ உணவு கொள்ள வேண்டும். பிறருடன் பேசும்போதும், பழகும்போதும் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

4. சதா பேச்சிலும் சிந்தனையிலும் ஐயப்பன் திருநாமம் மட்டும்தான் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கூடுமானவரை சாயம் நனைத்த கறுப்பு, பச்சை நீலத் துணிகளையே உடுத்தல் வேண்டும்.

6. நாம ஜபம், தேவ புஜை, பஜனை, அன்னதானம், கதாசிரவணம் இவைகளில் பங்கெடுக்கவேண்டும். ஐயப்ப பூஜை நடத்துகின்ற வழிபாட்டினை வெள்ளங்குடி என்று சொல்லுவது சம்பிரதாயம்.

7. சாஸ்தா பூஜை அன்னதானம் செய்து யாத்திரை புறப்பட வேண்டும்.

8. குரு சொல்படி "இருமுடிக்கட்டு"க்குத் தேவையான சாமான்களை இரண்டு அறை கொண்ட நீளமான பை ஒன்று செய்து, அதில் பூஜை சாமான்கள், கற்பூரம், அபிஷேகம் நைவேத்திய சமாமான்கள், காணிக்கைப் பணம் இவைகளை முன்கட்டிலும், யாத்திரை காலத்திற்குத் தேவையான உணவுப் பண்டங்களைப் பின் கட்டிலும் வைத்துக் கொண்டு பையைத் தலையில் எடுத்துச் செல்லவேண்டும். இதுதான் இருமுடி.

9. நைவேத்தியத்திற்குப் பசுவின் நெய்யை உருக்கி ஒரு தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரை எடுத்துவிட்டு அதற்குள் காய்ச்சிய நெய்யை நிரப்பிக் கார்க்கினால் இறுக மூடவேண்டும்.

10. பாயோ கம்பளியோ எடுத்துக் கொள்ளலாம்

11. இருமுடி சுமந்து வீட்டை விட்டுப் புறப்படும்போது எவரிடமும் விடை பெறுவது கூடாது. திரும்பிக் கூடப் பார்ப்பது கூடாது.

12. கோட்டயத்திற்கு பதினெட்டு மைல் தூரத்திலுள்ள பந்தளராஜாவின் அரண்மனையில் சுவாமியின் திரு ஆபரணங்களைக் காணலாம் சபரிமலை செல்கின்ற பக்தர்கள் பந்தள ராஜாவிடம் பிரசாதமும் மலையேற அனுமதியும் பெறுவர்.

13. சபரிமலை செல்ல மாலை அணிபவர்கள் கார்த்திகை தமிழ் மாதம் முதலாம் திகதி மாலை அணிதல் வேண்டும். அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிய தவறும் பட்சத்தில் கார்த்திகை மாத முடிவுக்குள் அணிதல் வேண்டும்.

14. மாலை அணிந்தால் தொடர்ந்து 60 நாட்கள் அல்லது 45 நாட்கள் மகர ஜோதி பெருவிழா வரை விரதம் இருந்து மாலை கழற்றல் நிகழ்வுடன் விரதம் பூர்த்தியாக வேண்டும்.

15. சபரி மலை விரதத்திற்கு மாலை அணிவதற்கு ஓர் குருசுவாமியின் உதவியை நாட வேண்டும். அவர் பல தடவைகள் சபரிமலையில் பதினெட்டுப்படி பூசை செய்தவராகவும் பல சுவாமிமார்களை தன்னுடன் அழைத்துச் சென்று வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

16. குரு சுவாமியின்றி மாலை போடுவதாய் இருந்தால் கோவிலிலோ அல்லது இல்லத்திலோ சுவாமியின் திருவுருப் படத்தில் மாலையை வைத்து ஆலய குருவின் உதவியுடன் தாய் தந்தையை வணங்கி தீபம் காட்டி அந்த மாலையை போட வேண்டும்

17. விரத காலத்தில் கறுப்பு நிற அல்லது நீல நிற வேட்டி சால்வை போன்ற வஸ்திரங்களை அணிதல் வேண்டும்.

18. உருத்திராட்ச மாலை துளசி மணிமாலை ஐயப்பன் திருவுருவம் படைத்த பதக்கம் போன்றவற்றை அணிதல் வேண்டும்.

19. நாள் தோறும் விடியற் காலையில் குளிர்ந்த நீரில் குளித்து காலை மதியம் மாலை போன்று நேரங்களில் 108 சரணங்கள் சொல்லி ஐயனை துதித்து பஜனைகள் தனியாகவோ ஐயப்ப சாமிமார்களுடனோ ஐயப்ப அடியார்களுடனோ சேர்ந்து செய்ய வேண்டும்.

20. விரத காலத்தில் பிரமச்சாரியம் கடைப்பிடித்தல் அவசியம்

21. மனம், மொழி, செயல் ஒன்றிலும் தீய எண்ணம் இருத்தல் கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. விரத காலத்தில் முடி நகம் வெட்டிக் கொள்ளல் முகச்சவரம் செய்தல் குடை, பாதணி போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது

23. சூது, வாது, பொறாமை, வஞ்சகம், கள்ளத் தன்மை மது அருந்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலை போடுதல், சினம், கோபம் கொள்ளல், புலால் உண்ணல், முதலியவற்றை அடியோடு விலக்க வெண்டும்.

24. ஐயன் மாலை அணிந்தபின் எங்கும் எதிலும் ஐயப்பன் என்ற நினைவு மனதில் உதிக்க வேண்டும்.

25. சுவாமியே சரணம் ஐயப்பன் சரணம் என்று சொல்லி ஒருவருடன் பேசவோ கதைக்கவோ தொடங்க முன் ஐயன் நாமம் சொல்ல வேண்டும்.

26. மாலையை எக்காரணம் கொண்டும் கழற்றக் கூடாது. உறவினர் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்குக்கு கலந்து கொள்ள வேண்டு மென்றால் ஐயனை வணங்கி மன்னிப்புக் கோரி மாலையை கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிவிட வேண்டும். பின்பு விரதம் முடியும்வரை இடையில் மாலை அணியக் கூடாது.

27. மாலை அறுந்தால் பழுதடைந்தால் வேறு மாலையை மாற்றிக் கொள்ள வேண்டும்

28. விரத காலத்தில் பகலில் தூங்குவதை தவிர்க்க வேண்டும்.

29. படுக்கும் பொழுது கட்டில், மெத்தை, தலையனை போன்றவற்றை பாவித்தல் கூடாது

30. மண்டல பூர்த்தி முடிந்த மிகுதி நாட்கள் ஐயப்பனை காணும் நாட்களாக கருதப்படும்

31, மாலை போட்ட சாமிமார்கள் வீதியில் உலாவும் போதோ பயணம் செய்யும் போதோ அவர்கள் முன் தென்படுவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராக இருந்தாலும் அவர்கள் ஐயப்பனாகவே கருதப்படுவார்கள்.

32. சாமிமார்கள் குடும்ப உறவினருக்கோ மற்றவருக்கோ ஓர் ஈர்க்கால் கூட அடித்து துன்புறுத்தக் கூடாது.

33. மாலை அணிந்தபின் சந்திக்கும் ஆண்களை "ஐயப்பன்" என்றும் பெண்களை "மாளிகை புறத்து அம்மன்" என்னும் சிறுவர்களை "மணிகண்டன்" என்றும் சிறுமிகளை "மஞ்சமாதா" என்றும் அழைக்க வேண்டும்.

34. ஒவ்வொரு நாளும் குருசாமியின் சொற்படி பஜனை பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

35. நாள் தோறும் ஆலயத்தில் வீட்டில் பஜனை வழிபாடு முடிந்தவுடன் சாமிகள் குரு சாமிகள் ஆகியோருக்கு பாத பூசை செய்ய வேண்டும்.

36. முதலில் மாலை போட்ட சாமிகள் (கன்னிச் சாமியாவர்) தனது இல்லத்திலும் மற்றைய சாமிகளையும் குருசுவாமிகளையும் அழைத்து ஐயப்பனுக்கு உகந்த அன்ன பிரபுவுக்கான அன்னதானம் வழங்க வேண்டும்.

37. சாமிமார்கள் சமைத்த உணவுகளையே உட்கொள்ள வேண்டும் அல்லது மனைவியோ தாயோ சமைத்த உணவை உட்கொள்ள வேண்டும்.

38. இருமுடிகட்டி பூஜை வீட்டிலோ அல்லது கோயிலிலோ அல்லது குருசாமி வீட்டிலோ நடத்த வேண்டும். கணபதி பூஜை நடத்தி ஐயப்பனுக்கு பூஜை செய்து குரு சுவாமியை வணங்கி பெற்றோர்களை வணங்கி சரணங்கள் சொல்லிக் கொண்டு கட்டு நிறைக்க வேண்டும்

39. சபரிமலைக்கு போகிறேன் என்று சாமியே சரணம் என்ற சரண கோஷம் எழுப்பி மலைக்கு புறப்பட வேண்டும்.

40. இருமுடி சுமந்து யாத்திரை செல்லும்போது வீட்டு வாசலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் உடைத்து பின்புறமாக திரும்பி பாராது செல்லவேண்டும்.

41. கன்னி ஐயப்பன்மார்கள் யாத்திரை புறப்படும் இடத்தில் இருந்து சந்நிதானம் வரை இருமுடியை தாமே இறக்கவோ ஏற்றவோ கூடாது மூத்த ஐயப்ப சுவாமிமார்கள் அல்லது குரு சுவாமியின் உதவியை பெறவேண்டும்.

42. சபரிமலைக்கு செல்லும் பாதையில் சரணம் சாமியே சரணம் என்ற கோஷம் ஒலிக்கவேண்டும்.

43. பம்பை நதியிலே நீராடி நம்முன்னோர்களின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை செய்ய வேண்டும்

44. குரு சுவாமியே தெட்சனையாக கொடுக்க வேண்டிய சமயங்களில் ஐயப்பசாமிமார்கள் தங்கள் தகுதிக்கேற்றவாறு கொடுத்து சுவாமியின் அருளைப் பெறவேண்டும். இதில் எவ்வித நிபந்தனையும் கிடையாது. கொடுக்கும் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதனை மனமகிழ்ச்சியுடன் ஏற்று குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி அவரருள் பெற்றுய்வது ஐயப்ப குருமார்க்கு சாலச் சிறந்ததாகும்

45. ஐயப்ப சுவாமிமார்கள் கன்னிச் சாமிமார்கள் பெருவழிப் பாதையால் (அழுதைவழி) சென்று வருவது மிகவும் நற்பலனை அளிக்கும்

46, யாத்திரையில் மகர ஜோதியை தரிசித்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் திருவருள் பிரசாத தட்டினை தலையில் ஏற்றியபடி வாயிற்படியில் தேங்காய் அடித்து வீட்டிற்குள் செல்ல வேண்டும். பின்பு பூஜை அறையில் கற்பூர ஆரத்தி காட்டி கட்டினை அவிழ்த்து பூஜை செய்து பிரசாதங்கள் எல்லோருக்கும் வழங்கவேண்டும் பின்பு பதினெட்டாம் படி பூஜை பாட்டுப்பாடி கடைசியில் மங்களம் பாட வேண்டும்

47. குருநாதர் மூலமாக மாலையை கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு அணிவித்து விரதத்தை பூர்த்தி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருள் எல்லோருக்கும், எல்லா வரமும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி ஐயனை வணங்க வேண்டும்

48. சாமிகள் மண்டலபூர்த்தி பூஜைகள் யாவும் முடிந்தவுடன் மாலை கழற்றுவதற்கு குருகவாமியின் உதவியை நாட வேண்டும் குருகவாமி இல்லாத பட்சத்தில் குருசுவாமியை நியமிக்க வேண்டும் அவர் மூலம் மாலை கழற்றும் வைபவம் இடம் பெறும்

ஓம் சாமியே சரணம் ஐயப்பா

## பாதைகள்

1. மதுரை - திருச்செந்தூர் - கன்னியாகுமாரி - சுசீந்திரம் நாகர் கோயில் - அம்பாசமுத்திரம் - செங்கோட்டை குற்றாலம் அச்சங்கோவில் ஆரியங்காவு குளத்துப்புழை எருமேலி (500.8 கி.மீ)

2 மதுரை திருச்செந்தூர் - கன்னியாகுமரி - சுசீந்திரம் - நாகர் போவில் - திருவனந்தபுரம் - வர்க்கலா கொட்டாரக்கரா - பந்தளம் எருமேலி (474 கி.மீ)

3. மதுரை - செங்கோட்டை - குற்றாலம் - அச்சங்கோவில் - ஆரியங்காவு - குளத்துப்புழை - எருமேவி 385 கி.மீ)

4. மதுரை - பழனி - பொள்ளாச்சி - கொல்லங்கோடு - நெம்மாரா - திருச்சூர் - காவடி மூவாற்றுறுப்புழா - சோத்தானிக்ரை - வைக்கம் - கடுத்துருத்தி - ஏற்றுமானூர் - பாலாய் - எருமேலி (57கி.மீ)

5. மதுரை - பழனி - கம்பம் - குமிழி - வண்டிப்பெரியார் காஞ்சிரப்பள்ளி - எருமேவி (253 கி.மி)

6. எர்ணாகுளம் - திருப்பணித்துறா - சோத்தானிக்கரை - வைக்கம் பாலாய் - பொன்குன்னம் - எருமேலி (125 கி.மீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலை சாஸ்தா மூல மந்திரம்

ஓம் ஹ்ரும் நம: பராய கோப்த்ரே நம ஸ்வாஹா

## த்யான ஸ்லோகம்

தேஜோ மண்டல மத்யகம் த்ரிநயனம்
திவ்யாம்பராலங்கருதம்
தேவம் புஷ்பசரே ச கார்முக லஸன்
மாணிக்ய பாத்ராபயம்
பிப்ராணம் கரபங்கஜைர் மத கஜ
ஸ்கந்தாதி ரூடம் விபும்
சாஸ்தாரம் சரணம் பஜாமி ஸததம்
த்ரைலோத்ய ஸம் மோஹனம்

## ஐயப்பன் பூஜை செய்யும் முறை:

பகவான் ஐயப்பனின் பூஜையை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையாவன,

1. வேதங்கள் விதித்திருக்கும் முறைப்படி பூஜாகல்ப ஞானத்துடன் உபதேசங்களோடு கூடப் பூஜிக்கின்ற வைதீக பூஜை.

2. பக்தர்கள் நெஞ்சில் நினைத்து மனமார துதிக்கும் மானஸ பூஜை

3. பூஜாகல்ப விதிமுறைகளைப் பின்பற்றாமல் பக்தி நிறைந்த உள்ளத்துடன் உண்மை அன்புடன் தெரிந்தவரை செய்யும் பூஜை

## வைதீக பூஜை

முதலில் கன்னி மூலை கணபதியையும் பகவானின் சர்வஜ்ஞ பீடத்தினையும் பின்னர் பரிவாரங்களையும் பூஜிக்க வேண்டும். தாரக ப்ரம்மத்தை பூஜிக்கின்ற பீடத்திற்கு யோக பீடம் என்று பெயர். பகவத் பூஜைக்கு யோக பீடத்தில் ஆஸனம் கற்பிக்க வேண்டும். கிழக்கு முகமாய்ப் பூஜிக்க வேண்டும். ஸ்வாமி பூஜை செய்கின்ற இடத்தில் பரிவார பிரதிஷ்டைகளும் செய்ய வேண்டும். பரிவாரங்களை சிவலிங்கத்தில் பூஜிக்கலாம். பூஜாவிக்கிரகங்கள் இல்லையேல் பச்சரிசி, மஞ்சட்பொடி, தேங்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளில் ஸங்கல்பித்து பஞ்சாலங்காராதி உபசாரங்களுடன் பூஜிக்கவேண்டும். பரிவார தேவதைகளுக்கு குறிப்பிட்டுள்ள மூல மந்திரங்களுடனும் அவரவர்களுக்கு விதித்திருக்கும் ஸ்தானங் களிலும் பூஜிக்க வேண்டும். பதினெட்டாம் படியின் தேவதைகளாகிய ஸத்யமும் தர்மமும் பதினெட்டாம் படியின் இருபக்கங்களிலும் நின்று காவல் புரிகின்றனர்.

## மஹா கணபதி மந்திரம்

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வரவரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா ஸ்ரீ மஹா கணபதி ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி நம:

## தர்மம் சாஸ்த்ரு மஹா மந்திரம்

ஓம் ஹ்ரீம் ஹரிஹர புத்ராய புத்ரலாபாய சத்ரு நாசாய மதகஜ வாஹனாய மஹா சாஸ்த்ரே ப்ரத்யக்ஷ வேலாயுதாய வரவரத ஸர்வஜனம் மேவசமானய ஸ்வாஹா ஸ்ரீ சாஸ்த்ரு ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி நம தர்ப்பயாமி நம:

## மஹாசாஸ்து: மூல மந்திரம்

ஓம் ச்ரூம் நம: பராய கோப்த்ரே ஸ்வாஹா சாஸ்த்ரு ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி நமஸ் தர்ப்பயாமி நம:

## சாஸ்தா காயத்ரி

ஓம் பூதாதிபாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தந்ந: சாஸ்தா ப்ரசோதயாத்

## பூஜா கல்ப விதிமுறையில்லாத
## பக்த பூஜைக்குள்ள மந்திரம்.

சித்த தோஷங்களை ஒழித்து பக்தியுடனும் சக்தியுடனும் வைராக்கியத்துடனும் ஜல கந்த புஷ்பங்களும், நைவேத்தியங்களும் கொண்டு இயன்றவாறு பூஜிப்பதே பக்தருக்குச் சிறந்த முறை. அதற்கு "சுவாமியே சரணம் ஐயப்பா!" என்ற தாரக மந்திரத்தை உச்சரித்தாலே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவர் வழிபாடு

எமது ஆலயங்கள் யாவும் மனிதனை உயர்ந்த மனிதானாக ஆக்கும் ஒரு ஆன்மீக களமாக இன்றும் உயர்ந்து நிற்கின்றன. அனைத்து சக்திகளிலும் நிறைந்து எல்லாவற்றையும், எல்லாவற்றிலும், எல்லாமாக தன்னுள் அடக்கி வியாபித்து நிற்கிறது சிவம் என்ற மாபெரும் சக்தி. உக்ரம், சாந்தம், அன்பு முதலான குணங்களோடு மூர்த்தி பேதங்களாய், மண்ணாய், விண்ணாய், சூரிய சந்திரனாய், நட்சத்திரங்களாய், ஒளி ஒலியாய், மும்மூர்த்திகளாய், நான்கு வேதங்களாய், ஐந்து பூதங்களாய், ஆறு ருதுக்களாய், திரைகளாய் விரிந்து பரந்து நிற்கிறது சிவம்.

சிவனின் திருவிளையாடல்கள் ஏராளம். இதில் ஒன்றுதான் வைரவ மூர்த்தியின் திருக்கோலமாகும். சிவனுக்கு எண்ணற்ற திரு மேனிகளை வணக்கத்துக்கும் உபாசனைக்குமாக எம் முன்னோர்கள் வடிவமைத்துள்ளனர். அதில் 64 வடிவங்களை திருவுருவங்கள், சிவவடிவங்கள் எனக் கூறுவர். இந்த 64 வடிவங்களில் ஒன்றுதான் வைரவ வடிவமாம்.

## வைரவர் எங்கே இருக்கிறார்?

வைரவர் காவல் தெய்வம் - காத்தல் கடவுளுமாகும். இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகையும் உலகில் உள்ள திருக்கோவில்கள் தீர்த்தங்களை காவல் புரியும் காவல் தெய்வம் வைரவர். திருத்தலங்கள் எனப்படும் க்ஷேத்திரங்களை காவல் புரிவதால் க்ஷேத்ர பாலகன் என்றும், கடல் பொங்கி எழுந்து பூமியை அழிக்காமல் காப்பதற்காக திர்த்த பாலகன் என்றும் அழைக்கப்படுவதாக நூல்கள் கூறுகின்றன.

உலகில் படைக்கும் உயிர்களைக் காக்கும் உரிமை சிவனுக்கே உண்டு. எனவேதான் அவ் உயிர்களைக் காக்க சிவன் வைரவ உருவில் வெளிப்படுகிறார். சந்திரப் பிறையும் முத்தலைச் சூலமும் சிவனை எண்ணத் தோன்றுகிறது. தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த உயிர்களுக்கு துன்பம் விளைவிப்போர்க்கும் பயங்கர உருவமாக தோன்றி "பைரவர்" என்ற பெயரைப் பெற்றும், தன்னை வணங்கும் உயிர்களைக் காக்க "வைரவர்" என்ற பெயரையும் பெற்றுள்ளார் எம் பெருமான். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் ஆற்றும் இறைவனுக்கு "வைரவன்" என்ற பெயரும் உண்டு. எப்படி? ப - பரணம் - உலகில் உயிர்களை தோற்றுவித்து நிரப்பும் படைப்புத் தொழில். ச- ரமணம் - உயிர்களைக் காக்கும் தொழில். வ - வமணம் - நெடுங்காலம் வாழ்ந்து சோர்ந்த உயிர்களை அழித்து தன்னுள் அடக்கி கொள்ளும் அழித்தல் தொழல். இம்மூன்றும் சேர்ந்ததே வைரவம்.

வைரவரின் வலக்கரத்திலுள்ள டமருகம் படைத்தலையும், கபாலம் காத்தலையும், மேனியில் பூசிய விபூதி அழித்தலையும் குறிக்கிறது முத்தொழிலையும் ஆற்றும் போது விரிஞ்சி வடுகர், முகுந்த வடுகர், உருத்திர வடுகர் என பெயர் பெறுகிறார். இவர்களுக்கு வாக்தேவி, வைஷ்ணவ சக்தி, கௌரிகை ஆகியோர் தேவியராகின்றனர்.

வைரவர் ஞானிகளிடம் அறிவுச் சோதியை விளக்கும் ஞானவைரவராகவும், யோகிகளுக்கு காவலாக இருப்பதுடன் தாயே பெரிய யோகியாகவும் விளங்கி யோக வைரவராகவும், தண்ணீர், தீ, ஆகாயம், நிலம், காற்று முதலியவற்றால் உண்டாகும் சீற்றங்களிலிருந்து காக்கும் பூத வைரவராகவும், இன்னும் பல வடிவங்கள் தாங்கி பக்தர்களுக்கு அருள் புரிகிறார். இவருடைய பெருமைகள் எல்லையற்றவை.

## வைரவ அவதாரம்

முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் கடவுள் யார் என்று அறிய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. உடனே திருமாலிடமும் நான்முகனிடமும் சென்று தமது சந்தேகத்தைக் கேட்டபோது அவர்களிருவருக்கும் சிறிது தலைக்கணம் ஏற்பட்டது. தமக்கு எல்லாம் தெரியும் என்ற மமதை ஏற்பட்டது. அவர்கள் நாம்தான் முழுமுதற் கடவுள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகந்தையுடன் கூறியதைக் கேட்ட தேவர்கள் சிவபெருமான் தானே முழுமுதற் கடவுள் என வினா எழுப்பினர். இந்த சர்ச்சையை அறிந்த எல்லாம் வல்ல எம் பிரானாகிய சிவன் ஜோதி வடிவெடுத்து, அந்த ஒளி வெள்ளத்தில் சிவ பார்வதியை காட்டியருளினார். அதனைக் கண்ணுற்ற விஷ்ணு சிரம் தாழ்த்தி வணங்கினார். ஆனால் நான்முகனோ சிவனைப் போலவே எனக்கும் ஐந்து தலைகள் உள்ளன என அகந்தையால் அறிவிழந்து கூறியதுடன், தனது உச்சி சிரசால் சிவநிந்தனை செய்தார். சிவபிரான் முன்பாக சக்தியின் கோபத் தீ குழந்தையாக உருவெடுத்தது. காளி அதை எடுத்து வளர்த்தாள். சிவன் அக் குழந்தையைத் தன் இதயத்தில் அமர்த்தி வைத்திருந்தார். அந்த குழந்தையை வலிமைமிக்க ஞானமூர்த்தியாக ஸ்ரீ வைரவராக இதயத்திலிருந்து வெளிவரச் செய்தார். இம் மூர்த்தி சிவனின் சகல அம்சங்ளையும் கொண்டு விளங்கிற்று.

சிவபிரானின் ஆணைப்படி வைரவர் நீலத்திருமேனியுடன் சூலம், பாசம், பரசு, உடுக்கு என்பனவற்றைக் கரங்களிலேந்தி மூன்று கண்களுடனும் இரத்தநிறச் சுவாலை போன்ற சடையுடனும் உக்கிர ரூபியாகி நிர்வாணக் கோலரத்துடன் காட்சி கொடுத்தார். வேத வடிவான நாயைத் தனது வாகனமாக்கிக் கொண்டார். சிவபிராளின் அருளாணைப்படி பிரம்மாவின் ஒரு சிரசினைக் கொய்து அவரது அகந்தையை அடக்கினார்.

"அன்றுதான் அயன் தன் சிரம் ஐந்தினும் ஒன்றை" என்றார் சம்பந்தர். "விளங்குமலர் அயன் சிரங்கள் ஐந்தில் ஒன்றைச் சேதியினை" என்றார் அப்பர். "இன்னுயிர் பார் படைத்தான் சிரம் அஞ்சில் ஒன்றைச் சேத்தவர்" -என்றார் சுந்தரர். இது சிவனின் எட்டு வீரச் செயல்களில் ஒன்று. திருக்கண்டியூர் தலத்தில்தான் இந்த வீரச் செயல் நடந்தது என கூறப்படுகிறது.

பிரம்மா படைத்தற் கடவுள் அல்லவா? ஆகவே அவரது சிரசைக் கொய்த இரத்தம் உலகெங்கும் சென்றது. அதனைத் தமது நெற்றி விழியால் வற்றச் செய்தார் வைரவர். பிரம்மாவின் சிரசைக் கொய்தபடியால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கும் செல்கையில் வைகுண்டமும் சென்றார். அங்கு வைரவரை விஷ்ணுசேனர் எதிர்த்தார். அவரைத் தமது சூலத்தால் கொய்து தூக்கிக் கொண்டு விஷ்ணு மூர்த்தியிடஞ் செல்ல அங்கு விஷ்ணுவின் சிரசிலிருந்து ஆயிரம் தேவ வருடம் உதிரம் சொரியவே விஷ்ணு மூர்ச்சித்தார். இதனைக் கண்ட பூமாதேவி வைரவரை வேண்டவே விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்து காசி சென்று கபாலத்தை விட்டு அங்கு காலவைரவராக எழுந்தருளினார்.

## கால வைரவர்

சிவபெருமான் எடுத்த திருக்கோலங்களில் கால பைரவர் சிறப்பானவராகும், காலனாகிய எமனும் நடுங்கும் தோற்றம் எடுத்தமையினால் கால வைரவர் என அழைக்கப்படுகிறார். உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும் வான் மண்டலத்தில் உள்ள கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்கள் ஆகிய அனைத்தும் காலச்சக்கரத்தின் ஆளுகைக்கு உட்பட்டது. கால வைரவரின் உடம்பில் பூமியைத் தாங்கும் எட்டு நாகங்களும் மாலைகளாக இருந்து அலங்கரிக்கின்றன. எனவே இவரை வழிபட்டால் எல்லாவித சர்ப்ப தோஷங்களும் நீங்குகின்றன. காலச்சக்கரத்தினை இயக்கும் பரம்பொருளே கால வைரவர். காலத்தின் கட்டுப்பாட்டை மீறி நன்மை அளிப்பவர் கால வைரவர். காலச் சக்கரத்தினால் துன்பமடையும் பக்தர்களை காப்பாற்றுபவரும் இவரே.

பாரத மண்ணில் உள்ள வைரவ கோயில்களில் காசியில் உள்ள வைரவர் கோயிலே முதன்மையானதும் சிறப்பானதாகும். காசியில் கால பைரவருக்கு முக்கியத்துவம் அதிகம் ஏனென்றால் காசிக்கு வருபவர்களின் பாவ புண்ணியம் மற்றும் ஜீவ மரணக் கணக்குகளை கால வைரவரே எழுதுகிறார். சித்திரகுப்தன் எழுதுவதில்லை. எனவே காசியில் யமபயமோ யம துன்புறுத்தலோ கிடையாது. காசியில் யமதர்மனின் பணியை கால வைரவரே செய்து கொண்டிருக்கிறார்.

காசி காண்டத்தில் வைரவர் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. வைரவர் பிரம்ம தேவனின் தலையைக் கொய்துவிட்டு பிரம்மஹத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோஷம் ஏற்பட்ட கபாலத்தைக் கையில் ஏந்திக் கொண்டு தோஷத்தை போக்குவதற்கு உலகம் பூராவும் அலைந்து திரிந்து நர்மதா நதிக்கரைக்கு வந்தார். அங்கிருந்து முனிவர்களிடம் தனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் பற்றி முறையிட்டார். அவர்களும் நீ காசி சென்றால் உன் தோஷம் விலகி விடும். ஆனந்த கானனம் எனும் இடத்தில் காசி உள்ளது. இறுதியாக எந்த இடத்தில் உன் கரத்தில் இருக்கும் கபாலம் தெறித்து விழுகிறதோ அதுதான் காசி என்று தெரிந்து கொள். இக்கபாலம் தெறித்து விழுந்தால் உன் பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது என்று தெரிந்து கொள். நீ கையில் கபாலத்தோடு சுற்றுவதால் உன்னை யாவரும் கபால வைரவர் என்று அழைப்பர் என்று கூற வைரவரும் அங்கிருந்தும் புறப்பட்டார்.

நர்மதா நதிக்கரையிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கையில் காசி வந்ததும் கபாலம் தெறித்து விழுந்தது. உடனே இதுதான் ஆனந்த கானனம் காசி என்று தெரிந்து கொண்டு காசி தீர்த்தத்தில் நிராடி விசுவநாதரைத் துதிக்க விசுவநாதரும் வைரவரை ஆசீர்வதித்து, இங்கு யமன் அதிகாரம் செல்லாததாகையால் யமனுடைய பணியை நீ கவனித்துக் கொள் என்று சொல்லி காலவைரவர் என்ற பெயரையும் வைத்தார். காசியின் சேனாதிபதியாக இருக்கும் படியும் கூறினார்.

காலவைரவர் கோயில் விசுவநாதர் ஆலயத்திற்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் இருக்கிறது. காசி பட்டணத்திற்கு இவர்தான் காவற்காரர். இவருக்கு வாகனம் நாய். காசியில் நாய்க்கு அன்னமிடுவது சிறப்பு. சூலம், உடுக்கை, மழு, பாசக் கயிறு ஏந்திய ஈசனின் திருவடிவமாக கால வைரவரைக் கருதுகிறார்கள். அவர் உள்ள இடத்தில் யமபயம் இல்லை. நம்முடைய பாவங்களை அவரிடம் முறையிட அவற்றைப் போக்கிவிடுவார் என்ற நம்பிக்கையும் உண்டு.

வைரவ மூர்த்தியைக் காசியில் வழிபடச் செல்லும் பக்தர்கள் தம்முடன் கொண்டு செல்கின்ற சறுப்புக் கயிற்றை கோயிலில் உள்ள பூசாரிகளிடம் தரவேண்டும். அவர்கள் அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் திருவடியில் வைத்து கால வைரவாஷ்டகம் கூறி திரும்ப எடுத்து பக்தர்களுக்குத் தருகிறார்கள். பின்னர் மயில்தோகையைப் பக்தர்களின் தலைமிது வைத்து ஆசீர்வாதம் செய்கிறார்கள். கையில் காசிக் கயிற்றை கட்டிவிடுகிறார்கள். இக் கயிறு நம்மீது துர் தேவதைகளின் ஆதிக்கம் பயம் இருந்தால் அதனை நீக்கும் வல்லமை பெற்றது.

இதைப்போல் இராமேஸ்வரம் செல்வோர் இராமநாதப் பெருமானை வழிபட்டு கடைசியாக வைரவரை தரிசித்து தல வழிபாட்டினை நிறைவு செய்து கொள்ள வேண்டும்

## வைரவரின் திருமேனி அமைப்பு

ஆன்மாவுக்குப் பிறவிகளில் தரப்படுகின்ற உடல்கள் இறைவன் திருவருளால் உருவாக்கப்படுகின்றன என்பதனைத் தெரிவிக்கின்றது. எனவே உடல் அல்லது எலும்புக்கூடு வைரவர் கரங்களில் கணலாம்.

### சமபாத ஸ்தானகம்

வைரவத் திருமேனிகள் பெரும்பாலும் சம்பாத ஸ்தானகத்தில் விளங்கும். சமபாத ஸ்தானகம் நின்ற கோலத்தில் பாதங்களைச் சமமாக வைத்து நிற்கும் நிலையாகும். அதாவது உடலை வளைக்காமல் நேராக நிமிர்ந்து நின்று கை கால்களை நெருக்கமாக வைத்து நிற்கும் நிலையாகும்.

### சுகாசனம்

ஓர் ஆசனத்தின் மீது சாய்வின்றி நேராக அமர்ந்து ஒரு காலை ஆசனத்தின் மீது நேராக மடித்து வைத்து மற்றொரு காலை நேராகத் தொங்கவிட்டிருக்கும் நிலைக்குச் சுகாசனம் என்று பெயர். இதில் இடக்காலை மடித்து வலக்காலை தொங்க விட்டுக் கொண்டோ அல்லது வலக்காலை மடித்து இடக்காலைத் தொங்க விட்டுக் கொண்டோ இருக்குமாறு அமைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜடா மண்டலம்

முகத்திற்கு ஏற்றவாறு முக அகலத்தைப் போல மும்மடங்கு குறுக்களவுடையதாக அமைத்து தலையின் பின்னே திரிசடைகளாக வகுத்து பின்னப்பட்ட சடைகளை வட்டமாக அமைத்த கோலத்திற்கு ஜடா மண்டலம் என்று பெயர் சிறப்பாக தட்சிணாமூர்த்தி வைரவர் திருமேனிகளில் காணலாம்

### சுடர் முடி

கொழுந்து விட்டெரியும் தீச்சுடர் போல முடியை மேல் நோக்கிய நிலையில் அடுக்கடுக்காக உச்சி கூர்மையுடையதாக (வேப்பிலை போன்ற வெளித் தோற்றம்) அமைந்த கோலம் சுடர்முடி எனப்படும் இக்கோலத்தில் கால வைரவர், சம்ஹார வைரவர் காணப்படுவர். இருப்பினும் காளி, மாரி, பிடாரி, அகோர வீரபத்திரர். சக்கரத்தாழ்வார் போன்ற உக்கிரமுடைய திருவுருவங்களில் காணலாம்.

## வைரவர் திருக்கரங்களில் விளங்கும் முத்திரைகள்

### அபயம்

இதனை அருட்கரம் (அபய ஹஸ்தம்) எனக் கூறுவர். கையின் கட்டுவிரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல், ஆகிய நான்கினையும் ஒரு சேர இணைத்து கைக்குச் சம உயரத்தில் மேல் நோக்கிச் செங்குத்தாக நிறுத்தி பெருவிரலைச் கட்டுவிரலோடு சேர்த்து மேல் நோக்குமாறு அமைத்துப் பிடிக்கும் கர லட்சணத்திற்கு அபயம் அல்லது அபயகரம் என்று பெயர்

### வரதம்

வேண்டுவன கொடுக்கும் கரம் வரதம் (வரதஹஸ்தம்) எனப்படும். அபயகரத்தைக் கீழ் நோக்கியவாறும், உள்ளங்கை வெளிநோக்கியவாறும் அமைத்துக் காட்டினால் அது வரதம் அல்லது வரதகரம் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்முத்திரை**

சின் முத்திரையினை தட்சணாமூர்த்தியின் திருமேனியில் காணலாம். இருப்பினும் சட்டைநாதர் திருக்கரத்திலும் ஞான முத்திரையாகிய சின்முத்திரை காணப்படும். பெருவிரலானது உள்ளங்கையை விட்டு விலகி முன்பக்கமாக நீண்டு வளைந்து நிற்க, சுட்டு விரலானது கீழ் நோக்கி வளைந்து பெருவிரலின் நுனியைத் தொட்டு நிற்கும்படி விளங்கும். மற்ற நடுவிரலும், அணிவிரலும், சிறுவிரலும் அவ்விரண்டு விரல்களையும் விட்டு நீங்கித் தனியே மேல்நோக்கி நிமிர்ந்து விளங்கும். இதனை சின்முத்திரை என்பர்.

## வைரவர் ஆயுதங்கள்

திருக்கோயில்களில் விளங்கும் தெய்வத் திருமேனிகளின் கரங்களில் பல ஆயுதங்களும், முத்திரைகளும் காணப்படுகின்றன. இவ் ஆயுதங்கள் பல நமது அன்றாட வாழ்க்கையில் இன்றும் பயன்படுகின்றன. சில ஆயுதங்கள் காலத்தால் மறைந்தும் வெளிப்பாடு இல்லாமலும் இருப்பதை நாம் அறிவோம்.



ஆயுதங்கள் சில நேரங்களில் கருவிகளாக அமைவதும் உண்டு. தெய்வத் திருமேனிகளில் காணப்படும் ஆயுதங்களாகிய கருவிகள் பல நிலையில் கருதப்படுகின்றன. இவைகள் தொழிற்கருவிகள், போர்க் கருவிகள், இசைக் கருவிகள், அனுக்கிரகம் கருவிகள் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்கள்

வைரவருக்குப் பெரும்பாலும் நாய் வாகனமாக அமைதல் முறையாகும். இவரையே வைரவர், கால பைரவர், க்ஷேத்ரபாலர் எனது பலவாறு கூறுவர். அஷ்டவைரவர் என்று குறிப்பிடும்போது சிம்மம், மயில், ரிஷபம், கருடன், அன்னம், குதிரை, யானை, நாய் ஆகியன வாகனங்களாக இருந்து வைரவ பெருமானைத் தாங்கி உலா வருவனவாகும்.

### நாய் வாகனம்

வைரவர் காவல் தெய்வமாக விளங்குவதால் காவல் குறியீடான நாயை வாகனமாகக் கொண்டுள்ளார். இந்த நாய் அவரக்குப் பின்புறம் குறுக்காகவும், அவருக்கு இடப்புறம் நேராகவும் நிற்கின்றது. சில கலைஞர்கள் இந்த வைரவரின் கரத்திலுள்ள வெட்டுண்ட தலையிலிருந்து வடியும் இரத்தத்தை நாய் சுவைப்பது போலவும் அமைத்துள்ளனர் அபூர்வமாகச் சில தலங்களில் நான்கு நாய்களுடனும் வைரவ அமைக்கப்பட்டுள்ளார். மல்லாரி சிவன் என்னும் வைரவர் ஏழு நாய்கள் சூழ இருப்பதாக மல்லாரி மகாத்மியம் கூறுகிறது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ட வைரவர்

சிவனின் வீரச் செயல்கள் எட்டு நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. வீரச் செயல்களில் வெளிப்பாடாக விளங்கும் வைரவரும் எட்டு உருவங்களும் தாங்கி பக்தர்களுக்கு அருள பாலிக்கின்றார்.

அஷ்ட வைரவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவரின் எட்டுத் திருமேனிகள்

உன்மத்தன், பீஷணன், சம்ஹாரன், குரோதன், கபாலன், சண்டன், அசிதாங்கன், ருரு.

### உன்மத்தபைரவர்



பொன் வண்ண நிறத்தையுடைய ஏர், கத்தி, கபாலம் ஆகியவற்றை ஏந்தி வாராகி தேவியுடன், குதிரை வாகனத்தில் மேற்கு திசையில் காவல் தெய்வமாகிறார்.

### பீஷண வைரவர்



சிவப்பு நிறத்தையுடைய இவர். சூலம், உலக்கை, கத்தி, கபாலம் ஏந்தி, பூத, வேதாளங்கள் சூழ, பைரவியான சாமுண்டியுடன் சிங்க வாகனத்தில் வடதிசை காவல் தெய்வமாகிறார்.

### சம்ஹார பைரவர்



வெண்மையான நிறத்தையுடைய இவர் சூலம், டமருகம், சங்கு சக்கரம் கதை, கத்தி, கபாலம், குறுவாள், பாசம், அங்குசம் முதலிய பத்து ஆயுதங்களை பத்து கரங்களில் ஏந்தி சண்டிகா தேவியுடன் நாய் மீது வடகிழக்கு காவல் தெய்வமாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**க்ரோதன வைரவர்**

கறுப்பு நிறத்தையுடையவர். சங்கு, சக்கரம், பானபாத்திரம், தண்டம் ஆகியவற்றை ஏந்தி வைஷ்ணவியுடன், கருட வாகனத்தில் தென்மேற்குத் திசை காவல் தெய்வமாகிறார்.

**கபால வைரவர்**

பத்மராக வண்ணத்தையுடையவர். மேற்கரங்களில் இரண்டு இடியை உணர்த்தும் வஜ்ஜிரங்களையும் இந்திர நீலக் கற்களாலான அணி அணிந்து, ஐந்தரியுடன் ஐராவதத்தில் பவனிவந்து காவல் புரிகிறார்.





**சண்டவைரவர்**

பொன் நிறம் கொண்டவர். சக்தி, குலிசம், கத்தி, கபாலம் ஏந்தியவராக மயில் வாகனத்தில் கௌமாரியுடன் தென் திசைக்கு காவலாக எழுந்தருளியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அசிதாங்க வைரவர்**

கருநீல நிறத்தையுடையவர். அட்சமாலை. கெண்டி, கமண்டலம் கத்தி ஏந்தி பிராம்மி தேவியுடன் அன்னவாகனத்தில் இருக்கிறார். சில சமயம் இவர் நான்கு முகங்கள் கொண்டவராகவும் காட்சி தருகிறார். இவருக்குரிய திசை கிழக்கு.





**ருரு - வைரவர்**

மான், மழு, கத்தி, கபாலம் ஆகியவற்றை ஏந்தி இடப வாகனத்தில் மகேஸ்வரியுடன் தென்கிழக்கு திசையில் விற்றிருக்கிறார்

அஷ்டவைரவர்கள் கடுமையான தோற்றமுடையவர்கள். என்றாலும் பக்தர்களுக்கு அநேக வரங்களை அள்ளித்தரும் கிருபா மூர்த்திகள். அஷ்ட ஐஸ்வர்யங்களையும் வழங்கி இன்பம் தருபவர்கள்.

## சப்த மாதர்கள்

இவர்கள் அந்தகாசுர வதத்தின் பொருட்டு சிவனால் தேவர்களின் சக்தியிருந்து தோற்றுவிக்கப்பட்டவர்கள். அஷ்ட வைரவர்களுக்கு தேவியர்களாக இருந்து காவல் தெய்வங்களாக காத்தருள்பவர்கள்.

பல சிவாலயங்களில், அம்மன் ஆலயங்களில் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்த கன்னியர் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என பெயர் பெற்றவர்கள்! இவர்களின் பதியாக அசிதாங்க வைரவர், ருருவைரவர், சண்ட வைரவர், குரோதன வைரவர், உன்மத்த வைரவர், கபால வைரவர். பீஷண வைரவர் ஆகியோர் அமைந்துள்ளனர். இவர்களில் எட்டாவது சப்தமாதராக சண்டிகை சம்ஹார வைரவருக்கு உடனிருந்து அருள் பாலிக்கிறாள்.

ஊர் எல்லைகளில் சப்த கன்னியரை ஸ்தாபித்து வழிபட்டால் அவ்வூர் என்றும் அவர்களால் காக்கப்படும் என்றும் கூறுவர்

## சப்த மாதர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்கவைரவர்களும் அவர்களின் தேவியராக அறுபத்து நான்கு போகினிகளும்

| | |
|---|---|
| 1. அசிதாங்கர் | திவ்யயோகி |
| 2. மார்த்தாண்டர் | சித்தயோகி |
| 3. சுவச்சந்தர் | பிரேதாசிபிகினி |
| 4. கேசரர் | நிசாசரி |
| 5. ருரு | ஊர்த்துவ வேதாளி |
| 6. சடாதரர் | பூதடாமரி |
| 7. விருபாட்சர் - | விருபாக்ஷி |
| 8. பரர் | நரபோஜனி |
| 9. மகாகாளர் | கோரரக்தாட்சி |
| 10. பிரளயாந்தகர் | பயங்கரி |
| 11. நீலகண்டர் | கீசண்டி (நிலகண்டி) |
| 12. குலபாலகர் | முண்டதாரிணி |
| 13. காமபாலர் | ருத்ரவேதாளி |
| 14. பிங்களேட்சணர் | திரிபுராந்தகி |
| 15. தராபாலகர் | துவம்சனி |
| 16. மந்திர நாயகர் | துர்முகி |
| 17. பிதாமகர் | கட்வாங்கி |
| 18. வடுகர் | மாலினி |
| 19. பூதவேதாளதிரிநேத்ரர் | காலாக்னி |
| 20. வரதர் | சக்ரி |
| 21. கபாலர் | புவனேஸ்வரி |
| 22. ஹஸ்திசர்மாம்பரதரர் | வீரபத்ரேசி |
| 23. பிரம்மராட்சசர் | கலகப்பிரியா |
| 24. சர்வதேவேசர் | நாயகி |
| 25. பீஷணாக்யர் | யமதூதி |
| 26 சர்வஜ்ஞர் | கௌசிகி |
| 27. விசாலாட்சர் | மகாயோகி - |
| 28. தோதகப்பிரியர் | கணேசுவரி |
| 29. குரூரதம்ஷ்ட்ரர் | பிசாசி |
| 30. சசராசர் | ஜங்காரி |
| 31. விசுவரூபர் | ஊர்த்வ கேசி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 32. | நாதரூபதரர் | சுஷ்காங்கி |
| 33. | ஜ்ரஹஸ்தவர் | ராக்ஷசி |
| 34. | சண்டர் | விஸ்வரூபி |
| 35. | பூமிகம்பர் | வீரகௌமாரி |
| 36. | விஷ்ணு | வாராகி |
| 37. | முண்டபாலர் | பதிராமரி |
| 38. | குரோதர் | பீஷ்கரி |
| 39. | அப்ரரூபர் | பைரவி |
| 40. | குடிலர் | குரோதி |
| 41. | ருத்ரர் | பிரேதவாகினி |
| 42. | உந்மத்தர் | தீர்க்க லம்போஷ்டி |
| 43. | சங்கரர் | மந்திரயோகினி |
| 44. | திரிபுராந்தகர் | கிராமணி |
| 45. | பர்வதராசர் | கங்காளி |
| 46. | சசிபூஷனர் | பட்காரி |
| 47. | யோகீசர் - | தூம்ராக்ஷி |
| 48. | சர்வக்ஞர் | கண்டகி |
| 49. | சர்வபூதஹ்ருதிஸ்திதர் | மாரி |
| 50. | பயகரர் | கராளினி |
| 51. | காலாக்னி | மர்த்தனி |
| 52. | மகாரௌத்ரர் | யக்ஷி |
| 53. | முகரோஸ்திரர் | பிரஹரிணி |
| 54. | அதிரிக்தர் | காமலோலா |
| 55. | காலாகனி | அதோமுகி |
| 56. | கோரநாதர் | விகடி |
| 57. | யோகீசர் | கபாலி |
| 58. | விக்ன சந்துஷ்டா | காளராத்திரி |
| 59. | தட்சிணா | ரோமஜங்கி |
| 60. | சம்ஹாரர் | சகஸ்ராக்ஷி |
| 61. | அங்கர் | காகதமிஷ்ட்ரா |
| 62 | பிரியங்கரர் | துர்ச்சடி |
| 63. | விசாலாட்சர் | கேசி |
| 64. | தட்சசம்ஸ்திதா | விஷலங்கிணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனின் வைரவத் திருக் கோலங்கள்



**வைரவ மூர்த்தி**

ஹிரண்யாக்ஷன் குமாரனாகிய அந்தகாசுரனைச் சங்கரித்து தேவர் துன்பமகற்ற எழுந்தருளிய அவதாரம் வைரவ மூர்த்தம்.



**ஆபதோத்தாரண மூர்த்தி**

சகல ஜீவன்களுக்கும் பரமாத்மாவான சிவனால் மட்டுமே அவர்களின் குறைக்ளைக்களைய முடியும். வேறு துணை யாருமில்லை. ஆபத்து காலத்தில் தமது துயர்களைக் கூறி யாசித்தால் அவர்கள் துன்பத்தை தொலைத்து சகாயஞ் செய்யும்படி எழுந்தருளிய திருக்கோலம் தான் ஆபத்தோத் தாரண மூர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வடுக மூர்த்தி

பிரமன் தன்னைத் துன்புறுத்திய முண்டாசுரனுக்கு அஞ்சி முறையிட்டபோது அம் மலரோனது வேண்டுகோளுக் கிரங்கிவிடையூர்தி அவ்விடுக் கண் தீர்ப்பன் கருதி விடுத்த மூர்த்தமே வடுக மூர்த்தம் எனப்படும்

### க்ஷேத்திரபாலக மூர்த்தி

க்ஷேத்திரம் - பூமி; பாலகர் - காப்பவர் எனவே க்ஷேத்திரமாகிய உலகத்துக்கு ஊழிக் காலத்தில் உற்ற துன்பத்தைத் தீர்த்து ரட்சித்தருளினமையால் உமை மணவாளனுக்கு க்ஷேத்திர பாலக மூர்தி என்ற நாமமும் உண்டு





### பிரம்ம சிரச்சேத மூர்த்தி

தானே பிரமமெனச் செருக்குற்ற பதுமனது ஐந்தாவது தலையை நகநுதியா வரிதமையின் சங்கரருக்கு ப்ரஹ்ம ஸிரச்சேத மூர்த்தி என்ற பெயரும் உண்டாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைச் சங்கமர் வேடம்

சோழவளநாடு காவிரி நதியின் வளம் பெருகுகின்ற நாடு மன்மதனை விழியால் எரித்த விமலனார் எழுந்தருளிய தலமாகிய திருச்செங்காட்டங்குடி இங்கே உள்ளது. விநாயகப் பெருமான் கஜமுகாசுரனைக் கொன்றபோது அவனுடைய உடலில் இருந்து வெளிப்படும் உதிரம் காடு முழுவதும் பரந்து சிவந்ததால் செங்காடு எனப் பெயர் பெற்றது. இங்கு அத்தி மரத்தின் கீழ் சிவலிங்கம் அமைத்து கணபதி பூசித்தமையால் கணபதீச்சரம் எனும் திருக்கோயிலும் உள்ளது.

இத்தகைய சிறப்பு பெற்ற ஊரில் பரஞ்சோதியார் என்பவர் சிறப்பாக வாழ்ந்து வந்தார். மிகப் பெரிய வீரர். நூல்கள் பல கற்றவர் அல்ல. மன்னன் நரசிம்மவர்மனிடம் சேனாவீரராக இருந்து மன்னனுக்காக போர் பல வென்று நாடுகளைப் பெற்றுக் கொடுத்தவர். வாதாபி மன்னனை போரில் வென்று வெற்றி வாகை சூடியவர். முக்கியமாக இவர் சிவன் திருவருள் பெற்றவர். அருள் வலிமையும் திருத் தொண்டின் திறம் படைத்தவர். இவருக்கு நிகர் யாருமில்லை. சிவனின் திருத்தொண்டர் என அறிந்த மன்னன் அவரை போர்க்களங்களுக்கு அனுப்பியதை எண்ணி வருந்தி நிறைய நிதிக் குவியலும், நிலபுலன்களும் கொடுத்து, அவரது ஊருக்கு திருத்தொண்டு புரியுமாறு அனுப்பி வைத்தார்.

பரஞ்சோதியார் தமது ஊராகிய திருச் செங்காட்டன் குடியை அடைந்து கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள ஈசனை வணங்கினார். தனது திருத்தொண்டுக்கு எந்தவொரு பாதகமும் விளைவிக்காதடி திருவெண்காட்டு நங்கையை மணந்து வையகம் போற்ற வாழ்ந்துவந்தார். இவரிடம் காணப்பட்ட நற்குணங்களான, அடியார்களை மதித்து உபசரித்தல், அடக்கம், பணிவு, என்பவற்றை கண்ணுற்ற மக்கள் சிறுத்தொண்டர் என அழைத்தனர்.

சிவனின் திருவருளால் சிறுத் தொண்டருக்கு நாளும் நன்னிலை பெற்ற ஒரு நன்னாளில் சீரானதேவர் என்ற மைந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவதரித்தார். தாயும் தந்தையும் மனம் மகிழும்வண்ணம் சீராளன் வளர்ந்து வந்தார். அப்போது திருஞான சம்பந்தர் திருச் செங்காட்டங் குடிக்கு எழுந்தருளியபோது சிறுத்தொண்டர் அவரை நம் மாளிகையில் வரவேற்று பாத பூஜை செய்து அமுது படைத்து மகிழ்ந்தார்.

சிறுத் தொண்டரின் சிறந்த தொண்டின் பெருமையை உலகுக்கு உணர்த்த விரும்பிய சிவன் தேவ தேவராகிய வைரவ சந்நியாச வடிவம் கொண்டார்.

**சிவன் ஏற்ற வைரவ சந்நியாச வடிவம்**



சிவந்த சடாமருடமானது, கரிய முகிலினம் மொய்த்து எழுந்தது போல சுருண்ட கரிய மயிர் முடியாகக் கவின் செய்தது. அம்முடியில் உடுக்குலங்களைப் பதிய வைத்தாற் போன்று தும்பை மலர்கள் துலங்கின. திருநீற்றுப் புண்டரத்துக்கு இடையே பிறை மதியைச் சிறியதாக்கி வைத்தது போன்ற பொட்டுப் பொலிவு செய்தது. திருச் செவியில் இரத்தின மணியுடன் கூடிய சங்க வெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழையும், அதில் செருகிய செவ்வரத்தம் பூவும், இரு பக்கங்களிலும் எழில் புரிந்தன. திருக்கழுத்திலே உள்ள நீல கண்டம் மறையும்படி, அமுதக் குமிழ் போன்ற பளிங்கு மணிவடங்கள் கட்டப் பெற்று, கண்டோர் உயிரையும் உடம்பையும் உருகவைத்து ஒளி செய்தன. செய்ய மேனியில் கஞ்சுகமும், சங்கு மாலையால் ஆகிய சன்ன வீரமும், தோள் வளையல்களும், கடிசூத்திரமும், திருவடியில் பொற்கலனும் அழகு செய்தன. திருவடியில் மணிச் சிலம்புகள் இனிது ஒலித்தன. இடத் திருக்கரத்தில் திரிசூலமும், வலத் திருக்கையில் தமருகமும் விளங்கின. நிலஞ்செய் தவத்தால் திருவடித் தாமரை நிலத்தில் ஆடவும், அழகு பொழியும் திருமுகத்தில் புன்முறுவலின் ஒளி வீசவும், மும்மலத்தின் வலியைக் கெடுக்கும் முச் சூலத்தில் வெயில் பரவவும் வைரவ சந்நியாச வடிவம் கொண்டு எழுந்தருளினார் சிவபெருமான். சிவனடியாருக்கு உணவு படைத்துவிட்டு தான் உண்ணும் விரதத்தை கைக்கொண்ட சிறுத்தொண்டரின் இல்லத்துக்கு அன்று யாருமே வரவில்லை. அடியாரைத் தேடி வீதி வீதியாக அலைந்தார்.

வைரவசந்நியாசி சிறுத்தொண்டரின் இல்லம் வந்தார். அங்கே இருந்த ஒரு பெண் வெளியே வந்து வைரவரைத் தொழுது உள்ளே வரும்படி அழைக்க "பெண்கள் தனித்திருக்கும் இடத்துக்கு நாம் வரமாட்டோம்" என கூறியதைக் கேட்ட வெண்காட்டு நங்கையார் வந்த சிவனடியாரும் சென்றுவிட்டால் என்ன செய்வது என நினைத்து வாயிலில் அடியார் முன் வந்து தொழுதார்

"அம்பலவரடியாரை அமுது செய்விப்பார் இற்றைச்
செம்பெருமான் அடியாரைக் கண்டிலர் தேடிப் போனார்
வம்பென நிர் எழுந்தருளி வருந்திரு வேடங் கண்டால்
தம்பெரிய பேறென்றே மிக மகிழ்வர் இனித் தாழார்"
என வேண்டினார்.

அதற்கு வைரவப் பெருமான் நான் வடதேசத்திலிருந்து வருகிறேன். சிறுத்தொண்டர் இல்லாதபோது நான் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமாட்டேன். கணபதீச்சரம் கோவிலில் ஆத்தி மரத்தின் கீழ் இருக்கிறேன். அவரிடம் சொல்லுங்கள் என கூறி விட்டு போய் திருவாத்தியின் கீழ் அமர்ந்து கொண்டார்.

அடியவர் யாரையும் காணாத நிலையில் வந்த சிறுத் தொண்டரிடம் நடந்ததை கூறினார் மனைவியார். உடனடியாக கோவிலை அடைத்து வைரவரைக் கண்டு மனைக்கு எழுந்தருளி அமுது செய்ய வேண்டும் என மனமுருகி வேண்டினார். அதற்கு வைரவரோ "உம்மைக் காணத்தான் வந்தேன். உணவருந்த அல்ல. எனினும் எனக்கு அமுதூட்ட உம்மால் முடியாது" என்றார்.

சிறுத்தொண்டர் சிறிதும் தயங்காமல் உமக்கு எது வேண்டுமோ உரைத்தருளும். முயற்சி செய்தால் இல்லாததும் உணவாகும் என்றார். அற்கு வைரவர், "நாம் ஆறு மாதத்துக்கு ஒரு தடவைதான் உண்பது வழக்கம். அதுவும் பசு வதைத்து உணர்பேன்" என்றார். அதற்கு சிறுத்தொண்டரும் "என்னிடம் மூன்றுவகைப் பசு உள்ளது. உமக்கு வேண்டிய பசு தருகிறேன்" என்றார். வைரவர் உடனே உமது அன்புக்கு மகிழ்ச்சி. நான் உண்பது நரப்பசு. ஐந்து வயதுக்குள் இருக்க வேண்டும். அங்கம் பழுதிருக்கலாகாது. ஒரு குடியில் ஒரு மகனாக தாயார் மடியில் வைத்து பிடிக்க தந்தை மகிழ்வுடன் அரிந்து சமைத்து தரவேண்டும்" என்றார். மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட சிறுத்தொண்டர அப்படியே செய்து அமுது படைத்தார்.

சிவனடியார் அமுது செய்ய, அதனால் உய்வு பெற்று மகிழும் கணவர் திருமுகத்தைக் காண்பதே கடமை என நினைத்து மனைவியாரும் மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட செயல் பெருமைக் குரியது. சிறுத்தொண்டரின் பெருமைக்கும் அம்மை காரணமாகிறார்

சின்னஞ்சிறு பாலகனை அரிந்தபோது கூட அந்த பாலகன் சிறிதும் மனம் தளரவில்லை. நாய்க்கும் பேய்க்கும் இரையாகும் இந்த ஊன் உடம்பு அடியார் அமுது செய்யப் பயன்பட்டதே என எண்ணி மகிழ்ச்சியுற்றது அந்த பிஞ்சு மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராள தேவரின் பெருமை சிறுத் தொண்டரின் பெருமையை விட பன்மடங்கு உயர்ந்தது. பிள்ளைக்கறி வைத்துவிட்டு வைரவப் பெருமானை அழைத்தார். மனைக்கு வந்தார் எம்பெருமான், அமுது படைக்கப்பட்டது. நர இறைச்சியும் வைக்கப்பட்டது. சிறுத்தொண்டரையும் தன்னருகில் அமர்த்திய இறைவன் அவருக்கும் இலையில் உணவு படைத்து நர இறைச்சியும் பாதியை வைக்கும்படி கூற, மனைவியும் அப்படியே செய்ய, இறைவன் மீண்டும் சிறுத்தொண்டர் மைந்தனும் உணவருந்தினால் தான் தானும் உணர்பேன் பிடிவாதமாகக் கூற மனம் வருந்திய சிறுத்தொண்டர் வாசலில் நின்று அழுதார்

எந்தாய் வருக, இடர் தீர்கக் இங்கு வருக! எமது குல
மைந்தா வருக! மாணிக்க மணியே வருக! மாதவத்தால்
வந்தாய் வருக! மறைஞான மதலாய் வருக! மதியனையாய்
சிந்தா குலந்திர சீராள தேவ வருக வருகவே

என ஓலமிட்டு அழுதபோது பள்ளியிலிருந்து வருவது போல சிரானன் ஓடி வந்தான், வைரவராக வந்தவர் மறைந்து விட்டார். உணவும் மறைந்தது. மறைந்த அப் பரமபதி மலைவளர் மங்கையுடனும், மயில்வாகனக் கடவுளுடனும், வெள்விடையின்கண் ஆரோகணித்து வானிடைக் காட்சி தந்தார். தாய் தந்தை தனயன் பக்தி செய்ததால் இறைவன், இறைவி முருகன் மூவரும் எழுந்தருளினர்.

மூவரையும் அழைத்துக் கொண்டு சிவலோகம் சென்றார் எம் பெருமான்.

கொன்றை வேணியார் தாமும் கொண்ட குலக் கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகார் தாதியார்
என்று பிரியாதே யிறைஞ்சு இருக்க உடன் கொண்டேகினார்.

செங்காட்டாங்குடி மேய சிறுத் தொண்டர்க்கு அடியேன்

- வாரியார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதி தோத்திரங்கள்

மூஷிக வாகன மோதகஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணமயைப்பா

## பாஹி பாஹி

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமரகரண கஜானனா விளம் பிதருதரா கஜானனா
வாமனரூபா கஜானனா மஹேஸ்வர புத்ரா கஜானனா
விக்ன விநாயக கஜானனா தவபாத நமஸ்தே கஜானனா (பாஹி)

## பிள்ளையார் அப்பனே

பிள்ளையார் அப்பனே பிள்ளையார் அப்பனே
பிழை எல்லாம் பொறுத்துக்கட பிள்ளையார் அப்பனே (2)
பிள்ளையார்

தெருவெல்லாம் குடியிருக்கும் பிள்ளையார் அப்பனே
தேங்காய உடையுங்கட பிள்ளைக்காக அப்பனே
அரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் அப்பனே - நீ
ஆதிமுதலானவன்டா பிள்ளையார் அப்பனே
(பிள்ளையார்)

ஊரெங்கும் கோவில் கொண்ட பிள்யைார் அப்பனே - உலகம்
உனக்குள்ள அடக்கமட பிள்ளையார் அப்பனே
தாய் தந்தை வலம் வந்த பிள்ளையார் அப்பனே - தம்பி
போட்டியிலே பழம் வென்ற பிள்ளையார் அப்பனே
ஆறு முகன் காதலுக்கு துணை புரிந்த அப்பனே - ஏழை
எங்களை வாழ வைக்கும் பிள்ளையார் அப்பனே
(பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெய கணேச

ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹி மாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ரக்ஷ மாம்
சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹி மாம்
சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய ரக்ஷ மாம்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா பாஹி மாம்
வேலாயுதா வோலயுதா வேலாயுதா ரக்ஷ மாம்
கலாவல்லி கலாவல்லி கலாவல்லி பாஹி மாம்
கலைவாணி கலைவாணி கலைவாணி ரக்ஷ மாம்
ஜெயசரஸ்வதி ஜெயசரஸ்வதி ஜெயசரஸ்வதி பாஹி மாம்
ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ரக்ஷ மாம்
மஹாலெஷ்மி மஹாலெக்ஷ்மி மஹாலெஷ்மி பாஹி மாம்
ஸ்ரீ தேவி ஸ்ரீ தேவி ஸ்ரீ தேவி ரக்ஷ மாம்
ஜெயலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி ரக்ஷ மாம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய பாஹிமாம்
ஸ்ரீசிவாய ஸ்ரீசிவாய ஸ்ரீசிவாய ரக்ஷ மாம்
ஆஞ்சனேய ஆஞ்சனேய ஆஞ்சனேய பாஹிமாம்
அனுமந்த அனுமந்த அனுமந்த ரக்ஷ மாம்
சரணமப்பா சரணமப்பா சரணமப்பா பாஹி மாம்
வரணுமப்பா வரணுமப்பா வரணுமப்பா ரக்ஷ மாம்

## பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பின்னையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பின்னையார்)

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்துவைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

அவல் பொரியும் கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார கண்ணை மூடித் தூங்குவார்
(பிள்ளையார்)

கலியுகத்தின் விந்தைகளை காணவே அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்
(பிள்ளையார்)

## பிள்ளையார் சுழிபோட்டு

பிள்ளையார் சுழி போட்டு - நீ
நல்லதைத் தொடங்கிவிடு
வள்ளலாம் கணபதியின் - நல்
ஆசியும் அருளும் கிடைத்து விடும்
(பிள்ளையார்)

ஊர்தோறும் குளத்தடியில் - நம்
கணபதி அமர்ந்திருப்பார்
ஒவ்வொரு மனிதனது - நல்
உள்ளத்திலும் குடியிருப்பார்
எல்லோரும் நலம்காண எண்ணுகின்ற மனிதருக்கு
எந்நாளும் விநாயகனின் திருவருள் துணையிருக்கும்
தினம் தினம் மனம் குதிக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்
(பிள்ளயையார்)

பெற்றோர்க்கு மேலான - உலகம்
இல்லை என்றாய்
கற்றோர்க்கு மேலான
பெரியோர் இல்லை என்றாய்
நர்த்தன விநாயகனை நாளும் தொழும் போது
அர்த்தம் புரிந்துவிடும் திருவருள் துணையிருக்கும்
தினம் தினம் மனம் துதிக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்
(பிள்ளயையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சிப் பிள்ளையார்

உச்சிப் பிள்ளையார் கோயில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே - நம்
அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே - அருள்
(உச்சிப் பிள்ளையார்)

சச்சிதானந்த சற்குருவாகிய விமலன் - ஒரு
தந்தையான பின்னும் தாயுமான திரு நகரம்
அச்சுதன் மனம் அன்பினால் வரும் மருகன் - எங்கள்
ஆனைமுகம் கொண்ட ஆதி நாதனாம் இறைவன்
(உச்சிப் பிள்ளையார்)

பாடுதலும் அடி பரவுதலும் தொழிலாகும் - உனை
நாடுதலும் அருள் நண்ணுதலும் நினைவாகும்
கூடுதலும் கரம் கூப்புதலும் நமதெண்ணம் - வினை
ஓடுதலும் பகை ஒடுங்குதலும் இனி திண்ணம்
(உச்சிப் பிள்ளையார்)

## கணேச சரணம்

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா

மூஷிக வாகன சரணம் கணேசா
மோதக ஹஸ்தா சரணம் கணேசா
வாமன ரூப சரணம் கணேசா
மஹேஸ்வர புத்ர சரணம் கணேசா

சங்கர சுதனே சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சாமரகர்ணா சரணம் கணேசா
விளம்பித சூத்ரா சரணம் கணேசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி விநாயகர்

வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் விநாயகனே
அன்னை பராசக்தி அருந்தவ புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே

அகமும் புறமும் இருப்பவனே
அடியார் துயர்தனை துடைப்பவனே
ஆற்றோரத்திலும் குளக்கரை தனிலும்
அமர்ந்தருள் ஆட்சி புரிபவனே

ஓங்காரப் பொருளின் தத்துவனே
உள்ளத்தில் குடி கொண்டவனே
உன் புகழ் பாடும் பக்தர்கள்
குறையை உடனடியாக தீர்ப்பவனே

## மலைக்கோட்டை வாழுகின்ற கணநாயகா

(குருஸ்வாமிகளால் பாடப்பட்டது)

கணநாயகா எங்கள் மலைநாயகா
கணங்களின் நாயகனே கணநாயகா
துணை நீயடா சுவாமி துணை நீயடா
துயர் தன்னை தீர்த்திடுவாய் கணநாயகா (கணநாயகா)

மலைநாயகா எங்கள் மலைநாயகா
மலைக்கோட்டை வாழுகின்ற மலைநாயகா
மருந்தாகையா மன மருந்தாகையா
மனத்துயரை தீர்க்க நீயும் மருந்தாகையா (கணநாயகா)

முதல் நீயடா மூலப் பொருள் நீயடா
மூவுலகை காக்கும் இறை நீயடா
பணிந்தேனடா உன்னைப் பணிந்தேனடா
பணிந்தோரக்கு அருள் புரிவாய் கணநாயகா (கணநாயகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரண் புகுந்தேனடா உன்னைப் பணிந்தேனடா
சரணங்கள் கூப்பிடவே அருள்வாயடா
கணநாயகா எங்கள் கணநாயகா
கணங்களின் நாயகனே கணநாயகா (கணநாயகா)

## விநாயகனே வினை தீர்ப்பவனே

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பாள் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

விநாயகனே வினை தீர்ப்பவனே
வேழ முகத்தோனே ஞால முதல்வனே..... (விநாயகனே)

குணாநிதியே குருவே சரணம் ஆ..ஆ ஆ
குணாநிதியே குருவே சரணம்

குறைகள் களைய இதுவே தருணம்! (விநாயகனே)

உமாபதியே உலகம் என்றாய்
ஒரு சுற்றினிலே வலமும் வந்தாய்
கணநாதனே மாங்கனியை உண்டாய் ஆ..ஆ ஆ
கணநாதனே மாங்கனியை உண்டாய்
கதிர் வேலவனின் கருத்தில் நின்றாய் (விநாயகனே)

## ஓம் என்னும்

ஓம் என்னும் பிரணவரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா

தேவர் மூவர் போற்றும் வேத நாயகா
தேவாதி தேவனே விநாயகா (ஓம் என்னும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வினைகள் நீக்கும் பத்திநாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா (ஓம் என்னும்)

மௌனத்தின் முழுப் பொருளே நாயகா
முக் கண்ணன் மைந்தனே விநாயகா (ஓம் என்னும்)

## தும்பிக்கணேசன்

தும்பிக் கணேசனைப் பாடுங்கள்
தோப்பு கரணங்கள் போடுங்கள்
நம்பி அவன் கோயில் கூடுங்கள்
நல்ல மலர்மாலை சூடுங்கள் (தும்பிக்)

பால் பழம் தேங்காய் அவல் அப்பம்
படைத்து வேண்டுங்கள் விண்ணப்பம்
மூலப்பொருளாய் முன்வருவான்
ஊழ்வினை நீங்கி சுகந்தருவான் (தும்பிக்)

அறுகு தாமரை மந்தாரை
அலரி சண்பகப் பூ அல்லி
நறிய பூவினை திருவாத்தி
நந்தி மல்லிகை புனைந்தேத்தி (தும்பிக்)

வக்கிர துண்டா உமைபாலா
வல்லபை நாதா சிவரூபா
விக்கின ராஜா கஜவதனா
விநாயகா எனப் புகழ் பேசி (தும்பிக்)

கல்வியும் செல்வமும் அகவாழ்வும்
கனத்த வீரமும் தந்திடுவான்
வல்வினைத் துன்பம் தீர்த்திடுவான்
மலரடி தன்னில் தேர்த்திடுவான் (தும்பிக்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு கோடி மந்திரங்கள் சங்கமம்

ஏழு கோடி மந்திரங்கள் சங்கமம்
எட்டு கோடி அவதார தத்துவம்
ஓங்கார சங்கீத உற்சவம்
தீராத வினை தீர்க்கும் அற்புதம்

சித்தி புத்தி விநாயகனே சரணம்
சிவசக்தி பாலகனே சரணம்
வேதங்கள் பாராட்டும் கணபதியே
வெள்ளைநிற வடிவான கணபதியே

ஏழைகளின் தோழன் நீயே ஹேரம்பா
ஐந்துமுகம் கொண்டவனே அபயம் தா
முந்தி முந்தி விநாயகனே சரணம்
முக்கண்ணனார் தன்மகனே சரணம்

சங்கரனூர் போற்றுகின்ற மங்களனே
சகல சௌபாக்கியம் தருபவனே
சிங்க வாகனம் அருளும் சுந்தரனே
சிந்தா மணி ஏந்தி வந்தவனே

முந்தி முந்தி விநாயகனே சரணம்
முக்கண்ணனார் பாலகனே சரணம்
ஏழுகோடி மந்திரங்கள் சங்கமம்
எட்டு கோடி அவதார தத்துவம்

ஓங்கார சங்கீத உற்சவம்
தீராத வினை தீர்க்கும் அற்புதம்
சித்தி புத்தி விநாயகனே சரணம்
சிவசக்தி பாலகனே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் தோத்திரம்

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசியாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய ஓம்

மண்ணினைச் சுமந்தவா ஓம் நமசிவாய
நஞ்சிளைக் குடித்தவா ஓம் நமசிவாய
கயிலையில் அமர்ந்தவா ஓம் நமசிவாய
கங்கையைத் தரித்தவா ஓம் நமசிவாய
தாண்டவம் புரிந்தவா ஓம் நமசிவாய - என்
தாயுமாகி வந்தவா ஓம் நமசிவாய
விந்தைகள் புரிந்தவா ஓம் நமசிவாய - என்
சிந்தையுள் நிறைந்தவா ஓம் நமசிவாய

## சிவன் தோத்திரம்

தில்லை அம்பல நடராஜா - உன்
திருவருள் வேண்டும் சிவராஜா
திருநீலகண்ட ஜெகதீசா
தினமும் தொழுவேன் மகாதேவா (தில்லை)

கயிலையில் வாழும் கைலாசா - என்
கருத்தினில் வந்திடு ககவாசா
தோடணி செவியுடை பெருமானே
பீடுடை பிரம்மா புரியோனே (தில்லை)

கங்கை கொண்டாய் நடராஜா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேசா - என்
மனதில் இருப்பாய் மலைவாசா (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாய பரமேஸ்வராய

சிவாய பரமேஸ்வராய சசி சேகராய நம ஓம்
பவாய குணசம்பவாய சிவ தாண்டவாய நம ஓம்
சர்வாய ஸர்வேஸ்வராய விஸ்வேஸ்வராய நம ஓம்
லோகாய லோகேஸ்வராய ரிஷபத்வஜாய நம ஓம்
(சிவாய)

## கங்கை அணிந்தவா

கங்கை அணிந்தவா - கண்டோர் தொழும் விலாசா
சதங்கை ஆடும் பாதவினோதா - லிங்கேஸ்வரா
நின்தாள் துணை நீதா

தில்லையம்பல நடராஜா செழுமை நாதனே பரமேசா
அல்லல் தீரத்தாண்டவா வா வா அமிதானவா (தில்லை)

எங்கும் இன்பம் விளங்கவே அருள் உமாபதி!
எளிமை அகல வரம் தா வா வா வளம் பொங்கவா (தில்லை)

பலவித நாடும் கலை எடும் பணிவுடன் உனையே துதிபாடும்
தலையலங்கார பாண்டிய ராணி தேசா
மலையின் வாசா மங்கா மதியானவா (தில்லை)

## நமசிவாய நமசிவாய

பெண்: நமசிவாய நமசிவாய ஓம் நமசிவாய
நமசிவாய நமசிவாய ஓம் நமசிவாய

ஆண்: ஹர ஹர சிவனே அருணாசலனே
அண்ணாமலையே போற்றி சிவ ஓம் தமசியாய

சிவசிவ ஹரனே சோணாச்சலனே
அண்ணாமலையே போற்றி ஹர ஓம் நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்: அனலே நமசிவாயம் - அழலே நமசிவாயம்
கனலே நமசியாயம் - காற்றே நமசிவாயம்

ஆண்: புலியின் தோலை இடையில் அணிந்த
புனிதக் கழலே போற்றி சிவ ஓம் நமசிவாய
கலியின் தீமை யாவும் நீக்கும்
கருணைக் கடலே போற்றி ஓம் நமசிவாய

பெண்: புனலே நமசிவாயம் பொருளே நமசிவாயம்
புகழே நமசிவாயம் புனிதம் நமசிவாயம்

ஆண்: (நமசிவாய)
பெண்: (நமசிவாய)

## ஓம் நமசிவாய

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
உலகை ஆளும் இனிய நாமம் ஓம் நமசிவாய

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
உணர்வை அளும் இனிய கீதம் ஓம் நமசிவாய

அலை முக நாதனே தினம் உனைப் போற்றிடும்
அருள் நிறை மந்திரம் ஓம் நமசிவாய
அரசிவ யோகமாய் தினம் உனைக் காட்டிடும்
அன்பெனும் மந்திரம் ஓம் நமசிவாய
சிவாய நம சிவாய எனும் நாமம்
அது விடாத வினை தொடாதபடி காட்டும்

ஐந்தெழுத்தில் அவதரிக்கும் ஓம் நமசிவாய
அதிசயத்தை மனம் நிறுத்தும் ஓம் நமசிவாய
அருணகிரி ஈசனே சிவமலை வாசனே
அமுதென ஆகுமே உன் திருநாமமே
அண்டமாளும் உந்தன் நாமம் சொல்லவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டசித்தி யோகம் வந்து சேருமே
ஓம் நமஹ சிவனே நமஹ

எந்த துன்பம் வந்தபோதும் ஓம் நமசிவாய
என்று சொல்ல துயரம் போக்கும் ஓம் நமசிவாய
மந்திர கீதமாய் வந்தொலி செய்யுமே
மாமலை உன்னையும் வணங்கிட வெல்லுமே
பஞ்சபூதம் எந்த நாளும் பேசுமே
உந்தன் நாமம் புனித மள்ளி வீசுமே
ஓம் நமஹ சிவனே நமஹ (ஓம் நமசிவாய)

## சம்போ சங்கர கௌரிபதே

சம்போ சங்கர கௌரிபதே - சிவ
சாம்ப சங்கர உமாபதே (2) (சம்போ)
சிவசிவ சிவசிவ சபாபதே - சிவ
சிவகாமி சுந்தர உமாபதே (2) (சம்போ)

சம்போ சங்கர கௌரீசா - சிவ
சாம்ப சங்கர கௌரீசா (2)
கைலாசபதியே கௌரீசா - சிவ
கேசவ சேவித கௌரீசா (2) (சம்போ)

ஸாமகானப்பிரியா கௌரீசா - சிவ
ஸோம கலாதர கௌரீசா (2) (சம்போ)

## ஓம் சிவாய நமசிவாய

ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா
நமசிவாய ஓம் சிவாய நம சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரனே ஓம் சிவாய சங்கரா
சகலலோக நாயகனே ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் பாம்பை அணிந்தவனே ஓம் சிவாய சங்கரா
ஆட்டுவிப்பாய் எங்களை ஓம் சிவாய சங்கரா
கங்கையை தரித்தவனே ஓம் சிவாய சங்கரா
காத்தருள வேண்டுமையா ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)

பார்வதி தேவனே ஓம் சிவாய சங்கரா
பாததரிசனம் தந்திடுவாய் ஓம்சிவாய சங்கரா
கைலாச வாசனே ஓம் சிவாய சங்கரா
கஷ்டங்களை போக்கிடுவாய் ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)

பூலோக நாதனே ஓம் சியாய சங்கரா
பூமிப் பிரபஞ்சனே ஓம் சிவாய சங்கரா
நீலகண்டனே ஓம் சிவாய சங்கரா
நிர்மல ரூபனே ஓம் சிவாயாங்கரா (ஓம் சிவாய)

நந்திவாகனனே ஓம் சிவாய சங்கரா
நாக பூஷணனே ஓம் சிவாய சங்கரா
தீன தயாளனே ஓம் சிவாய சங்கரா
கௌரி மணாளனே ஓம் சிவாய சங்கரா
சங்கரா சங்கரா ஓம் சிவாய சங்கரா
சங்கரா சங்கரா ஓம் சிவாய சங்கரா (ஓம் சிவாய)

## ஓம் நமசிவாய சிவாய நம ஓம்

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
அரஹரா சங்கரா நமசிவாய
அனலான தலம் இந்த அருணாசலா
அரஹர சங்கர நமசிவாய (ஓம் நமசிவாய)

ஆகாய தலம் கொண்ட நடனேஸ்வரா
அரஹர சங்கர நமசிவாய (ஓம் நமசிவாய)

நிலமான தலம் கொண்ட ஏகாம்ரேசா
அரஹர சங்கர நமசிவாய (ஓம் நமசிவாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மான ஸ்ரீகாள ஹஸ்தீஸ்வரா
அரஹர சங்கர நமசிவாய (ஓம் நமசிவாய)

நீரான தலம் கொண்ட ஜம்புகேஸ்வரா
அரஹர சங்கர நமச்சிவாய (ஓம் நமசிவாய)

ஓர் அங்க பூதங்கள் நமசிவாய
அரஹர சங்கரா நமசிவாய (ஓம் நமசிவாய)

## பிட்டுக்கு மண் சுமந்து

பிட்டுக்கு மண் சுமந்து கங்கை தலை சுமந்து
உமையைத் தன் இடம் சுமந்தவன் - ஈசன்
உமையைத் தன் இடம் சுமந்தவன்!
தில்லையாடும் நடராஜன்
உமையைத் தன் இடம் சுமந்தவன்! (2)

பூதகணத் தலைவன்! நாட்டியத்தின் முதல்வன்
கயிலயங்கிரி இறைவன்!
கயிலை வாழும் சிவன் (பிட்டுக்கு)

சிவன் ஆட, உமை சேர
சிவன் ஆட, உமை சேர,
ஆனந்த தாண்டவம் அரங்கேற
உலகாளும் சிவன் ஆட
அண்ட சராசரம் அசைந்தாட (சிவன் ஆட)

நரம்பினை விணையின் கம்பியாய் ஆக்கி
இசையினை மீட்டிய இராவணனே! - அவன்
பக்தியை மெச்சி வரம்பல தந்து அருளிய நந்தி வாகனனே
மலைமகனே! தலைமகனே!
என் உடலில் ஒவ்வொரு அணுவிலும் கலந்தவனே! (பிட்டுக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சி... கல்யாண
மீனாட்சிகல்யாண வைபவம் மதுரையில் நடந்தேற
திருமால் தன் திருத்தங்கை கைகளை பரமனின் கரம் சேர்க்க!
(மீனாட்சி)

வஸ்திரமாய்ப் புலித்தோலினை சார்த்தி
கழுத்தினில் பாம்பினைச் சுற்றியவன் - இன்று
தேவர்கள் வியந்திடும் திருமுகம் காட்டி
அழகின் இருப்பிடம் ஆகியவன்
ஈசனவன் கந்தரேசனவன்!
ஸ்ரீ காளஹஸ்தியில் வாழ்கின்ற இறைவனவன்!
(பிட்டுக்கு)

(மீண்டும் முதல் 8 வரிகள்)

## எல்லாம் சிவமயம்

சித்தமெல்லாம் எனக்கு சிவமயமே - உன்னை
சேவித்த கரங்களுக்கு இல்லை பயமே
அத்தனில்லாமல் ஒரு ஐயனில்லை - அந்த
அன்னையில்லாமல் இந்த பிள்ளை இல்லை
(சித்தமெல்லாம்)

பக்தி பெருக்கில் எந்தன் ஊன் உருக - அந்த
பரவசத்தில் உள்ளே உயிர் உருக
சித்தமெல்லாம் கலந்து சிவம் பெருகும் - எந்தன்
சந்ததியே உந்தனுக்கு அடிபணிய - இறைவா
(சித்தமெல்லாம்)

கண்ணைத் திறந்துவைத்த கருப்பொருளே - கோயில்
கதவைத் திறந்துவைத்த அருள்சுடரே
வெண்ணெய்நல்லூர் உறையும் அருட்கடலே
என்னை என்றும் ஆளுகின்ற பரம்பொருளே - இறைவா
(சித்தமெல்லாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தா ஹரி கோவிந்தா

கோவிந்தா ஹரி கோவிந்தா - கோகுல ரமணா கோவிந்தா

திருப்பதி வாசா - கோவிந்தா
திரு அவதார - கோவிந்தா
திருமால் ஜோதி - கோவிந்தா
தேவ தேவனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

வைகுவாட வாசா - கோவிந்தா
மாமகள் நேசா - கோவிந்தா
சக்தி கிரிசா - கோவிந்தா
சாஸ்வத நாதா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

லட்சுமி பதியே - கோவிந்தா
நவமணிக் குவையே - கோவிந்தா
நித்திய சுடரே - கோவிந்தா
நீலாஞ்சனா ஹரி - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

கருட வாகனா - கோவிந்தா
கமல நாதனே - கோவிந்தா
பிரணவ நாதா - கோவிந்தா
பேரின்ப நதியே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

சக்ர தாரியே - கோவிந்தா
சங்கர ராஜா - கோவிந்தா
நிர்த்தன ரூபா - கோவிந்தா
வேதாகமனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

பூரண நிலவே - கோவிந்தா
பொன்னலங்காரா - கோவிந்தா
ஆரணப் பொருளே - கோவிந்தா
அமலப் பிரகாசா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் பிரகாசா - கோவிந்தா
அமர மகேசா - கோவிந்தா
திருசர்த்தி ஹரி - கோவிந்தா
திவ்விய நாதனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

ஓங்கார நாதா - கோவிந்தா
ஓங்கிடும் மலையாய் - கோவிந்தா
வெங்கட வாசா - கோவிந்தா
லோக நாதனே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

புண்ணிய தீர்த்தா - கோவிந்தா
புஸ்கரனீசா - கோவிந்தா
கண்மணி அழகா - கோவிந்தா
கடல் நிற வண்ணா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

முரளிதரனே - கோவிந்தா
மோகன வண்ணா - கோவிந்தா
கருணைப் பிரகாசா - கோவிந்தா
கலியுக நாதா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)
அருமணி முகிலே - கோவிந்தா
அதிரூப சுந்தரா - கோவிந்தா
திருமணிக் குன்றே - கோவிந்தா
தேவுத்தமரே - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

துளவ மாலையாய் - கோவிந்தா
உஸ்னா விஸ்னுரா - கோவிந்தா
மணிப்புரம் காத்தாய் - கோவிந்தா
மச்சாவதாரா - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

பாமா ருக்மணி - கோவிந்தா
பாரி நாதனே - கோவிந்தா
ஆலாளி வண்ணா - கோவிந்தா
ஸ்படிக மணியாய் - கோவிந்தா (கோவிந்தா ஹரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூர நாயகா - கோவிந்தா
தயாபரா ஹரி - கோவிந்தா
பதமபாதனே - கோவிந்தா
பரந்தாமா ஹரி - கோவிந்தா (கோவிந்தா ஹரி)

## சலங்கை கட்டி ஓடிவா

சலங்கை கட்டி ஓடி ஓடி வா வா - எந்தன்
கமலக் கண்ணா ஆடி ஆடி வா வா - நின்றன்
பிஞ்சுப் பாதம் தேடி தேடி வாவா உந்தன்
திவ்ய நாமம் பாடிப்பாடி வந்தேன் (சலங்கை)

தேவகி நந்தன ராதா ஜீவன
கேசவா ஹரி மாதவா கேசவா ஹரி மாதவா
பூதன மர்த்தன பாப விமோசன
கேசவா ஹரே மாதவா கேசவா ஹரி மாதவா
கோகுல பாலனே ஓடி வா வா
கோபால பாலனே ஆடி வா வா (சலங்கை)

கம்ச விமர்த்தன காலிய நர்த்தன
கேசவா ஹரே மாதவா கேசவா ஹர மாதவா
ஆச்ரித வத்சல ஆபத் பாந்தவ
கேசவா ஹர மாதவா கேசவா ஹர மாதவா
ஓங்கார நாதனே ஓடி வா வா
ஆனந்த கீதமே பாடி வா வா (சலங்கை)

அர்ஜுன ரக்ஷக அக்ஞான நாசக
கேசவா ஹரே மாதவா கேசவா ஹர மாதவா
பாண்டவ ரக்ஷக பாவ விநாசன
கேசவா ஹர மாதவா கேசவா ஹரே மாதவா
கிதாம்ருதமே ஓடி வா வா
ஹ்ருதயானந்தமே ஆடி வா வா (சலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோகுலத்துப் பசுக்களல்லாம்

கோகுலத்துப் பசுக்களெல்லாம் கோபாலன் குழலைக் கேட்டு
நாலுபடி பால் கறக்குது ராமாரி - அந்த
மோகனனின் பெயரைச் சொல்லி மூடி வைத்த பாத்திரத்தில்
மூன்றுபடி நெய்யிருக்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரி கிருஷ்ணாரி
ஹரி ஹரி ராமாரி ஹரி கிருஷ்ணாரி (கோகுலத்து)

கண்ணனவன் நடனமிட்டு காளிந்தியை வென்றபின்தான்
கன்னிப் பாம்பில் நஞ்சு இல்லை ராமாரரி - அவன்
கனியிதழில் பால் குடித்து பூதகியை கொன்றபின்தான்
கன்னியர்க்கோர் வஞ்சமில்லை கிருஷ்ணாரி

ராமாரி ஹரி கிருஷ்ணா
ஹரி ஹரி ராமாரி ஹரி கிருஷ்ணா (கோகுலத்து)

குளத்தில் முழ்கி குளிக்கையிலே
கோவிந்தன் பெயரைச் சொன்னால்
கழுத்தில் உள்ள தாலி மின்னுது ராமாரி - சேலை
திருத்தும் போது அவன் பெயரை
ஸ்ரீ ரங்கா என்று சொன்னால்
அழுத்தமான சுகமிருக்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரி கிருஷ்ணாரி
ஹரிஹரிராமாரி ஹரிகிருஷ்ணாரி

படிப்படியாய் மலையில் ஏறி
பக்தி செய்தால் துன்பமெல்லாம்
பொடிப் பொடியாய் நொறுங்குதடி ராமாரி - அடி
படிப்பில்லாத ஆட்கள் கூட
பாதத்திலே போய் விழுந்தால்
வேதத்துக்கே பொருள் விளங்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரி கிருஷ்ணா (கோகுலத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயர் பாடி

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான் தாலேலோ - அவன்
வாய் நிறைய மண்ணை உண்டு
மண்டலத்தைக் காட்டிய பின்
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னம்வைத்து
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ - அந்த
மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ (ஆயர் பாடி)

நாக படம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக்கொண்டான் தாலேலோ - அவன்
மோன நிலைகூட ஒருயோக நிலை போலிக்கும் யார்
அவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யார் அவனைத் தூங்க விட்டார் ஆராரோ (ஆயர் பாடி)

கண்ணன் அவன் தூங்கி விட்டால் காசினியே தூங்கி விடும்
அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ - அவன்
பொன்னழகை பார்ப்பதற்கும்
போதை முத்தம் கேட்பதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ (ஆயர் பாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீதை சொன்ன கண்ணன்

கீதை சொன்ன கண்ணன் வண்ணதேரில் வருகிறான்
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்
வள்ளல் வருகிறான் அன்பு வள்ளல் வருகிறான்
வருகிறான், வருகிறான், வருகிறான்

நீலமேனி கோலம்காண கண்கள் மறுக்குமோ - அவன்
நிமிர்ந்ததோளும் விரிந்தமார்பும் நெஞ்சம் மறக்குமோ
வீரன்வடிவும் மீசை அழகும் திருஷ்டி ரகசியம் - அவன்
பாரதப்போர் நடத்திவைத்த யுக்தி அதிசயம்
அது முக்தி ரகசியம் (கீதை)

அல்லிக்கேணி குளத்தின் அருகில் வள்ளல் இருக்கின்றான்
அன்பு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கின்றான் - திரு
அல்லிக்கேணி குளத்தின் அருகில் வள்ளல் இருக்கின்றான்
அன்பு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கின்றான்

சொல்லும் அந்த எட்டெழுத்தில் சொர்க்கம் தோன்றுதே
சொல்ல சொல்ல ஐயன் தோற்றம் வானில் நீண்டதே
விஸ்வ ரூபம் தோன்றுதே

பார்த்தனுக்கு பாடம் சொன்ன கீர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க அமுதும் கொணர்கிறான்
காப்பதற்கு கையில் ஏந்தும் சங்கு சக்கரம் - அவன்
கரங்களுக்கு விளைவுதானே பிரம்மசூத்திரம்
நான்கு வேத சாஸ்திரம் (கீதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோகுலத்தில்

கோகுலத்தில் வளர்ந்தாய் கண்ணா கண்ணா
ஆகுலம் தவிர்க்க வந்தாய் கண்ணா கண்ணா
யோகு செய்யும் சிந்தையர் கண்ணா கண்ணா
நோகுமுன் களைவாய் துயர் கண்ணா கண்ணா

அஞ்ச லென்றேயுரைப்பாய் கண்ணா கண்ணா
சஞ்சலமே தீர்த்து வைப்பாய் கண்ணா கண்ணா
பஞ்சைப் போல் உள்நினைப்பாய் கண்ணா கண்ணா
தஞ்ச மென்றே என்னை வைப்பாய் கண்ணா கண்ணா

தேவர்களும் இன்புறவே கண்ணா கண்ணா
தவசியர் குறையறவே கண்ணா கண்ணா
தேவகியின் அன்புருவே கண்ணா கண்ணா
அவனியின் சத்குருவே கண்ணா கண்ணா

இன்பமனம் கோகுலமே கண்ணா கண்ணா
அன்பருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா
தூயமனம் கோகுலமே கண்ணா கண்ணா
சேயருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா

## கோவிந்த கிருஷ்ண ஜெய்

கோவிந்த கிகுஷ்ணஜெய்
கோபால கிருஷ்ண ஜெய்
கோபால பால பால ராதா
கிருஷ்ண ஜெய் (கோவி)

கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண ஜெய் ராதா கிருஷ்ண ஜெய்
ராமாகிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய் (கோவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபிக மால ஹார பியாரி
மாயி மீரா மன விஹாரி
மதன மோகன முரளி தாரி
திருஷ்ண ஜெய் (கோவி)

## ராதே ராதே

ராதே ராதே ராதே ராதே ராதே கோவிந்தா
ராதே கோவிந்தா
பருந்தாவனச்சந்தா
அநாத நாத தீனபந்தோ ராதே கோவிந்தா
ராதே கோவிந்தா

பண்டரிநாதா பாண்டுரங்கா ராதே கோவிந்தா
ப்ருந்தாவனச்சந்தா
அநாத நாத தீனபந்தோ ராதே கோவிந்தா

நந்தகுமார நவதித சோரா ராதே கோவிந்தா
பருந்தாவனச்சந்தா
அநாத நாத தீனபந்தோ ராதே கோவிந்தா

புண்டரிகாஷரா புராண புருஷா ராதே கோவிந்தா
ப்ருந்தாவன ச்சந்தா
அநாத நாத தீனபந்தோ ராதே கோவிந்தா

விட்டல விட்டல ஜய விட்டல ராதா கோவிந்தா
பருந்தாவனச்சந்தா
அநாத நாத தினபந்தோ ராதே கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிந்தா கோவிந்தா

கோவிந்தா கோவிந்தா கோகுல ரமணா கோவிந்தா
ஜெய்ஹிந்தா ஜெய்ஹிந்தா ஜெயஜெயராம ஜெய்ஹிந்தா

குழலிசையாலே கோவிந்தா மாடுகள் தன்னை கோவிந்தா
மேயத்தவன் நீயே கோவிந்தா மாதவ ராஜா கோவிந்தா
வெண்ணெய் திருடிய கோவிந்தா மண்ணை உண்ட கோவிந்தா
கோபியருடன் கோவிந்தா கொஞ்சிடும் ரமணா கோவிந்தா
(கோவிந்தா)

நச்சுப் பாம்பில் கோவிந்தா நடனம் புரியும் கோவிந்தா
நல்லவர் யார்க்கும் கோவிந்தா நலமே அருள்வாய் கோவிந்தா
பாண்டவர் துயரம் கோவிந்தா தீர்த்தவன் நீயே கோவிந்தா
திரௌபதை மானம் கோவிந்தா காத்தவன் நியே கோவிந்தா
(கோவிந்தா)

பாரதப் போரில் கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
கீதை கொடுத்த கோவிந்தா சிந்தை நிறைந்த கேவிந்தா
ராதா கிருஷ்ணா கோவிந்தா தர்மத்தை வளர்த்தாய் கோவிந்தா
மாயக் கண்ணா கோவிந்தா மலரடி தொழுதோம் கோவிந்தா
(கோவிந்தா)

பாமா ருக்மணி கோவிந்தா பரந்தாமனே கோவிந்தா
சங்கு சக்கரம் கோவிந்தா சங்கடம் தீர்க்கும் கோவிந்தா
தேவகி மைந்தா கோவிந்தா திருவடி சரணம் கோவிந்தா
மீரா பாடிடும் கோவிந்தா கிருஷ்ணா முகுந்தா கோவிந்தா
(கோவிந்தா)

நீலநிறமே கோவிந்தா நின் திருமேனி கோவிந்தா
நாராயணனே கோவிந்தா பாராயணமே கோவிந்தா
(கோவிந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் பள்ளி கொண்டவன்

ஓம் நாராயனனாய நமஹ!
ஓம் நாராயணாய நமஹ!
ஓம் நாராயணராய நமஹ!

என் நெஞ்சில் பள்ளி கொண்டவன் ஸ்ரீரெங்கநாயகன்!
என் நெஞ்சில் பள்ளி கொண்டவன் ஸ்ரீரெங்கநாயகன்!
சயனத்தில் ஆதிசேஷன் மேலே திருவடி
திருமகள் மடிமேலே பூலோக நாயகன்! ஸ்ரீரெங்கன்
(என் நெஞ்சில்)
சயனிக்கும் பெருமாளின் தொப்புள்கொடி
கமலத் தொப்புள் கொடி மேல் பிரம்மன் அமர்ந்தபடி (2முறை)

உலகத்தின் உயிர்களைப் படைத்தபடி!
அப்படைப்பினை திருமால் காத்தபடி
அண்டம்! பகிரண்டம்! அதைக் காக்கும் அவன் கோதண்டம்!
விண்ணையும் மண்ணுலகையும் அளக்கும் அவ்வாமனன் பாதம்!
அரிஹரி! ஹரி! என தினம் ஸ்மரி!
அரிஹரி! ஹரி! என தினம் ஸ்மரி! - நான்
வணங்கிடும் இறைவன் ஓர் சங்குசக்கரதாரி!
(என் நெஞ்சில்)
(மீண்டும் முதல் 5 வரிகள்)
திருப்பதியில் எழுந்தருளும் திருமாலும் நீயே! உன்
திருமார்பினில் அமர்ந்திருப்பது பத்மாவதி தாயே!

உடுப்பியிலே தவழ்கின்ற ஸ்ரீகிருஷ்ணன் நீயே! உன்
அருள்வேண்டி நிற்கின்றேன்! நான் உந்தன் சேயே!
நெறியையும் அறவழியையும் எமக்கு உணர்த்த பல அவதாரம்
எடுத்தாய்! எடுத்துரைத்தாய்! அதுவே வாழ்வின் ஆதாரம்!
அருள்தரும் தேவா! வரம்தர வா! வா
அருள்தரும் தேவா! வரம் தர வா!வா!
பூவுலகையும் ஆள்கின்ற த்ரிவிக்ரம ரூபா! (என் நெஞ்சில்)
(மீண்டும் முதல் 5 வரிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹே கிரிதர கோபாலா

ஹே கிரிதர கோபாலா ஹே கிரிதர கோபாலா
ஹே கிரிதர கோபாலா
மாதவ முரஹர மதுர மனோகர கிரிதர

நந்த குமார கந்தர காரா
பிருந்தாவன சஞ்சாரா முரளி லோலா
முனி ஜன பாலா கிரிதர கோபாலா (ஹேகிரி)

கோபரி பாலா கோபி லோலா
ராதா ஹ்ருதய விஹாரா
பக்தோத்தாரா பல கோபாலா (ஹேகிரி)

கௌஸ்துப ஹாரா மௌந்தகா தாரா
வேணு கான லோலா நவநீத சோரா (ஹேகிரி)

## கண்ணன் எங்கள் கண்ணனாம்

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலினாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்டமாகக் கோபியர்
கூட ஆடும் கர்ணனாம்

மலைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணானாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்

## ஹரி நாராயணா

ஹரி நாராயணா ஹரி நாராயணா
நாராயணா ஹரி நாராயணா ஹரி

ஹரி ஹரி கோகுல ரமணா உந்தன்
திருவடி சரணம் கண்ணா - ஓம் (ஹரி)

ஹரி ஹரி கோவிந்தா கிருஷ்ணா - உந்தன்
மலரடி சரணம் கண்ணா - ஓம் (ஹரி)

குழல் இசையாலே கோபியரைக் கவர்ந்தாய்
திருவடி சரணம் கண்ணா - ஓம் (ஹரி)

பாண்டவர் துயரம் தீர்த்தவனே - உந்தன்
பாதார விந்தம் சரணம் - ஓம் (ஹரி)

திரௌபதி மானம் காத்தவனே - எங்கள்
கோகுல ரமணா சரணம் - ஓம் (ஹரி)

ராதா கிருஷ்ணா ரகுபதி ராகவ
நாராயணே சரணம் - ஓம் (ஹரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னச் சின்ன பாதம் வைத்து

சின்னச் சின்ன பாதம் வைத்து
கண்ணா நீ வா வா - மணி
வண்ணா நீ வாவா
வண்ண வண்ண உடை உடுத்து
கண்ணா நீ வா வா - மணி
வண்ணா நீ வா வா

மல்லிகை முல்லை மலரால்
அர்ச்சனை செய்தோம் வாவா
மாதவனே மாதவனே
கேசவனே கேசவனே
யாதவனே நீ வா வா
கண்ணா நீ வா வா - மணி
வண்ணா நீ வா வா

திரௌபதை மானம் காத்தவனே
அடியார்க் கருளிட வா வா
மாதவனே மாதவனே
கேசவனே கேசவனே.
யாதவனே நீ வா வா
கண்ணா நீ வாவா - மணி
வண்ணா நீ வா வா

கண்ணில் தெரியும் காட்சி எல்லாம்
கண்ணா உன் திருவுருவம்
மாதவனே மாதவனே
கேசவனே கேசவனே
யாதவனே நீ வா வா
கண்ணா நீ வா வா - மணி
வண்ணா நீ வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயணா

ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயணா
ஓம் அனந்தா நாராயணா

ராம கிருஷ்ணா கோவிந்த நாராயணா
நாராயணா ஹரி நாராயணா

ஸ்ரீ லட்சுமி ரமணா நாராயண
ஹரி ஓம் அனந்தா நாராயணா
வைகுண்ட புரவாசா நாராயணா

தேவகி நந்தன வேணுவிலோச
கருணாஸாகர தீன தயாளா

## கோவிந்த ஜய கோபால

கோவிந்த ஜய கோபால ஜய ஜய
ராதா ரமண ஹரி கோவிந்த ஜய ஜய (கோவி)

ராதா கிருஷ்ண ஜய குஞ்ஜ விஹாரி
கருணா சாகர கிருஷ்ண முராரி (கோவி)

சங்கு சக்ர பீதாம் பரதாரி
முரளிதர கோவர்த்தன தாரி (கோவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ண மந்திரம்

அமர ஜீவிதம் சுவாமி அமுத வாசகம்
பதித பாவனம் சுவாமி பக்த சாதனம்

முரளி மோகனம் சுவாமி அசுர மர்த்தனம்
கீத மோகனம் சுவாமி கிருஷ்ண மந்திரம்

நளின தைவதம் சுவாமி மதன ரூபகம்
நாக நர்த்தனம் சுவாமி மானவஸ்தகம்

பஞ்ச சேவகம் சுவாமி பாண்ட்ய சாயகம்
கீத போதகம் சுவாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்

சத்ய பங்கஜம் சுவாமி அந்த்ய புஷ்பகம்
சர்வ ரக்ஷகம் சுவாமி தர்ம தத்துவம்

நாக பந்தனம் சுவாமி நாக வல்லகம்
கீத போதகம் சுவாமி கிருஷ்ண மந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதர் முடி மேலிருக்கும்

நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே உனக்கு
நல்ல பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே
ஆதி சிவன் தலை அமர்ந்த ஆணவமா அவன் அங்கமெல்லாம்
விளையாடும் தைரியமா (நாதர் முடி)

ஊர் கொடுத்த பால் குடித்து உயிர் வளர்ந்தாய் பால்
உண்ட கவை மாறும் முன்னே நன்றி மறந்தாய்
வஞ்ச மற்ற தொண்டனுக்கே நஞ்சு கொடுத்தாய்
பெயருக்குத் தகுந்தாற் போல் மாறி விடு எங்கள்
பிள்ளையை மறுபடியும் வாழவிடு
நெஞ்சம் மாறி விடு பிள்ளையை வாழ விடு
நெஞ்சம் மாறி விடு பிள்ளையை வாழவிடு

சங்கமமர்ந்தொரு முத்தமிழ் பாடிய சங்கரன் மீதினில் ஆணை
சங்கப் புலவர்கள் நாவிலடங்கிய செந்தமிழ் மீதினில் ஆணை
மங்கலக் குங்குமம் மஞ்சம் நிறைந்த சங்கரி மீதினில் ஆணை
மாதொரு பாகன் சூடிய நாக பாம்பே உன் மேல் ஆணை தேவன்
மீதில் ஆணை அவன் திருவடி மீதும் ஆணை
திருமறை மீதில் ஆணை என் திரு நாவின் மீதும் ஆணை
மண் மேல் ஆணை சொல்மெல் ஆணை
என் மேல் ஆணை உன் மேல் ஆணை நாதர் முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகராஜா தோத்திரங்கள் ஆடுராஜா

ஆடுராஜா பிரபு நாகராஜா எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா

சரண கோஷம் போட்டுவரும் பக்தரபாரு
சன்னதிய நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயப்பனை பாடும் கன்னி சாமியப்பரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுத்திடும் பாரு

அழைக்கட்டுமா சுவாமி அழைக்கட்டுமா
இந்த ஐயப்பன் பஜனைக்கு அழைக்கட்டுமா
இந்த பக்தர்கள் குறை தீர்க்க அழைக்கட்டுமா
நம்ம சுவாமிமார்கள் முகம் பார்க்க அழைக்கட்டுமா

ஓடிவா ஐயப்பா ஓடிவா சாமி
நீ ஓடிவா ராஜா நீ ஓடிவா கண்ணா
உன் சன்னிதானம் தான் கடந்து ஓடிவா சாமி
உன் 18 ஆம் படி தாண்டி ஓடிவா சாமி
அழுதா நதிகடந்து ஓடிவா சாமி
பம்பா நதிகடந்து ஓடிவா சாமி
இந்த 18 படி தாண்டி ஓடிவா சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் தோத்திரங்கள்

## அம்மா முத்துமாரி

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி (அம்மா)
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் முத்துமாரி
இதயச் சுமையை குறைத்திடுவாள் எங்கள் முத்துமாரி (அம்மா)
மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத தீபமவள் எங்கள் முத்துமாரி (அம்மா)
வேப்பிலைக்காரியவள் எங்கள் முத்துமாரி
வேடிக்கை காட்டிடுவாள் எங்கள் முத்துமாரி (அம்மா)
உலகனைத்தும் காப்பவளே எங்கள் முத்துமாரி
உன் பாதம் சரணடைந்தோம் எங்கள் முத்துமாரி (அம்மா)

## அன்னை உருவம்மா

அம்மா உருவமம்மா ஆதிபராசக்தியம்மா
அய்யப்பனை கண்டுவர அருள்வரம் தாருமம்மா
காசியிலே வீற்றிருக்கும் விசாலாட்சி தாயேயம்மா
காந்தமலை நாதனையே காணவரம் தாருமம்மா
காஞ்சியிலே வீற்றிருக்கும் காமாட்சி தாயேயம்மா
கண்கண்ட தெய்வத்தையே காணவரம் தாருமம்மா
மதுரையிலே வீற்றிருக்கும் மீனாட்சி தாயேயம்மா
மணிகண்ட தேவனையே காணவரம் தாருமம்மா
சோற்றாணிக் கரை வாழும் பகவதியே தாயேயம்மா
சண்முகசோதரனை காணவரம் தாருமம்மா இருக்கன்குடி
மாரியம்மா இன்னல்களை தீருமம்மா
இருமுடிகள் தாங்கி வர அருள் வரம் தாருமம்மா
சமயபுரம் மாரியம்மா சடுதியில் வாருமம்மா
சங்கரன் மைந்தனையே காணவரம் தாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளையில் வீற்றிருக்கும் ஆயிரத்தாள் தாயேயம்மா
பம்பையின் பாலனையே காணவரம் தாருமம்மா
வண்ணைநகர் வீற்றிருக்கும் பேராட்சி தாயே அம்மா
வன்புலி வாகனனை காணவரம் தாருமம்மா
நெல்லையிலே வீற்றிருக்கும் காந்திமதி தாயேயம்மா
நெய்யபிஷேகம் செய்ய அருள் வரம் தாருமம்மா

## அஞ்சாத செஞ்சடைச்சி

அஞ்சாத செஞ்சடைச்சி மாகாளி அம்மா
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)

கொஞ்சம் சதங்கை ஒலி கேட்குதம்மா - உன்
கெண்டை கூத்துக்கண்டு மனம் குளிருதம்மா (அஞ்சாத)

செஞ்சடையை அலங்கரிக்கும் நாகமம்மா - உன் தேகமெல்லாம்
விளையாடும் நாகமம்மா (அஞ்சாத)

பாலாபிஷேகம் செய்து மாகாளி - உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

தேனாபிஷேகம் செய்து மாகாளி - உன்
சேவடியை சேவித்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

செவ்வரளி மாலை போட்டு மாகாளி - உனக்கு செய்திடுவோம்
பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)

மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி - உந்தன்
மலரடியைத் தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயபுரத்தாளே மாரியம்மா

சமயபுரத்தாளே மாரியம்மா அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா (சமயபுரத்தாளே)

மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம் - அரிசி
மாவிளக்கு ஏற்றி வைத்து பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா - அம்மா
தூயவளே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டுத் திசைகளையும் ஆள்பவளே - அம்மா
ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

கத்திக் கதறுகிறோம் கேட்கலையோ - தாயே
கல்லேதான் உன் மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே - எங்கள்
உமையவளே தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

## ஓசை மணி

ஓசைமணிக்காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
சலங்கையொலி சலசலக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
பட்டாடை பளபளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் முகம் மினுமினுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
தங்கமுகம் தளதளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
செங்கைநீரும் கிலுகிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மகிழ்ச்சியுடன் சிலுசிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
வேதங்கள் முழங்கிடவே ஓடிவாம்மா
வேதனைகள் தீர்த்திடவே அடிவாம்மா
செம்பவளப் பேரழகி ஓடிவாம்மா
செல்வமழை பொழிந்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத் தந்திடவே ஆடிவாம்மா
ஓசைமணிக்காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா.

## ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம் (ஜெய ஜெய தேவி)

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
தர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்கா தேவி சரணம்

தர்க்கை அம்மனைத் துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அன்னை
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வமங்களம் கூடும் (ஜெய ஜெய தேவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை
சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும்
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதிசக்தியவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய் போல் நம்மைக் காப்பவளே (ஜெய ஜெய தேவி)

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் - அவள்
தங்க கைகளில் தாங்கிநிற்பாள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடி நிற்பாள்
கருணைக் கண் கொண்டு பார்த்திருப்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற்கரசியும் அவளே
திருமகள் கலைமகள் அவளே திருவருள் புரியும்
மலை மகளும் அவளே (ஜெய ஜெய)

முண்டக்கண்ணியும் அவளே அபிராமி அம்மையும் அவளே
ஜெய ஜெய தேவி துர்க்கா சரணம் (ஜெயஜெய........

கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே

ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே
ஏதுத்தி உன்னையன்றி காவல் சக்தியே

குங்குமத்தில் குடியிருக்கும் குங்குமசக்தி
மஞ்சளிலே நிறைந்திருக்கும் மங்கள சக்தி
வேப்பிலையில் மறைந்திருக்கும் மூலிகைச் சக்தி வேண்டுதலை
தீர்க்கவரும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)
புற்றினிலே படமெடுக்கும் பாம்பெனும் சக்தி
பூவுலகை ஆட்சி செய்யும் அம்மனின் சக்தி
சூலத்தினை ஏந்திவரும் வீரத்தின் சக்தி
வேலனுக்கு வேல் கொடுத்த தாயெனும் சக்தி (ஆதிசக்தி)

ஆதி அந்தம் இல்லாத ஆதியின் சக்தி
ஆதி சிவன் பாதி என வாழ்ந்திடும் சக்தி
சிங்கத்திலே ஏறிவரும் சிம்மத்தின் சக்தி
சிந்தையிலே நிறைந்திருக்கும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)

தாலி வரம் தருபவளே தாலியின் சக்தி
காளி என மாறிவரும் உத்தம சக்தி
நாகமென ஆடிவரும் நந்தினி சக்தி
மேகமென மழை பொழியும் தாயெனும் சக்தி (ஆதிசக்தி)

## ஜனனி ஜனனி

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத்தாரணி நீ பரிபூரணி நீ (ஜனனி ஜனனி)

ஒரு மான் மழுவும் சிறு பூம் பிறையும்
சடைவால் குழலும் இடை வாகனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற நாயகியின் இடை பாகத்திலே
ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ (ஜனனி ஜனனி)

சதுர் வேதங்களும் பஞ்ச பூதங்களும்
சன்மார்க்கங்களும் சர்வ திர்த்தங்களும்
அஷ்ட யோகங்களும் நவயாகங்களும்
தொழும் பூங்கடலே மலைமாமகளே
அலை மாமகள் நீ கலை மாமகள் நீ (ஜனனி ஜனனி)

சொர்ண ரேகையுடன் சுயமாகி வந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
பலசேத்திரங்கள் தர்மசாஸ்திரங்கள்
பணிந்தே துவளும் மணி மேத்திரங்கள்
சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ (ஜனனி ஜனனி)

## ஓம் சக்தி

ஓம்சக்தி ஓம், ஓம்சக்தி ஓம், ஓம்சக்தி ஓம், ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம், ஓம்சக்தி ஓம், ஓம்சக்தி ஓம், ஓம்சக்தி ஓம்

ஸுந்தர வதனி ஸுகுண மனோஹரி
மந்த ஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச்சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தனயன் மகிழ்ந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)

## மாணிக்க வீணை ஏந்தும்

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாடவந்தோம்
அம்மா பாட வந்தோம்

அருள் வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தரவே நீ - அம்மா (மாணிக்க)

நாமணக்க பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாள்
பூமணக்கப் பூசை செய்தால் பூவை நீ மகிழ்வாய் (மாணிக்க)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள்
எங்கள் உள்ளக் கோயிலிலே உறைந்திருப்பாள்
கள்ள மில்லாமல் தொழும் அன்பருக்கே
என்றும் அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீயே

வாணி சரஸ்வதி மாதவி பாரதி
வாக தீஸ்வரி மாலினி
காணும் பொருளினில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் தேவி நீ
நான் முகன் நாயகி மோஹன ரூபினி
நான் மறை போற்றிடும் தேவி நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் கமுதே தேனருள் சிந்தும்
கான மனோகரி கல்யாணி

அருள் வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தருவே நீ - அம்மா (மாணிக்க )

## கற்பூர நாயகியே

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேத வல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே நாகேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் திச்சுடரே ஜோதிஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி
கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுத்தசக்தி சுத்தசக்தி

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம் சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம் சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம் சிவம்
சச்சிதானந்த தாத்மசக்தி சர்வசக்தி ஓம் சிவம்

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம் சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம் சிவம்

நாதகீத கானகலா நடனசக்தி ஓம் சிவம்
மஹாமந்த்ர யந்த்ர தந்த்ர வஸ்யசக்தி ஓம் சிவம்

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம் சிவம்
நாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம் சிவம்

துஷ்டசத்ரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம் சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம் சிவம்

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜா சுத்த சக்தி ஓம் சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி பரமேஸ்வரி

ஆதி பரமேஸ்வரியின் ஆலயமே வேற்காடு
அன்னையவள் திருப்புகழை தினம் தினம் நீ பாடு
குங்குமத்தில் கோயில் கொண்டு தெய்வமாய் குடியிருப்பாள்
மங்கலமே வடிவெடுத்து மாதரசி வீற்றிருப்பாள்
மங்காத நிலவாகி என்னிலும் ஒளிகொடுப்பாள் (ஆதி)

அன்னையிடம் நாகம் வந்து
பக்தியுடன் குடைபிடிக்கும்
அபிஷேக பால் மழையில்
தேவியவன் மனம் களிக்கும்
நாயகி திருவருளே பொன்னான வாழ்வளிக்கும் (ஆதி)

வேற்காடு திருத்தலமே
வந்தவர்க்குப் புகழ் கொடுக்கும்
வெற்றி தரும் திருச் சாம்பல்
கொண்டவர்க்குப் பலன் கிடைக்கும் (ஆதி)

## சக்தி மிக்க மாரியம்மா

சக்தி மிகுந்தவளே சமயபுரம் மாரியம்மா
உன் பெயரைப் பாடிடவே ஓடி வருவாயம்மா (சக்தி)

கலியுகத்தில் கன்னிகளை கண்கலங்க வைக்காதே
கண் திறந்து பாருமம்மா காட்சி நீ தாருமம்மா (சக்தி)

பாலபிஷேகம் செய்து பார்த்து மகிழ்ந்திருந்தோம்
நெய்யபிஷேகம் செய்து நெக்குருக பாடிவந்தோம் (சக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ மஞ்சள் காரியே சமயபுரம் மாரியம்மா
புன்சிரிப்பு உள்ளவளே சமயபுர மாரியம்மா (சக்தி)

கேட்டவரம் கொடுக்கும் கீர்த்தியுள்ள சமயபுரம்
தந்தேன் தந்தேன் என்று தந்திடுவாய் சக்தியம்மா (சக்தி)

அன்னை நீ என்று நானுன்னைத் துதிக்க
அழைத்தால் வந்திடுவாய் ஆனந்தமே தந்திடுவாய் (சக்தி)

அன்பை சொரிந்திடுவாள் அன்னை பராசக்தி
அஞ்சேல் அஞ்சேல் என்று அபயம் அளித்திடுவாள் (சக்தி)

சஞ்சலங்கள் போக்கிடுவாள் சமயபுர மாரியம்மா
சந்தோஷம் அளித்திடுவாள் சமயபுரம் மாரியம்மா (சக்தி)

பாடுகின்றோம் தேடுகின்றோம் உன்னையே காணாது
தேம்பியே அழுகின்றோம் தரிசனமே தந்திடுவாய் (சக்தி)

சின்னவன் செய்த பிழையை தேவியே நீ பொறுத்து
அழைத்தால் வந்திடுவாய் ஆனந்தஆம தந்திடுவாய் (சக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தாடி மாரி

பூவாடைக் காரி பொன்னழகி உனக்கு
பொங்கலிடக் கிடைத்தது பாக்கியம் எனக்கு
சுவாமிமார்கள் வீடெல்லாம் நெய்வாசம் இருக்கும்
அடி மீனாட்சி நீ வந்தால் நெய்வாசம் அடிக்கும்
உன்னைக் கண்டாலே எம் உள்ளமெல்லாம் சிலுசிலுக்கும்

ஆத்தாடி மாரியம்மா சோறாக்கி வைத்தேன் வாருமம்மா
ஆளாக்கிய அரிசியை பாழாக்க வேண்டாம்
தின்னுப்பிட்டு போடியம்மா ஆத்தாடி

பாட்டெடுத்தேன் தாளமிட்டேன் ஓடிவரல்லே
ஆடிப் பார்த்துவிட்டேன் பிள்ளை முகம் தேடி வரல்லே
பேச்சுப்படி பொங்கலுண்ண இங்கு வரல்லே
நான் மூச்சடக்கி உன்னிடத்தில் அங்கு வரல்லே (ஆத்தாடி)

சீக்கிரத்தில் காட்சி தந்த செல்வ நாயகி
புது சேலைக்காரி பூக்காரி தெய்வ நாயகி
பத்ரகாளி ருத்ரகாளி பார்வதி அம்மா
இந்தப் பாவிமகள் வீட்டினிலே பூசடி அம்மா (ஆத்தாடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமகள் துதி

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன்தமிழ்ச் சொல்லெடுத்துப் பாடவந்தோம் அம்மா பாடவந்தோம்
அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ நலம் தரவே நீ - அம்மா

நா மணக்கப் பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூ மணக்கப் பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய் (மாணிக்க)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய் எங்கள்
உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீ
வாணி சரஸ்வதி மாதவி பாரதி பாகதீஸ்வரி மாலினி
காணும் பொருளில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் வேணி நீ
நான்முகன் நாயகி மோகன ரூபிணி
நான்மறை போற்றும் தேவி நீ
வானவர்க்கமுதே தேனருள் சிந்தும்
ஞான மனோகரி கல்யாணி
அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ நலம் தரவே நீ - அம்மா (மாணிக்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்கள்

## வேல் வேல் வேலவனே

வேல் வேல் வேலவனே வேலாயுதா - எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
கந்தா கடம்பா வேலாயுதா - எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா - எங்கள்
திருப்பரங்கித்திரனே வேலாயுதா (வேல் வேல்)
சோலமலை கிழவனே வேலாயுதா - எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)
பழநிமலை முருகனே லோலாயுதா - எங்கள்
பழவினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
சுவாமிமலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்பிரமணிய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா - எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

## ஓம் முருகா ஜெய ஓம் முருகா

ஓம் முருகா ஜெய ஓம் முருகா
சரவணா சண்முகா சிவசக்தி பாலா (ஓம் முருகா)

ஓம் சரவணபவ தேவாஸ்கந்தா
சூரசம்ஹாரா மாயோன் மருகா ஓம் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவடியாம் காவடி

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி
வேல் முருகன் நாமத்திலே வித விதமாய் காவடி

வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி
பழனிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி

தென் பழநி வேலவனுக்கு தேன் குடத்தால் காவடி
ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி
வண்ண வண்ண காவடி கந்த வேலன் காவடி (காவடியாம்)

## அன்பருக்கு அன்பனே நீ

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓடி வா முருகா

ஓடிவா முருகா நீ ஓடி வா கந்தா
உமையவள் தன் மகளே ஓடிவா முருகா (ஓடிவா முருகா)

வள்ளி தெய்வானையோடு ஓடிவா முருகா (அரோகரா)

வையம் எல்லாம் காத்திடவே ஆடிவா முருகா
(ஓடிவா முருகா)

கணபதியின் தம்பியே நீ ஓடிவா முருகா
கவலைகளைத் தீர்த்திடவே ஆடிவா முருகா
(ஓடிவா முருகா)

கதிர்காமக் கந்தனே நீ ஓடிவா முருகா (அரோகரா)
கதிரமலை நாதனே நீ ஆடிவா முருகா (ஓடி வா முருகா)

பழனிமலை முருகனே நீ ஓடி வா முருகா (அரோகரா)
பழவினையைத் தீர்த்திடவே ஆடிவா முருகா (ஓடிவா முருகா)

## பழனிமலையும், சபரிமலையும்

(வெற்றிவேல் வீரவேல் ஞானவேல் சக்திவேல்)

பால்மணக்குது பழம்மணக்குது பழனி மலையிலே
பள்ளிக்கட்டு நெய்மணக்குது சபரிமலையிலே - ஐயா

பால் மணக்குது பழம் மணக்குது பழனி மலையிலே
பள்ளிக்கட்டு நெய் மணக்குது சபரிமலையிலே
அரோஹரா ஓசைகேட்குது பழனி மலையிலே
சரண கோஷ சப்தம் கேட்குது சபரிமலையிலே - ஐயா
(பால் மணக்குது பழம் மணக்குது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடிகள் ஆடிவரும் பழனிமலையிலே
பள்ளிக்கட்டு நாடி வரும் சபரிமலையிலே - ஐயா
சூரனையே வென்றவரும் பழனிமலையிலே
மஹிஷியை வென்றவனாம் சபரிமலையிலே
(பால் மணக்குது பழம் மணக்குது)

சேவல்கொடி கொண்டவரும் பழனிமலையிலே
புலிக்கொடியை கொண்டவரும் சபரிமலையிலே
(பால் மணக்குது பழம் மணக்குது)

பச்சைமயில் வாகனமும் பழனி மலையிலே
புலிக்கொடியை கொண்டவரும் சபரிமலையிலே
(பால் மணக்குது பழம் மணக்குது)

பச்சைமயில் வாகனமும் பழனி மலையிலே
வன்புலி வாகனரும் சபரிமலையிலே - ஐயா
(பால் மணக்குது பழம் மணக்குது)

பஞ்சாமிர்த பிரியனாம் பழனி மலையிலே
பாயசான்ன பிரியனாம் சபரிமலையிலே
பால்மணக்குது பழம் மணக்குது பழனிமலையிலே
பள்ளிக்கட்டு நெய் மணக்குது சபரிமலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசையால் வசமாகா

இசையால் வசமாகா இதயம் எது எது எது
இசையால் வசமாகா இதயம் எது
இறைவனே இசை வடிவம் எனும் போது - தமிழ்
இசையால் வசமாகா இதயம் எது

திசையெங்கிலும் பரவும் கீதம் அது
மலை தேனுண்ட சுவை கூட்டும் தன்மை அது - எனும்
இசையால் வசமாகா இதயம் எது
அசைச் சொல்லின் தொடராலே ஆனதே ராகம் - 2
பாடல் அளவை முறைப்படுத்த அமைந்ததே தாளம்
இசையின் பொருள் விளங்க பாடுதல் பாவம்
எனக் கூறும் இம்மூன்றும் இணைந்து இன்பம் தரும்
இசையால் வசமாகா

## கனலில் கருவாகி

கனலில் கருவாகி புனலில் உருவான
கந்தன் ஊர் எந்த ஊர் - 2
கணமும் மறவாமல் தினமும் நினைக்கின்ற
மனிதர்களின் சிந்தை ஊர் -2 கனலில்

குன்றங்களில் கோயில் கொண்ட வடிவேலன்
கண்ட சுகம் என்னவோ
தொண்டர் பல பேரும் கொஞ்சும் தமிழ் பாடல்
தந்த சுகம் அல்லவோ கனலில்

உருகி அவன் பெயரை உரைக்கும் பலபேரும்
அடையும் பலன் என்னவோ -2
கருகி துயர் ஓட கவலை பறந்தோட
பெருகும் அருள் அல்லவோ கனலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகன் குமரன் நல்லாவினன் குடி தன்னில்
கிழவன் பெயர் கொண்டதேன்
பழகும் தமிழ் பாட்டி ஔவை மூதாட்டி
பழம் நீ எனச் சொன்னதால் - 2
ஞானப் பழம் நீ எனச் சொன்னதால் கனலில்

## குன்றத்திலே குமரனுக்கு

குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம் - அங்கே
குவிந்ததம்மா பெண்களெல்லாம் வண்டாட்டம் (2)

தெய்வயானை திருமணமாம் திருப்பரங்குன்றம் - 2
தெருமுழுதும் பக்தர்களின் ஆனந்த மன்றம் - 2

தங்கம் வைரம் பவழம் முத்து தவழும் தெய்வானை
தாங்கிக் கொண்டாள் வாங்கிக் கொண்டாள்
முருகப் பெருமானை முருகப் வருமானை குன்றத்திலே

உருகிச் சொல்லுங்கள் முருகனின் பேரை
நெருங்கி செல்லுங்கள் குமரனின் ஊரை 2

வேல் முருகா வெற்றி வேல் முருகா

அரோகரா

சந்தணம் பூசுங்கள் குங்குமம் சூடுங்கள் 2
ஹரஹர பாடுங்கள் வருவதைப் பாருங்கள் 2
கந்தனுக்கு வேல் வேல் முருகனுக்கு வேல் வேல் 4
வேல் முருகா சக்தி முருகா 4

அரோகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ அல்லால் தெய்வம் இல்லை நீ

நீ அல்லால் தெய்வம் இல்லை -
எனது நெஞ்சே நீ வாழும் எல்லை முருகா
முருகா... முருகா முருகா... முருகா....

தாயாகி அன்பு பாலூட்டி வளர்த்தாய்
தந்தையாய் நின்றே சிந்தை கவர்ந்தாய் - 2
குருவாகி எனக்கு நல்லிசை தந்தாய்

ஞானக் குருவாகி எனக்கு நல்லிசை தந்தாய்
திருவே நீ என்றும் உள்ளம் நிறைந்தாய் - 2
நாயேனை நாளும் நல்லவனாக்க 2
ஓயாமல் ஒளியாமல் உன்னருள் தந்தாய் 2

நீ அல்லால்

வாயாரப்பாடி.... மனமார நினைத்து ....
வணங்கிடவே எந்தன் வாழ்நாளில் இன்பம் 2
தூயா முருகா மாயோன் மருகா
தொழுவதொன்றே இங்கு யான் பெற்ற இன்பம் - உன்னை
தொழுவதொன்றே இங்கு யான் பெற்ற இன்பம்

நீ அல்லால்

## அரோஹரா அரோஹரா

அரோஹரா அரோஹரா அரோஹரா வேலனே
அரோஹரா அரோஹரா அரோஹரா குமரனே

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி
பூவடியாம் பூவடி வள்ளி நாதன் பூவடி காவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவையர்கள் ஏந்திவரும் பாற்காவடி - அழகு
பூவையர்கள் ஆடிவரும் புஷ்பக்காவடி
பக்தரெல்லாம் பூட்டி வரும் பறவைக்காவடி - வீர
வெற்றி வேலன் முருகனுக்கு வேல் காவடி காவடி

சரவண பவ முருகனுக்கு சந்தனக் காவடி
ஷண்முக வடிவேலனுக்கு மயில் காவடி
பழனி மலை கந்தனுக்கு பன்னீர் காவடி - திருச்
செந்தூர் வாழும் செல்வனுக்கு வெற்றிக்காவடி

ஆறுபடை வீடுகொண்ட அழகன்தானடி - அந்த
அழகு வள்ளி தெய்வானை கணவன் தானடி
கதிரமலை கந்தனவன் கோலம் பாரடி - அவன்
காலடியில் சரணடைந்தால் துன்பம் ஏதடி காவடி

அரோஹரா அரோஹரா அரோஹரா
அரோஹரா அரோஹரா அரகரோஹா
கந்தனுக்கு வேல் வேல் - முருகனுக்கு வேல்வேல்
வேல் முருகா வெற்றி வேல் முருகா - அரோகரா
வேல் முருகா வெற்றி வேல் முருகா - அரோகரா

## ஓம் முருகா

ஓம் முருகா ஜெய ஓம் முருகா
ஹர ஹரா சண்முகா சிவச்தி பாலா ஓம்
ஓம் சரவண பவ தேவா சண்முகா
சூரசம்ஹாரா மாயோன் மருகா ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசாமியே

கந்தசாமியே எங்கள் சொந்தசாமியே
கந்தநாதனே எங்கள் சொந்த நாதனே (கந்தசாமியே)

நீல மயில் ஏறும் கோல முருகனை
நித்தம் பணிந்திட வாரும் அய்யா

காலில் சிலம்பொலி சல சல எனவரும்
கந்தன் அழகினை பாடிடுவோம்

கட்டழகி சிவகாமி தாவி முத்தம் இட்ட
சுந்தர பாலனை பாடிடுவோம்

காலில் சிலம்பொலி சல் சல் எனவரும்
கந்தன் அழகினைப் பாடிடுவோம்

சின்ன முனிவர்க்கு செந்தமிழாம் தன்னை
அன்பினில் பகர்ந்த கந்தன் அவன்

வேலுடன் வந்த வேலனை வேண்டினால்
வேண்ட வேண்ட வரம் தருவானடி

நாலுவேதப் பொருள் நாயகனாம் அவன்
தாளில் பணிந்தாடிடுவோம்
பாலவடிவினன் பக்தி கதிர்காமம்
பக்தர்களுக் கென்றும் சொந்தமடி

கந்தசாமியே எங்கள் சொந்த சாமியே
கந்த நாதனே எங்கள் சொந்த நாதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் முருகா மால் மருகா

வேல் முருகா மால் மருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா ஷண்முகா

நால் வேதப் பொருளான நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா ஷண்முகா
செல்லமாக சிவை அணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என தேவா ஷண்முகா

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலை தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலனே ஷண்முகா

நாறுமாலை யணிமார்பா நாயகா ஷண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினை போக்கும் நீதமே ஷண்முகா

பாடும் பணி தந்திடுவாய் பண்டிதா ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவான் முக்தனே ஷண்முகா
ஆறும் சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார் உள்ளக் குறையமர்ந்த ஆனந்தா ஷண்முகா

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே ஷண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா ஷண்முகா
ஒருவன் என் வினை யழித்த உத்தமா ஷண்முகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழனியிலே முருகன்

பழனியிலே சன்னியாசி
கைலையிலே சம்சாரி
உன் கணக்கு புரியலையே முருகா

ஆறுபடை மீதிலே நூறு முகம் காட்டுற
ஆறுதலை தேடுற எந்த முகம் காட்டுற
அறியாமல் தவிக்கிறேனே முருகா
அப்பவிக்கு என்ன தவறா

ஆறுபடை முருகனுக்கு அரோகரா - நாங்க
ஆறுதலைத் தேடுகிறோம் அரோகரா
கந்தவேலு குமர வேலு அரோகரா - உன்னைக்
கண்டுவந்தா நிம்மதிதான் அரோகரா (பழனி)

குழந்தை போல நடப்பதென்ன சுவாமி மலையிலே - நீ
குமரன்போல சிரிப்தென்ன திருச்செந்தூரிலே
முருகா முருகா முருகா முருகா

குழந்தை வடிவேலவன்
கொஞ்சி விளையாடலாம்
கோபக்காரக் குமரனை
எப்படித்தான் நாடலாம்

ஆறுபடை முருகனுக்கு அரோகரா - நாங்க
ஆறுதலை நாடுகின்றோம் அரோகரா
கந்தவேலு குமரவேலு அரோகரா - உன்னை
கண்டுவந்தா நிம்மதிதான் அரோகரா (பழனியிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை மயில் வாகனன்

பச்சை மயில் வாகனனே சுவாமி பழனிமலை ஆண்டவனே

இச்சையெல்லாம் உன்னிடத்தில் தந்தோம்
எள்ளளவும் பயமில்லையே

மருதமலை ஆண்டவனே - சுவாமி மக்கள் குறை தீர்ப்பவனே
(இச்சை)

சுவாமிமலை ஆண்டவனே - சுவாமி சுப்ரமணி பாலகனே
(இச்சை)

பவளமலை ஆண்டவனே - சுவாமி பக்தர்களைக் காப்பவனே
(இச்சை)

அழகர்மலை ஆண்டவனே - சுவாமி ஆறுமுக வேலவனே
(இச்சை)

தணிகைமலை ஆண்டவனே - சுவாமி தரணியெலாம் காப்பவனே
(இச்சை)

வெள்ளியங்கிரி ஆண்டவனே - சுவாமி செந்தூரில் இருப்பவனே
(இச்சை)

திருப்பரங் குன்றத்திலே - சுவாமி திருவடிகள் காணவந்தோம்
(இச்சை)

ஆறுபடை வீட்டோனே - சுவாமி அருள்கொடுத்துக் காப்பவனே
(இச்சை)

## பூசைக்கு வா முருகா

திங்கட்கிழமை பூசையிலே வா முருகா வா
திருவாச்சி கொண்டு வாறோம் வா முருகா வா
செவ்வாய்க்கிழமை பூசையிலே வா முருகா வா
செண்பகப்பூ கொண்டு வாறோம் வா முருகா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழனி மலை

பழனி மலை சுவாமி மலை
திருத்தணிகை வேலவனே (பழனி)

பார்வதியின் அன்பு மகன்
திருச்செந்தூர் பாலகனே (பழனி)

பழம் முதிரும் சோலையிலே
சக்தி வடிவேலவனே
பார்புகழும் குன்றிருக்கும் குமரனே வடிவேலனே (பழனி)

வா சண்முகா வடிவேல் வேல் முருகா
வா வேலவா திருமால் மருகா
கதிர்காமம் உறை வேலவா (பழனி)

## முருகா முருகா முருகா.......

**இராகம் - நாட்டைக்குறிஞ்சி தாளம் - ஆதி**

### பல்லவி

முருகா! முருகா! முருகா! முருகா!

### சரணங்கள்

வருவாய் மயில்மீ தினலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் பலரிங் குளரே!
அவரை வருவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே - முருகா

சுருதிப் பொருளே வருக!
துணிவே கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் - முருகா

அமரா வதிவாழ் வுரவே
அருள்வாய்! சரணம்! சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமறும் கூர்வே லவனே சரணம்! - முருகா
அறிவாகிய கோயிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்! - முருகா

குருவே பரமன் மகனே!
குகையில் வளருங் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமரா திபனே! சரணம்! சரணம்! - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவர் பாடல்

ஆதிமூல நாதனே பால வைரவா
ஆதி சிவன் பாலனே பால வைரவா
திரிசூல நாதனே பால வைரவா
தில்லை நாதன் பாலனே பாலவைரவா

வடைமாலை தரித்தவரே பாலவைரவா
வரம் தந்து காருமையா பாலவைரவா
சுடலை நடனம் ஆடியவா ஞானவைரவா
சத்தசிவமானவரே ஞானவைரவா

பிள்ளையாரின் தம்பியாரே பாலவைரவா
பிழைகள் எல்லாம் பொறுத்தருள்வாய் பாலவைரவா
வேலவனின் தம்பியரே ஞானவைரவா
வேதனைகள் தீர்திடுவாய் ஞானவைரவா

ஐயனாரின் அண்ணரே ஞானவைரவா
ஐயங்களை போக்கிடுவாய் ஞானவைரவா
சுவன வாகனம் கொண்டவரே பாலவைரவா
சூழ்ச்சிக்கெல்லாம் ஆனவரே ஞானவைரவா

கந்தர்மடம் மீதமர்ந்த ஞானவைரவா
எம் கவலைகளை தீர்த்திடுவாய் ஞானவைரவா
உன்னடியார் துயர் தீர்த்த பாலவைரவா
உடன் இருந்து காத்திடப்பா பால வைரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைத்த காரியம் சித்தியடைய கால வைரவாஷ்டகம்

தேவராஜ ஸேவ்யமான பாவநங்கரி பங்கஜம்
வ்யால யஜ்ஞுசூத்ர மிந்து சேகரம் க்ருபாகரம்
நாரதாதி யோகிப்ருந்த வந்திதம் திகம்பரம்
காசிகாபுராதி நாத கால பைரவம் பஜே

பானுகோடி பாஸ்வரம் பவாப்தி தாரகம்பரம்
நீலகண்ட மீப்ஸிதார்த்த தாயகம் த்ரிலோசனம்
காலகால மம்புஜாக்ஷ மஸ்த சூன்மக்ஷரம்
காசிகாபுராதிநாத கால பைரவம் பஜே

சூலடங்க பாச தண்டபாணி மாதி காரணம்
சியாம காய மாதி தேவமக்ஷரம் நிராமயம்
பீம விக்ரமம் ப்ரபும் விசித்ர தாண்டவ ப்ரியம்
காசிகாபுராதிநாத கால பைரவம் பஜே

புக்தி முக்தி தாயகம் ப்ரசஸ்தசாரு விக்ரஹம்
பக்தவத்ஸலம் ஸ்திரம் ஸமஸ்தலோக விக்ரஹம்
நிக்வணந்-மநோஜ்ஞு ஹேம கிங்கிணீ லஸத்கடிம்
காசிகாபுராதி நாத கால பைரவம் பஜே

தர்மஸேதுபாலகம் த்வதர்ம மார்க நாசகம்
கர்மபாசமோசகம் ஸுசர்ம தாயகம் வியும்
ஸ்வர்ண வர்ண கேச பாச சோபிதாங்க நிர்மலம்
காசிகாபுராதி நாத கால பைரவம் பஜே

ரத்னபாதுகா ப்ரபாபிராம பாதயுக்மகம்
நித்யமத்விதீய மிஷ்ட தைவதம் நிரஞ்ஜனம்
ம்ருத்யு தர்ப்ப நாசனம் கரால தம்ஷ்ட்ர பூஷணம்
காசிகாபுராதி நாதகாலபைரவம் பஜே

அட்டஹாஸ பின்ன பத்ம ஜாண்டகோச ஸந்ததிம்
திருஷ்டி பாத நஷ்ட பாப ஜாலமுக்ர சாஸனம்
அஷ்டஸித்தி தாயகம் கபால மாலிகாதரம்
காசிகா புராதி நாத காலபைரவம் பஜே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதஸங்க நாயகம் விசாலகீர்த்தி தாயகம்
காசிவாஸி லோக புண்ய பாபசோதகம் விபும்
நீதிமார்க்க கோவிதம் புராதனம் ஜகத்பதிம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே!!

காலபைரவாஷ்டகம் ஸதா படந்தி யே மனோஹரம்
ஜ்ஞான முக்தி ஸாதகம் விசித்ர புண்யவர்தனம்
சோகமோஹ லோப தைன்ய கோப தாப நாசனம்
தே ப்ரயாந்தி கால பைரவாங்க்ரி ஸந்நிதிம் த்ருவம் !

## அகரத்தின் சிவப்பொருளே

அகரத்தில் சிவப்பொருளே ஞானவைரவா
ஆலயத்தை காப்பவரே ஞானவைரவா
சூலம் ஏந்தும் தேவனல்லோ ஞானவைரவா
சூழ்ச்சிக்கெல்லாம் ஆனவரே ஞானவைரவா
சாஸ்திரங்கள் சொல்லிடுவாய் ஞானவைரவா
சஞ்சலங்கள் எப்போ தீரும் ஞானவைரவா
கருநாயின் மீதேறி ஞானவைரவா
காத்திடுவீர் என்று சொல்லி ஞானவைரவா
மகாகாளி பங்குசனே ஞானவைரவா
காலை மாலை பாராது ஞானவைரவா
இல்லங்களில் வீற்றிருக்கும் ஞானவைரவா
இம்மை எல்லாம் அகற்றிடுவீர் ஞானவைரவா

சொல்லொணாத் துன்பத்திலும் ஞானவைரவா
நினைந்தும் இல்லை என்கிறோமே ஞானவைரவா மாலையில்லா
எங்கள் மகா ஞானவைரவா
எங்களை நீர் காத்திடுவீர் ஞானவைரவா
வடை மாலை சாத்திடுவோம் ஞானவைரவா
வல்வினையைத் தீர்த்திடுவிர் ஞானவைரவா
எட்டுத் திக்கும் உலாவிவரும் ஞானவைரவா
ஏழ்மை வினை போக்கிடுவீர் ஞானவைரவா
சரணம் சரணம் என்ற சொல்வோம் ஞானவைரவா
பாதமலர் சரணம் என்போம் ஞானவைரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூலமா நாயகன்

சூலமா நாயகன் வைரவப் பெருமான்
துட்டரை அழிப்பவன் வைரவப் பெருமான்
காலனின் காலன் வைரவப் பெருமான்
கருவினை ஒழிப்பான் வைரவப் பெருமான்

காளித்தா யுடனே வைரவப் பெருமான்
களிநடம் புரிவான் வைரவப் பெருமான்
சூழுலக மெல்லாம் வைரவப் பெருமான்
துணைநின்றான் வைரவப் பெருமான்

வேள்வியின் நாயகன் வைரவப் பெருமான்
வேதத்து நாயகன் வைரவப் பெருமான்
கோள்களை விதிப்பவன் வைரவப் பெருமான்
குலவிடு மாகமன் வைரவப் பெருமான்

உடுக்கிசைப் பிரியனார் வைரவப் பெருமான்
ஒளிர்பர உடையவன் வைரவப் பெருமான்
கடுத்திடு நடமிடும் வைரவப் பெருமான்
கபாலமொன்றுடையவன் வைரவப் பெருமான்

பற்பல வடிவினன் வைரவப் பெருமான்
பக்தரைக் காப்பவன் வைரவப் பெருமான்
சொற்பதங் கடந்தவன் வைரவப் பெருமான்
சுதந்திர கடவுளே வைரவப் பெருமான்

நெய்வடை பாயாசம் பல்வகை அமுது
நினைந்து படைத்தோம் நின்னடி தொழுது
ஐயனே எங்கணும் உன் குடியிருப்பு
அடைக்கலம் உனக்கே காப்பதுன் பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் தோத்திரங்கள்

## வெற்றிலையில மாலை

வெத்தலையில மாலை கட்டுங்க மால கட்டுங்களே - உங்க
வேதனையை சொல்லி சொல்லி மால கட்டுங்களே
துளசி இல கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களே
தோத்திரத்த சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே
வெத்தலயில

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா - அவன
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னிங்கன்னா வந்து நிற்பாளே - தினம்
ராம நாம சாமி பேரை பாடி நிற்பானே வெத்தலயில

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புதசாமி - அவன்
ஓசை தரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி காத்தடிச்சா
புயலடிச்சா கலங்கிடலாமா - அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா வெத்தலயில்

பொட்டுவச்சு பொட்டுவச்சு பூசை செஞ்சாலே - அவன் எட்டுவச்சு
வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே - அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே
வெத்தலயில

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு - எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லதக் கேளு - மனம்
வெம்பி வெடிக்க தேவையில்ல நன்மை கையோடு
வெத்தலயில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்துப்படி ஏறிவந்தேன்

பத்துப்படி ஏறிவந்தேன் ஆஞ்சநேயனே
வெற்றி தர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
பக்தியுடன் பாடி வந்தேன் ஆஞ்சநேயனே
முக்திதர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே

பத்துப்படி

கற்றறிந்த கையளவே ஆஞ்சநேயனே உன்னால்
பெற்றதிந்த வாழ்க்கையய்யா ஆஞ்சநேயனே
முத்துமணி மாலையில்லை ஆஞ்சநேயனே
மொத்தத்தில் நான் ஏழையய்யா ஆஞ்சநேயனே
பஞ்சமுக தரிசனமே ஆஞ்சநேயனே - கண்ணால்
கண்டுமனம் குளிரவந்தேன் ஆஞ்சநேயனே

பத்துப்டி

வஞ்சமற்ற மனம்படைத்தாய் ஆஞ்சநேயனே - அதில்
ஆசை விதை ஏன் விதைத்தாய் ஆஞ்சநேயனே பொய்யுரைத்து
வாழ்ந்தறியேன் ஆஞ்சநேயனே - என் மெய்ப்பொருளும் உன்
அருளே ஆஞ்சநேயனே
மூச்சிருக்கும் நாள் வரைக்கும் ஆஞ்சநேயனே - உன்
பேச்செனக்கு வேதமய்யா ஆஞ்சநேயனே

(பத்துப்படி)

## ராம தூதனே

ராம தூதனே ராம தூதனே ராம ராம ராம் ராம்
உன்னைக் காணவே உள்ளம் ஏங்குதே ராம ராம ராம் ராம்
சித்தம் யாவிலும் நித்தம் வாழுதே ராம ராம ராம் ராம்
வெள்ளம் போலவே உள்ளம் பொங்குதே ராம ராம ராம் ராம்

பெற்ற அன்னைக்கும் பெரிய பாரமாய் ராம ராம ராம் ராம்
வாழலாகினேன் வாடலாகினேன் ராம ராம ராம் ராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டும் மழையிலும் கோடைப் பனியிலும் ராம ராம ராம் ராம்
உந்தன் கோயிலே தஞ்சமாகினேன் ராம ராம ராம் ராம்
எங்கும் உன்னையே எதிலும் உன்னையே ராம ராம ராம் ராம்
கண்டு கொண்டபின் மனிதனாகினேன் ராம ராம ராம் ராம்

அன்னை தந்தை நீ ஆக்கும் தெய்வம் நீ ராம ராம ராம் ராம்
வெண்ணெய் சாற்றியே உன்னைப் பாடினேன் ராம ராம ராம் ராம்
பொய்யை நீக்கினேன் மெய்யைப் போற்றினேன் ராம ராம ராம் ராம்
ஐயன் உன்னருள் ஐயம் நீங்கினேன் ராம ராம ராம் ராம்
நல்லிராவிலும் ஞானதீபமே ராம ராம ராம் ராம்
கண்டுகொண்ட பின் மனிதனாகினேன் ராம ராம ராம் ராம்

நோயுமின்றி நொடியுமின்றியே ராம ராம ராம் ராம்
எங்கள் சுவாமியை காக்க வேண்டும் ராம ராம ராம் ராம்
உந்தன் பக்தனை உண்மை தொண்டனை ராம ராம ராம் ராம்
காக்க வேண்டும் காவல் தெய்வமே ராம ராம ராம் ராம்
மண்ணில் நாங்களே கண்ட மாருதி ராம ராம ராம் ராம்
சந்திர சேகர சுவாமியே ராம ராம ராம் ராம்

## ராம ராம

ராம ராம என்று பாடவேண்டும் அதில்
ஆனந்தமே நெஞ்சில் என்று கொள்ள வேண்டும்
ராம நாமம் சொல்லும் போது ஓடி வருவானே எங்கள்
ஆஞ்சநேயன் ஆனந்தமே கொண்டு மகிழ்வானே
ராம ராம

அனைத்தையும் அறிந்தவனே ஆஞ்சநேயனே அவன்
அஞ்சனையின் புத்திரனே ஆஞ்சநேயனே
பகையும் சூழ்ந்து இருளும் சூழ்ந்தா வாழும் மனதிலே என்று
ராம நாமம் நல்ல நிலை பெற்றுத் தருமே ராம ராம

மாயை என்னும் சாக்கடையில் தவித்து துடிப்போனே உன்னை
கரையேற்றி காத்திடுமே ராம நாமமே - உள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியுடன் அவன் பாதம் தொழுது நின்றாலே உன்னை
பாசமாக தன்னுடனே அணைத்திடுவானே

ராம ராம

கேட்பவர்க்கும் சொல்பவர்க்கும் ராம நாமமே வாழ்வின்
துன்பமெல்லாம் தீர்த்து வைக்கும் சக்தியாகுமே
உறுதியுள்ள மனதினிலும் ராம நாமமே - நல்ல உண்மைதனை
ஊட்டிவிடும் நாதம் ஆளுமே

ராம ராம

## கடலலைகள் ஆடி வரும்

கடலலைகள் ஆடிவரும் அழகினைக் கண்டேன் - அந்த
அழகினிலே ஆஞ்சநேயன் திருமுகம் கண்டேன் - ஸ்ரீ
ராம ஜெயம் தேசம் எங்கும் ஒலித்திடக் கேட்டேன் - அதைக்
கேட்டவுடன் ஆஞ்சநேயன் வந்ததைக் கண்டேன்

கடலலைகள்

கனிகளிலே மாலையிட்டு வணங்கிட கண்டேன் - அந்த
வாழ்க்கையெல்லாம் கனிந்து வரும் அழகினைக் கண்டேன்

கடலலைகள்

வெற்றிலையால் மாலையிட்டு வணங்கிடக் கண்டேன் - எங்கள்
வினைகள் எல்லாம் விலகி இன்பம் வருவதைக் கண்டேன்

கடலலைகள்

துளசியினால் மாலைகட்டி வணங்கிடக் கண்டேன் - எங்கள்
துன்பம் எல்லாம் விலகி இன்பம் வருவதைக் கண்டேன்

கடலலைகள்

ஸ்ரீ ராம ஜெயம் ராம ஜெயம் ராம ஜெயங்கள் தான் - எமை
வாழ வைக்கும் அருமருந்தும் ராம ஜெயங்கள்தான்

(கடலலைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தர அனுமான்

சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
அந்தமும் ஆதியும் கடந்து நின்று
அன்பரைக் காத்திட முன்வருவான் (சுந்தர)

ரகு குலம் காத்திட்ட பெருவீரன்
இராமனுக் கினிய பெருந்தொண்டன்
கலங்கிடும் கலியுக மக்களுக்கு
கலங்கரை விளக்காய் வந்திடுவான் (சுந்தர)

கலங்கரை விளக்காய் அனுமானை
அனுதினம் பாடி நாம் பணிந்தால்
அட்டமா சித்தி கைகூடும்
அல்லல் வினைகள் பறந்தோடும் (சுந்தர)

தீயதை பாரினில் அழிப்பதற்கு
திரு நிறை பக்தியை வளர்ப்பதற்கு
கலியுகம் தன்னில் தனித்தெய்வம்
சுந்தர அனுமான் அவன் தானே (சுந்தர)

சனிதோறும் அனுமானைப் பணிந்து நின்றால்
சனியெனும் ஈஸ்வரன் அவன் தானும்
அன்புடன் அவனிடம் கட்டுப்பட்டால்
அன்பான வாழ்வு அவன் தருவான் (சுந்தர)

பக்தியை வளர்த்திட ராமனையும்
பாரினில் கை கண்ட அரு மருந்து
அரு மருந்தினை நீ அருந்தி
அவன் பிறப்பினை அறிந்திடுவாய் (சுந்தர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆஞ்சனேயர் நாமாவளி

ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
மாருதி ராஜா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
வாயு குமாரா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
அஞ்சனை புத்திரா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
சீதா ராம ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ஸ்ரீராம தூதா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ஸ்ரீராம பக்தா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ஸ்ரீராக வேந்திர ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ராம ராம ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
மகாநு பாவா ஜெய அநுமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் தோத்திரங்கள்

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு நாங்க
கார்த்திகை முதல் தேதி மாலை இட்டோம்
ஐயப்பா ஐயப்பா என்றே சொல்லி நாங்க
ஆறுவாரம் தானே நோன்பிருந்தோம் (கன்னி)

எங்க குருசாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சுமத்துகிட்டு வந்தோமய்யா
ஆறு படை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு யாத்திரையாய்
நடந்து வந்தோமய்யா (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரி வரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டை துள்ளி வாவரையே வேண்டிகிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா (கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பமபையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத் தொலைச்சுப்புட்டு
சபரிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உளைவேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உம் மகிமை அறிந்தோமய்யா (கன்னி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தளம் தந்திட கற்பகத்தருவே கற்பூர நாதா
## (கும்மி மெட்டில் பாடவும்)

பந்தளம் தந்திட்ட நேசனையா என்றும்
பக்தர்கள் உள்ளத்தில் பாசனய்யா
விந்தைகள் செய்திடும் பிள்ளையப்பா அவன்
செந்திலாதிபதியின் தம்பியப்பா அவன்

தேவாதி வேதரும் கூடி வந்து எங்கள்
தேவன் ஐயப்பனை நாடிவந்து
தேவர்கள் யாவரும் பாடி வந்து எங்கள்
தேவாரம் ஐயனை வாழ்த்துகின்றார்
முத்தொழில் நாதரும் நாடி வந்து - எங்கள்
முத்தான பிள்ளையைக் காண வந்து
தத்துவங்கள் பதினெட்டுப் படிகளில்
சத்திய பாலனைக் கண்டு சென்றார்
எட்டுத்திசைகளும் கூடி வந்து ஐயன்
கூட்டம் இரு முடி தாங்கி வந்து
திட்டமிட்டபடி பம்பை நதி வந்து
கூட்டமாக பூஜை செய்திடுவார்

கற்பகத்தருவும் நாடி வந்து எங்கள்
கற்பூர நாதனைக் காண வந்து
அற்புதங்கள் பல செய்தவராம் அவன்
பொற்பாதம் கண்டு பணிவோமையா

ஜாதியும் பேதமும் இல்லையப்பா எங்கள்
ஜோதி வடிவான பிள்ளையிடம்
பாதி பிறை தொழும் யாவரும் அங்கு
பள்ளியும் பக்கத்தில் பாருங்கய்யா

வையகம் போற்றிடும் ஐயனைக் கண்டதும்
ஐயங்கள் யாவும் மறையுதய்யா
நெய்யில் குளித்திடும் ஐயனைக் கண்டதும்
நெஞ்சங்கள் யாவும் மகிழுதய்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சபரிவாச பாஹிமாம்

ஸ்ரீ சபரிவாசா பாஹிமாம்
ஸ்ரீ ஆனந்த ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ மோகன ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ ஜோதிஸ்வ ரூபனே பாஹிமாம் (ஸ்ரீ சபரிவாசா)

நானிருக்கப் பயமேன் என்றே சொல்வார்
நாடி வந்தோரைக் காத்திடுவார்
உன்னை எண்ணியெண்ணி நெஞ்சருகினேன்
உன்னை எங்கெங்கோ தேடி நான் ஓடினேன்
பண்ணிசைத்து உன்புகழ் பாடினேன்
பாராயோ பாராமுகம் இது நியாயமா (ஸ்ரீ சபரிவாசா)

## பகவான் சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
அகமும் குளிரவே அழைக்கிறோம்
சரணம் சரணம் ஐயப்பா
பகலும் இரவும் இல்லாமலே உன்நாமமே
வரணும் வரணும் ஐயப்பா
கரிமலைவாசா பாபவினாசா
சரணம் சரணம் ஐயப்பா
கருத்தினில் வருவாய் கருணையைப் பொழிவாய்
சரணம் சரணம் ஐயப்பா
மகிஷிஸம்ஹாரா மதகஜ வாகனா
சரணம் சரணம் ஐயப்பா
சுகுணவிலாசா சுந்தரரூபா
சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுவாரமே நோன்பிருந்தோம்.
பேரழகா உனைக் காணவந்தோம்
பாலாபிஷேகம் உனக்கப்பா
இந்தபபாலனைக் கடைக்கண் பாரப்பா
முத்திரை தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எனக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா உந்தன்
பொற்பாத மலர்கள் எனக்கப்பா
தேவன் பாதம் தேவி பாதம்
திருவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா
தேவை உன் திருப்பாதமப்பா
நெய்யபிஷேகம் உனக்கப்பா
உன் திவ்ய தரிசனம் எனக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா
அருள் செய்யப்பா மனம் வையப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

## ஓம் குருநாதா ஐயப்பா

ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
அரனார் பாலா ஐயப்பா அம்பிகை பாலா ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா அம்பிகை பராபரா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
இரு முடிப்பிரியா ஐயப்பா இரக்கம் மிருந்தவா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா ஈஸ்வரி மைந்தா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா உறுதுணை நீயே ஐயப்பா
ஊக்கம் தருபவா ஐயப்பா ஊழ்வினை அறுப்பவா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
எங்கும் நிறைந்தவா ஐயப்பா - எங்கள் நாயகா ஐயப்பா
பம்பையில் பாலா ஐயப்பா பந்தள வேந்தா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
வன்புலி வாகனா ஐயப்பா வனத்திலிருப்பவா ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா சாந்தஸ்வருபா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருதாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா

## ஜீவன் என்பது உள்ளவரை

ஜீவன் என்பது உள்ளவரை - என்
நெஞ்சம் வணங்கும் சபரிமலை
அரிகரன் புகழை பாடும் வரை
வாழ்வினில் தோன்றும் சாந்த நிலை
கார்த்திகைதோறும் மாலை அணிந்து
நாற்பது நாளும் நோன்பும் இருந்து
நாவில் ஐயன் நாமம் பொழிந்து
நடந்தே சென்று கோவிலடைத்து

இருமுடி சேர்த்தேன் அவனிடத்தில்
கோடி மணி தந்தான் என்னிடத்தில்
நெய் விளக்காலே அலங்காரம் தன்னில்
நெஞ்சில் மறையும் அகங்காரம்
சரணம் என்னும் ஓங்காரம்
ஓங்கார ஸ்வருபனே சரணம் ஐயப்போ
சரணம் என்னும் ஓங்காரம்
சர்வம் அதிலே ரீங்காரம்
ஆசையில் போதும் அவையாவும்
ஜோதியை கண்டால் தெளிவாகும் - மகர
ஜோதியை கண்டால் தெளிவாகும் (ஜீவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பை கரையில் அவதரித்தான்
பந்தள நாட்டில் பணி முடித்தான்
மகிஷியை வென்றே வாழ்வளித்தான்
மழலை வடிவில் அருள் கொடுத்தான்
அன்னையின் நோய்க்கும் மருந்தளித்தான்
அகிலம் வாழவும் துணையிருப்பான் - இந்த
அகிலமும் வாழவும் துணை இருப்பான் (ஜீவன்)

## இருமுடி தாங்கி ஒருமனதாகி

இருமுடிதாங்கி ஒருமனதாகி குருவெனவே வந்தோம்
இருவினை தீர்க்கும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காணவந்தோம்

### பல்லவி

பள்ளிக்கட்டு சபரி மலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா
ஐயப்பா சாமியே
நெய்யபிஷேகம் ஸ்வாமிக்கே
கற்பூர தீபம் ஸ்வாமிக்கே
ஐயப்பமார்களும் கூடிக்கொண்டு
ஐயப்பனை நாடி சென்றிடுவார்
சபரிமலைக்கே சென்றிடுவார் ஸ்வாமி

### அனுபல்லவி

கார்த்திகை மாதம் மாலையணிந்து
நேர்த்தியாகவே விரதமிருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே உனை
பார்க்க வேண்டியே தவமிருந்து
இருமுடி எடுத்து எருமேலி வந்து
ஒருமனதாகிப் பேட்டை துள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை நண்பராம் வாபரை தொழுது
ஐயனின் அருள் மலை ஏறிடுவார் ஸ்வாமி
அழுதை ஏற்றம் ஏறும்போது
அரிஹரன் மகனைத் துதித்துச் செல்வார்
வழி காட்டியே வந்திடுவார் ஐயன்
வன்புலி ஏறி வந்திடுவார்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்தவுடனே
பெருநதி பம்பை கண்டிடுவார் (ஸ்வாமி)

கங்கை நதிபோல் புண்ணிய நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனைக் கும்பிடுவார்
சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலி மலை ஏற்றம் சிவபாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருட் காவலனாயிருப்பார்
தேகபலம்தா என்றால் அவர் தன் தேகத்தைத் தந்திடுவார்
பாத பலம்தா என்றால் அவர்தன் பாதத்தைத் தந்திடுவார் நல்ல
பாதையைக் காட்டிடுவார் ஸ்வாமி

சபரி பீடமே வந்திடுவார்
சபரி அன்னையைப் பணிந்திடுவார்
சரங்குத்தி ஆலில் கன்னிமார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரிமலை தனை நெருங்கிடுவார்
பதினெட்டுப்படி மீது ஏறிடுவார்
கதியென்றவனைச் சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார் - ஐயனைத்
துதிக்கையில் தன்னையே மறந்திடுவார்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளிளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா சுவாமியே ஐயப்போ
சரணம் சரணம் ஐயப்போ சாமி சரணம் ஐயப்போ ஸ்வாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியல

ஐயப்பா உன்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால இருக்க முடியல

வாபர் சாமி நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால இருக்க முடியல

எரிமேலி பேட்டைத்துள்ளல் மறக்கமுடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

அழுதா நதி கல்லெடுத்தேன் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

கறுப்புசாமி என்னை நான் மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

பொன்னு பதினெட்டுப்படி தொட்டதை மறக்கமுடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

காந்தமலை ஜோதிய மறக்க முடியல
மறந்தாலும் என்னால் இருக்க முடியல

## சன்னதியில் கட்டுங்கட்டு

சன்னதியில் கட்டுங்கட்டு வந்தோமப்பா ஐயப்பா
சபரிமலை காடுதேடி வாறோமப்பா ஐயப்பா
கட்டுமுடி ரெண்டு கட்டி வந்தோமப்பா ஐயப்பா
காந்தமலை ஜோதி காண வாறோமப்பா ஐயப்பா
சபரிமலை பயணந்தானப்பா சாமி வழி துணையா வந்து சேரப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி ஏறும் என நெனச்சு வந்தோமப்பா ஐயப்பா
புல் அரிக்க சரணம் இட்டு வாறோமப்பா ஐயப்பா

மணி மணியா மாலையிட்டு வந்தோமப்பா ஐயப்பா
கனிவாக விரதம் வச்சி வாறோமப்பா ஐயப்பா
காந்தமலை ஜோதியான எங்க காவலாக வந்து சேரப்பா
(சன்னிதி)

கறுப்பு வண்ண ஆடை கட்டி வந்தோமப்பா ஐயப்பா
உத்தரவு வந்ததுன்னு வாறோமப்பா ஐயப்பா
ஊருக்கெல்லா ஓலை ஒட்டு வந்தோமப்பா ஐயப்பா
உச்சிமலை போறதுன்னு வாறோமப்பா ஐயப்பா
சபரிமலை பயணந்தானப்பா சாமி வழிதுணையா வந்து சேரப்பா
(சன்னிதி)

வீட்டை எல்லாம் தான் மறந்து வந்தோமப்பா ஐயப்பா
காட்ட மடம் மனசில் வச்சி வாறோமப்பா ஐயப்பா
சொந்தமெல்லாம் தான் மறந்து வந்தோமப்பா ஐயப்பா
சோதி மட்டும் மனசில் வச்சு வாறோமப்பா ஐயப்பா
காந்தமலை ஜோதியானவா எங்க காவலாக வந்து சேரப்பா
(சன்னதி

கிடுகிடுவென ஏற்றமப்பா வந்தோமப்பா ஐயப்பா
குடுகுடுவென கீழிறங்கி வாறோமப்பா ஐயப்பா
சபரிமலைல பயணந்தானப்பா சாமி வழித்துணையா வந்துசேரப்பா
(சன்னதி)

## திம்தகத்தோம்

திம் தகத்தோம் திம் தகத்தோம் ஐயப்பா
தெய்வத்தில் நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உன்னை நாடினோம் சாமி ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டை துள்ளுவோம்
மலைமீது ஏறி வந்து உன்னைப் பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாபர் எனும் துணைவனையும் வணங்கக்கூடுவோம்
மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா
மகர ஜோதி காணவேண்டும் சாமி ஐயப்பா
சாமி திம் திகத்தோம் - தோம்
ஐயப்பா திம் தகத்தோம்
சாமியே - ஐயப்பா
ஐயப்பா - சாமியே

கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே உடலின்
உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே
கன்னிபுரத்து மாதேவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே ஐயப்பா பக்தர்கள் உன்னோடே
வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வைத்தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா
சாமி திம் திகத்தோம் - தோம்
ஐயப்பா திம் தகத்தோம்
சாமி ஐயப்பா

## வானவர் காவலன் சன்னதி

வானவர் காவலன் சன்னதி - நீல
வானை மோதும் சன்னதி!
அழகு சிந்தும் சன்னதி - மிக
அற்பு தமான சன்னதி!!

ஐயப்பன் கோவில் சன்னதி - இது
ஐயம் தீர்க்கும் சன்னதி
சிந்தை கவரும் சன்னதி - எங்கள்
சிலன் வாழும் சன்னதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரம் கமழும் சன்னதி - எங்கள்
மலையாள தேவன் சன்னதி
மணிகண்ட நாதன் சன்னதி - எங்கள்
மக்கள் கூடும் சன்னதி
கற்பூரம் கமழும் சன்னதி - எங்கள்
நெய் வழுக்கும் சன்னதி
சந்தனம் மணக்கும் சன்னதி - எங்கள்
சாஸ்தா வாழும் சன்னதி

பந்தள குமரன் சன்னதி - தூய
பக்தர்கள் நாடும் சன்னதி
சந்தடி நிறைந்த சன்னதி - எங்கும்
சரணம் கேட்கும் சன்னதி

புகழைப் பாடும் சன்னதி - நல்ல
அருளைப் பொழியும் சன்னதி
மகிழ வந்து பாருங்கள் - நல்ல
மனமும் உயர்ந்து வாழுங்கள்

## அந்த மலை இந்த மலை

அந்தமலை இந்த மலை சாமி நிம்மதிக்கு எந்த மலை
சந்நிதியைத் தாங்கும் மலை எங்க ஐயப்பனின் சபரிமலை
ஆறுதலை அள்ளித்தரும் ஐந்து மலை அந்த மலை
சாமிமாரே கன்னிமாரே சரணம் போடுங்க
அங்கே சத்தியத்தின் ஜோதிகாண ஓடிவாங்க
சாமி தித்தகத்தோம் ஐயப்பன் நித்தகத்தாம்
சாமி நித்தகத்தோம் ஐயப்பன் தித்தத்தோம்

அந்தமலை இந்த மலை சாமி நிம்மதிக்கு எந்த மலை
சந்நிதியைத் தாங்கும் மலை எங்க ஐயப்பனின் சபரிமலை
அழுதைமலை ஏற்றத்திலே அழுதாலும் ஆனந்தமே
தொழுது நின்றால் தீவினைதான் தீண்டவருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கரிமலை ஏற்றத்திலே கண்ணிரும் தித்திக்குதே
காணிக்கைதான் எல்லாமே சரண கோஷம்தான்
எருமேலி பேட்டை துள்ளி சரங்குத்தி ஆலடைந்த
சந்தோஷம்தான் நெஞ்சுக்குள்ளே சந்தம் பாடுது
பெரும் சந்தோஷம்தான் நெஞ்சுக்குள்ளே சந்தம் பாடுது

சாமி தித்தகத்தோம் ஐயப்பன் தித்தகத்தோம்
சாமி தித்தகத்தோம் ஐயப்பன் தித்தகத்தோம்

அந்தமலை இந்த மலை சாமி நிம்மதிக்கு எந்த மலை
சந்நிதியைத் தாங்கும் மலை எங்க ஐயப்பனின் சபரிமலை
ஆறுதலை அள்ளித்தரும் ஐந்து மலை அந்த மலை
சாமிமாரே கன்னிமாரே சரணம் போடுங்க
அங்கே சத்தியத்தின் ஜோதிகாண ஓடிவாங்க

நீலிமலை ஏற்றத்திலே நீண்டதூரம் நடந்தாலும் கால்களுக்கு
புயலைப்போல என்ன வேகம்தான்
அந்த சபரிமலை சந்நிதியில் வணங்கும் போது பட்ட துன்பம்
எல்லாமே இப்போதே பறந்துபோகுதே
பம்பாநதி தீர்த்தமாட காந்தமலை ஜோதி காண
கண்ணோரம்தான்
பன்னீரைத்தான் தூறல் போடுதே
என் கண்ணோரம்தான் பன்னிரைத்தான் தூறல் போடுதே

## சுவாமியே சரணம் ஐயா

சுவாமியே சரணம் ஐயா
தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா
அனுதினம் பூஜை செய்தோம் - ஐயனே
உமக்கு அனந்தகோடி நமஸ்காரம், நமஸ்காரம் நமஸ்காரம் (சுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்புலி மீதினிலே ஏறி வீரமணி கண்டனே வா
உன் வீர விளையாடல்களைக் காண வாணிதடை கூறவில்லை
(சுவாமியே)

கொஞ்சி கொஞ்சி பேசி உந்தன் பிஞ்சுமொழி கேட்டிடவே
அந்த பந்தளத்தோர் செய்த தவம்
இந்த பாமரர் நாம் செய்யவில்லையோ (சுவாமியே)

பாலெடுக்கப் புலி எதற்கோ உங்கள் பார்வையின்ப சக்தி அற்றதோ
உன் பார்வையொன்றே போதுமய்யா
உடனே பால்பொழிய வேண்டுமய்யா (சுவாமியே)

வில்லும் அம்பும் கையில் எதற்கோ அந்த வாவரை
நீ வெற்றிகொள்ளவா பக்தர்களின் துயாகளையே
நீங்கள் வேட்டையாடி விரட்டிடவே
(சுவாமியே)

காந்தமலை ஜோதி தனை அந்த காந்தம் என்னை இழுக்குதய்யா
அதைக் காமக்கொடி நாதன் உருவில்
காண அருள் வேண்டுமய்யா
(சுவாமியே)

## என்ன மணக்குது

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே

வலலி மலர் வாசமது எங்கே மணக்குது
அரிஹர புத்திரனின் மேலே மணக்குது

மல்லிகைப்பூ வாசமது எங்கே மணக்குது
மஹிஷி மர்த்தனின் மேலே மணக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைமலர் வாசமது எங்கே மணக்குது
முகுந்தனின் மைந்தனின் மேலே மணக்குது

சம்பங்கி வாசமது எங்கே மணக்குது
முகுந்தனின் மைந்தனின் மேலே மணக்குது

அத்தரும் பன்னீரும் எங்கே மணக்குது
அச்சன் கோவில் பாலகனின் மேலே மணக்குது

சந்தனத்து வாசமது எங்கே மணக்குது
சண்முகன் தம்பியின் மேலே மணக்குது

சாம்பிராணி வாசமது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னிதியில் தானே மணக்குது

கற்பூர ஜோதியது எங்கே தெரியுது
காந்தமலை வாசனின் முன்னே தெரியுது

விபூதி வாசமது எங்கே மணக்குது
விநாயகன் தம்பியின் மேலே மணக்குது

பக்தியின் வாசமது எங்கே மணக்குது
பந்தள பாலனின் மேலே மணக்குது

நெய்யபிஷேகம் எங்கே தெரியுது
சாஸ்தாவின் சன்னதியில் தானே தெரியுது

சரண கோஷ சத்தமது எங்கே ஒலிக்குது
சாஸ்தாவின் சன்னதியில் தானே ஒலிக்குது

புதினெட்டுப்படிகள் எங்கே இருக்குது
சபரிமலை வாசனின் முன்னே இருக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தள்ளாடி தள்ளாடி

தள்ளாடி தள்ளாடி நடை நடந்து நாங்கள்
சபரிமலை நோக்கி வந்தோமய்யா (தள்ளாடி)

கார்த்திகை நல்ல நாளில் மாலையும் போட்டுக்கிட்டு
காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா! சாமியே)
சரணங்கள் சொல்லிக்கொண்டு வந்தோமய்யா நாங்கள்
சபரி மலை நோக்கி வந்தோமய்யா நாங்க
சபரி மலை நோக்கி வந்தோமய்யா (தள்ளாடி)

இருமுடியைக் கட்டிக்கிட்டு இன்பமாய் பாடிக்கிட்டு
ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்தை தேடிக்கிட்டு
பேட்டைகளும் துள்ளிக்கிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு
வேடிக்கையாக நாங்கள் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு
(சாமி திந்தகத்தோம். ஐயப்பா திந்தகத்தோம்) (தள்ளாடி)

காணாத காட்சியெல்லாம் கண்குளிரக் கண்டுக்கிட்டு
காடு மலைகளெல்லாம் கால் நடையாய்த் தாண்டிக்கிட்டு
பம்பையில் குளித்து விட்டு பாவமெல்லாம் போக்கிக்கிட்டு
பக்தரெல்லாம் கூடி நின்று பஜனைகள் செய்துக்கிட்டு
(சாமியே ஐயப்பா! ஐயப்பா சாமியே என)
பஜனைகள் செய்துக்கிட்டு வந்தோமய்யா (தன்னாடி

நீலிமலை ஏற்றத்திலே நின்று நின்று ஏறிக்கிட்டு
நெஞ்சம் உருகி உன்னை நினைச்சுமே பார்த்துகிட்டு
படியேறிப் போகும் போது பாங்கான காய் உடைத்து
பாலனான உன்னையே பார்த்துப் பார்த்து சொக்கிக்கிட்டு
நெய்யிலே குளிக்கும்போது நேரிலேயே பார்த்துகிட்டு
ஐயப்பா சரணம் என்று ஆர்ப்பரித்துப் பாடிக்கிட்டு
(தன்னாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டும் கட்டு பள்ளிக்கட்டு

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கின்னு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கின்னு
அஞ்சுமலை அழகா - ஐயா அஞ்சு மலை அழகா
எங்கள் நெஞ்சில் அழகா - வந்து தங்கிட வாருமய்யா
மாலை போட்டு மனபாரம் போனதய்யா
காவி போட்டு கனகாமம் பறந்ததய்யா
காரணம் நீயில்லையா

(கட்டு கட்டு பள்ளிக்கட்டு)

நோன்போடு நாமிருந்தோம் - நோயோடிப் போனதய்யா
சூடம் கொழுத்திக்கிட்டோம் - சூது மறைந்ததய்யா
சந்தனம் பூசிக்கிட்டோம் - சாந்தி கெடச்சதய்யா
தண்ணி தெளிச்சிக்கிட்டோம் - பக்தி வளர்ந்ததய்யா
நாடாளும் ராசாவே சத்தியம் நிச்சயம் நீயே

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
(அஞ்சுமலை அழகா)

பம்பா நதி குளிச்சோம் பாவம் தொலைஞ்சதய்யா
நீலிமலையடைஞ்சோம் நிம்மதி வந்ததய்யா
சாமி உன் சன்னதியில் சஞ்சலம் தீர்ந்ததய்யா
ஜோதி தரிசனத்தில் ஆவி குளிர்ந்ததய்யா
நாடாளும் ராசாவே சத்தியம் நிச்சயம் நீயே

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
(அஞ்சுமலை அழகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மணக்குது

சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா
எங்கே மணக்குது சந்தனம் எங்கே மணக்குது
ஐயப்ப சாமி கோயிலிலே சந்தனம் மணக்குது
என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது
இன்பமான ஊதுவத்தி எங்கே மணக்குது (எங்கே)

என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது
நீல மணிகண்டன் சந்நிதியில் நெய்யும் மணக்குது
திருநீறும் மணக்குது - பன்னீரும் மணக்குது
ஆண்டவனின் சந்நிதியில் அருளும் மணக்குது
ஐயன்மார்கள் உள்ளத்திலே அன்பும் மணக்குது (எங்கே)

பள்ளிக்கட்ட சுமந்துக்கிட்டா பக்தி பிறக்குது
அந்த பனிமலையில் ஏறிடவே சக்தி இருக்குது
பகவானை பாத்துப்புட்டா பாவம் பறக்குது
பகவானை பாத்துப்புட்டா பாடம் முடியுது
பதினெட்டாம் படிதொட்டா வாழ்வும் இனிக்குது (எங்கே

பேட்டை துள்ளி ஆடும் போது மனமும் துள்ளுது
ஐயன் பெரும் புகழைக் காண உள்ளம் ஆசை கொள்ளுது
காட்டுக்குள்ளே சரணகோஷம் வானைப் பிளக்குது
சாமியே சரணம் ஐயப்பா
வீட்டை மறந்து மக்கள் கூட்டம் காட்டில் இருக்குது (எங்கே)

பூங்காவனத் தோப்புக்குள்ளே பவனி வருகிறான்
ஐயன் வேங்கை மேல் ஏறி வந்து நலமும் கொடுக்கிறான்
நோன்பிருந்து வருவோரைக் காத்து நிற்கிறான்
ஓங்கார நாதத்திலே எழுந்து வருகிறான் (எங்கே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவருமில்லே இவருமில்லே

அவருமில்லே இவருமில்லே ஐயப்பா - எங்க ஆதரவே
நீங்க தானே ஐயப்பா
கட்டும் முடி கட்டி விட்டோம் - ஐயப்பா
எங்க கவனமெல்லாம் சபரிமலை ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

நல்ல குரு நாதனப்பா - ஐயப்பா
உங்கள நம்பி சரண் புகுந்துவிட்டோம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

நாற்பது நாள் விரதம் வச்சோம் ஐயப்பா
எம்மைக் காப்பது உன் கடமையப்பா ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

வீடு வாசல் மறந்து விட்டோம் ஐயப்பா
ஜோதி விளையாட்டுப் பார்க்க வந்தோம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

காடு களனி பறந்து புட்டோம் ஐயப்பா
சபரிக்காடு மட்டும் நெனச்சிப் புட்டோம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

குதிரை போல வாகனந்தான் ஐயப்பா
நாங்க குந்தி வாரோம் உன் பொறுப்பு ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

சாரதியாம் காரோட்டி ஐயப்பா
அவன் உன்னைப் போல கவனக்காரர் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

கன்னிசாமி கடுத்தசாமி ஐயப்பா
நாங்க கலவையான கூட்டம்பா ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுப்பாடி பஜனை பாடி ஐயப்பா
நாங்க ஊருபல தாண்டி வாரோம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

வாழக்கை ஒரு மேடு பள்ளம் ஐயப்பா
இந்த வழியில் கூட இருக்குப்படி பாரப்பா
(அவருமில்லே இவருமில்லை)

மலையாள தரையைத் தொட்டு ஐயப்பா
நாங்க அடைமழையா கௌம்பி வாரோம் ஐயப்பா
(அவருமிலலே இவருமில்லை)

அம்பலங்கள் பலவும் தொட்டு ஐயப்பா
நாங்க அம்பு போல சீறி வாரோம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

உண்பலம்தான் பெரியதப்பா ஐயப்பா
இதை உணர்த்துதப்பா உன் பயணம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

கோட்டை எட்டைத் தாண்டுகிறோம் ஐயப்பா
உன் பாட்டே இப்போ பலமாச்சு ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)

எருமேலி வந்திடுச்சே ஐயப்பா
நாங்க எகிறி விளையாட நேரம் கொண்டாப்பா
(அவருமில்லே இவருமில்லை)

பெரிய பாதை திறக்குதப்பா ஐயப்பா
நாங்க காடு போல கூட வாரோம் ஐயப்பா
(அவருமில்லே இவருமில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோகினி தன் மோகன...

மோகினி தன் மோகன பாலகனல்லே
அந்த மாமலையில் ஜொலிக்கும் மாணிக்கமல்லே (2தடவை)
மகிஷியை வதம் செய்த மன்னவனல்லே
நாங்கள் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் நீயல்லே
பத்தள ராஜாவின் பாலகனல்லே
எங்கள் பரந்தாமன் புத்திரனவன் நீயும் மாணிக்கமல்லே
(மோகினி)

லல்லல்னெ லாலல்லோன ஐயப்பனல்லே
புலிப்பால் கொணர்ந்த புண்ணியனல்லே
மன்னாதி மன்னன் நீயும் மதிமுகனல்லே
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீயல்லே - ஐயப்பா
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீயல்லே
மோகினி

## மணிகண்ட நாயகனே

மணிகண்ட நாயகனே ஐயப்பா ஐயப்பா
மலர் தூவி பூஜை செய்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட

கார்த்திகையின் திங்களிலே ஐயப்பா ஐயப்பா
நோன்பிருந்து பூஜை செய்தோம் ஐயப்பா ஐயப்பா
துளசிமணி மாலை கட்டி ஐயப்பா ஐயப்பா
தோத்திரங்களை பாடிவந்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட

பம்பை நதி நீராடி ஐயப்பா ஐயப்பா
இருமுடியை சுமந்து வந்தோம் ஐயப்பா ஐயப்பா
பதினெட்டுப்படியேறி ஐயப்பா ஐயப்பா
பாதம் காண ஓடிவந்தோம் ஐயப்பா ஐயப்பா (மணிகண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமன் சோதரனே ஐயப்பா ஐயப்பா
கணபதியின் சோதரனே ஐயப்பா ஐயப்பா
காடுதனில் வீடுகொண்ட ஐயப்பா ஐயப்பா
மேடு பல தாண்டிவந்தோம் ஐயப்பா ஐயப்பா (மணிகண்ட

நெய்விளக்கு ஏற்றிவந்தோம் ஐயப்பா ஐயப்பா
கைகொண்டு காப்பவனே ஐயப்பா ஐயப்பா
நெய்நிறைந்த தேங்காயை ஐயப்பா ஐயப்பா
மெய்யுருகி படைத்து வைத்தோம் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட

கோபுரத்தின் மீதினிலே ஐயப்பா ஐயப்பா
கருடன் வந்து வட்டமிட ஐயப்பா ஐயப்பா
கோயில் மணி நாதத்துடன் ஐயப்பா ஐயப்பா
கோஷம் விண்ணை மோதுதையா ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட

சபரிமலை ஆண்டவனே ஐயப்பா ஐயப்பா
சந்ததியைக் காத்தருள்வாய் ஐயப்பா ஐயப்பா
(மணிகண்ட

## ஐயப்பனே ஐயப்பனே

ஐயப்பனே ஐயப்பனே ஓடிவா
ஆதிசிவன் புத்திரனே ஆடிவா எங்க
மெய்யப்பனே மெய்யப்பனே ஓடிவா தும்பிக்
கையப்பனின் தம்பியே நீ ஆடிவா (ஐயப்பனே)

பம்பா நதி குளிச்சு வந்தோம் ஓடிவா
பாதையெல்லாம் காவலுக்கு கூடவா எங்க
அழுதாமலை ஏறி வந்தோம் ஓடி வா எங்க
ஆவலெல்லாம் உன் முகமே கூடவா ஐயப்பனே

சந்தனத்த கொழச்சு வந்தோம் ஓடிவா
சாத்தினமே மேனியெல்லாம் ஆடிவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமத்த எடுத்து வந்தோம் ஓடிவா
கோலம்போட்டு பாக்கணுமே ஆடிவா

நெய்யுருக்கி எடுத்து வந்தோம் ஓடிவா
மெய்யுருகிப் படைக்கணுமே ஆடிவா
கற்பூரம் கொழுத்த வந்தோம் ஓடிவா
கண்குளிரக் கண்டு தொழ ஆடிவா

## இருமுடி கட்டு

இரு முடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு
ஐயப்பா ஆ சுவாமியே ஆ
ஐயப்பா ஆ சுவாமியே ஆ
இருமுடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு 2

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா 2 (இருமுடி கட்டு)

தாயவள் தலை வலி தீரவே
வரிப்புலி, தேடியே சென்றான் மா மணிகண்டன்
வன் புலிகள் கூட்டம் தனியாய் கூட்டி வந்தான் 2

இரு முடி கட்டு சபரி மலைக்கு
நெய் அபிஷேகம் மணிகண்டனுக்கு
சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா 2
(இருமுடி கட்டு)

கானகம் போய்த் திரும்பி, கலியுக வரதனாய்
காட்சியும் தந்தான் மா மணிகண்டன்
விண்ணவர்கள் கூட்டம் தன்னையே
கூட்டி வந்தான் இருமுடிகட்டு 2

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தகடன் தீரவில்லை

வந்தகடன் தீரவில்லை சொந்தக்கடன் ஓயவில்லை
எந்தக்கடன் தீர்ப்பதற்கு என்னைப் படைத்தாய் - ஐயா
ஏழைகள் அழுவதற்கோ கண்ணைப்படைத்தாய் - ஐயா
ஐயப்பா - ஐயப்பா

வாழ்வதற்கு பட்ட கடன் அப்பப்பா - இங்கு
வருவதற்கு கடன் வாங்கி வந்தேனப்பா
வந்தகடன் தீரவில்லை
தாய்ப்பாசம் தந்தைக் கடன் தீராது
ஒரு ஜென்மம் உழைத்தாலும் போதாது
தோள் கமந்து தந்தைக் கடன் தீராது
என்னும் மறு ஜென்மம் எடுத்தாலும் மறையாது
கடலிடம் வானம் கடன் கொண்டு நீரை
மழையாக பொழிந்தாலும் நிறையாது
சரிமலை நாதன் கருணையின் கடனை
கண்ணீரால் அணைத்தாலும் அணையாது
ஐயப்பா - மெய்யப்பா

வந்தகடன் தீரவில்லை

பொன் பொருள் வாங்கி குவித்தாலும்
பொன்னம்பல கடன் தீர வழி ஏது
கண்ணீரை தண்ணீராய் இறைத்தாலும்
ஜென்ம பாவம் கடன் சொல்லி மாளாது
இருமுடி தாங்கி திருவடி நாடும்
கடன் தீர்க்க வருடங்கள் போதாது
வரும் ஜென்மம் எல்லாம் வனம் தாண்டி
வந்து பணிந்தாலும் கடன் பாரம் ஓயாது
ஐயப்பா மெய்யப்பா

வந்தகடன் தீரவில்லை ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பா தேவா

ஐயப்பா தேவா நீ எங்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

மணிகண்ட தேவா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

வில்லாளி வீரா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

வீர் மணிகண்டா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

அச்சங்கோலில் அரசா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

ராஜாதி ராஜா நீ எக்கப் போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

தேவாதி தேவா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போற சாமி இக்கடவா ஐயா

## சாஸ்தா என்றழைக்கவா

சாஸ்தா என்றழைக்கவா - சபரிவாசா என்றழைக்கவா
ஐயா என்றழைக்கவா ஐயப்பா என்றழைக்கவா
எப்படி அழைப்பேன் - உன்னை எங்கே காண்பேன் (சாஸ்தா)

சபரிமலை தேடி வந்தேனப்பா
சாஸ்தா என்றுன்னை அழைத்தேனப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை ஒழித்தின்பம் தருவாயப்பா
கந்தன் பின்வந்த கலையேயப்பா (சாஸ்தா)

விரதம் உனக்காக இருந்தேனப்பா - மன
வீட்டில் உனையெண்ணி மறந்தேனப்பா
குரோத எண்ணங்கள் ஒழித்தேனப்பா - என்
குவிந்த கரம்கண்டு அருள்வாயப்பா

கல்லோடும் முள்ளோடும் நடந்தேனப்பா - என்
கருத்தோடு நீநின்று கலந்தாயப்பா
சொல்லாலே உன்புகழைச் சொன்னேனப்பா - நான்
சுகமோடு வாழ்வதற்கு வழி சொல்லப்பா (சாஸ்தா)

## ஆடிவா அழகா பொன்னையப்பா

ஆடிவர வேண்டுகிறேன் அழகனே பொன்னையப்பா
அசைந்தருகே வரவேண்டும் சாமியே பொன்னையப்பா
அன்புக்கரம் கொண்டு என்னை சாமியே பொன்னையப்பா
இன்பமுற நீ அணைப்பாய் சாமியே பொன்னையப்பா
(ஆடிவா)

கருணைக்கண் திறந்து - என்னை சாமியே பொன்னையப்பா
கனிவுடனே பார்த்திடுவாய் சாமியோ பொன்னையப்பா
மோகனப் புன்னகையில் சாமியே பொன்னையப்பா
உள்ளம் உருகிநின்றேன் சாமியே பொன்னையப்பா (ஆடிவா)
கொஞ்சும் திருவாய் மலர்ந்து சாமியே பொன்னையப்பா
அஞ்சேல் என்று அருள்புரிவாய் சாமியே பொன்னையப்பா
தஞ்சம் என்று நானடைந்தேன் சாமியே பொன்னையப்பா
சஞ்சலமே தீர்த்திடுவாய் சாமியே பொன்னையப்பா
(ஆடிவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததமும் உன்நினைவே சாமியே பொன்னையப்பா
பத்தவினை போக்கிடுவாய் சாமியே பொன்னையப்பா
நான் என்பதை தானழித்து சாமியே பொன்னையப்பா
நல்லதையே நாடவைப்பாய் சாமியே பொன்னையப்பா
(ஆடிவா)

பொல்லாததைப் போக்கி வைத்து சாமியே பொன்னையப்பா
போற்றச் செய்வாய் உன் சரணம் சாமியே பொன்னையப்பா உருகி
உருகி நெகிழ நெஞ்சம் சாமியே பொன்னையப்பா
வருக வருக என்றழைத்தேன் சாமியே பொன்னையப்பா
(ஆடிவா)

## பம்பா நதிக்கரையின் சாமி

பம்பா நதிக்கரையின் சாமி
உன்னால் சுழலுதிந்த பூமி
உன்தாழ் சரணமய்யா சாமி
ஐயா திருமுகத்த சாமி பம்பா

காந்த மலையிருக்கும் சாமி
கண்டா மனங்குளிரும் சாமி
எங்க சபரிமலை சாமி
ஐயா சரணமய்யா சாமி பம்பா

சிங்கம் கரடி புலி காடு
தங்கும் இடத்தில் உந்தன் வீடு
வந்தோம் கடந்து பல மேடு
கொண்டோம் பலனும் கைகளோடு பம்பா
கந்தன் கஜமுகனின் தம்பி
உந்தன் திருவருளை நம்பி
கட்டி இருமுடியை ஏந்தி
கண்டோம் மகரமணி ஜோதி பம்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையம் புகழுகின்ற வாசா
நெய்யால் குளிக்கும் எங்கள் நேசா
ஐயா உனது முகம் பார்த்தா
நெஞ்சில் மலருதய்யா ரோசா பம்பா

அல்லும் பகலும் உன்னைத் தானே
ஐயா தொழுது நின்றோம் நாமே
மெய்யே உனதடிமை சாமி
ஐயம் எனக்கு இல்லை சாமி பம்பா

## தேவன் நீயது

தேவன் நீயது நியமமப்பா
பாலகனாகிய ஐயப்பா
என்றும் நீயே ஐயப்பா
காப்பாய் மெய்யப்பா

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சாமி சரணம்
அரிஹர சரணம் ஐயப்பா சரணம்
கார்த்திகை மாதம் ஐயப்பா
மாலை அணிந்தோம் மெய்யப்பா
மார்கழி மாதம் ஐயப்பா
மாலை அணிந்தோம் மெய்யப்பா
மார்கழி மாதம் புறப்பட்டோம்
மணிகண்டன் உன்னைக் காணவந்தோம் (சரணம்)

கல்லும் முள்ளும் பாதையிலே
இரு முடி தலையில் சுமந்து வந்தோம்
சரணம் சரணம் என்றாலே
கல்லும் முள்ளும் பூவாகும் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்யபிஷேகம் உனக்கப்பா
தேனபிஷேகம் உனக்கப்பா
பால் அபிஷேகம் உனக்கப்பா
மாமலைவாசா ஐயப்பா சரணம்

## சந்தனமுனா சந்தனம்

சந்தனமுனா சந்தனம்
சபரிமலை சந்தனம் - அந்த
சந்தனத்த பூசிக்கிட்டு
சரணம் கோஷம் போடுங்க
அத்தருனா அத்தரு
அழுதமலை அத்தரு - அந்த
அந்தரத்தான் பூசிக்கிட்டு
ஆனந்தமா ஆடுங்க
பன்னீருனா பன்னீரு
பம்பா நதி பன்னீரு - அந்த
பன்னீர்தான் தெளிச்சுகிட்டு
பாவங்களைப் போக்கிடுங்க
குங்குமமா குங்குமம்
குளத்துப்புழை குங்குமம்
குங்குமத்தை வைச்சுக்கிட்டு
கூட்டமா ஆடுங்க
சத்தியமான படியுங்க
ஐயப்பன் பகவான் வேண்டுங்க
படியில் தேங்காய் உடையுங்க
பகவான் வேண்டுங்க
நெனச்சதெல்லாம் தருவார் நம்ம
நீலிமலை வாசனுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கசாமி

எங்கசாமி தங்கசாமி ஐயப்பசாமி - அந்த
சபரிமலை மீதிருக்கும் மெய்யப்பசாமி
சஞ்சலங்கள் தீர்த்து வைக்கும் ஐயப்பசாமி - எங்க
சரணகோஷம் கேட்டுவரும் மெய்யப்பாசமி குரு (எங்)

பம்பா நதிக்கரையில் ஐயப்பசாமி - எங்க
பாவங்களை தீர்த்து வைக்கும் மெய்யப்பசாமி
காந்தமலை மீதினிலே ஐயப்பசாமி - எங்க
மனங்குளிர காட்சி தரும் மெய்யப்பசாமி குரு (எங்)

நெய்யாலே குளிச்சிடுவான் ஐயப்பசாமி - எங்க
நெஞ்சினில் நிறைந்திடுவான் மெய்யப்பசாமி
கனிவோடு காத்தருளும் ஐயப்பசாமி - எங்க
கண்ட கண்ட தெய்வம் நீயே மெய்யப்பசாமி குரு (எங்)

## வந்தோமையா சபரி வந்தோமையா

வந்தோமையா சபரி வந்தோமையா
கட்டேந்தி சபரிக்கு வந்தோமையா
கார்த்திகை நல்ல நாளில் மாலையிட்டு
மார்சழி நல்ல நாளில் கட்டும் கட்டி (வந்தோ)

குங்கும பொட்டு சந்தனப் பொட்டு வைச்சுக்கிட்டு
கூட்டமாக சபரிமலை ஏறிக்கிட்டு
சாமி சரணம் நாமம் அதை சொல்லிக்கிட்டு
சாமியே திந்தமிக்க ஐயப்பா திந்தமிக்க
ஜிகு தாளம் போட்டுக்கிட்டு பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
(வந்தோ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டானை கூட்டத்த பார்த்துவிட்டு
கடுவாய் புலிகளையும் நோக்கிக்கிட்டு
சாமி சரணம் நாமம் அதை சொல்லிக்கிட்டு
சாமியே தித்தமிக்க ஐயப்பா திந்தமிக்க
ஜிகு தாளம் போட்டுக்கிட்டு பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
(வந்தோ)

## பவனி வருகிறார்

பவனி வாராரிங்கே சுவாமி சரணம் ஐயப்பா
வாவர் சுவாமி கூடவாரார் சரணம் ஐயப்பா
காவலர்கள் கூடவாரார் சரணம் ஐயப்பா
ஆவலோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா

அம்பும் வில்லும் கையிலேந்தி சுவாமி வருகிறார்
எம்பெருமான் துள்ளி துள்ளி ஆடி வருகிறார்
கடகடவென பேரி முழங்க சுவாமி வருகிறார்
கொட்டு வாத்தியம் முழங்கிவரவே ஐயன் வருகிறார்
மாடன் சடையன் காத்திடவே சரணம் ஐயப்பா
ஓடிவரவே சுவாமியே சரணம் ஐயப்பா

மின்னல் போல ஒளிவிளங்க சரணம் ஐயப்பா
பொன்னுமேனி கண்டிடவே சரணம் ஐயப்பா
தனிச்சிலம்பு சல்லடையும் சுவாமி ஐயப்பா
கலகவென சலங்கை குலுங்க பவனி வருகிறார்

பின்ளையில்லாக் குறையால் உள்ளம் வருந்தும் பக்தரை
உள்ளமிரங்கி கருணைகாட்டி பாரும் ஐயப்பா
வள்ளலென்று பெயர் விளங்கும் எங்கள் ஐயப்பா
அள்ளி அள்ளி தந்திடுவார் கவாமி ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் பணியில் கொடுமையினால் வருந்தும் அன்பரை
நொடிப் பொழுதினில் பிணியகற்றி காத்தருளையா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சாமியே சரணம்

## குளத்துப் புழை பாலகன்

குழந்தைகளே குழந்தைகளே எங்கே போறீங்க
குழந்தை மணிகண்டனைப் பார்க்க போறீங்க
அணில்களே அணில்களே எங்கே போறிங்க
அச்சங்கோவில் அரசனைப் பார்க்க போறிங்க
குருவிகளே குருவிகளே எங்கே போறீங்க
குளத்துப்புழை பாலகனை பார்க்க போறிங்க
எறும்புகளே எறும்புகளே எங்கே போறிங்க
எரிமேலி சாஸ்தாவை பார்க்க போறீங்க
காளைகளே காளைகளே எங்கே போறீங்க
காளைகட்டி ஈசனை பார்க்க போறீங்க
நாகங்களே நாகங்களே எங்கே போறீங்க
நாக ராஜனைப் பார்க்க போறீங்க
சாமிகளே சாமிகளே எங்கே போறீங்க
சபரிமலை சாஸ்தாவை பார்க்க போறீங்க

## இருமுடியை சுமந்து வந்தேன்

இருமுடியை சுமந்து வந்தேன் இரக்கமில்லையா
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா (இரு)

அழுதையிலே குளித்து வந்தேன் அறியவில்லையா
அருகே ஓர் கல்லடுத்தே வைக்கவில்லையா
கரிமலையில் ஏறிவந்தேன் காணவில்லையா - அந்த
கருடன் என்னைக் கண்டதாகச் சொல்லவில்லையா (இரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பையில் குளித்து வந்தேன் பார்க்கவில்லையா
பம்பாநதி போஜனம் நீ அருந்தவில்லையா
பம்பையிலே விளக்கெடுத்தேன் காணவில்லையா
பகவானே உனக்கு கூட சாட்சி தேவையா

பதினெட்டுப் படிகளேறி வரவுமில்லையா - நான்
படித்தேங்காய் உடைத்த சப்தம் கேட்கவில்லையா
கொடிமரத்தை சுற்றிவந்தேன் காணவில்லையா - அங்கே
கூடிநின்ற ஜனங்களைப் போய்க் கேட்டுப்பாரய்யா

நெய்யபிஷேகம் செய்தேன் நினைவுமில்லையா - நான்
மெய்யுருகிப் பாடியதும் கேட்கவில்லையா
ஐயா உன் சரணமென்றே கூறவில்லையா - நீ
விஸ்வமெல்லாம் காத்தருளும் ஜோதியல்லவா

இருமுடிப் பிரியனே சரணம்

## எங்கே எங்கே

எங்கே எங்கேயென்று எங்கேயெல்லாம் தேடுவேன்
பம்பாவாச பந்தளராச எப்போது நான் காணுவேன்
காற்றினில் நீ எங்கு கரைந்து சென்றாயோ
கண்களில் நீரென கரைந்து நின்றாயோ
ஐயா உன்னை ஆராதனை செய்ய
சாயாத விழியோடு ஓயாமல் நான் நின்று (எங்கே)

செவ்வானிலெயேனும் அதிகாலையில்
சூரிய ரேகையில் நான் தேடினேன்
சிந்தாமணிப் பூவின் சிந்தும் பனி
ஒவ்வொரு துளியிலும் நான் தேடினேன்
கீழ்க்கட்டி லுண்டான குயில் பாட்டிலும்
நீ வாழுமிடம் தேடி நான் ஓடினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில் தோகையிலும் மன்ன மன கூட்டிலும்
பாட்டாகப் பறந்தோடி முகம் வாடினேன்
ஐயா உன்னை ஆராதனை செய்ய
சாயாத விழியோடு ஓயாமல் நான் நின்று (எங்கே )

கண்ணீரிலே சின்னத் துளித்தாரைகள்
கன்னத்தில் வழிந்தோட கடன் தேடினேன்
நெஞ்சோரமே அந்த நீரின் துளி
வலம் போட வழியெங்கும் அலைந்தோடினேன்
நெடுநேரமா சபரி மலை யோரமே
நில்லாம நினைவோடு உன்னைப் பாடினேன்
தொடுவானமே எனை தொடுமென்றுதான்
நிலவாகி நதியாகி தெளிந்தோடினேன்
ஐயா உன்னை ஆராதனை செய்ய
சாயாத விழியோடு ஓயாமல் நான் நின்று (எங்கே)

## தாலாட்டுப் பாடவா

தாலாட்டுப் பாடவா
தாளம் தட்டி ஆடவா
கோலாட்டம் அடிக்கவா
கும்மி பல கொட்டவா (தாலாட்டு)

அச்சங்கோவில் அரசனாம்
அச்சம் தீர்க்கும் தெய்வமாம்
ஆரியங்காவு ஐயனாம்
ஆதரிக்கும் தெய்வமாம் (தாலாட்டு)

குளத்துப்புழைப் பாலனாம்
குறைகளையும் தீர்ப்பவனாம்
எருமேலி நாதனாம்
எங்கள் குல தெய்வமாம் (தாலாட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாபர் சுவாமி தோழனாம்
வன்புலியின் வாகனனாம்
காளை கட்டி நாதனாம்
காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

அழுதமலை ஏற்றமாம்
அழுதமலை இறக்கமாம்
கரிமலையின் ஏற்றமாம்
கரிமலையின் இறக்கமாம் (தாலாட்டு)

பம்பை யாளும் சோதியாம்
பந்தளத்து வேந்தனாம்
நீலிமலை ஏற்றமாம்
நித்திய பிரம்மச் சாரியாம் (தாலாட்டு)

சின்னக் கறுப்பன் சாமியாம்
பெரிய கறுப்பன் சாமியாம்
பதினெட்டாம் படிவானான்
பக்தர் குறை தீர்ப்பானாம் (தாலாட்டு)

ஜெகதி சேகப் பிரியனாம்
நீலவஸ்திர தாரியாம்
மாளிகைப் புரத் தம்மையாம்
பஞ்சமாதா தேவியாம் (தாலாட்டு)

காந்தமலை ஜோதியாம்
காத்தருளுந் தெய்வமாம்
காத்தமலை ஜோதியாம்
காத்தருளும் தெய்வமாம் (தாலாட்டு)

தாலாட்டுப் பாடவா
தாளம் தட்டி ஆடவா
கோலாட்டம் அடிக்கவா
கும்மி பல கொட்டவா (தாலாட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைத் தோழனென்பதா

உன்னைத் தோழனென்பதா உயிர் நண்பனென்பதா
குரு நாதனென்பதா குல தெய்வமென்பதா
சிவபாலனென்பதா அரி மைந்தனென்பநா
அதிரூப் அலங்காரமான சபரி ஆண்டவா (உன்னை தோழன்

கருவோடு என்னை ஜீவன் தந்த சுவாசமென்பதா
ஒரு தாயின் வடிவில் தாங்கி நின்ற பாசமென்பதா?
ஒரு தோளில் தாங்கி பாதை சொன்ன தந்தை என்பதா
உனை ஜாதியெனும் பாடம் தந்த நாதனென்பதா
(உன்னை தோழன்

ஒரு ராஜ்யத்தை ஆளவந்த வேந்தனென்பதா
புலி மீது ஏறவில்லை எந்தும் வேடனென்பதா
ஒரு ராஜ்யத்தை ஆளவந்த வேந்தனென்பதா
உனை ஜாதியெனும் பாடம் தந்த நாதனென்பதா
(உன்னை தோழன்

## சரணம் சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சாமி சரணம் ஐயப்பா 2தடவை
வரணும் வரணும் ஐயப்பா
மலரடி தொழுதேன் ஐயப்பா (சரணம் சரணம்)

சாமி சரணம் ஐயப்பா
சக்தி கொண்ட மெய்யப்பா
பூமி காக்கும் ஐயப்பா
பூலோக வாழ்வே உனதப்பா (சரணம் சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கு ஒரு முறை வருகின்றோம்
உந்தன் அழகு தரிசனம் பெறுகின்றோம்
வேண்டிய வரத்தை தருகின்றாய்
எங்கள் வேதனை யாவும் தீர்க்கின்றாய் (சரணம் சரணம்)

காலையும் மாலையும் நீராடி
எங்கள் கண்மலராலே கொண்டாடி
மாலையணிந்த அடியவர்கள்
உந்தன் மலையை கடந்தே வருகின்றோம் (சரணம் சரணம்)

புலிப்பால் கொண்ட ஐயப்பா
கோடி புண்ணியம் நீயப்பா
கலியுகக் காவலன் நீயப்பா
எங்கள் கண்கண்ட தெய்வம் நீயப்பா (சரணம் சரணம்)

மலையில் வாழும் ஐயப்பா
எங்கள் மனதில் நிறைந்த மெய்யப்பா
சிறியோன் குறைகள் தீர்ப்பா
எங்கள் சிந்தையில் தாங்கிய மெய்யப்பா (சரணம் சரணம்)

இருமுடிப்பிரியன் நீயப்பா
எங்கள் இதயத்தில் வாழ்வது நீயப்பா
வரும் துயர் கண்டு துடையப்பா
எங்கள் வழித்துணை நீதான் ஐயப்பா (சரணம் சரணம்)

ஐந்து மலைகளைக் கடக்கின்றோம்
நாங்கள் அழகாக பம்பையில் குளிக்கின்றோம்
சங்கடம் இல்லாது வருகின்றோம்
உன் சன்னதி காண துடிக்கின்றோம் (சரணம் சரணம்)

எண்திசையெங்கும் கூட்டமப்பா
உன்னை ஏற்றிப் போற்றிட நாடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னொலி முழங்கும் மலையப்பா
உந்தன் பக்தர்கள் கோஷம் சரணமப்பா (சரணம் சரணம்)

நாற்பத்து ஒரு நாள் விரதமப்பா
உன்னை நாளும் செய்தோம் பூசையப்பா
வாழ்நாள் முழுதும் பக்தரப்பா
என் வாழ்வு உந்தன் கருணையப்பா

சரணம் சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

## படியேறி வரவேண்டும்

படியேறி வரவேண்டும் ஐயப்பா - உன்
பாதம் கண்டு தொழ வேண்டும் ஐயப்பா
முடியேறி வரவேண்டும் ஐயப்பா - உன்
முகம் பார்த்து அழவேண்டும் ஐயப்பா (படியேறி

துளசியில் மணிமாலை நான் சூடவேண்டும்
தூயவன் உன்னைப் போற்றி புகழ்பாட வேண்டும்
காவியில் உடை சூடி மலை ஏற வேண்டும்
கண்களில் கற்பூர ஒளி காணவேண்டும் (படியேறி

பம்பையில் நீராடி என் பாவம் தீர்ப்பேன்
படியது பதினெட்டும் நான் பூஜை செய்வேன்
ஏழை என் துயர் யாவும் உன் காதில் சொல்வேன்
எனக்கென அருளன்றி வேறென்ன கேட்டேன் (படியேறி

நெய்யினில் அபிஷேகம் நான் காண வேண்டும்
நெய் என நான் மாறி உனைச் சேரவேண்டும்
ஒருமுறை உன் கோயில் நான் சேர வேண்டும்
ஐயனுன் முகம் பார்த்து உயிர் போக வேண்டும் (படியேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடி ஏந்தி வந்தோம்

சரணமைய்யப்பா சாமி சரணம்
சரணமைய்யப்பா சாமி (4)

இரு முடியேந்தி வந்தோம்
சரணமைய்யப்பா
திருவடி காண வந்தோம்
சரணமைய்யப்பா

இரு முடி யேந்தி வந்தோம்
திருவடி காணவந்தோம்
சிந்து பாடி ஆடவந்தோம்
சரணமைய்யப்பா (இருமுடியேந்தி

சரணமைய்யப்பா சாமி சரணமைய்யப்பா (4)

பம்பையில் குளிக்க வந்தோம் சரணமைய்யப்பா
துன்பமெல்லாம் மறந்து வந்தோம் சரணமைய்யப்பா (2)

பம்பையிலே குளிக்க வந்தோம்
துன்பமெல்லாம் மறந்து வந்தோம்
இன்பம் தேடி ஆட வந்தோம் சரணமைய்யப்பா (2)
(இருமுடியேந்தி)

சரணமையயப்பா சாமியே சரணமைய்யப்பா சாமி (4)
விரதமிருந்து நாங்கள் வந்தோம் சரணமைய்யப்பா
எங்கள் விதியை வெல்லும் தேவனென்றோம்
விரதமிருந்து நாங்கள் வந்தோம்
விதியை வெல்லும் தேவனென்றோம்
வில்லாளி வீரனென்றோம் சரணமைய்யப்பா (2)
(இருமுடியேந்தி)
சரணமைய்யப்பா சாமியே சரணமைய்யப்பா (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனோட ரூபமாக

ஐயனோட ரூபமாக, நம்மளோட வந்தது யார் சாமி
கன்னிச்சாமி
சந்தனத்தைப் பூசி வில்லும் அம்பெடுத்து வந்தது எந்த சாமி
கன்னிச்சாமி
கன்னிச்சாமி வீட்டு பூஜை போட வாருங்க சாமிமார்களே கன்னிச்சாமி
மலையில் ஏற துணையாய் ஏறுங்க ஐயப்பமார்களே

சரணம்! சரணம் சரணம் சரணம் ஐயப்பா
கன்வனச்சாமி ரூபமாக வந்த ஐயப்பா
சரணம்! சரணம்! சரணம் சரணம் ஐயப்பா
கன்னிச்சாமி ரூபமாக வந்த ஐயப்பா (ஐயனோட)

காடுமேடு எல்லாம் தாண்டி வேகமாக ஓடும் சாமி யாருங்க? சாயம்
பூசியதும் மேனிவண்ணம் பெற துள்ளும்
கன்னிச்சாமிங்க!
சாமி சரணம் என்னும் கோஷத்திலே காடு நடுங்க வந்த
சாமி யாருங்க?
முதல் முதலாக மலை ஏறும் சாமிங்க! குழந்தைசாமி வச்ச
சாமி யாருங்க?
அழுதையிலே கல்லை எடுத்து, கல்லிடுங் குன்று வந்த
சாமி யாருங்க?
குருசாமி கரம் பிடித்து, மலையேறிவரும் கன்னிச்சாமிங்க!
பாதைகாட்டுங்க சாமிமார்களே! சன்னதி தேடும்
கன்னி சாமிக்கு
சரணம் போட்டுவாங்க ஐயப்பமார்களே! பரவசமாகும்
கன்னிச்சாமிக்கு
(ஐயனோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் இடமெல்லாம் பரவசமாக நின்று துள்ளும்
சாமி யாருங்க?
பூதநாதனைக் காண வந்திடும் கண்ணிச்சாமி தானுங்க
பம்பா நதிக்கரை ஓரத்திலே அன்னதானம் செய்யும் சாமி
எந்த சாமிங்க?
முன்னோர் எமலாம் மகிழ்ந்திடவே அன்னதானம் இடும்
கன்னிச்சாமிங்க!
நீலிமலை கடினம் இல்லை என்று சொல்லி வரும்
சாமி யாருங்க?
இருமுடிகள் தாங்கி வந்து ஐந்து மலை ஏறும்
கன்னிச்சாமிங்க!
பாதைகாட்டுங்க சாமிமார்களே! சன்னதிதேடும்
கன்னிச்சாமிக்கு
சரணம் போட்டுவாங்க ஐயப்பமர்களே பரவாமாகும்
கண்னிச்சாமிக்கு
(ஐயனோட

ஐயனோட ரூபமாக நம்மளோட வந்தது யார் சாமி
கன்னிச்சாமி
சந்தனத்தைப் பூசி வில்லும் அம்பெடுத்து வந்தது எந்தசாமி?
கன்னிச்சாமி
கன்னிச்சாமி வீட்டு பூஜை போட வாருங்க சாமிமார்களே!
கன்னிச்சாமி மலையில் ஏற துணையாய் ஏறுங்க
ஐயப்பன்மார்களே

சரணம்! சரணம் சரணம்! சரணம் ஐயப்பா
கன்னிச்சாமி ரூபமாக வந்த ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவா சபரீசா

இறைவா சபரீசா சாமி ஐயப்பா
இனியும் சேவகன் நான் சரணம் ஐயப்பா 2தரம்

மனதில் வலுவில்லை நிம்மதியெங்குமில்லை
எனக்கோர் இடமில்லை சரணமய்யப்பா 2தரம்

விழியில் தெளிவில்லை விபரம் எனக்கில்லை 2தரம்

விதியே உன்கையில்
விதியே உன்கையில் சாமி ஐயப்பா
இறைவா சபரீசா சாமி ஐயப்பா
இனியுன் சேவகன் நான் சரணம் ஐயப்பா 2தரம்

நீயே கெதியென்றேன் நினைவாய் வாவென்றேன்
நீதான் என் தெய்வம் நித்யமானவன் 2தரம்

அருள்வாய் தவசீலா அமரா சிவபாலா
சரணாகதியென்றேன்
சரணாகதியென்றேன் சாமி ஐயப்பா
இறைவா சபரீசா ஐயப்பா
இனியுன் சேவகன் நான் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசா சபரி மலை ஈசா

ஈசா சபரி மலை ஈசா 2தரம்
உன்னைக் காணாத கண் இல்லையே 2தரம்
உன்னை மறப்பாரில்லை 2தரம்
உன்னை வெறுப்பாரில்லை 2தரம்
உன்னைக் கண்டாரும் எதிர்ப்பாரில்லை 2தரம்
(ஈசா சபரி)

அன்பான முகம் காட்டி அருள்வாயப்பா
சபரி வந்தாலும் உன்னைப் பாடும் சுகமேயப்பா
கவையாலும் சுகம் காணும் உருவேயப்பா
பாவம் தன்னாலே மறந்தோடும் இறைவா நீ வா
(ஈசா சபரி)

புலி மீது அமர்ந்திட்ட புனிதா நீ வா
புவி தன்னில் காட்சிதரும் மன்னா நீ வா
இமையாலும் ஐயப்பா இறைவா நீ வா
திகட்டாத என்னுயிரே எனை பார்க்கவா
(ஈசா சபரி)

## லாகி லாகி

லாகி லாகி லாகி லாகி இல்லல்லோ
வார் முகமது பேரெல்லோ
எரிமேலி நாங்கள் வந்தல்லோ
கரும் புள்ளி செம்புள்ளி இட்டல்லோ லாகி லாகி

மணிகண்டன் நண்பர் ஆனவரே
மாமலை மாமணி யானவரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாவின் இறையடி சென்றவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தவர் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு தந்தவரே
இஞ்சிப்பாறையில் தந்தவரே
எரிமேலியில் குடி கொண்டவரே லாகி லாகி

வீரமும் தீரமும் கொண்டவரே
எருமேலி கோட்டை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவீர்
கன்னிமார்களை காத்திடுவீர் லாகி லாகி

உன்னிடம் நாங்கள் வந்திடுவோம்
பேடடையாடி துள்ளிடுவோம்
வாவருசாமி திந்தகத்தோம்
ஐயப்பசாமி திந்தகத்தோம் லாகி லாகி

## கந்தர் மடம் வந்துதித்தான்

கந்தர்மடம் வந்துதித்தான் ஐயப்பன்
கண்கண்ட தெய்வமப்பா ஐயப்பன்
குருசாமி வடிவான ஐயப்பன்
ஜோதியாக காட்சி தந்தான் ஐயப்பன்
சாமி திந்தகத்தோம் ஐயப்பா திந்தகத்தோம்
ஐயப்பா திந்தகத்தோம் சாமி திந்தகத்தோம்

கருணை என்னும் தெய்வமான ஐயப்பன்
மணிகண்ட நாயகனாம் ஐயப்பன்
சாமிமாரை காத்துவிட்டான் ஐயப்பன்
சாமிகளில் காட்சி தந்தான் ஐயப்பன்
சாமி தித்தகத்தோம் ஐயப்பா தித்தகத்தோம்
ஐயப்பா தித்தகத்தோம் சாமி தித்தகத்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்ட நாயகனாய் ஐயப்பன்
சபரி மலை ஏறவைத்தான் ஐயப்பன்
மகரஜோதி காணவைத்தான் ஐயப்பன்
மனங்குளிர காட்சி தந்தான் ஐயப்பன்
சாமி தித்தகத்தோம் ஐயப்பா தித்தகத்தோம்
ஐயப்பா தித்தகத்தோம் சாமி தித்தகத்தோம்

## அவனி எங்கும்

அவனி எங்கும் அமைதி வேண்டும் ஐயப்பா
வழியில் வையகம் வாழ ஐயப்பா
வேண்டும் வரம் தேடித்தரும் ஐயப்பா
வேதமொழி உலகையாளனும் ஐயப்பா

எங்கள் ஐயப்பா - சாமி
எங்கள் ஐயப்பா

முக்கனியின் சிந்துவாக ஐயப்பா
ஐங்கரனின் தம்பியான ஐயப்பா
பாரினிலே பரமனாக ஐயப்பா
பசி தீர்க்கும் தொண்டனாக ஐயப்பா

எங்கள் ஐயப்பா - சாமி
எங்கள் ஐயப்பா

கந்தர்மடம் எழுந்தருளும் ஐயப்பா
கருணை மழை பொழிய வேண்டும் ஐயப்பா
புளியமரம் வீற்றிருக்கும் ஐயப்பா
பூமியெங்கும் புனிதமாகட்டும் ஐயப்பா
எங்கள் ஐயப்பா - சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சன் கோயில் அரசன்

அச்சன் கோயில் அரசன் ஐயப்பா
ஆதரிக்க வேண்டுமையா ஐயப்பா
ஐயனாக வந்தவனே ஐயப்பா
குறைகளையும் தீர்க்க வேண்டும் ஐயப்பா

காவி வேட்டி கழுத்தில் மாலை ஐயப்பா
பக்தன் நானும் வாரேன் ஐயப்பா ஐயப்பா
ஐயப்பன் என்று பெயருடைய ஐயப்பா
ஐயனே உன்னை சரணடைந்தோம் ஐயப்பா

பகைவர் பாதம் பணிபவனே ஐயப்பா
பகைமை ஒழித்து வாழ்பவனே ஐயப்பா
பதினெட்டாம் படிக்கு மேல் ஐயப்பா
பதினெட்டாம் படியோனே ஐயப்பா

பிள்ளைச் செல்வம் அருளுவோனே ஐயப்பா
பிறை குடியோன் மகனே ஐயப்பா
பின் முடிவில் ஆகாரம் கொண்ட ஐயப்பா
பீடை அகற்றி சுகம் தருவாய் ஐயப்பா

## அம்மாவும் நீயே

அம்மாவும் நீயே அப்பாவும் நீயே
அன்புடனே ஆதரிக்கும் ஐயனும் நீயே (அம்மாவும்)

தந்தை முகம் தாயின் முகம் கண்டறியோமே - மன
சாந்தி தரும் இனிய சொல்லை கேட்டறியோமே
எங்களுக்கோர் அன்பு செய்ய யாரும் இல்லையே - இதை
அறியாயோ ஐயப்பா உன் கருணையில்லையோ
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை நாயும் கிளியும் கூட மனிதர் மடியிலே - பெற்ற
பிள்ளை போல் நல் உறவால் சேர்ந்து வாழுதே
ஈ எறும்பும் உன்படைப்பில் இனிமை காணுதே - இதை
அறியாயோ ஐயப்பா உன் கருணை இல்லையோ
ஐயப்பா ஐயப்பா! ஐயப்பா (அம்மாவும்)

## சாமி சரணம் என்றால்

சாமி சரணம் என்றால் மன
சாந்தி கிடைக்கும் ஐயப்பா
காமி நீரே அல்லால் வேறு
கதியும் இல்லை ஐயப்பா

சரணத்தை சொல்வோம் மரணத்தை வெல்வோம்
சாமி சரணம் ஐயப்பா
இருமுடி பிரியனே ஈசன் குமாரசாமி சரணம் ஐயப்பா

சாமி சரணம் என்றால் மன
சாந்தி கிடைக்கும் ஐயப்பா
காமி நீரே அல்லால் வேறு
கதியும் இல்லை ஐயப்பா

வன்புலி வாகன வானவர் கூறிட
சாமி சரணம் ஐயப்பா
கலியுக வரதா கானக வாசா
சாமி சரணம் ஐயப்பா

ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயா என்று அழைக்கவா

ஐயா என்று அழைக்கவா
பூத நாதா என்று அழைக்கவா
சாஸ்தா என்று அழைக்கவா
மணிகண்டா என்று அழைக்கவா
எப்படி அழைப்ளே உன்னை எங்கே காண்பேன் 2

ஏறாத மலை எல்லாம் ஏறி வந்தேனப்பா 2
ஏழைப்பங்காளன் என்று தேடி வந்தேனப்பா 2
நெய்யுடன் தேடினாலும் வருவேனப்பா
சபரிமலை நாடி நானும் வருவேனப்பா

உன்னை ஐயா என்று அழைக்கவா
பூதநாதா என்று அழைக்கவா
மண் கண்டா என்று அழைக்கவா
எப்படி அழைப்பேன் உன்னை எங்கே காண்பேன் (2
இருமுடி தாங்கினாலும் வருவேனப்பா 2
மகரவிளக்கு அதிலேயும் வருவேனப்பா எனக்கு
மங்களமாய் வாழ்த்து வந்து அருள் வாய்யப்பா 2

உன்னை ஐயா என்று அழைக்கவா
பூதா நாதா என்று அழைக்கவா
சாஸ்தா என்று அழைக்கவா
மணிகண்டா என்று அழைக்கவா
எப்படி அழைப்னே உன்னை எங்கே காண்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையே! மலையே!

சுவாமியே! சரணம்! ஐயப்போ !
சபரிமாமலையே! சரணம்! ஐயப்போ!
மலையே! மலையே! ஐயன் பொன்னு மலையே! எம்மை
மனதார ஏற்றுக்கொள்ள வேணும் மலையே!

மலையே! மலையே! ஐயன் பொன்னு மலையே! எம்மை
மனதார ஏற்றுக்கொள்ள வேணும் மலையே!

பூதநாதனைத் தாங்கும் மலையே!
வேதப் பொருளாய் ஓங்கும் மலையே!
பூதநாதனைத் தாங்கும் மலையே!
வேதப் பொருளாய் ஓங்கும் மலையே!

விரதங்களிருந்து தலைபாரம் சுமந்து
தள்ளாடி மலையேறும் நேரத்திலே
விரதங்களிருந்து தலைபாரம் சுமந்து
தள்ளாடி மலையேறும் நேரத்திலே (மலையே)

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு!
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை!
சாமியே! ஐயப்போ! ஐயப்பா! சாமியே!
எத்தனையோ குழிகள்! எத்தனையோ நொடிகள்
இருந்தாலும் உன்னிடத்தில் அச்சமில்லையே!

(மலையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைவழி திறந்தது திருவடி மலர்ந்தது

நடைவழி திறந்தது திருவடி மலர்ந்தது
பொழியுது சரண மழை
அரிகர சுதன் பதம் அடியவர் விழுந்திட
உருகுது சபரி மலை

ஐயனின் காடு ஆனந்த வீடு
திறக்கலாச்சே தீபங்களோடு
விடியல் பிறக்கும் முன்னே
கதிரும் உதிப்பதென்ன
சரண கோசங்களே வானைப் பிளப்பதென்ன

சுவாமி சரணம் ஐயப்பா சரணம்
ஐயப்ப சரணம் சுவாமி சரணம் (நடைவழி)

காட்டு ராஜா கோட்டை கதவு
கருணையோடு திறந்தேன்
ஆறுவாரம் கொண்ட தாகம்
ஐயன் வாசல் தீர்த்தேன்

குருவடி சரணம் திருவடி சரணம்
திருவடி கண்டோம் மோட்சம் கிட்டும்

விரதங்கள் இருந்ததும் இருமுடி சுமந்ததும்
அட்டா இதற்கல்லவா
கருவிழி பிறந்ததே திருவழி சுகம் அது
சுகம் தான் சொல்லவா
காட்டுத் துளசி போற்றும் துறவி
சுவாமி மனதை உருக்கி
வதனம் காட்டையிலே ஒரு வார்த்தை வரவும் இல்லை
சன்னதி வாசலைப் போல் சொர்க்கம் எதுவும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரம் சரணம் ஈஸ்வரி சரணம்
இதயம் எல்லாம் சுவாமி சரணம்

நடைவழி திறந்தது திருவடி மலர்ந்தது
பொழியுது சபரி மழை
அரிகர சுதன் பதம் அடியவர் விழுந்திட
உருகுது சபரி மலை
சுவாமியே சரணம் ஐயப்பா
பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா

காந்த மலையின் வேந்தன் மேனி
நெய்யில் ஆடும் போதிலே
கோடி கோடி சுவாமி கண்ணில்
அழுதை ஆறு ஆடுதே

சரணம் சரணம் சற்குரு நாதம்
சரணம் சரணம் சாந்தஸ்வரூபம்

குருவடி பிடித்ததும் பெருவழி நடந்ததும்
கரிமலை கடந்ததும் கடும்வழி மறந்ததும்
காரணம் தரிசனமே
பத்தரை மாற்று தங்கம் ஒன்று
பவள வாயில் புன்னகை கொண்டு
காட்சி தருவதென்ன
அதில் கலக்கம் மறைவதென்ன
மலையிலே தெரிவதென்ன

நடைவழி திறந்தது திருவடி மலர்ந்தது
பொழியுது சரண மழை
அரிகர சுதன் பதம் விழுந்திட
உருகுது சபதி மலை
ஐயனின் காடு ஆனந்த வீடு
திறக்கலாச்சே தீபங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியல் பிறக்கும் முன்னே
சரண கோசங்கள் வானைப் பிளப்பதென்ன

தேவன் சரணம் தேவி சரணம்
ஐயன் பதமே அடியவர் சரணம்
தேவன் சரணம் தேவி சரணம்
ஐயன் சரணம் அடியவர் சரணம்
சுவாமி சரணம் ஐயப்பன் சரணம்
பகவான் சரணம் பகவதி சரணம்
ஈஸ்வரன் சரணம் ஈஸ்வரி சரணம்
குருவடி சரணம் திருவடி சரணம்

## அச்சங்கோவில் அரசே

அச்சங்கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சை கொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன்மைந்தா
பச்சை வண்ண பரந்தாமன் மகிழும் செல்வா

சுவாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா (சுவாமி)

ஆரியங்காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியாள் அகமகிழும் பாலகனே வா
எருமேலி வீற்றிருக்கும் இறைவனே நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனே வா (சுவாமி)

மலைவீடும் சபரிமலை மன்னவனே வா
குறை தீர்க்கும் குளத்துப் புழை பாலகனே வா
மன்னவன் மணிகண்டனே மகிழ்வுடனே வா
வன்புலி மேல் காட்சி தரும் வள்ளலே நீ வா (சுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களும் உனைப் பணிய காந்த மலையிலே - நீ
ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதி உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதி மலை
நாவார உனை அழைத்தோம் சாமியே சரணம் ஐயப்பா (சுவாமி)

## மலை போன்ற வாழ்வருள்வாய்...

ஹரி நின்று அருள் புரியும் ஏழுமலை
ஹரன் நின்று தவம் செய்யும் கயிலைமலை
ஹரிகரன் அருள் செல்வன் ஆளும் மலை
ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் சபரிமலை - சபரிமலை

மலை போன்ற வாழ்வருள்வாய் ஐயப்பா
மணிகண்டப் பெருமானே ஐயப்பா
கலை ஞானப் புகழ் தருவாய் ஐயப்பா
கண்கண்ட தெய்வம் நீயே ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா - சரணம் சரணம் ஐயப்பா

கல்லும் முள்ளும் குத்தவில்லை ஐயப்பா
உந்தன் கருணை உள்ளம் புரிந்ததய்யா ஐயப்பா
தனிமையிலே இனிமை தந்தாய் ஐயப்பா
சரணங்கள் முழங்க வைத்தாய் ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா (மலை)

சத்தியமான பதினெட்டாம் படியப்பா - உயிர்
தத்துவத்தைத் தாங்கும் இருமுடியப்பா
அகம் குளிரப் பாடிவந்தோம் ஐயப்பா
மகரஜோதி காண வேணும் ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா (மலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்
ஐயப்பா சுவாமி ஐயப்பா - ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நாடு அவன் புகழ்பாடு புகழோடு வாழ
வைப்பான் ஐயப்பன் உன்னை புகழோடு வாழவைப்பான்
ஐயப்பன் இருப்பது காடு வணங்குவது நாடு
அவனை காண தேவை பண்பாடு (ஐயப்பாசுவாமி)

பூஜைகள் போது தூய அன்போடு பெயரோடு வாழவைப்பான்
ஐயப்பன் நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள் - அருள் வேண்டும்
அன்பரை எல்லாம் வாழவைப்பான் (ஐயப்பாசுவாமி)

## பந்தளம் தந்திட்ட நேசனையா

பந்தளம் தந்திட்ட நேசனையா - என்றும்
பக்தர்கள் உள்ளத்தில் வாசனய்யா
விந்தைகள் செய்திடும் பிள்ளையப்பா - அவன்
செந்திலாதிபதி தம்பியப்பா (பந்தளம்)

தேவாதி தேவரும் கூடி வந்து - எங்கள்
தேவன் ஐயப்பனை நாடி வந்து
தேவர்கள் யாவரும் பாடி வந்து - எங்கள்
தேவனாம் ஐயனை வாழ்த்துகின்றார் (பந்தளம்)

முத்தொழில் நாதரும் ஓடிவந்து - எங்கள்
முத்தான பிள்ளையைக் காணவந்து
தத்துவங்கள் பதினெட்டுப் படிகளில் - எங்கள்
சத்தியபாலனைக் கண்டு சென்றார் (பந்தளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சைப்பிள்ளை

சாமி சரணம் சாமி சரணம் சாமி சரணம் ஐயப்பா
சாமி சரணம் சாமி சரணம் சாமி சரணம் ஐயப்பா

பச்சபுள்ள பவளபுள்ள பாண்டு ரங்கம் பெத்த புள்ள
பூமியாள வந்தபுள்ள சாமியாக வந்த புள்ள

உண்மையான தெய்வம் நீயே நம்மை ஆளும் ஐயப்பா
பழமையான பம்பாநதியில் வந்துதித்த மெய்யப்பா
(பச்சபுள்ள)

மண்டலத்தில் பூசை செய்யத் தொண்டு செய்தோம் ஐயப்பா
தொண்டராகி ஜோதி கண்டோம் மணிகண்டனே நீ ஐயப்பா
(பச்சபுள்ள)

எரிமேலி பேட்டைத்துள்ளி ஆடி வந்தோம் ஐயப்பா
பம்பாநதி மூழ்கியல்லோ பாவம் தீர்த்தோம் ஐயப்பா
(பச்சபுள்ள)

பந்தளத்தை ஆளுகின்ற பாண்டியனார் தன்மகனே
அஞ்சுமுகம் ஆறுமுகம் தம்பியாக வந்தவனே
(பச்சபுள்ள)

## அலையும் மனதினிலே அமைதி தாராயோ

நிலாவில் ஒளிவீசும் நின்னுடைய
நீல வானம் ஐயா - இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும்
உந்தன் நாமம் ஐயா
(நிலா)

மலைகள் கடந்து வந்தோம் ஐயப்பா
மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ (நிலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனங்கள் கடந்து வந்தோம்
எமக்கொரு மார்க்கம் அருளாயோ
இருளை அடக்கிடவே என் வாழ்வில்
இன்பம் தாராயோ (நிலா)

நியமம் ஒன்றறியேன் நின்னடியார்
நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா
கருணை புரியாயோ (நிலா)

மீண்டும் இந்திரனை விண்ணவரின்
வேந்தன் ஆக்கி வைத்தாய்
வேண்டும் பொழுதெல்லாம் ஐயப்பா
வில்லுடன் வாராயோ (நிலா)

மதுராபுரி வதனா ஐயப்பா
மதன மோகனனே - வணங்கும்
குருமுனிவன் தன் மொழியால்
மகிழும் சிவமணியே (நிலா)

## சத்திய ஜோதி

சத்திய ஜோதி தெரியுதையா
நித்திய வாழ்வு புரியுதையா
சாஸ்தா ஆலயம் தெரியுதையா
சங்கடமெல்லாம் மறையுதையா (சத்திய)

மாமலை ஏறிப் போகையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா
சபரி காட்டில் நடக்கையிலே
சாந்தி நிறைந்து தோன்றுதையா (சத்திய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாம் படிகள் தாண்டயிலே
பக்தியும் எல்லையைத் தாண்டுதையா
பந்தளக் குழந்தையைப் பார்க்கையிலே
சிந்தையில் சொர்க்கம் தோன்றுதையா (சத்திய)

ஐயனை மனதில் நினைக்கையில்
ஐயம் எல்லாம் மறையுதையா
மகரஜோதியைக் காண்கையிலே
மனதில் இன்பம் தோன்றுதையா (சத்திய)

ஓரடி ஈரடியாய் நடந்து வந்தோம்
ஒவ்வொரு மலையாய் கடந்து வந்தோம்
இருமுடி தலையில் சுமந்து வந்தோம் - உன்
திருவடி துணையென்று நாடி வந்தோம் (சத்திய)

சரணம் சரணம் ஐயப்பா சபரி கிரீசா ஐயப்பா
சாந்த சொரூபா ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

## காடுமலை கவலை இல்லை

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்ப சரணம் ஐயப்பா

காடுமலை கவலையில்லை கல்லும் முள்ளும்
பஞ்சு மெத்தை பள்ளிக்கட்டு சபரி மலையிலே
பந்தளந்த வேந்தன் அருளிலே (சரணம் சரணம்)

கார்த்திகையில் மாலையிட்டு கடும் விரதம்
தவம் இருந்து காத்திருந்த ஆவலெல்லாம்
கண் எதிரே தீருமைய்யா
பூத்திருந்த மலர் பொழிந்து பூஜையிட்ட நேசம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியத்தின் பலனாக புன்னகையே அருளுந்தையா
ஐயா உன் பாதம் சேர ஆனந்தமே மலருதையா
(சரணம் சரணம்)

காடுமலை மேடெல்லாம் காற்று வந்து கவிதை சொல்லும்
சந்தனத்தின் வாசமுடன் சன்னிதிக்கே வழி சொல்லும்
இருமுடி தலைமீது மணி முடியாய் ஒளி மின்னும்
பதினெட்டு படியேற பாதம் எங்கே தரைய்யத் தொடும்
பரவசம் அலைபாய கண்ணெதிரே ஐயன்முகம்
(சரணம் சரணம்)

அகிலத்தை ஆளும் எங்கள் ஐயனுக்கே அபிஷேகம்
காணுகின்ற கண்களுக்கு கண்ணீரின் அபிஷேகம்
மங்களத்து மகராஜன் மகரஜோதி ஒளிதீபம்
கற்பகத்து அருள்வேண்டி கண்கள் எல்லாம் சரணம் இடும்
இப்பிறவி எடுத்தபயன் இனிதாக நிறைவேறும்
(சரணம் சரணம்)

## சரணம் சொல்லி கூப்பிடுவோம்

சரணம் சொல்லி கூப்பிடுவோம் சபரிமலை வாசனை
வரணும் என்று அழைத்திடுவோம் வரம் கொடுக்கும் ஈசனை
அருளைத்தரும் ஆண்டவனை அன்பருக்கு மித்திரனை
சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம் அரிகர சுதன் ஐயப்பனை

வில்லாளி வீரனே வீரமணி கண்டனே - அவர்
சொல்லெடுத்துப் பாடுவோம் சுந்தரேசன் மைந்தனை

சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

சபரி மலை செல்பவர்க்கு சஞ்சலங்கள் இல்லை
பயம் தனையே போக்கிடுவான் பந்தளத்தின் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயம் என்று சரணடைந்தால் அகன்றிடுமே தொல்லை
அவன் இன்றி அவனியிலே அணுவுமசைவதில்லை
வீட்டை விட்டு கட்டும் கட்டி அருள்மலை புறப்படுவோம்
கூட்டு சரணம் போட்டு எரிமேலி போட்டை துள்ளுவோம்
சாமி தித்தக தோம் ஐயப்ப தித்தகதோம் (2)

போட்டை துள்ளி ஆடும்போது பேரின்பம் கொள்வோம்
கோட்டை காவல் வாபர் சாமியை கொண்டாடி மகிழ்வோம்

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

சீர்மேவும் சபரிமலை நாதன் அருளோடு
ஈரொன்பது படி ஏறு ஈசன்புகழ் பாடு
பாரெல்லாம் காத்து நிற்கும் பரமனின் திருவீடு
நாராயணன் செல்வனையே நாவினிக்க பாடு

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

## பூப்பறிக்கின்ற ஐயப்பா! பூ தாறேன் ஓடிவா!

அச்சன் கோவில் தோட்டத்திலே
பூப்பறிக்கின்ற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
அல்லிமலர் நான் தாறேன் ஓடிவாயென் ,ஐயப்பா!

ஆரியங்காவுத் தோட்டத்திலே
பூப்பறிக்கிற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
ஆயிரம், ஆயிரம் பூ தாறேன் ஓடிவாயென் ஐயப்பா!

குளத்துப்புழை தோட்டத்திலே
பூப்பறிக்கிற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
குண்டுமல்லி நான் தாறேன் ஓடிவாயென் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பாநதித் தோட்டத்திலே
பூப்பறிக்கின்ற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
பத்மமலர் நான் தாறேன் ஓடிவாயென் ஐயப்பா!

காந்தமலைத் தோட்டத்திலே
பூப்பறிக்கின்ற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
காட்டுமலர் நான் தாறேன் ஓடிவாயென் ஐயப்பா!

பதினெட்டாம் படித் தோட்டத்திலே
பூப்பறிக்கிற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
பாரிஜாதம் நான் தாறேன் ஓடிவாயென் ஐயப்பா!

சபரிகிரித் தோட்டத்திலே
பூப்பறிக்கிற ஐயப்பா! பூ பறிக்கிற சுவாமியே!
சம்பங்கி பூ தாறேன் ஓடிவாயென் ஐயப்பா!

ஓடிவா ஐயப்பா ஆடிவா ஐயப்பா
ஆடிவா ஐயப்பா ஓடிவா ஐயப்பா

ஓடி ஓடி ஓடி ஓடி ஓடிவா ஐயப்பா
ஆடி ஆடி ஆடி ஆடி ஆடிவா ஐயப்பா (அச்சன் கோவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா அப்பா

அப்பப்பா ஐயப்பா அச்சம் கோவில் ஐயப்பா
பச்ச பச்ச காடு விட்டு இங்கே வந்து குந்தப்பா
சின்ன சின்னக் காலெடுத்து ஓடிவா ஐயப்பா
சித்தான மேலேறி கன்னி பூஜை சேரப்பா (அப்பப்பா)

அந்தமலை பஞ்சகிரி கொஞ்சுகிற ஐயப்பா
கன்னிமார்கள் போடும் கோசம் கேட்கலையோ ஐயப்பா
பிஞ்சுப் பிஞ்சுப் பாதங்களை புவிமேலே வையப்பா
பூஜை நமஸ்காரம் எல்லாம் ஏத்துக்கடா என்னப்பா
(அப்பப்பா)

ஏழுகுண்டல வாசா உந்தன் பாலகனே ஐயப்பா
ஏலேலேலே ஏற்றம் போட்டு பம்பை நதி தாண்டப்பா
நீலவண்ண வானத்தையே கச்சை என கட்டப்பா
அன்னதானம் ஆறுமுன்னே பந்தியிலே குந்தப்பா
ஐயப்பா

கம்பன் குடி சொல்லும்படி கையை கட்டும் ஐயப்பா
பந்தளத்து பாலகனாய் இங்கே வா ஐயப்பா
ராஜாதி ராஜனுக்கு தத்துப்பிள்ளை நீயப்பா
ஒத்துக்கொண்ட பிரகாரம் ஓடி வா ஐயப்பா
ஓடி வா ஐயப்பா நிண்டாடு ஐயப்பா (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபதம் தொழுதே கூட்டமாய் வருவோம்

குருபாதம் தொழுதே, குணமுடன் நடந்தே
கூட்டமாய் வருவோம் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா - எங்கள்
சுவாமியே சரணம் ஐயப்பா
சுவாமியே திந்தகத்தோம்
ஐயப்பன் திந்தகத்தோம்
இருமுடிசுமந்தே, பெருமலை கடந்தே
கூட்டமாய் வருவோம் ஐயப்பா
சுவாமியே ஐயப்போ வாராயோ - நீ
அன்பும் கருணையும் தாராயோ?
சுவாமி திந்தகத்தோம் ஐயப்பன் திந்தகத்தோம்
மலையினைக்கடந்து, நடையாய் நடந்து
கூட்டமாய் வருவோம் ஐயப்பா
கூவியே அழைப்போம் ஐயப்பா - எங்கள்
குறைகளைத் தீர்ப்பாய் ஐயப்பா (சுவாமி)

பேட்டைகள் ஆடி, கோட்டைகள் கடந்து
கூட்டமாய் வருவோம் ஐயப்பா
குருவே சரணம் ஐயப்பா (சுவாமி)

மகரவிளக்கின் ஜோதியைக் காண
கூட்டமாய் வருவோம் ஐயப்பா
பாதபலம் தா! தேகபலம் தா!!
பகவானே எங்கள் ஐயப்பா
சுவாமி திந்தகத்தோம் ஐயப்பன் திந்தகத்தோம்
குவியாத கரங்கள் குவியாதோ
குணக்குன்றினைக் கண்டு மகிழாதோ
கும்பிட்ட கரங்களைக் காத்திட வேண்டும்
குருநாதா! எங்கள் ஐயப்பா
சுவாமி திந்தகத்தோம் ஐயப்பன் திந்தகத்தோம் (சுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த கான கருங்குயிலின்

இந்த கான கருங்குயிலின் பாட்டு உனக்கு உனக்கு
மணிகண்டன் கருணை மட்டும் பக்தன் எனக்கு எனக்கு
(இந்த கான)

மாலையிட்ட நாள் முதலாய் உன்னோட நினைப்பு
ஆலையிட்ட செங்கரும்பாய் என்னோடை தவிப்பு
ஆணையிட்ட ஐயனுக்கு நான் எடுத்தேன் பிறப்பு

தந்தனத்தோம் தாளம் போடுங்க
பேட்டை துள்ளி திந்தகத்தோம் துள்ளி ஆடுங்க
(இந்த கான)

நல்ல நெய்யும் தேங்காயும் சாமி உனக்கு உனக்கு
ஒரு நோயும் தீண்டாத மெய் வேண்டும் எனக்கு
ஆனைமுகன் தம்பியான ஐயப்பனே உன்னையும்
ஆறுவாரம் மாலையிட்டு நோன்பிருந்த என்னையும்
பாலம் போட்டு கார்த்திகையில் மார்கழியே இணைக்கும்

தந்தனத்தோம் தாளம் போடுங்க
பேட்டைத் துள்ளி திந்தகத்தோம் துள்ளி ஆடுங்க
(இந்த கான)

கட்டிகூடம் ஊதுபத்தி ஐயா உனக்கு உனக்கு
மலைஜோதி காணுகின்ற யோகம் எனக்கு எனக்கு
எட்டடுக்கு மாளிகையும் பொன்பொருளும் எதற்கு
தெட்டரோடும் குட்டரோடும் வாழ வேண்டி இருக்கு
உந்தன் காலடியில் செத்துப்பிட்டா போதுமையா எனக்கு

தந்தனத்தோம் தாளம் போடுங்க
பேட்டைத் துள்ளி திந்தகத்தோம் துள்ளி ஆடுங்க
(இந்த கான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே ஓடுது

எங்கே ஓடுது எங்கே ஓடுது கூட்டம் எல்லாம் எங்கே ஓடுது
அங்கே ஓடுது அங்கே ஓடுது சன்னிதானம் நோக்கி ஓடுது
எங்கே போகுது எங்கே போகுது
சுவாமிமார்கள் எல்லாம் எங்கே போகுது
ஹரிஹரசுதனின் தரிசனம் காண சபரிமலை நோக்கி ஓடுது

கன்னிமூல கணபதிக்கு வந்தனம் சொல்லி
குருநாதன் துணையொடு போகணும்
சன்னிதானம் நடைதிறந்து காரணம்
சாமிமார்கள் எல்லாம் அவரைப் பார்க்க முந்தணும்
வனமாடும் தேவரையும் நினைக்கணும், நம்ம
வாபரனின் பெயரை சொல்லி ஓடணும்

ஓடும்போது சரணகோசம் விளிக்கணும்- அந்த
மந்திரமே நன்மை சேர்க்கும் சீக்கிரம்

சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா
(எங்கே ஓடுது)

கல்லோ முள்ளோ குன்றோ குழியோ
போடும் சரணகோசம் தாண்ட வைச்சுது
கரியோ புலியோ உலவிடும் மலையோ
ஹரிஹரசுதன் சரணம் தூர ஓட்டுது
தாவனம் எங்கும் பஜனைகள் முழங்க
கன்னிசாமிகளின் பரவசமாட்டம்
மீண்டும் ஏற்றம் ஓட்டம் தள்ளாட்டம்
சரணம் விளிக்க விளிக்க யாவும் முன்னேற்றம்
சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா (எங்கே ஓடுது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டம் எடுத்த பாதங்கள் எல்லாம் பதினெட்டாம் படிமேலேறுது
எல்லாம் துறந்த எல்லாம் கடந்து வந்ததை மறந்து துவண்டு
ஏறுது

படிகளை தொட்டோ கண்களில் ஓத்தியே
சரணம் விளித்தபடி குன்றில் ஏறுது

இருமுடி உடனே பலபடி கடந்து கொடிமரம் வணங்கியபடி
முன்னே ஓடுது

ஓடி ஓடி தளர்ந்த கூட்டம் ஐயன் ஜோதியில் கலந்து மயங்குது
நாடி நாடி வந்திடுவோனின் அவன் இரு கண்களே அரவணைத்து

சுவாமி அப்பா சரணம் அப்பா சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா

எங்கே ஓடுது எங்கே ஓடுது கூட்டம் எல்லாம் எங்கே ஓடுது!

மலை இறங்குது பம்பாநதியை அடையுது
ஐயப்பனின் பிரிவால் ஏற்குது
இறங்கும் போதிலும் சரணம் விளிக்கணும் சாமி
வீண் பேச்சு தவிர்த்து நடக்கணும்
குருவின் தயவால் ஐயனின் ஆசி பெற்றதற்கு
நன்றி சொல்லணும்

சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பாவாசா

பம்பா வாசா கலியுக வரதா சரணம்
சரணம் ஐயப்பா (பம்பா)

தோத்திரம் செய்தனை துதித்தோம் காவாய்
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய் (பம்பா)

சாத்திரக் கோத்திரச் சண்டையைத் தீர்ப்பாய்
சன்மார்க்க மொன்றே சகமிசைக் காப்பாய் (பம்பா)

ஆதி பராபரா இருமுடிப் பிரியா
இரக்கம் மிகுந்தவா ஐயப்பா (பம்பா)

உறுதுணை நீயே ஊக்கம் தருபவா
ஊழ்வினை அறுப்பவா ஐயப்பா (பம்பா)

எங்கும் நிறைந்தவா எங்கள் நாயகா
பம்பையின் பாலா ஐயப்பா (பம்பா)

பந்தள வேந்தே வன்புலி வாகனா
வனத்தில் இருப்பவா ஐயப்பா (பம்பா)

பாரின் உள்ளே பணிந்திட வைப்பாய்
பக்தர்கள் கூட்டம் பரவிடப் பணிப்பாய் (பம்பா)

சீருடன் ஆத்ம சித்தியும் தருவாய்
பேரும் புகழும் பிணியாறு காப்பாய் (பம்பா)

ஆர்வக் கனவை அடியார்க்கீவாய்
அவனியில் அமைதி ஆண்டிட அருள்வாய் (பம்பா)

கார்மழை போல் நின் கருணையாய் பொழியாய்
சபரி கிரீசா ஐயப்பா (பம்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமனையும் வெல்லலாம்

சங்கர சிவா சிவசங்கர சிவா
சம்போ மகாதேவா சாம்பசிவா (சங்கர)

எமன் மிகப் பொல்லாதவன் விடவே மாட்டான் - அவன்
சிவன் நாமம் சொல்வதென்றால் தொடவே மாட்டான் (சங்கர)

எமன் பெரும் எல்லான் விட்டுச் செல்லவே மாட்டான் - அவன்
நாராயணன் பக்தன் என்றால் கொல்லவே மாட்டான்

ஆற்றல் மிகு கூற்றுயார்க்கும் அஞ்சவே மாட்டான் - அவன்
ஐயப்பன் பக்தன் என்றால் அணுகவே மாட்டான்

மாயை நம்மைத் தொடரும்போது மயங்கவே வேண்டாம் - அந்த
மணிகண்டன் பெயர் சொல்லத் தயங்கவே வேண்டாம்
(சங்கர)

கவலை கொண்டு நித்தம் மனம் கலங்க வேண்டாம் - அந்த
காந்தமலை வாசன் பெயர் மறக்க் வேண்டாம் (சங்கர)

துன்பம் வந்து சூழ்ந்தபோது துடிக்க வேண்டாம் - அந்த
தூயன் நாமம் சொல்ல அப்போ தளர வேண்டாம் (சங்கர)

ஆபத்து வேளை தன்னில் அயர வேண்டாம் - அந்த
ஐயப்பன் பெயர் சொல்ல மறக்க வேண்டாம் (சங்கர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பா ஐயப்பா

ஐயப்பா ஐயப்பா பாலனாக வந்துதித்த ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா பந்தளத்தின் மாமணியே ஐயப்பா
அரிஹர புத்திரனே ஐயப்பா ஐயப்பா
ஐங்கரனின் தம்பியாரே ஐயப்பா ஐயப்பா
குளத்துப்புழைப் பாலகனே ஐயப்பா ஐயப்பா
(ஐயப்பா)

காந்தமலை ஜோதியப்பா ஐயப்பா ஐயப்பா
கற்பூரப் பிரியனே ஐயப்பா ஐயப்பா
நெய்யாலே அபிஷேகம் உனக்கப்பா ஐயப்பா
அதைக் காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா
(ஐயப்பா)

எரிமேலி பேட்டை துள்ளி ஐயப்பா ஐயப்பா
வாபரையும் வணங்கிவிட்டு ஐயப்பா ஐயப்பா
கறுப்பனும் கூட வர ஐயப்பா ஐயப்பா ஐயப்பா
இருமுடியை சுமந்து வந்தோம் ஐயப்பா ஐயப்பா
(ஐயப்பா)

ஐங்கரனின் தம்பிமாரே ஐயப்பா ஐயப்பா
ஐயம் எல்லாம் தீர்ப்பவனே ஐயப்பா ஐயப்பா
ஒப்பில்லாத் திருமணியே ஐயப்பா ஐயப்பா
நாங்கள் ஓடிவந்து சரண் அடைந்தோம் ஐயப்பா ஐயப்பா
(ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பூரச் சுடர் ஒளியே

கற்பூரச் சுடர் ஒளியே காட்சி தரும் ஐயப்பா
கனிவுடனே அருள் வழியால் தந்திடுவாய் ஐயப்பா
அற்புதமாய் சபரிமலை அமர்ந்திருக்கும் ஐயப்பா
பொற்பதங்கள் சரணம் என்றும் போற்றிடுவோம் ஐயப்பா

எண்ணியதை திண்ணமுற செய்திடுவாய் ஐயப்பா
என்றும் உள்ள பரம்பொருளே இனியவனே ஐயப்பா
விண் அதிர மண் அதிர பாடி வந்தோம் ஐயப்பா
விருப்பமொடு பதினெட்டு படி ஏறி வந்தோம் ஐயப்பா

நெய் குளித்து மெய் விளங்க நீயிருப்பாய் ஐயப்பா
நெஞ்சுருகி பாடி உன்னை தேடி வந்தோம் ஐயப்பா
தைமாத ஜோதி தரும் தரிசனமே ஐயப்பா
தருணமிது கருணையுடன் அருள் தருவாய் ஐயப்பா

## ஊரும் மறந்தேன் உறவும் மறந்தேன்

ஊரும் மறந்தேன் உறவும் மறந்தேன்!
உன்னை நினைத்தேன்! கானகம் புகுந்தேன்!
உன்சரணம் ஒன்றே வழித்துணையாகக் கொண்டேன்!
ஏழையேன் எனை ஆள இங்கு நீ வரவேணும்!

ஆனைபுலி வாழுகிற அந்தராள காட்டுக்குள்ளே!
ஆளுஞ சனம் நடப்பதற்கே ஆணையிட்ட சாமிகளே!
ஆனைபுலி வாழுகிற அந்தரான காட்டுக்குள்ளே!
ஆளுஞ சனம் நடப்பதற்கே ஆணையிட்ட சாமிகளே!

கட்டு நிறையோடு எட்டி நடைபோட
பாதபலம் தரணும்! தேக பலம் தரணும்!... சாமி ....
சாமியே! சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டதூரம் போவதாலே துணையாய் வரவேணும்
ஜோதி ரூபமாக வந்து வெளிச்சம் தரவேணும்!
சரணம்! சரணமே சாமி! துணை வரணும்! வரணுமே சாமி!
சரணம்! சரணமே சாமி! துணை வரணும்! வரணுமே சாமி!

நாலு பகல் பார்க்கவில்லை! நேரம் காலம் கேட்கவில்லை!
குருசாமி சொன்ன சொல்லை சித்தம் என எண்ணிக்கொண்டு
நடந்தேனே!
அச்சுறுத்தும் காட்டுக்குள்ளே, ஐயா உந்தன் பேரைப்போல
பக்கத்துணை ஏதுமில்லை பகவானே! எனச் சொல்லி நடந்தேனே!
என்னுடன் வருவாயா? அரிகர சுகநாதா?
என்னுடன் வருவாயா? அரிகர சுகநாதா?
தடையே இல்லாத பயணம் தருவாயா?
தடையே இல்லாத பயணம் தருவாயா?
(சரணம் சரணமே சாமி)

காளைகட்டிப் பக்கத்திலே தாகம் என்று நினைக்கையில்
கன்னிச்சாமி ரூபத்தில் தாங்கிவிட ஒரு கரம் தரவேணும்!
வருவாய் என எண்ணி சரணம் சொல்கின்றேன்!
வருவாய் என எண்ணி சரணம் சொல்கின்றேன்!
சபரிமலை நாதா! வருவாய் என் தேவா!
சபரிமலை நாதா! வருவாய் என் தேவா!
(சரணம் சரணமே சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிமரம்

கொடிமரம் கொடிமரம் அங்கே கண்டேன்
கோடி கோடி அர்ச்சனைகள் இங்கே கண்டேன்
படி பதினெட்டும் தான் அங்கே கண்டேன்
பம்பையின் ஜோதியை இங்கே கண்டேன் (கொடி)

பந்தளத்தரசன் வந்திடுவான்
பாலகனின் குரலைக் கேட்டிடுவான்
நம்பினார்க்கென்றும் அருள்புரிவான்
என்றும் அவனே துணை புரிவான் (கொடி)

மண்டல பூஜை அங்கே கண்டேன்
மணிகண்ட மூர்த்தியை இங்கே கண்டேன்
மகரஜோதியை அங்கே கண்டேன்
மங்கள விளக்கை இங்கே கண்டேன் (கொடி)

அம்பல வர்ணன் அருள் புரிவான்
ஆனந்த மூர்த்தி துணை புரிவான்
இன்ப ஜோதியை எனக்கருவான்
என்றும் அவனே துணை புரிவான் (கொடி)

## எங்க பகவான்

எங்க பகவான் ரொம்ப தங்க பகவான்
ஏழைகளை காக்க வந்த பொன்னு பகவான் (எங்க)

பம்பையிலே பாலனாக வந்த பகவான்
பந்தளத்தின் அரசனாக ஆண்ட பகவான் (எங்க)

தங்க நிறமானவராம் எங்க பகவான்
தர்மநிலை உள்ளவராம் எங்க பகவான் (எங்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாதி மன்னரையா! எங்க பகவான்
மண்டியிட்டு வணங்க வைப்பார் எங்க பகவான் (எங்க)

புன்னகையில் உள்ளவராம் எங்க பகவான்
புலிகளுடன் வருபவராம் பொன்னு பகவான் (எங்க)

கண்ணான கண்மணியாம் எங்க பகவான்
காந்த மலை ஜோதி ஐயா எங்க பகவான் (எங்க)

## ஐயப்பன் அழகைப் பாருங்க

சரணம் சரணம் என்று சொல்லிப் பாருங்க - அந்த
சபரிமலைக்கு நீங்க வந்து பாருங்க (சரணம்)

அச்சன் கோயில் அரசனையும் வந்து பாருங்க - அந்த
ஹரிஹர புத்திரனின் அழகைப் பாருங்க (சரணம்)

ஆரியங்கா ஐயாவையும் வந்து பாருங்க - அந்த
ஆனந்த ரூபன் அவன் அழகைப் பாருங்க (சரணம்)

குளத்துபுழ பாலனையும் வந்து பாருங்க - அந்த
குலம் காக்கும் குழந்தை அவன் அழகைப் பாருங்க (சரணம்)

பந்தளத்து வேந்தனையும் வந்து பாருங்க - அந்த
பால்வடியும் பாலகனின் அழகைப் பாருங்க (சரணம்)

எருமேலி சாஸ்தாவையும் வந்து பாருங்க - அந்த
ஏகாந்த வாசன் அவன் அழகைப் பாருங்க (சரணம்)

சபரிமலை சாஸ்தாவை வந்து பாருங்க - அந்த
சாந்தஸ்வரூபன் அவன் அழகைப் பாருங்க (சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி ப்பாடி வந்திடுவோம்

அப்படி இப்படி ஆடிபாடி ஆனந்தம் கொண்டு நாம
எப்படியும் சபரிமலை வந்திடுவோம்
கார்த்திகையில் மாலைபோட்டு கடுவிரதம் இருந்து நாம
மார்கழியில் கட்டும் கட்டு மணிகண்டன் பார்க்க நாம
எருமேலி பேட்டைத் துள்ளி பேருத் தோடை பார்த்து நாம
அழுதையிலே குளித்துப்புட்டு அழுதமலை ஏறி நாம
(அப்படி இப்படி)

கரிமலையில் ஏறிகிட்டு பகவதியை பார்த்து நாம
பம்பா நதி தீர்த்தத்திலே பாவம் யாவும் போக்கி நாம
நீலிமலை ஏறி அன்னை சபரியையும் பார்த்து நாம
சரங்குத்தியில் சரத்தை போட்டு சன்னதியை பார்த்து நாம
சரண கோஷம் முழங்குவோம் சாஸ்தாவைப் பாடுவோம்
(அப்படி இப்படி)

## அருள்மழை பொழிவாய்

தூக்கிவிடய்யா என்றே நானும் கூவுகின்றேன்
ஏற்றி விடய்யா என்றே நானும் கதறுகிறேன்
என்வார்த்தை கேளாயோ அருள்மழை பொழியாயோ
ஐயப்ப சுவாமி ஐயப்ப ஐயப்பா சரணம் ஐயப்பா

கடிமலை ஏற்றம் கடினம் கடினம் ஏறுகின்றேன்
காற்றும் மழையும் உன்னை எண்ணிப் பாடுகின்றேன்
என் வார்த்தை கேளாயோ அருள்மழை பொழியாயோ
ஐயப்ப சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

காடும் விலங்கும் வழிவிட நானும் ஏறுகின்றேன்
காந்த ஜோதி வண்ணம் கண்டே பாடுகின்றேன்
என் வார்த்தை கேளாயோ அருள்மழை பொழியாயோ
ஐயப்ப சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பையின் பால பாவ வினோதா வேண்டுகின்றேன்
நெய்யுடன் தேங்காய் சென்னி சுமந்தே ஏறுகின்றேன்
என் வார்த்தை கேளாயோ அருள்மழை பொழியாயோ
ஐயப்ப சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

கொல்லும் வினையும் பொல்லா நோயும் தாங்கி வந்தேன்
தேடிவந்தே உன் திருப்பாதம் சரணடைந்தேன்
என் வார்த்தை கேளாயோ அருள்மழை பொழியாயோ
ஐயப்ப சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

நெய்யபிசேகம் கண்டே மனதில் சாந்தி கொண்டேன்
நேர்த்திக்கடன் தீர்த்தே மனதில் அமைதி கொண்டேன்
என் வார்த்தை கேளாயோ அருள்மழை பொழியாயோ
ஐயப்ப சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

## பெருவினை தீர்க்க இருமுடி தூக்குக

சரணம் என்று சொல்லப்பா சங்கெடுத்து ஊதப்பா
சாமி சரணம் சொல்லப்பா ஐயப்பன் சரணம் சொல்லப்பா
பாலன் நாமம் சொல்லப்பா பாபம் தீர்க்கும் வழியப்பா
சரணம் சரணம் சொல்லப்பா சஞ்சலத்தை விலக்கப்பா (சரணம்)

ஆடிப்பாடி மகிழப்பா ஆனந்தித்து ஆடப்பா
பார்த்து பார்த்து மகிழப்பா ஞானப்பழம் அவனப்பா
இருமுடியை தூக்கப்பா பெருவினையும் தீருமப்பா
அன்பு வெள்ளம் அவனப்பா ஆனந்தஜோதி அவனப்பா
(சரணம்)

மஞ்சள் முகம் அவனப்பா மரணபயம் ஏனப்பா
கற்பூர ஜோதி அவனப்பா ஜோதி தரிசனந் தானப்பா
ஹரிஹரன் அவனப்பா அல்லல் தீர்க்கும் சாமியப்பா
நினைந்து நினைந்து உருகப்பா நினைத்த இன்பம் பெறப்பா
(சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கல்பம் செய்யப்பா சாந்திதனை நாடப்பா
அபிஷேகம் செய்யப்பா ஆனந்தம் கோடி பெறப்பா
சத்தியமே பேசப்பா முத்திதனை அடையப்பா
நெஞ்சுருகிப் பாடப்பா தஞ்சம் என்று சேரப்பா
(சரணம்)

கல்லும் முள்ளும் மெத்தையப்பா காடுவனம் சோலையப்பா
தேகபலம் தரணுமப்பா பாத பலம் வேண்டுமப்பா
பம்பை தன்னில் பாலனே எல்லாம் உன் செயலப்பா
சரணம் என்று சொல்லப்பா சங்கெடுத்து ஊதப்பா
(சரணம்)

## தரிசனம் கண்டேன்

தரிசனம் கண்டேன் பரவசம் கொண்டேன்
அரிஹரன் மைந்தனை சபரிமலை தன்னில் (தரி)

தர்மத்தைக் காக்கவே தரணியில் பிறந்தவனை ...ஆ...
கர்மவினை தீர்க்கும் கருணையில் சிறந்தவனை (தரி)

வைதாலும் அவர் வாழ வழி காட்டும் மன்னவன்
வாயார வாழ்த்தி நின்றால் வந்தருள் செய்பவன்
மெய்யப்பன் ஐயப்பன் மேன்மை தரும் பாடல்
தையினில் ஜோதியாய் திகழ்ந்திடும் நாதனை (தரி)

ஐந்து மலைக்கரசன் ஐந்தெழுத்தானவன்
ஐங்கரன் தம்பியவன் ஐஸ்வர்யதாயகன்
சிந்தையில் நின்றாடும் பந்தள பாலகன்
சிம்மையன் என்னையன் சுகம் தரும் நாயகனை (தரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதி மத பேதமில்லை

ஐயப்ப சுவாமி சரணம் ஐயப்ப சுவாமி
ஐயப்ப சுவாமி சரணம் ஐயப்ப சுவாமி

சாதி மத பேதமில்லை சஞ்சலங்கள் எதுவுமில்லை
சந்நிதியை நாடி வந்தோம் ஐயப்ப சுவாமி - எமக்கு
சாந்தி தர வேண்டும் அப்பா - ஐயப்ப சுவாமி
(சாதி மத பேதமில்லை)

நல்ல குரு நாதனப்பா
நாநிலம் போற்றுதப்பா
நாடியவர் அடி தொடர்ந்தோம் ஐயப்ப சுவாமி எமக்கு
நற்கதியைத் தரவேண்டும் ஐயப்ப சுவாமி
(சாதி மத பேதமில்லை)

வஞ்சனைகள் நெஞ்சில் இல்லை
உற்ற துணை யாருமில்லை
உன்கழலை சரணம் அடைந்தேன் ஐயப்பா - எங்களை
உத்தமனாய் வாழ வைப்பாய் ஐயப்பா
(சாதி மத பேதமில்லை)

ஆணவம் சிறிதுமில்லை
ஆதரிக்க எவருமில்லை
ஆற்றாது ஓடி வந்தோம் ஐயப்ப சுவாமி - எமக்கு
நற்கதியை தரவேண்டும் ஐயப்ப சுவாமி
(சாதி மத பேதமில்லை)

நல்ல குரு நாதனப்பா
நாநிலம் போற்றுதப்பா
நாடியவர் அடி தொடர்ந்தோம் ஐயப்ப சுவாமி எமக்கு
நற்கதியைத் தரவேண்டும் ஐயப்ப சுவாமி
(சாதி மத பேதமில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை புலி கூட்டமப்பா
யாருமற்ற பாதையப்பா
உன்னருளே தஞ்சமென்றோம் ஐயப்பா சுவாமி - எமக்கு
உறுதுணையாய் நீ வருவாய் ஐயப்பா சுவாமி
(சாதி மத பேதமில்லை)

உச்சிமலை தெரியுதப்பா
உத்தமனின் கருணையப்பா
வெட்டவெளி தாண்டி வந்தோம் ஐயப்பா சுவாமி - எமக்கு
ஈடேற்றம் தர வேண்டும் ஐயப்ப சுவாமி
(சாதி மத பேதமில்லை)

## கன்னிசாமி நீ

கன்னிச்சாமி நீ கவனம் சாமி
கார்த்திகையில் மாலை போட்ட கன்னிச்சாமி
கடும் விரதம் இருக்க வேண்டும் கன்னிச்சாமி
மார்கழியில் கட்டும் தாங்கி கன்னிச்சாமி
மணிகண்டனைப் பார்க்கப் போறோம் கன்னிச்சாமி

அச்சங்கோவில் ஆண்டவனை கன்னிச்சாமி
அச்சமின்றி தரிசிப்பாய் கன்னிச்சாமி
காளைகட்டி நாதனையே கன்னிச்சாமி
கண்குளிர தரிசிப்பாய் கன்னிச்சாமி

எரிமேலி நாதனையே கன்னிச்சாமி
ஏகாந்தமாய் தரிசிப்பாய் கன்னிச்சாமி
காளைகட்டி நாதனையே கன்னிச்சாமி
கண்குளிர தரிசிப்பாய் கன்னிச்சாமி

அழுதா நதியினிலே கன்னிச்சாமி
ஆனந்தமாய் நீராடு கன்னிச்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதா ஏற்றத்திலே கன்னிச்சாமி
அழுதுகொண்டு ஏறுராயே கன்னிச்சாமி

கரிமலை ஏற்றத்திலே கன்னிச்சாமி
கண்ணீர் சிந்துராயே கன்னிச்சாமி
பம்பா நதியினிலே கன்னிச்சாமி
பாவங்களைப் போக்கிடுவாய் கன்னிச்சாமி

நீலிமலை ஏற்றத்திலே கன்னிச்சாமி
நிற்காமல் ஏறவேண்டும் கன்னிச்சாமி
சபரி பீடத்தையே கன்னிச்சாமி
சந்தோஷமாய் காணவேண்டும் கன்னிச்சாமி

சரங்குற்றி ஆலினிலே கன்னிச்சாமி
அம்பு சரம் இட வேண்டும் கன்னிச்சாமி
பதினெட்டாம் படிதனிலே கன்னிச்சாமி
பதறாமல் ஏறவேண்டும் கன்னிச்சாமி

கறுப்பு சாமியையே கன்னிச்சாமி
கலங்காமல் தரிசிப்பாய் கன்னிச்சாமி
காந்தமலை ஜோதியையே கன்னிச்சாமி
கண்குளிர தரிசிப்பாய் கன்னிச்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் மலரே தெள்ளமுதே ஓடிவா ஐயப்பா

ஓடிவா ஐயப்பா ஓடிவா ஐயா
உன் பாதம் நான் தொழுதேன் ஓடிவா ஐயா
மானே மரகதமே ஓடிவா ஐயா!
மல்லிகைப்பூ செண்பகமே ஓடிவா ஐயா!
தேனே கற்கண்டே ஓடிவா ஐயா!
தெவிட்டாத தெள்ளமுதே ஓடிவா ஐயா! (ஓடிவா ....)

அச்சங்கோவில் அரசனே ஓடிவா ஐயா
ஆரியங்காவு அய்யனே ஓடிவா ஐயா
குளத்தூர் பாலகனே ஓடிவா ஐயா
குழந்தை மணிகண்டனே ஓடிவா ஐயா
எரிமேலி சாஸ்தாவே ஓடிவா ஐயா
எங்கள் குலதெய்வமே ஓடிவா ஐயா (ஓடிவா ...)

வன்புலி வாகனனே ஓடிவா ஐயா
வில்லாளி வீரனே ஓடிவா ஐயா
வீரமணி கண்டனே ஓடிவா ஐயா
பம்பையின் பாலனே ஓடிவா ஐயா
பம்பையின் ஜோதியே ஓடிவா ஐயா
பந்தள ராஜாவே ஓடிவா ஐயா (ஓடிவா ...)

நீலி மலை வாசனே ஓடிவா ஐயா
நித்ய பிரம்மச்சாரியே ஓடிவா ஐயா
கறுப்பு சாமியே ஓடிவா ஐயா
கற்பூர ஆழியே ஓடிவா ஐயா
காந்தமலை ஜோதியே ஓடிவா ஐயா (ஓடிவா ...)

சபரிகிரி வாசனே ஓடிவா ஐயா
சாந்த சொரூபனே ஓடிவா ஐயா
நாகராஜாவே ஓடிவா ஐயா
கன்னி மூலை கணபதியே ஓடிவா ஐயா
காத்தருளும் தெய்வமே ஓடிவா ஐயா
மஞ்சள் மாதாவே ஓடிவா ஐயா (ஓடிவா ...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கட்டு பள்ளிக்கட்டு

பள்ளிக்கட்டு பள்ளிக்கட்டு இருமுடி கட்டிக்கிட்டு
சபரிமலை சாமிக்கு சரணங்கள் சொல்லிக்கிட்டு
காடு மலை மேடு தொட்டு கல்லும், முள்ளும்
தாண்டிக்கிட்டு கன்னிமூல கணபதி காலைத்தொட்டு கும்பிட்டோம்
சாமியே சரணமையா அருள்தரும்
ஜோதியே சரணமையா (பள்ளி)

பெருவழி பாதை தூரம் இருமுடி தலையில் பாரம்
பசியுடன் தாகம் மறந்தது தெரிந்தது தேவன் பாதம்
அழகிய மரகதக் காடு அழைப்பது ஐயனின் வீடு
குழுமையின் வேகம் கடந்திட வேண்டும் பம்பா பாதம்
தரிசனம் காணாமல் தவிப்புகள் ஓயாது (11)
தயங்கிடக் கூடாதையா
சாமியே சரணம் அருள்தரும் ஜோதியே சரணமையா (பள்ளி)

உழவுந்தென்றல் தோழன் உதவிக்கு கஜமுகநாதன்
துணைவருவான் அவன் அருள் சேரும் ஆசி போதும்
வனங்களின் கூரை வானம் வழிச்சொல்லும் குயில்களின் கானம்
பறவைகள் கூச்சல் இயற்கையின் பாடல் காதில் சேரும்
பரமனைக் காணாமல் பயணங்கள் ஓயாது
வழிகளில் முன்னேறுவோம்....
சாமியே சரணமையா அருள்தரும்
ஜோதியே சரணமையா (பள்ளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளசி மாலை தாங்கும்

துளசிமாலை தாங்கும் வேளை புனிதம் புனிதமப்பா
மனதில் சலனம் விலகும் தருணம் ஆனந்தம் ஐயப்பா
பூசும் சந்தனம் வீசும் வாசம் புனிதம் புனிதமப்பா
சரண கோசம் கேட்கும் நேரம் ஆனந்தம் ஐயப்பா

கார்த்திகை மாதம் விரதம் இருந்து
சரணம் சொல்லி பூசை போட்டு
குருசாமிக்கு வந்தனம் வந்தனம்
சபரிமலைக்கு வரணும் வரணும்
காண ஏங்கி வரும் கோடிக்கண்களுக்கு
காக்கும் தெய்வம் ஐயன் தானே
சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

சாமிமாரைக் காணும் வேளை புனிதம் புனிதமப்பா
பாதம் தொட்டு பணியும் போது ஆனந்தம் ஐயப்பா
பூஜை போடும் இல்லம் எங்கும் புனிதம் புனிதமப்பா
செண்டை மத்தள ஓசை காதில் ஆனந்தம் ஐயப்பா
கட்டு நிறைக்குள் முத்திரைத் தேங்காய்
கட்டும் கட்டு இருமுடிக்கட்டு
பந்தள வாசன் திருவடி தொட்டு
எங்கே போகிறோம் மலைக்குப் போறோம்
காலை மாலையில் காடு மேடுகளில் காவியோடு
ஓடிவரும் கூட்டம் தானே
சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

பேட்டை துள்ளும் நேரம் யாவும் புனிதம் புனிதமப்பா
ஓடும் பாம்பை நீரின் குளுமை ஆனந்தம் ஐயப்பா
கன்னிமூல கணபதி காண புனிதம் புனிதமப்பா
கன்னிசாமியின் நடையின் வேகம் ஆனந்தம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைக்காண சாமியைக் காண
சாமியைக் கண்டால் மோட்சம் கிட்டும்
எப்போ போறோம் இப்போ போறோம்
சபரிமலைக்கு பயணம் போறோம்
ஜீவன் ஆகிடும் மலை வாசன் ஆகிடும் ஐயன் தானே
சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

ஏற்றம் இறக்கம் கரிமலை எங்கும் புனிதம் புனிதமப்பா
குடலை வருடும் காற்றின் சுகமும் ஆனந்தம் ஐயப்பா
பாயும் சரங்கள் சரங்குத்தியாலில் புனிதம் புனிதமப்பா
வேண்டும் வரங்கள் கேட்கும் முகங்கள் புனிதம் புனிதமப்பா
தூக்கிவிடப்பா ஏற்றிவிடப்பா
தேகபலம் தா பாதபலம் தா
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
குண்டும் குழியும் கண்ணுக்கு வெளிச்சம்
தஞ்சம் என்று தினம் வந்தவருக்கு கரம் தந்து
காத்தருளும் தெய்வம் தானே
சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

சபரிபீடம் காட்டும் பாதை புனிதம் புனிதமப்பா
பாதை எங்கும் இருமுடி உலகம் ஆனந்தம் ஐயப்பா
கண்கள் எதிரில் பதினெட்டுப் படிகள் புனிதம் புனிதமப்பா
காத்திருந்த தருணம் வந்தது ஆனந்தம் ஐயப்பா
சற்குருநாதா சாந்த சொரூபா
அரிகரசுதனே சபரிகிரீசா
வில்லாளி வீரனே வீரமணிகண்டா
மோகினி சுதனே பாலகுமாரா
அம்பும் வில்லும் தினம் கையில் ஏந்தும் அவன் சபரிவாசன்
அவன் சன்னிதானம்
சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் எங்கும் ஐயன் வடிவம் புனிதம் புனிதமப்பா
காய்கள் உடைக்க உடலும் பணியும் ஆனந்தம் ஐயப்பா
படிகள் கடக்கும் பாதம் யாவும் புனிதம் புனிதமப்பா
சன்னிதான தரிசன பாக்கியம் ஆனந்தம் ஐயப்பா

தேவன் பாதம் தேவி பாதம்
பகவான் சரணம் பகவதி சரணம்
ஈஸ்வரன் பாதம் ஈஸ்வரி பாதம்
இருமுடி சரணம் திருவடி சரணம்

சன்னிதானம் அதில் பஞ்சவாத்திய ஓசை கேட்டருளும் உள்ளம் தானே

சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

மின்னும் விளக்கில் ஐயன் புன்னகை புனிதம் புனிதமப்பா
ஜொலிக்கும் ரத்தின மாலைகள் காண ஆனந்தம் ஐயப்பா
வேத மந்திரம் ஒலிக்கும் நேரம் புனிதம் புனிதமப்பா
காட்டும் ஆரத்தி வலம் வரும் போது ஆனந்தம் ஐயப்பா

தீபச்சுடரே சரணம் சரணம்
ஞான விளக்கே சரணம் சரணம்
சாஸ்தா வடிவே சரணம் சரணம்
சன்னதி அழகே சரணம் சரணம்

யோக மூர்த்தியுடன் ஆளும் கீர்த்தியுடன் வாழும் நாதன் ஐயன்தானே

சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

மணக்கும் நெய் அது மேனியில் தவழும் புனிதம் புனிதமப்பா
பிறக்கும் ஞானம் எங்களது கண்களில் ஆனந்தம் ஐயப்பா
வண்ணமலர்கள் அணைக்கும் திருவடி புனிதம் புனிதமப்பா
எடுத்த பிறவியின் பயனைக் காண்போம் ஆனந்தம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் அபிஷேகம் சாமிக்கே
கற்பூர தீபம் சாமிக்கே
திரு ஆபரணம் சாமிக்கே
சரணம் சரணம் சாமிக்கே

இன்னும் பல பிறவி தந்து சபரிமலை வந்து பணியவரம் தருவாயே

சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)

மகரநாளில் அம்பல மேட்டில் புனிதம் புனிதமப்பா
வானில் ஐயன் ஜோதிவடிவில் ஆனந்தம் ஐயப்பா
வானும் மண்ணும் வணங்கும் நேரம் புனிதம் புனிதமப்பா
சபரிமலையே எங்கள் உலகம் ஆனந்தம் ஐயப்பா

காந்த மலையிலே ஜோதிஸ்வரூபம்
சபரிமலையிலே ஞான சொரூபம்
சாமிகள் மனதில் பக்தி சொரூபம்
சரண கோசத்தில் நாத சொரூபம்

சாமி சரணம் அது காக்கும் கவசம் இது நாவில் மலர தினம் அருள்வாயே

சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா
சாமியே சரணமப்பா (துளசிமாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிகிரி சாஸ்தா எங்கே

சபரிகிரி சாஸ்தாவும் எங்கே எங்கே
அந்த சபரிமலை போனாத் தெரியும் அங்கே அங்கே
(சபரிகிரி)

படி பதினெட்டும் எங்கே எங்கே
அந்தசபரிமலை போனாத் தெரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)

ஐயப்பனார் வாழும் இடமும் எங்கே எங்கே
ஆரியங்காவு போனாப் புரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)

வேட்டைக்கொரு பிரியனும் எங்கே எங்கே
எரிமேலி போனாத் தெரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)

ஸ்ரீராமனின் பாதமும் எங்கே எங்கே
பம்பா நதி போனாத் தெரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)

மஞ்சள் மாதா கோவிலும் எங்கே எங்கே
அந்த சபரிமலை போனாத் தெரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரம் தெரிவதும் எங்கே எங்கே
கோவிலுக்குள் போனாத் தெரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)

கோடி கோடி அர்ச்சனைகள் எங்கே எங்கே
அந்த சபரிமலை போனாத் தெரியும் அங்கே அங்கே
ஐயனே சபரிகிரி! அப்பனே சபரிகிரி!
சுவாமியே ஐயப்பா! சரணம் கூறிப்பாடப்பா! (சபரிகிரி)

## அம்பலத்து மன்னவனை

அம்பலத்து மன்னவனை கண்ணெடுத்துப் பாரும் ஐயா
சந்தனத்தில் குளிப்பவராம் சஞ்சலங்கள் தீருமையா
பொன்னாரம் வாசம் பூவாரம் சூடும்
பூமிப் பிரபஞ்சன் மேனியதில் ஜொலிக்குதையா
(அம்பலத்து மன்னவனை)

சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே
பூமியே சொல்லுதே ஐயப்போ சுவாமியே - 2

முத்து மணியாரம் இரத்தினம் பொன்மாலை பூசணங்கள்
ஆடி வருதே பக்தர் சிலிர்த்தாட பம்பை வழிதாண்டி
பந்தளத்தில் சீரும் வருதே
வெண்கருடன் வட்டமிட்டு காவல் தருமே
ஐயனலங்காரம் .... ஐயனலங்காரம் ஆபரணக்கோலம்
நெஞ்சினிலே எண்ண பரவசமே பெருகுதையா
(அம்பலத்து மன்னவனை)
(சுவாமியே ஐயப்போ - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வகை வாத்தியம் ஐந்து மலை எங்கும் ஐயன் புகழ்
பாடுதையா ஐயன் புகழ் கோஷம் மெய்சிலிர்த்த வண்ணம்
ஆகாயம் நீளுதையா கண்ணெதிரில் .....
அற்புதங்கள் தோன்றுதையா

காந்தமலை ஓரம் ...... காந்தமலை ஓரம் சந்நிதியில் மூலம்
எழுகின்ற நேரம் விழிகாணக் காக்குதையா
(அம்பலத்து மன்னவனை)
(சுவாமியே ஐயப்போ - 2)

## ஐயப்பனே துணை

### விருத்தம்

அழுகின்ற பிள்ளைக்குத் தாயே துணை
மயங்கிடும் மனதுக்கு மந்திரம் துணை
ஊமைக்கும் செவிடுக்கும் பாவம் துணை
பாவமோ புண்ணியமோ ஐயப்பனே துணை

**சரணம் 1**

ஐயப்பனே துணை நமக்கு ஐயப்பனே துணை
ஏழை என்பவன் யாருமில்லை ஐயப்பனே துணை
அநாதை என்பவன் யாருமில்லை ஐயப்பனே துணை
வீட்டை மறந்து காட்டுக்குப் போவோம் ஐயப்பனே துணை
கன்னிச்சாமிகள் காலாற நடக்க ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

**சரணம் 2**

அஞ்சு மலைகளும் ஏற்றுக்கொள்ளுமோ ஐயப்பனே துணை
செய்த பாவங்கள் வழி மறிக்குமோ ஐயப்பனே துணை
சன்னிதி வாசல் பிழை பொறுக்குமோ ஐயப்பனே துணை
அழுத குரலுக்கு விடை கிடைக்குமோ ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம் 3**

போகும் பாதையிலே கல்லோ முள்ளோ ஐயப்பனே துணை
கும்மிருட்டிலே குண்டோ குழியோ ஐயப்பனே துணை
பந்தள நாட்டின் அடிமைகளுக்கு ஐயப்பனே துணை
பஞ்ச பூதங்கள் வழிமறித்தாலும் ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

**சரணம் 4**

கூட்டம் கூட்டமாய் மலையில் ஏறுவோம் ஐயப்பனே துணை
கூட்டம் விட்டு பிரிந்த சாமிக்கு ஐயப்பனே துணை
தள்ளாடித் தள்ளாடி மலையில் ஏறுவோம் ஐயப்பனே துணை
கள்ளர் பயமோ காட்டு மிருகமோ ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

**சரணம் 5**

தேடும் விழிகளில் ஜோதி தெரியுமோ ஐயப்பனே துணை
பாடும் பாட்டிலே எத்தனை குறையோ ஐயப்பனே துணை
இருமுடி பாரம் சன்னதி சேர ஐயப்பனே துணை
சந்தனம் பூசும் சாமிமாருக்கு ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

**சரணம் 6**

வழியைக் காட்டும் குருசாமிக்கும் ஐயப்பனே துணை
பரவசமாக்கும் கன்னிசாமிக்கு ஐயப்பனே துணை
மாளிகை புரமும் மலையில் ஏறவே ஐயப்பனே துணை
ஆண்டுக்கு ஆண்டு சன்னதி வரவும் ஐயப்பனே துணை
ஐயப்பனே துணை (2)

ஸ்வாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாதி தேவன்

தேவாதி தேவன் திருவருள் நேசன் கண்கண்ட தெய்வம்
மாமலை வாசன்
கருணையின் தோற்றம் அவனைத் தேடிச் செல்வோம்
கருணையின் தோற்றம் அவனை நாடிச் செல்வோம்

காடென்று சொன்னார் சபரிமலையில் காடொன்று அங்கே இல்லை
பூஞ்சோலையைக் கண்டேன் பூரித்து நின்றேன் தன்னை மறந்தேன்
தேடிச் செல்லுவோம் அவனை நாடிச் செல்லுவோம் - தேவாதி...

கல்லென்று சொன்னார் முள்ளென்று சொன்னார் கண்ணில்
- தெரியவில்லை
கும் இருட்டென்று சொன்னார் சொர்க்கத்தைக் கண்டேன்
- சபரிமலையிலே
தேடிச் செல்வோம் அவனை நாடிச்செல்வோம் - தேவாதி .....

கழுதை ஏற்றம் கரிமலை கடினம் ஏறிட வேண்டும் என்றார்
எரிமலை அடைந்து ஐயனைக் கண்டேன் கடினம் தெரியவில்லை
தேடிச்செல்லுவோம்
- தேவாதி

## அன்னதானப் பிரபுவே

அன்னதானப் பிரபுவே வாருமையா இந்த ஏழை பாடும்
குரல் உனக்கு கேட்கலையா

அஞ்சுமலை விட்டு வர மனசில்லையா
எங்க நெஞ்சும் அந்த அஞ்சுமலை புரியலையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சரணம் சுவாமி சரணம்
சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம்
சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம்
சரணம் ஐயப்பா (அன்னதானப் பிரபுவே)

பொன்னம்பல பித்தனே பாருமையா
இந்த ஜீவன் பாடும் பாட்டு உமக்கு கேட்கலையா
நான் பாட வேண்டும் என்பது உந்தன் இச்சையல்லவா
என் பாடலெல்லாம் நீ கொடுத்த பிச்சையல்லவா

சுவாமி சரணம் சுவாமி சரணம்
சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம்
சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம்
சரணம் ஐயப்பா (அன்னதானப் பிரபுவே)

ராஜகுல செல்வாவே வரவில்லையா
உன்னை தாலாட்ட என்மனசு அழைக்குதையா
ஜாலியாக தூளியாட வரணுமையா
எங்க ஆரிராரோ ஆராரோ சரணம் ஐயா

சுவாமி சரணம் சுவாமி சரணம்
சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம்
சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம்
சரணம் ஐயப்பா (அன்னதானப் பிரபுவே)

அம்பலத்து தங்கமே பேசவில்லையா
ஏழை கையில் வரம் அள்ளி வீச வில்லையா
காந்தமலை ஜோதி போல வேற இல்லையா
இந்த ஏழைக்கண்ணில் நீ இருந்தா ஜோதி இல்லையா

சுவாமி சரணம் சுவாமி சரணம்
சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சுவாமியே சரணம்
சரணம் ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் ஐயப்பா
தேவன் சரணம் தேவி சரணம்
சரணம் ஐயப்பா (அன்னதானப் பிரபுவே)

## ஐயனார் அப்பன் சங்கிலி கறுப்பன்

ஐயனாரப்பன் சங்கிலி கறுப்பன் ஐயப்பன் வாராறு
புலிமேல் ஏறியே வாராறு
ஆத்தாவுக்கு கரணோம் என்று
தவித்து வாராறு புலிமேல் தாவியே வாராறு!

காட்டுவழி பாதையை தான் கடந்து வாராறு!
மணிகண்டன் விரைந்து வாராறு
அந்த பந்தள தேசம் எப்ப வரும் என ஏங்கி வாராறு!
வேங்கை புலி ஏங்கியே வாராறு!
கன்று ஈன்ற தாய்ப்புலியைக் கொண்டு வாராறு!
எங்களது ஐயப்பன் வாராறு!
எங்களது ஐயப்பன் வாராறு! (ஐயனாரப்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கராசா குகை வழியே புகுந்து வாராறு!
சிங்கராசா புகுந்து வாராறு
அந்த சிங்கக்கூட்டம் நடுநடுங்க
சிரித்து வாராறு!
சிங்கராசா சிரித்து வாராறு!
கல்லும் முள்ளும் தாண்டிக்கிட்டு
துள்ளியே வாராறு!
வில்லேந்திய வீரன் வாராறு!
அந்த கரடி பதுங்கும் புதை வழியே
துணிந்து வாராறு!
புயல் போல் எழுந்து வாராறு! (ஐயனாரப்பன்)

காட்டுயானை கூட்டத்தையே கண்டு வாராறு!
ஆறுமலை தாண்டி வாராறு!
அந்த மதயானை மாலை சூட
பாலன் வாராறு! மோகினியாய்
பாலன் வாராறு!
துள்ளி ஓடும் புள்ளி மானை
துரத்தி வாராறு! புலிப்படை
நடத்தி வாராறு!
அந்த ஆறுபடை அழகைக் கண்டு
ஆடியே வாராறு!
புலிமேல் ஆடியே வாராறு! (ஐயனாரப்பன்)

சீறும் பாம்பை சித்த எறும்பை
பார்த்து வாராறு! அதைக் கண்டு
ஒதுங்கி வாராறு!
அந்த நெருஞ்சி முள்ளு நிறைந்த
வழியே துணிந்து வாராறு!
அஞ்சு மலை சாமி வாராறு!
காட்டு அருவி, தேன் அருவி குடித்து வாராறு!
குளத்துப் புழை பாலன் வாராறு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த பம்பை நதி தீர்த்தத்திலே
குளித்து வாராறு! அச்சன் கோயில் அரசன் வாராறு!
(ஐயனாரப்பன்)

காத்தாளைப் பூக்காட்டைக் கண்டு
நுழைந்து வாராறு! ஆத்தாடி காத்த வாராறு!
நல்ல மகிழம்பூ கமகமக்க
மகிழ்ந்து வாராறு! புல் எறும்பு
கொல்லையில் வாராறு!
அரண்மனை வாசல் வழியே நுழைந்து வாராறு!
அரிகர சுதனும் வாராறு!
அந்த சதிகார சூழ்ச்சி மத்தை
அழிக்க வாராறு!
சத்தியத்தைக் காக்க வாராறு! (ஐயனாரப்பன்)

## கைகொடுத்துக் காப்பாய் ஐயப்ப தேவா

ஓம் நமோ ஐயப்ப தேவா - ஓம் நமோ ஐயப்ப தேவா
ஓம் நமோ ஐயப்ப தேவா - ஓம் நமோ ஐயப்ப தேவா
ஓம் நமோ ஐயப்ப தேவா - ஓம் நமோ ஐயப்ப தேவா
ஓம் நமோ ஐயப்ப தேவா - ஓம் நமோ நமோ

அரியுமான சிவனுமான ஆண்டவனின் மைந்தனாகி
அல்லலெல்லாம் தீர்க்க வந்த அன்புத் தெய்வமே
அன்பினாலே ஆளவந்த அன்பர்களைக் காத்திடவே
அவதரித்து பூவுலகம் வந்த தெய்வமே (ஓம்)

ஆதியோடு அந்தமாகி ஆரியங்காவு பாலனாகி
ஆதிசக்தி மகனுமாக வந்த மூர்த்தியே
ஆண்டவனின் பிள்ளையான எங்களைக் காத்திடவே
ஆவலோடு வந்த எங்கள் காந்த ஜோதியே (ஓம்)

எரிமேலி சாஸ்தாவாகி எல்லோர்க்கும் தேவனாகி
எங்கள் குலதெய்வமாக வந்த ஜோதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் துயர் போக்கி நீயும் எங்களைக் காத்திடவே
ஏகாந்த மூர்த்தியாக வந்த தெய்வமே (ஓம்)

பதினெட்டாம் படியனாகி பம்பை நதி வாசனாகி
பக்தர்களைக் காக்க வந்த எங்கள் ஜோதியே
பக்தியுடன் பூஜை செய்த சுத்தமான மனதுடனே
நித்தமும் காத்தருள்வாய் நீதி தேவனே (ஓம்)

காந்தமலை ஜோதியாகி சபரிமலை ஏற்றமாகி
கன்னியரைக் காக்க வந்த கருணை மூர்த்தியே
கல்லும் முள்ளும் மலை கடந்து காண்போமே உம்மையே
கைகொடுத்து ஆள வேண்டும் காந்த ஜோதியே
(ஓம்)

## அப்பனுக்கு மலையுண்டு

அப்பனுக்கு மலையுண்டு கைலாயம்
அன்னைக்கொரு மலையுண்டு ஏழுமலை
அண்ணனுக்கு மலையுண்டு பழனிமலை
ஐயப்பா உனக்குண்டு சபரிமலை
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா - 4

என்னுடைய கழுத்து மணிமாலை
என்னுடைய கனவு சபரிமலை
என்னுடைய நாவு சரண மொழி
என்னுடைய வேதம் சரணமையப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா - 4

எனக்குள்ளே இலட்சியம் சபரிமலை
எனக்குள்ளே இருப்பது சன்னிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குண்டு கதி பதினெட்டாம் படி
எனக்குண்டு மலைமேல் மகரவிளக்கு
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா - 4

அப்பனவன் நாமம் நமசிவாயம்
அன்னையவள் நாமம் நாராயணா
அன்புத்தம்பி கோஷம் அரோகரா
ஐயப்பனின் கோஷம் சரணமையப்பா
சரணம் சரணம் சரணமப்பா
சுவாமியே சரணம் சரணமப்பா - 4

## கண் திறந்து பாரப்பா

கண் திறந்து பாரப்பா கவலைகளைத் தீரப்பா
காவினிலே கிடைத்தவனே கண்திறந்து பாரப்பா
கஜமுக சோதரனே கண்திறந்து பாரப்பா
கந்தனுக்கு இளையவனே கண்திறந்து பாரப்பா (கண்)

கலியுக வரதனே நீ கண் திறந்து பாரப்பா
கனதவ விரதனே நீ கண் திறந்து பாரப்பா
காந்தமலை நாதனே நீ கண் திறந்து பாரப்பா
காருண்ய மூர்த்தியே நீ கண் திறந்து பாரப்பா (கண்)

வனத்திலிருப்பவனே கண் திறந்து பாரப்பா
வன்புலி வாகனனே கண் திறந்து பாரப்பா
தனித்து இருப்பவனே கண் திறந்து பாரப்பா
தவக்கோலம் கொண்டவனே கண் திறந்து பாரப்பா (கண்)

சங்கட நாசனனே கண் திறந்து பாரப்பா
சண்முகன் சோதரனே கண் திறந்து பாரப்பா
சபரி கிரீசா நீ கண்திறந்து பாரப்பா
சஞ்சலம் தீர்ப்பவனே கண் திறந்து பாரப்பா (கண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள அப்பனே நீ கண் திறந்து பாரப்பா
அழகான தெய்வமே நீ கண் திறந்து பாரப்பா
அம்பிகையின் மகனே நீ கண் திறந்து பாரப்பா
ஆதரிக்கும் தெய்வமே நீ கண் திறந்து பாரப்பா
(கண்)

## உலகாளும் ஐயன்

உலகாளும் ஐயன் ஐயப்பா என் மனக்கோயில் தீபம் நீயப்பா
உலகாளும் ஐயன் ஐயப்பா என் மனக்கோயில் தீபம் நீயப்பா

அருள் நிறைந்திட இருள் மறைந்திட
கலை மலர்ந்திட நிலை உயர்ந்திட
வளம் வளர்ந்திட நலம் விளங்கிட
வினை அகன்றிட வழி பிறந்திட
சபரிமலைக்குச் செல்லுவோம் சந்நிதியில் கூடுவோம்
சரணகீதம் பாடுவோம் (உலகாளும்)

அறியாமை இருள்நீங்க அறிவென்னும் சுடர் வந்தும்
அணையாத அருள் ஜோதி நீயல்லவா
தெரியாமல் நான் செய்த பிழை தன்னை மன்னித்து
அன்போடு அருள் சிந்தும் தாயல்லவா
இசையோடு உன் புகழை எடுத்துச் சொல்லவா
(அருள் நிறைந்திட)
(உலகாளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினையாத பொழுதில்லை நீயின்றி கதியில்லை
மனதோடு மணிமாலை மணி கண்டனே
திசையேதும் தெரியாது மொழிபேதம் கிடையாது
பலகோடி மனம்பாடும் ஒரே மந்திரம்
பந்தளத்து சாஸ்தாவின் திருமந்திரம்

(அருள் நிறைந்திட)

(உலகாளும்)

திறக்கின்ற விழியோரம் திருமுகமே வர வேண்டும்
ஒலிக்கின்ற சொல்லெல்லாம் உன் நாமமே
மறையாத ஒளி நீயே மறை வேதப்பொருள் நீயே
மனம் நாடும் பரிகாரம் உன் பாதமே
உனை நாளும் மறவாத மனம் போதுமே

(அருள் நிறைந்திட)

(உலகாளும்)

## ஐயா சாமிமாரே

ஐயா சாமிமாரே சபரிமலை போறவரே நீங்க - இந்த
நரிக்குறவர் கூட்டத்தையும் கூட்டிகின்னு போங்கோ - 2
அந்த பம்பையிலே மூழ்கிவர ஆசை
அங்கு பந்தியிட்டு பரிமாற ஆசை
ஐயன் பதினெட்டுப் படியேற ஆசை
அந்தப் பந்தளனைப் பார்த்துப் பேச ஆசை

(ஐயா சாமிமாரே - 2)

காக்கா குருவி கறி சமைச்சு திண்ணு திண்ணு வெறுத்துப்போச்சு
கட்டுப்பாடா வாழ வேணுமெண்ணு ஆசை

(ஐயா சாமிமாரே - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பாங்கூத்துப் பாட்டுப்பாடி ஆட்டமாடி அலுத்துப்போச்சு
பேட்டை துள்ளி சரணம் பாட ஆசை - 2
பச்சைமல, பாசிமல சுத்திவர ஆசை
அட அதுக்குத்தானே ஊசிவித்து சேத்து வைச்சோம் காசை
(ஐயா சாமிமாரே - 2)

காசிமணி கருக மணி நீச்ச துணிவிட்டு போட்டு
துளசி மணி காவி போட ஆசை - 2
குடும்பிப்பிடி, குறத்துப்பிடி ஒதுக்கிக்கிட்டு மனசுக்குள்ள
உடும்புப்பிடி உறுதி கொள்ள ஆசை - 2
அரேசாமி நாற்பது நாள் விரதம் கொள்ள ஆசை - 2
அந்த ஹரிஹர சுதன் அழகைக் காண பெருகுதய்யா ஆசை - 2
(ஐயா சாமி மாரே - 2)

## அழகுமலை வாழும் ஐயப்பா

மலையாம் மலையழகாம் ஐயப்போ - சாமியே
மலையைச் சுற்றி தோப்பழகாம் ஐயப்போ - சாமியே
பாக்கு விளையும் மலை ஐயப்போ - சாமியே
பக்தர்கள் கூடும் மலை ஐயப்போ - சாமியே
ஊக்கம் அளிக்கும் மலை ஐயப்போ - சாமியே
உருத்திராட்சம் காய்க்கும் மலை ஐயப்போ - சாமியே
காக்கும் காந்த மலை ஐயப்போ - சாமியே
கரடி புலிகள் வாழும் மலை ஐயப்போ - சாமியே
தேக்கு விளையும் மலை ஐயப்போ - சாமியே
தேனாறு பாயும் மலை ஐயப்போ - சாமியே
உலகம் அறிந்த மலை ஐயப்போ - சாமியே
ஊமைகள் பேசும் மலை ஐயப்போ - சாமியே
பம்பை நதி பிறந்த மலை ஐயப்போ - சாமியே
பாவமெல்லாம் தீரும் மலை ஐயப்போ - சாமியே
மலையாம் மலை கடந்து ஐயப்போ - சாமியே
மகரஜோதி காண வாரோம் ஐயப்போ - சாமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்துமலைக் கதிபதியாம் ஐயப்போ - சாமியே
அம்பலத்தைக் காண வாரோம் ஐயப்போ - சாமியே
சந்தனம் விளையும் மலை ஐயப்போ - சாமியே
சத்தியம் நிலைக்கும் மலை ஐயப்போ - சாமியே

## ஐயன் அருள் உண்டு

ஐயன் அருள் உண்டு என்றும் பயம் இல்லை
போவோம் சபரி மலை
அந்த சிவன் மைந்தன் ஐயப்பன்
என்றும் பக்தரைக் காப்பவனே
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)

அழுதையில் மூழ்கி கல்லும் எடுத்து
கல்லிடம் கொண்டு வந்தேன்
அந்தக் கல்லிடம் குன்றில் கல்லினைப் போட்டு
கரிமலை ஏறி வந்தோம்
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)

பொன்னம்பலத்தில் தை மாதத்தில்
ஜோதியாய் காட்சி தந்தாய்
எங்கள் எண்ணம் பலித்தது மனமும் நிறைந்தது
மணிகண்டப் பெருமானே
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)

பந்தள நாட்டு ராஜகுமாரா பஞ்ச கிரிவாசா (2)
சந்தனம் வைத்து வந்தனம் செய்தோம் சபரிமலை நாதா (2)
ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லும் முள்ளும்

கல்லும் முள்ளும் நிறைந்த நாடு
சபரியின்னு சொன்னாங்க சபரிமலை என்னாங்க
கால் வச்ச இடமெல்லாம் பஞ்சாயிருக்கு என்னாங்க

கள்ளங்கபடம் இல்லாத உள்ளத்தோடு வந்தாலே
மலையில் உள்ள எல்லாமே மாறும் பாரு தன்னாலே (கல்லும்)

கொல்லும் வேங்கை திரியும் காடு
சபரியின்னு சொன்னாங்க சபரிக்காடு என்னாங்க
அவை எல்லாம் சிலை போல அமர்ந்திருக்கும் என்னாங்க

விரதம் இருந்து வந்தாலே விலகும் யாவும் தன்னாலே
ஐயனைத் தியானம் செய்தாலே அவன் இருப்பான் முன்னாலே
(கல்லும்)

ஆனைக்கூட்டம் உலவும் காடு சபரிமலை என்னாங்க
அந்த சபரிமலை என்னாங்க
கணபதியே முன்னாலே காட்சி தந்தது என்னாங்க

தினமும் பூஜை செய்தாலே தெய்வபலம் தன்னாலே
வணங்கும் தெய்வம் எல்லாம் வந்து நிற்கும் முன்னாலே
(கல்லும்)

கரிமலையை கடப்பதெல்லாம் கடினமென்னு சொன்னாங்க
ஆமா கடினமென்னு சொன்னாங்க
மனசுக்குள்ளே அவனிருந்தான் காற்றுப்போல வந்தேங்க

அவனை நம்பி நின்றாலே கைகொடுப்பான் தன்னாலே
பக்தியோடு வந்தாலே காத்திருப்பான் முன்னாலே (கல்லும்)

பனி பெய்யும் இரவினிலே பாதையெல்லாம் கோஷம் தான்
பெரிய பாதையெல்லாம் கோஷம் தான்
மணிகண்டன் அதைக்கேட்டு ஓடிவரும் நேரம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலைக் கேட்ட பின்னாலே குதித்திடுவான் முன்னாலே
தஞ்சமின்னு நின்னாலே தாங்கிடுவான் தன்னாலே (கல்லும்)

மகரஜோதி எல்லாருக்கும் தெரியுமான்னு கேட்டாங்க
ஆமா தெரியுமான்னு கேட்டாங்க
மனசுக்குள்ளே இருட்டினிலே விண்ணில் ஜோதி கண்டேங்க

சரணம் சொல்லி நின்னாலே ஜோதிரூபம் முன்னாலே
வாஞ்சையோடு வந்தாலே வாழ்த்திடுவான் மெய்யாலே (கல்லும்)

## எங்கிருந்தாலும் நான் வருவேன்

எத்தனை பிறவிகளை எடுத்தாலும் - நீ
எங்கே இருந்தாலும் தேடி வருவேன்
உன்னைத் தேடி வருவேன்

மயிலாக நான் பிறந்தால் ஆடி வருவேன்
குயிலாக நான் பிறந்தால் பாடி வருவேன்
உன்னைப் பாடி வருவேன்

பாம்பாக நான் பிறந்தால் ஊர்ந்து வருவேன்
பல்லியாக நான் பிறந்தால் சொல்லி வருவேன்
குறி சொல்லி வருவேன்

புலியாக நான் பிறந்தால் பாய்ந்து வருவேன்
புள்ளிமானாய் நான் பிறந்தால் துள்ளி வருவேன்
உன்னிடம் துள்ளி வருவேன்

பூனையாக நான் பிறந்தால் கத்தி வருவேன்
யானையாக நான் பிறந்தால் ஓடி வருவேன்
நான் உன்னிடம் ஓடி வருவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலாக நான் பிறந்தால் தாவி வருவேன்
கயலாக நான் பிறந்தால் நீந்தி வருவேன்
உன்னிடம் நீந்தி வருவேன்

சோலையிலே நான் பிறந்தால் பூக்கள் கொடுப்பேன்
மாலையாக நான் பிறந்தால் மார்பில் இருப்பேன்
உந்தன் மார்பில் இருப்பேன்

தண்ணீராய் நான் பிறந்தால் தாவி வருவேன்
கண்ணீராய் நான் பிறந்தால் கண்ணில் இருப்பேன்
உந்தன் கண்ணில் இருப்பேன்

கழுகாக நான் பிறந்தால் வட்டமிடுவேன்
மெழுகாக நான் பிறந்தால் உருகி மகிழ்வேன்
உனக்கு உருகி மகிழ்வேன்

எறும்பாக நான் பிறந்தால் ஊர்ந்து வருவேன்
கரும்பாக நான் பிறந்தால் பக்கம் இருப்பேன்
உந்தன் பக்கம் இருப்பேன்

## ஆனைபுலி ஆடி வரும்

ஆனை புலி ஆடி வரும் காட்டிலே
ஒரு அந்தரான பொன்னம்பல மேட்டிலே
விளக்குருபம் கொண்டு விளையாடி வரும் ஐயப்பா
கன்னிமாரு எங்கமுகம் பாரப்பா
எங்க விரதத்திலே வந்து விளையாடப்பா சரணம் சரணம் ...

கார்த்திகைதான் பிறந்துவிட்டால் கூடுகிறோம்
ஒரு கடனை உடன் வாங்கி மாலை போடுகிறோம்
தலை வணங்கும் பயிரைப்போல் குருவடியை நாடுகிறோம்
குருவடிவில் காட்சி தரும் தெய்வமே
எங்க விரதத்தில் வந்து துணை செய்யுமே சரணம் சரணம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுத்த தலையும் நரைச்சு போகக் கூடுமே
சபரிகாடு ஏறும் ஆசை நரைத்துப் போகுமே
தன்னந்தனி தவமுனி ஆனசாமி ஐயப்பா
கன்னிசாமி விரத்திலே நுழையணும்
கண்ணியத்த புண்ணியத்த விதைக்கணும் சரணம் சரணம் ...

பிரம்மனாரு எழுதிவைச்சு தலைவிதி
அதைப் புரட்டிப் போடும் ஐயா உன் இருமுடி
கட்டுமுடி கட்டுபடி ஏற்றிவிடும் ஐயப்பா
நாற்பது நாள் மனிதனாக வாழணும்
அது மலைக்குப் போயும் மறுபடியும் தொடரணும்
சரணம் சரணம் ...

## காடு மலை கடந்து வந்தோம்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி ஐயப்பா

காடுமலை கடந்து வந்தோம் ஐயப்பா
உனைக் காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா
மாய வீடுதனை மறந்து வந்தோம் ஐயப்பா
சபரி வீடுதனை தேடி வந்தோம் ஐயப்பா

நெய் அபிஷேகம் பால் அபிஷேகம்
தேன் அபிஷேகம் சுவாமிக்கு சந்தனம்
பன்னீர் அபிஷேகம் எங்கள் ஐயப்ப சுவாமிக்கு (காடு)

ஏட்டினிலே எழுத வைத்தாய் ஐயப்பா
எங்கள் பாட்டினிலே எழுந்து வந்தாய் ஐயப்பா
நாங்கள் பேட்டை துள்ளி ஆடும் போது ஐயப்பா
நீ ஆட்டம் ஆடி வந்திடுவாய் மெய்யப்பா (காடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலவிழி கண்ணனுக்கும் நீறணிந்த ஈசனுக்கும்
பாலகனாய் அவதரித்த ஐயப்பா
வேலவனின் அருமைத்தம்பி காலமெல்லாம்
உனை வேண்டி நீலிமலை சபரிமலை
ஏறி வந்தோம் ஐயப்பா (காடு)

மணிகண்டா உன் கருணை அமுதப்பா
உன் புன்னகையில் புவனமெல்லாம் மயங்குதப்பா
மின்னும் காந்த மலையில் ஜோதி தெரியுதப்பா - அப்பா
சபரி மன்னவனே உன் மகிமை பெரியதப்பா

## பதினெட்டுப் படியேறிப் பாவங்களைத் தீர்ப்போம்

சன்னதியில் கட்டுக்கட்டித் தன்னானேனானே - நாங்க
சபரிமலை பயணமுங்க தில்லாலே லேலோ
கார்த்திகையில் மாலைபோட்டு தன்னானேனானே - நாங்க
கடும் பயணம் போறமுங்க தில்லாலே லேலோ
மார்கழியில் கட்டுத்தாங்கி தன்னானே னானே - நாங்க
மணிகண்டனைப் பார்க்கப் போறோம் தில்லாலே லேலோ
எருமேலியில் பேட்டை துள்ளி தன்னானே னானே - நாங்க
ஏறிடுவோம் சபரிமலை தில்லாலே லேலோ
அழுதையில் ஸ்நானம் செய்து தன்னானே னானே - நாங்க
அன்னதான மிட்டிடுவோம் தில்லாலே லேலோ
பம்பையில் ஸ்நானம் செய்து தன்னானே னானே - நாங்க
பக்திகள் கொண்டாடிடுவோம் தில்லாலே லேலோ
ஐந்துமலை கடந்து வந்து தன்னானேனானே - நாங்க
ஐயப்பனைக் காணப் போறோம் தில்லாலே லேலோ
மலையாளம் மலை கடந்து தன்னானேனானே - நாங்க
மகரஜோதி காணப்போறோம் தில்லாலே லேலோ
பதினெட்டாம் படியேறி தன்னானேனானே - நாங்க
பாவங்களைத் தீர்க்கப் போறோம் தில்லாலே லேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழி கிடைக்குமா

விழிகிடைக்குமா! அபயகரம் கிடைக்குமா!
என் குருநாதன் சரணத்தின் நிழல் கிடைக்குமா!
அலைமீது அலையாக துயர் வந்து சேரும் போது
அஞ்சாதே எனும் குரலைச் செவி கேட்குமா

நங்கூரம் போல் குருநாதன் கடை விழி இருக்க
சம்ஹாரப் புயல் கண்டு மனம் அஞ்சுமா!
இந்த சம்ஹாரப் புயல் கண்டு மனம் அஞ்சுமா
நிஜமான அன்பு வைத்து
எனதெல்லாம் அடியில் வைத்தேன்
விழியோரப் படகில் எனக்கிடம் கிடைக்குமா!
உன் விழியோரப் படகில் எனக்கிடம் கிடைக்குமா!
விழி கிடைக்குமா!

கோடி ஜென்மம் நான் எடுப்பேன்
குரு உன்தன் அருளிருந்தால்
உனக்குள்ளே உனக்காக எனையாக்குவேன்
நிலைக்காத துன்பம் பல எனை வந்து சேரும் போது
நினைத்தாலே அபயம் தரும் வரம் கிடைக்குமா!
உனை நினைத்தாலே அபயம் தரும் வரம் கிடைக்குமா!
விழி கிடைக்குமா!

## ஆனை அலை இற நீலி மலை

ஆனை அலை இறநீலிமலை நம்ம ஐயப்பனோட சுவாமிமலை - 2
ஏறிவருகிற தந்தான தந்தான ஐயப்பன் மார்களை தந்தான
தந்தான
ஏறி வருகிற ஐயப்பன் மார்களை ஏத்திவிடுற சபரிமலை
ஐயப்பனைத் தொழுவோம் கோயிலுக்கு வருவோம் - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஐயப்பா சரணமப்பா பம்பாவாசனே சரணமப்பா
சுவாமி ஐயப்பா சரணமப்பா பந்தள வாசனே சரணமப்பா
(ஆனை)

வீட்டுல, நாட்டுல, காட்டுல, மேட்டுல, பாட்டுல வாழும் பகவானே
சுவாமியே சரணம் - ஐயப்பா சரணம்
நல்லதவத்தில் உள்ள மனதில் போற்றி வணங்க வருவோனே
சுவாமியே சரணம் ஐயப்பா சரணம்
கேட்ட வரங்களை நாட்டு நலங்களை காத்து இருந்து தருவோனே
சுவாமி திந்தக்கத்தோம் - திந்தகத்தோம்
ஐயப்ப திந்தக்கத்தோம் - திந்தகத்தோம்
(ஆனை)

உன் திருநாமத்தைச் சொல்லிய பேருக்கு
துன்பங்கள் என்றைக்கும் தொடராது
சுவாமியே சரணம் - ஐயப்பா சரணம்
பண்ணின பாவங்கள் பந்தள வாசனின்
பார்வையில் படத் தொடராது
சுவாமியே - சரணம் ஐயப்பா சரணம்
எண்ணின நன்மைகள் எப்போதும் துலங்கும்
என்றைக்குமே அது மாறாது
சுவாமி திந்தக்கத்தோம் - திந்தகத்தோம்
ஐயப்ப திந்தக்கத்தோம் - திந்தகத்தோம்
(ஆனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிச்சாமி

கன்னிச்சாமி எங்கள் கன்னிச்சாமி திந்தக்கத்தோம் - சுவாமி
திந்தக்கத்தோம் திந்தகத்தோம் சொல்லு சாமி

காந்தமலை ஜோதியை நீ பார்க்கணும் சாமி
அதுக்கு துளசி மணி மாலை ஒன்று போட்டுக்க சாமி

நாற்பதுநாள் நோன்பிருந்து புறப்படு சாமி
நம்மை காப்பதெல்லாம் சபரிமலை ஐயப்ப சாமி
(கன்னிச்சாமி)

எரிமேலி சாயம் போட்டு ஆட வேண்டும்
உன் மனமெங்கும் ஐயப்பனை நாட வேண்டும்

தீராத வினைகள் எல்லாம் தீர வேண்டும்
அதற்கு சரண கோஷம் சத்தம் போட்டுக் கூற வேண்டும்
(கன்னிச்சாமி)

உன்னோடு வினையில் வைத்து குளித்திடு சாமி
பம்பை உன் வினைகளை தீர்ப்பதை நீ கண்டுக்க சாமி

எல்லோர்க்கும் அருள்கொடுப்பார் ஐயப்ப சாமி
பம்பை நதிமேலே விளக்கேற்றி விட்டிடு சாமி
(கன்னிச்சாமி)

நெய் தேங்காய் தலைமேலே சுமக்கிற உனக்கு
நிச்சயமாய் வாழ்வில் நல்ல திருப்பங்கள் இருக்கு
சத்தியமாய் ஐயன் அருள் எங்கும் இருக்கு
அதை சாஸ்தாவின் சன்னிதியில் காட்டும் நமக்கு
(கன்னிச்சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தமாமலை வாழும்

காந்த மாமலை வாழும் குருநாதா உன் திவ்யரூபமே மலராதா
இது எங்கள் விண்ணப்பம் ஏற்பது உன் விருப்பம்
நின் திருச்செவிகள் திறவாதா

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சுவாமியே ஐயப்போ, ஐயப்போ சுவாமியே
சுவாமியே சரணம் ஐயப்பா
நியாயமா இது நியாயமா சபரிநாதா நியாயமா! (2)
மாதந்தோறும் நடை திறந்தால் ஜோதி!
அதுபோல் புலரமறந்தால் நியாயமா இது ஐயப்பா!
வருடம் ஒரு முறை போதுமோ (2)
யானைப் பசிக்கென்ன சோளமோ
சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே! சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

மூடு பனிகள் கூடிப்பேசும் காந்த மலையின் மேட்டிலே (2)
வீடு எடுத்து விளக்கு உருவில் மறைந்துலாவும் தெய்வமே (2)
தையில் ஒருநாள் மலர்வதேன் ஐயா உடனே மறைவதேன்
மாதம் இங்கே பன்னிரண்டு வந்தால் புண்ணியம் எமக்குண்டு
அனந்த சயனம் பாலகா ஜோதி ஒன்று போதுமோ
சோதனை அது தீர்க்குமோ (2)

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா (2)
நியாயமா இது நியாயமா!

காணிப் பொன்னாய் வானில் மின்னும்
மூன்று கோடி தேவரும் (2)
ஆறுகாலம் ஞானரூபம் காணப்பூத்தது உன் முகம் (2)
ஐயா ஏன் இந்த பேதமே பொய்யாதொரு மொழி கூறுமே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னோ கேட்டோம் ஐயப்பா
பொன்னம்பலமுகம் காட்டப்பா
கனத்த முடிகள் ஏங்குதே ஜோதி ஒன்று போதுமோ
சோனை அது தீர்க்குமோ (2)

சரணம் சரணம் சரணம் ஐயப்பா
சுவாமியே! சரணம் ஐயப்பா (2)
நியாயமா இது நியாயமா!

## சதாசிவன் மகனே

சதாசிவன் மகனே மகாகணபதியின் சோதர ஐயப்பா
எங்கள் பிதா நீயல்லோ உன்னை தேடி வரும்
அடிமை நாங்கள் அல்லோ உன் குழந்தை நாங்கள் எல்லோ

கூட்டம் விட்டுப் பிரிந்து தவிக்கிறோம்
செய்த பிழையென்ன தெரியலையே
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டும் ஐயனின்
கணக்கும் புரியலையே செய்த பாவம் என்ன தெரியலையே

ஹரிஹர சுதனே சரணம் சரணம் சுவாமி ஐயப்பா
பகவான் சரணம் பகவதி சரணம் சரணம் ஐயப்பா
(சதாசிவன் மகனே)

குருவின் சொல்லையே அலட்சியமாக நினைத்ததால் வந்ததோ
விரத விதிகளை மீறியதாலே இந்நிலை வந்ததோ

சுவாமிமாரின் குல தகுதிக்கேற்ப நடத்தியதால் வந்ததோ
ஐயப்பன் மாரை அன்று ஐயப்பனாகவே
மதிக்க மறுத்ததால் நிகழ்ந்ததோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் விட்டுப் பிரிந்து தவிக்கிறோம்
செய்த பிழையென்ன தெரியலையே
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டும் ஐயனின்
கணக்கும் புரியலையே செய்த பாவம் என்ன தெரியலையே
(ஹரிஹர சுதனே)
(சதாசிவன் மகனே)

கன்னிமார்களை துன்புறுத்தி பயம் காட்டியதால் வந்ததோ
தன்னிலை மறந்து ஆணவத் திமிராய்
திரிந்து அலைந்ததால் நிகழ்ந்ததோ
தொட்டதெற்கெல்லாம் தட்சணை என்றே
சுரண்டியதால் வந்ததோ
என் ஐயப்பா உனை வியாபாரமாக்கி
வயிறு வளர்த்ததால் நிகழ்ந்ததோ

கூட்டம் விட்டு பிரிந்து தவிக்கிறோம்
சோதனை தந்தது போதுமப்பா
வாட்டம் போக்கி சேர்த்து விட வேண்டி
கறுப்பனை உடனே வரச்சொல்லப்பா
திக்கு தெரியாத காட்டுக்குள்ளே திசைக்கொரு
மூலையாய் பிரிந்து விட்டோம்
சரண விழிகளும் கேட்கலையோ என்
ஐயப்பா உனை தெரிந்து கொண்டோம்
ஐயப்பா உனை புரிந்து கொண்டோம்.
(ஹரிஹர சுதனே)
(சதாசிவன் மகனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் நாடிக் கும்பிடுவோர் பல கோடி

1. ஐயப்பா உந்தன் அருள்நாடி - தினம்
கும்பிடுவோம் கைகள் பலகோடி
ஆலயம் வருவார் உனைத்தேடி - ஐயப்பா
உந்தன் புகழ்பாடி

(ஐயப்பா)

2. பந்தள மைந்தன் கோவிலப்பா - அங்கு
பாயும் புலிகள் காவலப்பா
பக்திக்கு உன்னிடம் மேவலப்பா - உன்னை
பக்தர்கள் பார்த்திட ஆவலப்பா

(ஐயப்பா)

3. காலம் என்னும் கைக்குழந்தை - உன்
மடியில் கிடந்து தவழுதப்பா
கருணை என்னும் பாலருத்தி - இந்த
உயிர்கள் எல்லாம் வளருதப்பா

(ஐயப்பா)

4. அப்பா அப்பா என்றாலே
அருள்தர வருவாய் முன்னாலே
வாழ்த்தும் நெஞ்சும் கோடிபெறும் - நம்மை
வாழ்வும் வளமும் தேடிவரும்

(ஐயப்பா)

5. காந்தமலை வாழும் கர்த்தாவே - எமை
காத்திடும் தரும சாஸ்தாவே
சாந்தம் குடிகொண்ட நாயகனே - உயிர்
சபரியில் மேவும் காவலனே

(ஐயப்பா)

6. மோகினியாள் பெற்ற மோகனனே - இன்ப
முக்தியு மளித்திடும் நாயகனே
தாமதம் இன்றி வர வேண்டும் - உந்தன்
தரிசனம் நன்றாய் தரவேண்டும்.

(ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடுகின்ற கண்களுக்குள்

தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி....
திருவிளக்கின் ஒளியினிலே குடி இருக்கும் சுவாமி....

வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சுவாமி....
வஞ்சம் இல்லா நல்லவர்க்கு அருள் புரியும சுவாமி ...

ஐயப்பசுவாமி ... அருள்புரி சுவாமி ....
கண்ணனும் நீ கணபதி நீ கந்தனும் நீயே....
எங்கள் காவல்தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே...

அண்டம் எல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே....
என்னில் அன்பு வைத்து விதி வரைக்கும் ஓடி வந்தாயே....

ஐயப்ப சுவாமி.... இன்னும் அருள்புரி சுவாமி

தேடுகின்ற கண்களுக்குள் ஓடிவரும் சுவாமி....
திருவிளக்கின் ஒளியினிலே குடி இருக்கும் சுவாமி....

ஐயப்ப.... சுவாமி.... அருள்புரி சுவாமி....

தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மனையிலே
ஒரு தம்பி மட்டும் பிறக்க வேண்டும் உந்தன் வடிவிலே....

அன்பு கொண்டு தந்தை தவம் செய்யும் பணியிலே
நாங்கள் ஆண்டு தோறும் வந்து நிற்போம் உன்தன் நிழலிலே

ஐயப்ப சுவாமி.... இன்னும் அருள் புரி சுவாமி....
தேடுகின்ற....

ஐயப்ப சுவாமி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாதி மத பேதமில்லா

சுவாமியே சரணம் அப்பா ஐயப்பா சரணம் அப்பா
சுவாமியே சரணம், சரணம், சரணம் ஐயப்பா - 2

ஜாதிமத பேதமில்லா சபரிநாதனே
ஜோதி மய மானவனே ஹரிஹரசுதனே - 2
(சுவாமியே சரணம் - 2)

சுவாமியே சரணம் சரணம் சரணம்
ஐயப்ப சரணம் சரணம் சரணம்
சுவாமி சரணம் சரணம்
ஐயப்ப சரணம்
சுவாமி சரணம்
சரணம், சரணம்

ஆதி அந்தமான் எங்கள் ஆண்டவனே சரணம்
அருகிலே நீ இருந்தால் அன்பர்க்கேது மரணம் - 2
வேதங்களின் நாயகனே வானவரும் புகழும் - 2
வில்லாளி வீரன் உனை வேண்டுகிறோம் அபயம்
(சுவாமியே சரணம் - 2)
(ஜாதிமத பேதமில்லா - 2)

சுவாமியே ஐயப்போ, ஐயப்போ - சுவாமியே
சுவாமி சரணம் - ஐயப்பா சரணம்
ஐயப்பா சரணம் - சுவாமி சரணம்
சுவாமியப்பா - ஐயப்பா, சரணம் அப்பா ஐயப்பா

வரணுமப்பா - ஐயப்பா
வந்தோமப்பா - ஐயப்பா
வாரோமப்பா - ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதி உணர்ந்த உனை எண்ணி உருகுகின்றேன்
ஓடி வந்து பார்ப்பாய் இந்த உலகம் முழுதும் காப்பாய் - 2

போதுமென்ற மனமும் ஒரு பழி இல்லாத வாழ்வும் - 2
பாதம் பணிந்து துதித்தோம் பரிவுடனே அருள்வாய்

(சுவாமியே சரணம் - 2)
(ஜாதிமத பேதமில்லா - 2)

சுவாமியே சரணம் அப்பா ஐயப்பா சரணம் அப்பா
சுவாமியே சரணம், சரணம், ஐயப்பா - 3
சுவாமியே....... சரணம் ஐயப்பா

## பம்பா நதியே

சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா

பம்பா நதியே யார் இந்தப் பிள்ளை
அம்மா யாரோ தெரியவுமில்லை
சொன்னால் எதுவும் சோகமும் இல்லை
சொல்லி அழவோ புரியவுமில்லை
இது நியாயமா அன்னை யார் தானம்மா
இது பாவமா இல்லை தெய்வீகமா

சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா
பம்பா நதியே யார் இந்தப்பிள்ளை....

லட்சத்தில் ஒரு நட்சத்திரம் ஏன் வானம் இறங்கியது
அது பச்சை புல்வெளி பம்பை கரையில் ஏனோ தவழ்கிறது.

சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டத்தில் மலர் நெஞ்சத்தில் மணிமாலை கிடக்கிறது
ஒரு யுத்தத்தில் கள இரத்தத்தில் உடல் வண்ணம் ஜொலிக்கிறது
சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா

பம்பா நதியே யார் இந்தப் பிள்ளை....

எட்டுத் திசையிலும் சரண கோஷமே ஏனோ ஒலிக்கிறது
அடகொட்டும் முரசொலி செண்டை மேளமும் காதில் கேட்கிறது

சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா

ஆயிரம் கோடி சூரிய ஜோதி இருளில் தெரிகிறதே
அவன் ஆண்டவன் என்றே வானக வையகம் போற்றிப் பணிகிறதே

சரணம் சரணம் ஐயப்பா சுவாமியே சரணம் ஐயப்பா

பம்பா நதியே யார் இந்தப் பிள்ளை....

## மாயவன் பாதம் சரணடைவோம்

ஐயப்பன் நாமத்தைச் சொன்னாலே - தீமை
அஞ்சி நடுங்கியே ஓடுமையா - அந்த
மெய்யப்பன் பாதங்கள் போற்றுவதே - யாரும்
மேன்மை யடைந்திடும் மார்க்கமையா

பொன்னம்பல மேட்டில் வீற்றிருந்தே - அவன்
பூதலமாந்தர்க் கருள்வானாம் - பெரும்
மன்னவன் மைந்தனாய் வாழ்ந்திருந்தே - பல
மாயங்கள் செய்து மறைந்தவனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை யணிந்த சிவன் மகனாம் - நம்மை
காத்து ரட்சித்திட வந்தவனாம் - என்றும்
மங்களம் நல்கிடும் மாதவனாம் - அந்த
மாயவன் பாதம் சரணடைவோம்.

பந்தள வேந்தனின் பாலகனாம் - அவன்
பன்னிரண்டாண்டுகள் வாழ்ந்தானாம் - நின்று
விந்தை பலவும் புரிந்தானாம் - அந்த
மேலவன் பாதம் சரணடைவோம்.

ஐயப்பன் என்ற பெயருடையான் - அந்த
அண்ணலின் பாதம் சரண் புகுந்தால் - இந்த
வையத்து மாந்தரின் வாழ்க்கையிலே - என்றும்
வந்து குவிந்திடும் நன்மைகளே

வேதமுணர்ந்த நல்வித்தகனாம் - ஐயன்
வேந்தர்க் குபதேசம் செய்தவனாம் - அவன்
பாதம் சரண்புகும் மாந்தரெல்லாம் - பெரும்
பாக்கியம் பெற்றுத் திகழ்வாரே

சபரிமலை தன்னில் வாழ்பவனாம் - அவன்
சஞ்சலம் தீர்த்திட வந்தவனாம் - எங்கள்
சாமியாம் ஐயப்ப தேவனவன் - நாமம்
சாற்றியே தீவினை தீர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பா விளக்கே

பம்பா விளக்கே பம்பா விளக்கே எங்கே போகின்றாய்
அந்தப் பால் ஒளி நிலவு நீந்திடும் நதியில்
நீ எங்கு போகின்றாய்

பந்தள தேசம் வந்த சேதியை
அரிஹர சுதனிடம் கூறவோ
எம் இருமுடி பாரம் தாங்கிடச் சொல்லி
ஐயனை அன்பாய் கேட்கவோ
(பம்பா விளக்கே)

சின்ன இரதத்தில் உன்னை வைத்து
அழகு பார்த்த ஏழை நாம்
எண்ணை ஊற்றி திரியை ஏற்றி
எரிய வைத்தோம் தீபம் நாம்
ஓடத்தைப் போலவே ஒய்யாரமாகவே
ஆடியே போகும் சுடர் விளக்கே
உள்ளத்தின் இருளை ஓட்டியே விரட்டும்
மாடத்து விளக்கே மணிகண்டன் விளக்கே
(பம்பா விளக்கே)

கண்ணில் விழுந்து இமைக்குள் புரண்டு
கலங்க வைக்கும் சோகங்கள்
எம்முள் இருந்து அமைதி குலைந்த
மனதில் தினமும் யாகங்கள்
ஏலேலோ பாட்டு எம் கதை கேட்டு
உனக்கேன் வாட்டம் பொன் விளக்கே

ஆலோலமாகவே மாமலை போய்வா
ஆண்டவன் அருளை அள்ளியே வா வா
(பம்பா விளக்கே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமியே சரணம் ஐயப்பா

பதினெட்டுப் படியேறி ஓடிவந்தோம்
பகவானை கண்ணாலே காண வந்தோம்
(ஐயப்பா சரணம் ஐயப்பா)

கதறிக் கொண்டு குறை சொல்ல வந்தோம்
நல்ல முடிவு ஒன்று காணவந்தோம்
(ஐயப்பா சரணம் ஐயப்பா)

இன்னும் மனசு இரங்கல்லையா
எங்க அவசரம் புரியலையா

பம்பா நதி எங்க கண்ணுக்குள்ளே - ஐயா
என்ன நினைப்பு உன் உள்ளுக்குள்ளே
(பதினெட்டு)
(ஐயப்பா சரணம் ஐயப்பா)

ஆனை புலியெல்லாம் குடியிருக்கும்
ஒரு சந்தன காட்டுக்கு உரியவனே....
சந்தன காட்டுக்கு உரியவனே ...

ஒரு தவம் உள்ள வித்தகனே
மஞ்சள் புலியேறும் நாயகனே
ஐயா மஞ்சள் புலியேறும் நாயகனே
உன்னோட புள்ளைகள் உன் கண்ணுமுன்னால
கண்ணு கலங்கிடும் நேரத்திலே
ஊரும் சிரிக்குது உலகம் சிரிக்குது
உனக்கு நினைப்பு எல்லாம் எங்கேயோ இருக்குது
(பதினெட்டு)
(ஐயப்பா சரணம் ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை விட்டால் மன்னவனே உனக்கு
ஆயிரம் பேர் இந்த உலகத்திலே
ஆயிரம் பேர் இந்த உலகத்திலே ஐயா உனக்கு
ஆயிரம் பேர் இந்த உலகத்திலே

உன்னை விட்டு வேறு யாரு எமக்கு
இந்த கெட்டுப் போன கலிகாலத்திலே
ஐயா கெட்டுப் போன கலிகாலத்திலே

ஏழுபிறவியும் பாவக்கணக்கெல்லாம்
மொத்தமாக சாட்டி ஒதுக்காதே
ஐயா மொத்தமாக சாட்டி ஒதுக்காதே.

ஏதோ இருக்கட்டும் ஏழைகள் தான் என்று
சபரி கதவை கொஞ்சம் திறந்திடையா

(பதினெட்டு)

(ஐயப்பா சரணம் ஐயப்பா)

## வாபர் சாமி

வாபர் சாமி வாபர் வழியைக் கொஞ்சம் காட்டுங்க
ஐயன் அவன் கோயிலுக்கு நாங்க போகணும்
அந்த மெய்யனுக்கு நெய் அபிஷேகம் நாங்க செய்யணும்

காட்டு யானை வந்தாலும் கரடி, புலி நின்னாலும்
சிங்க, நரி வந்தாலும் சீறியது பாஞ்சாலும்
வேட்டு வைச்சு விரட்டணும் துணைக்கு நீங்க கூட வாங்க

(வாபர் சாமி)

எருமேலி எங்கிருக்கு அழுத மலை எங்கிருக்கு
எங்களுக்கு தெரியாது சாமி எங்களுக்கு தெரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சிப் பாறை எங்கிருந்து குளத்துப் புழை எங்கிருந்து
எங்களுக்கு தெரியாது சாமி எங்களுக்குத் தெரியாது

சபரிபீடம் எங்கிருக்கு சந்நிதானம் எங்கிருக்கு
எங்களுக்குத் தெரியாது சாமி எங்களுக்குத் தெரியாது

ஐயன் சரண கோசமே நாங்க தெரிஞ்சுகிட்டது
அவன் அருளின் மகிமையே நாங்க புரிஞ்சுகிட்டது.

(காட்டு யானை)
(வாபார் சாமி)

சந்திரனோ அல்லிக்கு சொந்தம்
தாமரையோ கதிருக்கு சொந்தம்
பிரிச்சு வைக்க முடியாது சுவாமி பிரிச்சு வைக்க முடியாது

வைரத்துக்கு ஜோதி சொந்தம்
வானத்துக்கு மேகம் சொந்தம்
பிரிச்சு வைக்க முடியாது சுவாமி பிரிச்சு வைக்க முடியாது

ஐயனுக்கு நாங்க சொந்தம்
அவன் மனசுதானே எங்க சொந்தம்
பிரிச்சு வைக்க முடியாது சுவாமி பிரிச்சு வைக்க முடியாது

சபரி பயணம் அவனுக்கே
கிடைக்கும் பலனும் அவனுக்கே
எங்கள் வாழ்வும் அவனுக்கே
எல்லாப் புகழும் அவனுக்கே.

காட்டு யானை வந்தாலும் கரடி, புலி நின்னாலும்
சிங்க, நரி வந்தாலும் சீறியது பாஞ்சாலும்
வேட்டு வைச்சு விரட்டணும் துணைக்கு நீங்க கூட வாங்க

(வாபார் சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்லும் அம்பும்

வில்லும் அம்பும் புலி வாகனமும் துளசி மாலை
ஆடுகின்ற அழகைக் கண்டோமே
பம்பையிலே நீராடி ஐந்துமலை அது தாண்டி
ஆதி ஜோதியான உன்னைக் கண்டோம் ஐயப்பா

மோகினி சுதன் ஐயா நீ ஜோதிரூபன் ஐயா
பேரழகுடையவனே ஐயா சரணம் சரணம் ஐயா
(வில்லும் அம்பும்)

இருமுடி நெய்யில் இறைவா உனக்கு
அபிஷேகம் அப்பா அபிஷேகம் அப்பா
இருமுடி நெய்யைப் போலே இருவிழி
நீரும் இளகுதப்பா இருவிழி நீரும் இளகுதப்பா
வீரம் நிறைந்த இருவிழி கண்டோம்
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
நாமம் தாங்கும் நுதலைக் கண்டோம்
ஏகாந்தம் அப்பா ஏகாந்தம் அப்பா

அதிகாலை நேரம் ஐயா மறை ஓதும் நாதம் ஐயா
இதைவிட எமக்கென்ன வேண்டும் ஐயப்பா
அம்பலத்தரசே உன் அருளே போதும் அப்பா
பகவானே, பகவானே, சரணம், சரணம் பகவானே
(மோகினி சுதன்)
(வில்லும் அம்பும்)

செண்டை மேள தாளத்தோடு
இதயம் துடிக்குதப்பா எங்கள் இதயம் துடிக்குதப்பா
அங்கம் எங்கும் ஆழிச்சங்கின்
நாதம் ஆனதப்பா நாதம் ஆனதப்பா
சின்முத்திரையைக் கண்டால் எங்கள்
அச்சம் விலகுதப்பா எங்கள் அச்சம் விலகுதப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயம் நானே என்றே உந்தன்
குறுநகை கொல்லுதப்பா உந்தன் குறுநகை கொல்லுதப்பா

செந்தாமரைப் பாதமே முன்னோக்கி வருகின்றதே
இதைவிட எமக்கென்ன வேண்டும் ஐயப்பா
அம்பலத்தரசே உன் அருளே போதுமப்பா
பகவானே, பகவானே, சரணம், சரணம் பகவானே
(மோகினி சுதன்)

பூதநாதாய வித்மகே
பவ நந்தனாய தீமகி
தந்நோ சாஸ்தா பிரசோதயாத் (வில்லும் அம்பும்)

## மாமலை சபரியிலே

மாமலை சபரியிலே மணிகண்டன் சந்நிதானம்
மாபெரும் பக்தர்களும் வணங்கிடும் சந்நிதானம்

கோமகன் குடி கொண்டு குறை தீர்க்கும் சந்நிதானம்
பூமகள் மைந்தனின் புண்ணிய சந்நிதானம்
(மாமலை)

பதினெட்டுப் படி மீது விளங்கிடும் சந்நிதானம்
விதியையும் மாற்றி வைக்கும் வீரனின் சந்நிதானம்
கவலையை போக்கிடும் கணபதி சந்நிதானம்
அவனியெல்லாம் வாழும் ஐயப்பன் சந்நிதானம்
(மாமலை)

நாகரின் சந்நிதானம் வாபரின் சந்நிதானம்
நாளெல்லாம் நமையென்றும் கட்டிக் காக்கும் சந்நிதானம்
மாளிகை புரத்தம்மனின் மனம் கவர் சந்நிதானம்
நாளெல்லாம் நம்பிக்கை ஒளியூட்டும் சந்நிதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமலை சபரியிலே மணிகண்டன் சந்நிதானம்
மாபெரும் பக்தர்களும் வணங்கிடும் சந்நிதானம்
கோமகன் குடிகொண்டு குறை தீர்க்கும் சந்நிதானம்
பூமகள் மைந்தனின் புண்ணிய சந்நிதானம்

சந்நிதானம் ஐயப்பன் சந்நிதானம்
சந்நிதானம் ஐயப்பன் சந்நிதானம்

## ஓடிவா ராஜா! நீ ஓடிவா சுவாமி

ஓடிவா ஐயப்பா ஓடிவா ஐயா
உன் பாதம் நான் தொழுவேன் ஓடிவா ஐயா
(ஓடி வா)

மானே மரகதமே ஓடிவா ஐயா
மல்லிகைப்பூ செண்பகமே ஓடி வா ஐயா
(ஓடி வா)

தேனே கற்கண்டே ஓடிவா ஐயா
தெவிட்டாத தெள்ளமுதே ஓடிவா ஐயா
(ஓடி வா)

ஹே அச்சங்கோவில் அரசனே ஓடிவா ஐயா
ஆரியங்காவு ஐயாவே ஓடிவா ஐயா
(ஓடி வா)

குளத்தூர் பாலகனே ஓடிவா ஐயா
குழந்தை மணிகண்டனே ஓடிவா ஐயா
(ஓடி வா)

எருமேலி சாஸ்தாவே ஓடிவா ஐயா
எங்கள் குல தெய்வமே ஓடிவா ஐயா
(ஓடி வா)

ஹே வன்புலிவாகனனே ஓடிவா ஐயா
வனத்தில் இருப்பவனே ஓடிவா ஐயா
(ஓடி வா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாளி வீரனே ஓடிவா ஐயா
வீரமணி கண்டனே ஓடிவா ஐயா

(ஓடி வா)

பம்பையின் பாலகனே ஓடிவா ஐயா
பந்தள ராஜாவே ஓடிவா ஐயா

(ஓடி வா)

ஹே நீலிமலை வாசனே ஓடிவா ஐயா
நித்திய பிரமச்சாரியே ஓடிவா ஐயா

(ஓடி வா)

கருப்ப சாமியே ஓடிவா ஐயா
கடுத்த சாமியே ஓடிவா ஐயா

(ஓடி வா)

கற்பூரப் பிரியனே ஓடிவா ஐயா
காந்தமலை ஜோதியே ஓடிவா ஐயா

(ஓடி வா)

## யாரை நம்பி யாரு

யாரை நம்பி யாரு - இங்கே யாவும் எங்க ஊரு!
ஊரைக்காக்க யாரு - கன்னி மூலப்பிள்ளையாரு!
காடு அழகுக் காடு - இது சபரிமலை மேடு

ஆறு பம்பா ஆறு - அது பாயும் அழகைப்பாரு!
ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
என்றே உருகிப்பாடு!
சாமி திந்தக்கத்தோம் ஐயப்ப திந்தக்கத்தோம்.

(யாரை நம்பி யாரு)

பெற்றெடுத்த தாய் யாரு தந்தளிச்ச பூவாரு
சொந்த பந்தம் யாரு வனமே உன்வீடு!
பந்தளத்து மகராஜன் பார்வையிலே பட்டாரு
தத்தெடுத்து தாங்கி வாரிசு கண்டாரு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டாரம் காணாத முத்தாரம் வந்தது
வட்டாரம் முழுக்க சந்தோஷம்!
மாங்காயைத் தின்னாத மாற்றான் தாய்க்கு
மருந்துக்கும் இல்லை தாய்ப்பாசம்!
(யாரை நம்பி யாரு)

தாய்பாலு தங்காத கல்லு நெஞ்சக்காரி
பிஞ்சு முகம் பார்த்து புலிப்பாள் கேட்டாளே!
பல் முளைக்கும் முன்னமே வில்லெடுத்த வீரனும்
அஞ்சாமல் தனியாய் காட்டுக்குப் போனானே!

பொல்லாத மஹிஷியை இல்லாமல் ஒழித்து
புலியேறி வந்தானே
ஆண்டவன் ஆனாலும் மனிதன் என்றாலே
சோதனை தாங்கணும் தன்னாலே
(சாமி திந்தக்கத்தோம் தோம்)
(யாரை நம்பி யாரு)

## சந்தனப்பூ வாசம்

சந்தனப்பூ வாசம் வீசுதையா அது
சபரிக்கு அழைக்குது வாரோமையா
காடுமலை தாண்டியே - சாமி
வந்தோம் பெரும் பாதையே

மாலையிட்டோம் எதுக்கு மணிகண்டா உனக்கு
பக்தி கொண்டு நடந்து வந்தோம் - ஐயா
பள்ளிக்கட்டு சுமந்து வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

திந்தக்கத்தோம் பாட்டு கேட்குதையா -
அது சன்னதிக்கு அழைக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரோமையா - காவி உடை தாங்கியே - சாமி
வந்தோம் உனைக் காணவே காத்திருந்தோம் எதுக்கு
யாத்திரையாம் அதுக்கு முந்தி முந்தி நடந்து வாரோம் ஐயா
முன்பனியில் நடந்து வாறோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

குங்குமப்பூ வாசம் வீசுதையா அது எரிமேலி அழைக்குது
வாறோமையா கோட்டைப் படியேறியே
வந்தோம் பேட்டை விளையாடியே
வானவில்லை வளைத்து வண்ணங்களைக் குழைத்து
அங்கமெல்லாம் பூசி வாரோம் - ஐயா
அஞ்சு மலை தேடி வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

கற்பூர வாசம் வீசுதையா அது
சரங்குத்தி அழைக்குது வாரோமையா
வாளும் கதையும் ஏந்தியே வந்து நின்றோம் சரம் போடவே
கன்னிச்சாமி எமக்கு உங்கதுணை இருக்கு
பொன்னுபடி நடந்து வாரோம் ஐயா
உந்தனடி நினைந்து வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)

நெய்மணக்கும் வாசம் வீசுதையா - அது நீ அழைக்கும்
சேதியைக் கூறுதையா சாமி உனைக் காணவே
வந்த ஏழை முகம் பாருமே மகரந்த விளக்கு மணிகண்டா
உனக்கு அதைக் கண்டு மகிழ்ந்து நின்றோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா (2)
சந்தனப்பூ வாசம் வீசுதையா - அது
சரணத்தின் மகிமையைக் கூறுதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படியும் உன் படிக்குத் தப்பாமல் வந்திடுவோம்

அப்படி இப்படி ஆடிப்பாடி ஆனந்தம் கொண்டு
எப்படியும் சபரிமலை சேர்ந்திடுவோம்

(அப்படி)

நாலுபத்து ஒருநாளாய் விரதமிருந்து - அந்த
நாராயணன் புத்திரனைக் காணுவோமென்று

(அப்படி)

இன்பமுடன் கட்டெடுத்து எருமேலிசேர்ந்து
பண்புடனே வேட்டையாடிக் கோட்டை கடந்து

(அப்படி)

பேரூர் தோடு அரியக்குடி காளை கட்டியாம்
சீரான இத்தாவளங்கள் நேராகக் கடந்து

(அப்படி)

அழுதை நதி நீராடிக் கல்லுமெடுத்து
பழுதின்றிக் கல்லிடுங் குன்றில் பக்தியாய்ச் சேர்த்து

(அப்படி)

இஞ்சிப்பாறை உடும்பாறை முக்குழியுடன்
மரவெட்டி மடுக்கைப் புதுக்சேரி தாவளம்

அப்படி)

கரிவலந்தோடும் தன்னைக் கடந்து நடந்து
சபரிமலையின் பகவதிக்கு கற்பூரம் செலுத்தி

(அப்படி)

கரிமலையின் ஏற்றம் இறக்கம் யாவும் கடந்து
காருண்ய மூர்த்தியுனைக் காணுவோமென்று

(அப்படி)

பம்பை நதி நீரில் மூழ்கி பந்தியும் செய்து.... உனை
பக்தியோடுப் பாடியாடிப் பரவசம் கொண்டு

(அப்படி)

நீலிமலை ஏற்றமதை நெஞ்சிலே கொண்டு
நீங்கா உந்தன் நாமத்தைத் துணையெனக் கொண்டு

(அப்படி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாச்சி மேட்டுத் தானதருமம் தப்பாது நடத்தி
அப்பாலுள்ள சபரிபீடம் அதனையும் வணங்கி
(அப்படி)

அசுவத்தம் என்ற சரம் குத்தி ஆலினில்
அம்புகதை சரத்தையிட்டுக் கும்பிட்டு வணங்கி
(அப்படி)

பதினெட்டுப் படிகள் கண்டுபரவசம் கொண்டு
பக்தியோடு கண்ணில் ஒற்றிப் படிகள் கடந்து
அப்படி)

சன்னதியில் வந்து உன்னை தரிசனம் செய்வோம்
சாமி சரணம் சபரிகிரி சாஸ்தாவே சரணம்
(அப்படி)

## பெருவழியில் நடந்தவர்க்குப் பேரருள் புரிந்திடுவாய்

என் ஜீவன் உள்ளவரை யான் செல்வேன் - சபரிமலை
எனக்க அருள் புரிந்திடப்பா என் சாமி சரணமப்பா

சந்தனுக்கு முன் பிறந்த கன்னிமூலை கணபதியே
கருணையுடன் என்னுடைய வேண்டுதலுக்கருள் புரிவாய்
உன் நாமமம் நான் மறவேன் உமாபதி புத்திரனே
என் நெஞ்சம் குடியிருக்கும் என் சுவாமி ஐயப்பா

அச்சங் கோயில் ஆண்டவனே அரிஹர புத்திரனே
பாசமுடன் வேண்டுகிறேன் பாவங்களை தீர்ப்பவனே
ஆரியங்காவு ஆண்டவனே ஆறுமுகன் சோதரனே
பார்புகழும் உன் புகழைப் பாட அருள் செய்திடுவாய்

குளத்துப்புழை பாலகனே குருவாயூரன் மகனே
குலந்தழைக்கச் செய்தவனே குற்றங்களைப் போக்கிடுவாய்
எரிமேலி வாசகனே ஏழுமலையான் மகனே
பேட்டை துள்ளல் செய்வதற்கு பேரின்பம் கொடுப்பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிஷிவதம் செய்தவனே மண்டலம்தைக் காப்பவனே
மங்களத்தைக் கொடுப்பவனே மணிகண்டப் பெருமானே
பம்பையில் பிறந்தவனே பந்தளத்தில் வளர்ந்தவனே
பார் புகழ வைப்பவனே பக்தர் குறை தீர்ப்பவனே

இருமுடியைத் தாங்கிவரும் அடியாரைக் காப்பவனே
பெருவழியில் நடந்தவர்க்கு பேரருள் புரிபவனே
சரணகோசம் கேட்பவனே சாந்தி பெறச் செய்பவனே
சங்கரனார் புத்திரனே சபரிமலை வாசனே

கற்பூர ஜோதியிலே கலந்து நிற்கும் ஐயப்பனே
பொற்பதம் என்மனதில் நிலைத்து நிற்கச் செய்திடுவாய்
காந்தமலை வாழ்பவனே கார்த்திகேயன் சோதரனே
கருணையுடன் காட்சி தந்து கடைத்தேறச் செய்திடுவாய்

## ஐயப்ப சாமியும் ஆறுமுக சாமியும்

தெம்மாங்கு இசை,

எடுப்பு

தன்னானே....... தன்னானே........ ஐயப்பசாமி
தில்லாலே....... தில்லாலே........ ஆறுமுகசாமி

தொடுப்பு

சரணம் சாமி சரணம் சாமி ஐயப்ப சாமி
அரோகரா அரோகரா ஆறுமுகசாமி

முடிப்பு

1. பம்பையில் உதித்தவராம் ஐயப்பசாமி
பொய்கையில் உத்தித்தவராம் ஆறுமுகசாமி
திருமாலின் திருமகனாம் ஐயப்பசாமி
திருமாலின் மருமகனாம் ஆறுமுகசாமி (சரணம் சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சபரிமலை மீதிருப்பார் ஐயப்பசாமி
பழனிமலை மீதிருப்பார் ஆறுமுகசாமி
புலிக்கொடியைக் கொண்டவராம் ஐயப்பசாமி
சேவற்கொடி அழகனையா ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

3. ஐந்துமலைக் கதிபதியாம் ஐயப்பசாமி
ஆறுமலைக் கதிபதியாம் ஆறுமுகசாமி
வில்லெடுத்து வருபவராம் ஐயப்பசாமி
வேலெடுத்து வருபவராம் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

4. காடுமலை நாடியவர் ஐயப்பசாமி
குன்றேறி நின்றவர்தான் ஆறுமுகசாமி
வாபரைத் துணை கொண்டார் ஐயப்பசாமி
பாகுவைத் துணை கொண்டார் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

5. சரண கோஷப் பிரியராம் ஐயப்பசாமி
அரோகரப் பிரியராம் ஆறுமுகசாமி
மகிஷியைக் கொண்டவராம் ஐயப்பசாமி
சூரனை வென்றவராம் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

6. இன்றுவரை பிரம்மச்சாரி ஐயப்பசாமி
இருதாரம் கொண்டவராம் ஆறுமுகசாமி
இருமுடிப்பிரியனையா ஆறுமுகசாமி
காவடிப் பிரியனையா ஆறுமுகசாமி
(சரணம் சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நெய் அபிஷேகப் பிரியராம் ஐயப்பசாமி
பால் அபிஷேகப் பிரியராம் ஆறுமுகசாமி
ஊமைக்கருள் புரிந்தவராம் ஐயப்பசாமி
ஔவைக்கு உபதேசித்தவர் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

8. புலியேறி வருபவராம் ஐயப்பசாமி
மயிலேறி வருபவராம் ஆறுமுகசாமி
பானகப் பிரியராம் ஐயப்பசாமி
பஞ்சாமிர்தப் பிரியராம் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

9. தைமகர கீர்த்தியவர் ஐயப்பசாமி
தைப்பூச மூர்த்தியவர் ஆறுமுகசாமி
அருள் வழங்கும் வள்ளலவர் ஐயப்பசாமி
அழகுத்தமிழ் அழகானவர் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)

10. தமிழகத்தைப் பார்த்திருப்பார் ஐயப்பசாமி - அழகு
கேரளத்தைப் பார்த்திருப்பார் ஆறுமுகசாமி
தமிழர் தொழும் தெய்வமப்பா ஐயப்பசாமி - தினம்
கேரளத்தார் தொழும் தெய்வம் ஆறுமுகசாமி
(சரணம் சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதம் இருக்கும்

விரதம் இருக்கும் சாமிகளே உங்கள்
வீடுகள் ஐயப்பன் கோவில்களே
உருகி வணங்கும் சாமிகளே உங்கள்
உள்ளங்கள் தெய்வ இல்லங்களே

சாமி சரணம் ஐயப்ப சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
ஐயப்ப சரணம் சாமி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

இருமுடி சுமக்கும் சாமிகளே உங்கள்
திருவடி பணிந்தேன் வாழ்த்துங்களே
காவி உடுத்திய சாமிகளே உங்கள்
கண்கள் மகரஜோதிகளே
சாமி சரணம் ....................

சரணம் ஒலிக்கும் சாமிகளே உங்கள்
திருவடி பணிந்தேன் வாழ்த்துங்களே
காவி உடுத்திய சாமிகளே உங்கள்
கடவுளின் சொந்தம் நீங்களே
சாமி சரணம் ....................

மாலை கொடுத்தவர் குருசாமி அதை
மகிழ்வுடன் அணிபவர் கன்னிச்சாமி
அணிபவர் வாழ்வில் துணையாகும்
ஸ்ரீ ஐயப்பன் தானே நம் தெய்வம்
சாமி சரணம் ....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகானவர் பேர் சொல்லி ஆடுமயிலே

ஆடும் மயிலே விளையாடு மயிலே கொஞ்சம் ஆடு மயிலே
அந்த ஐயப்பன் சரணம் சொல்லி ஆடு மயிலே
ஆடு மயிலே ஆடு மயிலே விளையாடு மயிலே கொஞ்சம்
ஆடு மயிலே

அந்த சாமியின் சரணம் கேட்டு ஆடு மயிலே
அந்த பம்பா கரை மீதேறி ஆடு மயிலே
அந்த அப்பாச்சி மேலேறி ஆடு மயிலே
(ஆடு மயிலே)

அந்த சரங்குத்தி ஆலில் நின்று ஆடு மயிலே
அந்த கருப்பசாமி முன்நின்று ஆடு மயிலே
அந்த பதினெட்டாம் படியேறி ஆடு மயிலே
அந்த கற்பூர ஆழி முன்னால் ஆடு மயிலே
(ஆடு மயிலே)

அந்த கன்னிமூலை கணபதி முன்னால் ஆடு மயிலே
அந்த நாகராஜன் முன்னால் ஆடு மயிலே
அந்த சந்நிதானம் சுற்றி வந்து ஆடு மயிலே
அந்த ஐயப்பன் சரணம் சொல்லி ஆடு மயிலே
(ஆடு மயிலே)

## சரணம் சொன்னால் மரணம் இல்லை

நெய்யும் தெங்கும் தலையினிற் சுமந்து
நீல நிறத்தினில் ஆடையும் அணிந்து
மாலையும் கொண்டு விரதமும் இருந்து
நாமும் செல்வோம் சபரிமலைக்கு (நெய்யும்)

விரதம் இருப்போம் ஒன்றரை மாதம்
பரமனின் நாமத்தைப் பாடிடுவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் அடைவோம் ஐயப்பன் பாதம்
மரண பயத்தை அறவே ஒழிப்போம் (நெய்யும்)

பாச பந்தம் மறந்திடுவோமே
ஈசன் திருவடி நினைத்திருப்போமே
நாதன் நாமம் துணைக் கொள்வோமே
இதனை உறுதியாய்க் கடைப்பிடிப்போமே (நெய்யும்)

சாவு நமக்கும் நிச்சயம் உண்டு
நாவு குளிரும் நாளொன்று உண்டு
சரணம் அடைவோம் ஐயப்பன் பாதம்
மரண பயத்தை அறவே ஒழிப்போம் (நெய்யும்)

## கார்த்திகையில் மாலையிடும்

கார்த்திகையில் மாலையிடும் கன்னிச்சாமியே
கடும் விரதம் ஏற்றுக்கிட்டோம் கன்னிச்சாமியே

காலை மாலை பூசை செய்தோம் கன்னிச்சாமியே
கட்டுப்பாடு போட்டு விட்டோம் கன்னிச்சாமியே

கார்த்திகையில் மாலையிடும் கன்னிச்சாமியே
கடும் விரதம் ஏற்றுக்கிட்டோம் கன்னிச்சாமியே

பஞ்சு மெத்தை பாயிலும் மஞ்சம் கொள்ளும் காலத்தை
கொஞ்சம் இங்கு தள்ளி வைத்தோம் கன்னிச்சாமியே

குருசாமி குறிக்கும் உபதேசம் யாவையும்
கவனம் வைத்து நடந்து விட்டோம் கன்னிச்சாமியே

கார்த்திகையில் மாலையிடும் கன்னிச்சாமியே
கடும் விரதம் ஏற்றுக்கிட்டோம் கன்னிச்சாமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி வந்த தாரத்தை தொட்டுப் பேசும்
ஆசையைத் தூர வைத்து துறவு கொண்டோம் கன்னிச்சாமியே

மணி மாலை ஆடிடும் மனதோடு வாழ்ந்திடும்
மணிகண்டன் நினைவானோம் கன்னிச்சாமியே

கார்த்திகையில் மாலையிடும் கன்னிச்சாமியே
கடும் விரதம் ஏற்றுக்கிட்டோம் கன்னிச்சாமியே

முடிசுமக்கும் காலத்தை படி கடக்கும் பேறினை
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம் கன்னிச்சாமியே

சபரீசன் பாதத்தை சரணடையும் காலத்தை
சித்தத்தில் ஏற்றிவிட்டோம் கன்னிச்சாமி

கார்த்திகையில் மாலையிடும் கன்னிச்சாமியே
கடும் விரதம் ஏற்றுக்கிட்டோம் கன்னிச்சாமியே

## பிள்ளையாய்ப் பிறப்பார் மணிகண்டன்

ஐயன் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்
தூயன் ஜோதி மணிகண்டன்
உன்னிலும் இருப்பார் என்னிலும் இருப்பார்
உலகத்தைக் காப்பார் மணிகண்டன் (ஐயன்)

கருணை இல்லாத உள்ளத்தில் இருப்பார்
கருணைக் கடவுளவர்
சரணம் சொல்லும் வேளையிலே
சடுதியில் வருவார் ஐயப்பன் (ஐயன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமையான பக்தரையே
பேசிட அருளே புரிந்திடுவார்
ஊனம் உடையவர் என்றாலும்
உறுதுணை செய்வார் மணிகண்டன் (ஐயன்)

யானை புலிகள் கூட்டத்தையே
கண்டால் பதறி ஓடாதே
சரணம் என்று சொன்னாலே
சடுதியில் வருவார் ஐயப்பன் (ஐயன்)

பிள்ளை வேண்டும் என்றாலே
பிரியமாய் அவரை பணிந்துவிடு
பின்னால் வருவார் நிச்சயமே
பிள்ளையாய்ப் பிறப்பார் மணிகண்டன் (ஐயன்)

தீராப் பிணியாய் இருந்தாலும்
தினமும் அவரை பணிந்தாலும்
தீராப்பிணியைத் தீர்த்துவிட்டு
திடவாழ்வு தருவார் ஐயப்பன் (ஐயன்)

## மலையா ஆலயமாம்

ஒரு கோடி கவி பாடி உன் பெயரைச் சொல்வோமே
பல கோடி இசைபாடி உன் அருளைப் பெறுவோமே
ஐயப்பா நீ இருக்க அருளினையே நீ கொடுக்க
உனதருளே மெய்யப்பா பாடுகிறோம் கேளப்பா....

மலையா ஆலயமாம் மன்னவனே உன் வாசலாம்
கலையா காவியமாம் ஓவிய உன் கோலமாம்
வருவோம் நாங்களே வரமளிக்கும் சாமியே
உனையே பாடுவோம் உன் பெயரைக் கூறியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு செய்யும் வானம் பூமியே ...
கண் கண்டமணி கந்த சாமியே ...

மலையா ஆலயமாம் மன்னனே உன் வாசலாம்
கலையா காவியமாம் ஓவிய உன் கோலமாம்

ஆரியன் காவினிலே ஆனந்த தாண்டவனே
ஐயா உன் பேட்டை துள்ளி ஆடுகிறோம் ஐயப்பனே
எங்களது பாதையிலே உன் அடக்கம் ஐயப்பனே
எல்லாமே உந்தன் நல்லாசி என்றே பயணம் தொடர்ந்து
செல்கின்றோம்

தொண்டு செய்யும் வானம் பூமியே ...
கண் கண்டமணி கந்த சாமியே ...

மலையா ஆலயமாம் மன்னனே உன் வாசலாம்
கலையா காவியமாம் ஓவிய உன் கோலமாம்

அம்பெய்து இடம் குறித்தாய் அங்கு நீ அமர்ந்து கொண்டாய்
அந்தொரு பீடத்தை சபரி எனக் கொண்டாயே
அடியார் மனம் குளிர அருளும் உன் கரமே
ஆனந்த ரூபி நீ தானே என்று ஆதாரமென வேண்டுகிறோம்

தொண்டு செய்யும் வானம் பூமியே ...
கண் கண்டமணி கந்த சாமியே ...

மலையா ஆலயமாம் மன்னனே உன் வாசலாம்
கலையா காவியமாம் ஓவிய உன் கோலமாம்

வருவோம் நாங்களே வரமளிக்கும் சாமியே
உனையே பாடுவோம் உன் பெயரைக் கூறியே

தொண்டு செய்யும் வானம் பூமியே ...
கண் கண்டமணி கந்த சாமியே ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனந்த நிலை பொங்கும் சபரிமலை

ஆனந்த நிலை பொங்கும் சபரிமலை ... அங்கு
ஐயப்பனைக் கண்டவர்க்கு அகன்றிடும் மனக்கவலை (ஆனந்த)

நானிலத்தில் வாழ்வு ஓர் மாயவலை அந்த
மாயையை நீக்கிடும் மணிகண்டன் வாழும்மலை (ஆனந்த)

கரிமாமுகன் தம்பி அரிமாவில் பவனி வரும்
அருள் மாமலை அய்யன் புகழ்பாடும் கரிமலை
கலியுகம் கண்டமலை புலிகளைக் கொண்ட மலை
கலியுக நாயகனும் உலவிடும் நீலிமலை (ஆனந்த)

பந்தமிகும் ஓர் காந்தமலை ... நம்
வேந்தனும் ஜோதியாய் தோன்றிடும் மாமலை
தேன்மணம் கமழும் மலை தேவர்கள் புகழும் மலை
வானளந்தோன் மைந்தன் ஆண்டிடும் அழகுமலை (ஆனந்த)

## இதயம் என்றும் உனக்காக

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா - உன்
பதமலரே துணையெனக்கு ஐயப்பா (இதயம்)

நிதமும் உந்தன் நாமம் சொல்வேன் ஐயப்பா ..... உன்னை
நினைந்து உருகிட வேண்டும் ஐயப்பா (இதயம்)

கேரள பாண்டிய ராஜகுமாரா சரணம் ஐயப்பா ....
நாரண சங்கரன் மகிழும் செல்வா சரணம் ஐயப்பா
ஆரமுதம் நீ பேரழகன் நீ
ஆரியங்காவில் வாழ்பவனும் நீ (இதயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயம் தந்திட சபரிமலையுண்டு ஐயப்பா
ஆறுதல் கூறிட உன்னருள் உண்டு ஐயப்பா
வேதம் நாடும் வினைகளும் ஓடும் எங்கள்
நாவும் பாடும் ஞானமும் கூடும்
நீல வண்ண மேனியிலே ஸ்வாமி ஐயப்பா
கோலமிகும் நெய்யபிஷேகம் செய்வோம் ஐயப்பா
பால் நிலவு உன்மனமே பார்த்து விட்டால் பரவசமே
பாலமுதம் உன் மனமே பந்தளனின் செல்வமே
பண்ணமுதம் தந்தவனே சரணம் ஐயப்பா
கண்ணழகு கொண்டவனே சரணம் ஐயப்பா
விண்ணவரின் கண்மணியே சரணம் ஐயப்பா
எண்ணமதில் வந்திடுவாய் சரணம் ஐயப்பா (இதயம்)

## என்ன வேண்டி ...

என்ன வேண்டி கேட்பதுவோ சுவாமி - உனை
என்ன வேண்டி கேட்பதுவோ சுவாமி
பந்தளம் போல் அரண்மனை பகட்டான பலமனை
சொந்தமாக கேட்கவில்லை சாமி - ஐயப்பா
ஆரியங்கா ராச்சியம் ஆனை சேனை வாழ்க்கையும்
கோரிக்கையாய் வைக்கவில்லை சரணம் - ஐயப்பா
பொன் பொருள் கேட்பதோ பொன்னம்பலம் கேட்பதோ
வள்ளலே சொல்லுமுன் கொடுத்திடும் உன்னிடத்தில்
என்ன ....

சுவாமியே சரணம் சரணம் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (2)

கரிமலை போல் குவிந்த செல்வம் கேட்கவில்லை ஐயப்பா
பெருவழிபோல் தோட்டம் துரவு கேட்கவில்லை ஐயப்பா
வன்புலிபோல் வாகனங்கள் வசதி கேட்கவில்லையே
விண்வெளியில் மகரஜோதி தினமும் கேட்கவில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியாடும் மார்பிருக்க நவமணிகள் வேண்டுமோ
அன்னதானம் உண்ட வயிறு சொர்ணதானம் தேடுமோ
தலைமீது கட்டிருக்க தங்க மகுடம் வேண்டுமோ
மலை மீது நீயிருக்க மற்றுமொன்று வேண்டுமோ?
ஆல்மரம் நீ இருக்க ஐந்துமலை அழகிருக்க
வேறு என்ன கேட்பதுவோ ஐயப்பா ...
இருந்தாலும் உன்னையொன்று விருந்தாக கேட்பது என்று
முடிவோடு வந்து நின்றோம் ஐயப்பா - ஒரு
முடிவோடு வந்து நின்றோம் ஐயப்பா
இரு முடியோடு வந்து நின்றோம் ஐயப்பா

(சுவாமியே)

சுலபமான யாத்திரையை கேட்கவில்லை ஐயப்பா
சுருக்குவழி குறுக்குவழி கேட்கலையே ஐயப்பா
காணிக்கையில் பங்கு கொஞ்சம் கேட்டதுண்டோ ஐயப்பா
நெய்வாசம் உணர்ந்த நெஞ்சு பரிமளங்கள் கேட்குமோ
மெய்யான குருவிருக்க கை விளக்கு தேடுமோ
ஆனாலும் ஒன்றை மட்டும் எங்கள் நெஞ்சு வேண்டுதே
வானோரும் கேளாத வரம் ஒன்றைக் கேட்குதே
ஊன் கலந்து உயிர் கலந்து தேன் கலந்து நாங்கள் தரும்
சரணகோஷம் கேட்க வேண்டும் ஐயப்பா
விளிக்கும் சரணங்களால் பாராட்டு - கேட்டு மெல்ல தலையாட்டு
அது போதும் அது போதும் ஐயப்பா ....
இந்த ஒன்றை மட்டும் வேண்டுகின்றோம் ஐயப்பா
இது பேராசையோ சொல்வாய் ஐயப்பா

(சுவாமியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் ஓம் ஐயப்பா

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாதா ஐயப்பா

இருமுடி தாங்கி வந்தோமே
குருவில் துணையாய் வென்றோமே

தடைபல தாண்டி வந்தோமே
சரணம் என்றே சொன்னோமே

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாதா ஐயப்பா

படிகளை கடந்து வந்தோமே
பல படி உயர்ந்திடக் கண்டோமே

மறுபடி மறுபடி வருவோமே
உன் திருவடியே துணை என்றோமே

சத்திய தெய்வம் நீயப்பா
உன் சன்னதி வருவோம் ஐயப்பா

அற்புத குருவே நீயப்பா
அருள்பெற வந்தோம் பாரப்பா

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாதா ஐயப்பா

பகலும் இரவும் நீ தானே
தினமும் உன்னைப் பணிவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் தருவோமே பகவானே
நித்தமும் ஏற்று அருள்வாயே

அற்புதம் யாவையும் நீ காட்டு
அடியவர் வாழ்வில் விளக்கேற்று

கற்பக ஜோதி உன் வடிவம்
நீ கடைக்கண் பார்த்தால் மனம் குளிரும்

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாதா ஐயப்பா

ஐந்து மலையாளும் அரசே வா
அச்சம் கோவில் வீரா வா

ஆரியம் காவின் ஐய்யா வா
குளத்து புழையின் கண்ணா வா

பூதப் படையுடன் கண்ணா வா
எதிரிகள் கொட்டம் அடக்கிட வா

எமபயம் போக்கும் ஐய்யா வா
இரு கரம் கூப்பி அழைத்தோம் வா

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாதா ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் செய்யப்பா! சாமியே!

ஐயப்பா சாமியே ... அருள் செய்யப்பா சாமியே
வெற்றிக் கருளும் சபரிமலைக்கு
விரதம் இருந்தால் வெற்றி கிடைக்கும்
சற்று மறந்து தன்னை உணர்ந்தால்
சத்திய முரசம் சுற்றி முழக்கும் (ஐயப்ப)

மாலையணிந்து ஆலயம் வந்தால்
பால்முகம் போல் வாழ்வு மணக்கும்
குத்தும் கல்லும் கூரிய முள்ளும்
மெத்தையாக்கும் மெய்யருள் சேர்க்கும் (ஐயப்ப)

பம்பையாற்றில் ஆடிப் பணிந்தால்
பாற்கடல் வாசன் ஆற்றல் பிறக்கும் (ஐயப்ப)

உள்ள விளக்கம் உண்மை விளக்கம்
ஒளியின் விளக்கம் மகர விளக்கே (ஐயப்ப)

மண்டல விரதம் மணிகண்டன் விரதம்
தொண்டர்கள் விரதம் திருவடிச் சரணம்
சித்தம் விளைந்தால் சித்தி கிடைக்கும்
பக்தி விளைந்தால் முத்தி கிடைக்கும் (ஐயப்ப)

நெய்யபிஷேகம் சாமிக்கே
ஐயனின் கருணை பூமிக்கே (ஐயப்ப)

பதினெட்டாம் திருப்படி தொட்டு
பதிமுகம் காண நடை கட்டு
இருமுடிகட்டு திருவடி காண
ஏற்றவர் போற்றும் ஜோதி மலைக்கே (ஐயப்ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்பத மேடை அற்புத மேடை
நற்பத மேடை நாயகன் மேடை
சங்கம் வந்தால் சாந்தி கிடைக்கும்
சக்தி கிடைத்தால் சரணம் கிடைக்கும்
சபரிக்கு வந்தால் மோட்சம் கிடைக்கும்
சற்குருநாதன் காட்சி கிடைக்கும் (ஐயப்ப)

## சரணம் விளித்தால் மரணம் இல்லை

சாமியே .... சரணம் ஐயப்பா ...
சரண கோஷப்பிரியனே சரணம் ஐயப்போ ....
சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை
தருணம் இதுதான் சரணம் போட்டு
தர்ம சாஸ்தா பாதம் பாடு (சாமியே...)

காக்கும் தெய்வம் திருமால் நாமம்
கருணை செய்யும் ஈஸ்வா நாமம்
கலந்து மகிழ்ந்த ஐயன் நாமம்
கூவி வந்தால் புவியில் ஷேமம் (சாமியே...)

காடும் மேடும் வீடும் வாசல்
கல்லும் முள்ளும் மல்லிகை மெத்தை
ஆடும் மனத்தை அடக்கி வா வா
ஐயன் மேடை நாடி வா வா (சாமியே...)

நெய்போல் உருகும் மனதில் ஐயன்
நேரில் வருவான் நிறையத் தருவான்
குருவை நாடு மாலையை சூடு
கோடி ஞான ஜோதியைப் பாடு (சாமியே...)

சரணம் சரணமே சரணமே பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை கண் இருந்தாலும்

எத்தனை கண் இருந்தாலும் அத்தனையும் போதாது
எங்களது ஐயப்பனின் எழில் காண
எத்தனை நா இருந்தாலும் அத்தனையும் போதாது
இவ்வுலகில் மெய்யப்பன் புகழ் பாட (2) (எத்தனை)

முத்து நவரத்தினங்கள் வைத்திழைத்த மண்டபங்கள்
எத்தனையோ இருக்கின்ற நாட்டினிலே (2)
சித்த சுத்தி காட்சிபெற பக்தருக்கு காட்சி தர
இருக்கின்றான் சபரிமலை மேட்டினிலே (2) (எத்தனை)

திருவடி காண்பதற்கு இருமுடி தூக்கி சென்று சேவித்தால்
தீமையெல்லாம் தீர்ந்து விடும் (2)
ஒருபடி இருபடியென 18 படிகளில் உச்சி பெற
நன்மையெல்லாம் வந்து சேரும் (2) (எத்தனை)

ஐயப்பன் சந்நிதியில் நெய்மணக்கும் அவன்
பெயர் சொன்னவர்கள் வாய் மணக்கும் (2)
இரு கையும் கூப்பி நின்றால் மெய் சிலிர்க்கும் (2)
ஹரிஹரன் புத்திரன் பெயர் எதிரொலிக்கும் (2) (எத்தனை)

## ஓங்கார நாதத்திலே

ஓங்கார நாதத்திலே ஓங்கி வரும் சரணத்திலே
பாங்காகத் தோன்றிடுவான் பந்தளத்து சபரியப்பன்
நீங்காத மனைச் செல்வம் நிறை ஆயுள் புகழ் தேகம்
தாங்கி வரும் திருமுடிக்கு தக்கபடி தந்திடுவான்

மாலையிட்ட நாள் முதலாய் மனம் பழுக்க வைத்திடுவான்
காலையிலும் மாலையிலும் கதிர்போல வலம் வருவான்
வேலையிலே வெற்றி தரும் விளக்காக விளங்கிடுவான்
பால் மனத்தில் புரிந்தருள்வான் பம்பாநதி வாசன் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் மணக்கும் மேனியப்பா நிம்மதிக்கு தோணியப்பா
கை மணக்கும் வாய் மணக்கும் கனதனம் மணக்குமப்பா
உள்ளமே அவன் கோவில் உண்மையே அவன் வாசல்
வள்ளல் மணிகண்டனப்பா வடிவேலன் தம்பியப்பா
கற்பூர ஜோதிமலை காந்தமலை சபரிமலை
நற்பதம் நாடிவரும் ஞானியர்தம் தியானமலை
பொற்பதம் மேடையிலே பூரணனின் காட்சியிலே
அற்புதங்கள் கோடியப்பா ஐயப்பா சரணமப்பா

## காடுமலை கடந்து வந்தோம்

ஐயப்பா - சுவாமி ஐயப்பா ...
சரணம் ஐயப்பா - சுவாமி ஐயப்பா
காடுமலை கடந்து வந்தோம் ஐயப்பா
உனை காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா
மாய வீடுதனை மறந்து வந்தோம் ஐயப்பா
சபரி வீடுதனை தேடி வந்தோம் ஐயப்பா
நெய் அபிஷேகம் பால் அபிஷேகம்
தேன் அபிஷேகம் ஸ்வாமிக்கே - சந்தனம்
பன்னீர் அபிஷேகம் எங்கள் ஐயப்ப சுவாமிக்கே (காடு)

ஏட்டினிலே எழுத வைத்தாய் ஐயப்பா ...
எங்கள் பாட்டினிலே எழுந்து வந்தாய் ஐயப்பா ...
நாங்கள் பேட்டை துள்ளி ஆடும் போது ஐயப்பா
நீ ஆட்டம் ஆடி வந்திடுவாய் மெய்யப்பா (காடு)

நீல விழி கண்ணனுக்கும் நீறணிந்த ஈசனுக்கும்
பாலகனாய் அவதரித்த ஐயப்பா ...
வேலவனின் அருமைத்தம்பி - காலமெல்லாம்
உன்னை வேண்டி நீலிமலை சபரிமலை
ஏறி வந்தோம் ஐயப்பா (காடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்டா உன் கருணை அமுதமப்பா
உன் புன்னகையில் புவனமெல்லாம் மயங்குதப்பா
மின்னும் காந்த மலையில் ஜோதி தெரியுதப்பா அப்பா
சபரி மன்னவனே உன் மகிமை புரியுதப்பா (காடு)

## மூணுகண்ணுத் தேங்கா

சுவாமியே சரணம் ஐயப்பா
நெய்யபிஷேகப் பிரியனே சரணம் ஐயப்பா

மூனுகண்ணுத் தேங்காய் அதில் நெய் நிரப்பி வைத்து
அந்த ஐந்துமலை ஏறி அவன் பாதம் பணிந்திடணும் (2)
ஏற்றிடு ஏற்றிடு எங்களை மேலே
நம்பிக்கை வைத்தோம் உன்னருள் மேலே (2)
வேண்டிட வேண்டிட வந்தருள்வாயே

மோகன சுந்தரனே (2)

ஜோதியே ஜோதியே ஐயப்பா
ஆனந்த ஜோதியே ஐயப்பா
பம்பா விளக்கே ஐயப்பா
சரணம் உனக்கே ஐயப்பா

தாங்கும் இருமுடிதான் அது ஐயன் திருவடிதான் - விதி
பாரம் குறைந்திடும்தான் நம்ம பாவம் மறைஞ்சிடும்தான்

சொல்லுங்க சொல்லுங்க ஐயனின் நாமம்
சொல்லிட சொல்லிட வந்திடும் யோகம்
கல்லென்ன முள்ளென்ன காடென்ன மேடென்ன
நாதன் இருக்கையிலே (ஜோதியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிமலை ஏறி நாம இறங்கிடும் போது - நம்ம
ஹரிஹரன் தானே வந்து கை கொடுப்பானே
ஐயனின் சக்தியை வந்திங்க பாரு
சொன்னது சொன்னது சத்தியம் பாரு
நாளென்ன பொழுதென்ன வினையென்ன செய்யும்
ஐயன் இருக்கையிலே .... (ஜோதியே)

தூய பதினெட்டுப் படியில் பாதம் படும்போது - வரும் துன்பம்
நொடியினிலே நம்மை விட்டுப் பறக்குதையா!
கற்பூர ஆராத்தி காட்சியைப் பாரு
சத்திய மூர்த்தியின் கீர்த்தியைப் பாரு
ஆதியும் நீதியும் ஜோதியுமாகி
வாழும் குருபரனே... (ஜோதியே)

காந்தமலையிலே நம்ம சாந்த மகராசன் - அந்த
வான்வெளி தனியே ஒரு
ஜோதியாய் வந்தானே
ஆயிரம் ஆயிரம் சூரியன் அங்கே
பாருங்க பாருங்க ஐயனை அங்கே
பார்த்திட பார்த்திட கண்களும் கோடி
தந்திடு என் ஐயனே (ஜோதியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்முத்து மணிமாலை

நல்முத்து மணியோடு
ஒளி சிந்தும் மாலை ....
நவரத்தின ஒளியோடு
சுடர்விடும் மாலை ....
கற்பூர ஜோதியில் கலந்திடும் மாலை ...
கனகமணி கண்டனின் துளசிமணி மாலை

ஆயிரம் சரணங்கள் சொல்லிடும் மாலை
ஐயனின் கடைக்கண்ணில்
அன்பெனும் மாலை ...
அழுதையில் குளித்திடும்
அழகுமணி மாலை ...
பம்பையில் பாலனின்
பவளமணி மாலை ...
ஐந்துமலை வாசனின்
அழகுமணி மாலை ... ஐயப்ப சுவாமியின்
அருள் கொஞ்சும் மாலை ...
ஆனந்த ரூபனின் அன்பென்னும் மாலை ...
கன்னியின் கழுத்தினில்
அரங்கேறும் மாலை ...
முத்தோடு மணியோடும்
முழங்கிடும் மாலை ...
முக்கண்ணன் மகனான
மணிகண்டன் மாலை ...
கழுத்தோடு உறவாடும்
காந்தமணி மாலை ...
காண வரும் பக்தருக்கு
காட்சி தரும் மாலை ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிமூல கணபதி பகவானே - சரணம் ஐயப்பா

கன்னிமூல கணபதியே கருணையுடன் வர வேண்டும்
சொல் நயமும் பொருள் நயமும் சுவை நலமும் பெற வேண்டும்
சரணம் சரணம் சரணம் - சுவாமி
சரணம் சரணம் சரணம்

வருகுது வருகுது கார்த்திகை மாதம்
மணிகண்ட சாமியின் கார்த்திகையின் மாதம்
மாலை போட்டுக்கோ துளசி மாலை போட்டுக்கோ
மாலை போட்டுக்கோ துளசி மாலை போட்டுக்கோ

கன்னிச்சாமி நம்ம குருசாமி
உபதேசங்களைக் கேட்டுக்கோ
வன்புலி ஏறிய அம்புலி நாதன்
இருமுடி தன்னை ஏந்திக்கோ
கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் மேட்டிலும்
ஹரிகரன் நாமத்தைப் பாடிக்கோ
சுவாமியே ஐயப்போ (4)
கனவிலும் நனவிலும் இரவிலும் பகலிலும்
சபரி நாதனை எண்ணிக்கோ
(சரணம் சரணம்)

பம்பா ஜோதி முத்தி தரும் ஜோதி
தரிசனம் நீயும் பண்ணிக்கோ
பதினெட்டுப் படிகளில் அவர் திருவடிகளில்
மந்திரம் சொல்லி வணங்கிக்கோ
வில்லையும் அம்பையும் ஏந்திய வீரனை
விரதங்கலிருந்து வேண்டிக்கோ
சுவாமியே ஐயப்போ (4)

மண்ணிலும் விண்ணிலும் மனதிலும் வெளியிலும்
மணிகண்ட நாதம் கேட்டுக்கோ (சரணம் சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பை நதிக்கரையே!

பம்பை நதிக்கரையே ... உந்தன்
பெருமைக்கு இணை இல்லையே ...
அரிகரன் திருவருளே நீதான்
அறிந்தாய் முதன் முதலே (பம்பை)

ஆயிரம் கோடி பக்தர்கள் பாடி
தொழுவார் ஐயப்பன் திருவடியில்
அந்த ஐயப்பனை ஒரு குழந்தையின் வடிவில்
அருள்மழை பொழிந்தது உன் மடியில்
அருள்மழை பொழிந்தது உன் மடியில்

அடைக்கலம் என்று இருமுடி ஏந்தி
அனுதினம் வருவார் கோவிலிலே
அவரவர் மனதில் அருளாய் இறங்கி
கருணையைப் பொழிவான் வாழ்வினிலே
கருணையைப் பொழிவான் வாழ்வினிலே

சரணம் பாடி வருவோர்க்கெல்லாம்
சாந்தியைக் கொடுக்கும் சபரிமலை
ஒருமுறை தரிசனம் கண்டால் போதும்
பிறவியின் பயனே தெய்வநிலை
பிறவியின் பயனே தெய்வநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படுவோம் புறப்படுவோம்

இருமுடி ஏந்தி குருசாமியை வேண்டி
கும்பிடுவோம் ஐயனின் சரணங்களை
அருள்தனைச் சேர்க்கும் அரிகர சுதனின்
திருவடியைக் காணவே புறப்படுவோம் சபரிமலை ...

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
நெய்யபிஷேகம் சுவாமிக்கே
கற்பூர தீபம் சுவாமிக்கே
சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே (2)
புறப்படுவோம் புறப்படுவோம் சபரிமலை .... (2)

கூப்பிடுவோம் கூப்பிடுவோம் சரணங்களை (2)
மணிகண்ட தேவனின் நாமங்களை
சொன்னால் அடைவோம் சேமங்களை
பணிந்திடுவோம் அவர் பாதங்களை
அணிந்திடுவோம் மணிமாலைகளை (சுவாமியே ...)

தலையில் இருமுடி சுமந்து கிட்டாலே
தனிசுகம் அது தனிசுகம்
நிலவினைச் சூடிய பரமனின் மகனை
காண்பது ஒரு பரவசம்

கல்லும் முள்ளும் மெத்தையாகுமே
கருத்தினில் அவனை நாடுவோம்
வில்லும் அம்பும் கொண்ட வீரனை
அல்லும் பகலும் பாடுவோம் (சுவாமியே ...)

நிந்தக்க நிந்தக்க நிந்தக்கத்தோம் - சுவாமி
நித்தக்க நிந்தக்க நிந்தக்க தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமேலியில் பேட்டை துள்ளுவதும்
ஆனந்தம் பரமானந்தம்
கருணை வள்ளலின் திருமுகம் கண்டால்
இன்பம் என்றும் பேரின்பம்
இளநீர் சந்தனம் குங்குமம் எடுத்து
நெற்றியில் அணிந்து கொள்வோம்
திருவடி என்றும் பற்றியே நாமும்
வெற்றிப் பாதையில் செல்லுவோம் (சுவாமியே ...)

காந்தமலையிலே ஜோதியைக் கண்டால்
சிலிர்த்திடும் மனம் சிலிர்த்திடும்
கற்பூர தீபத்தைப் பார்த்தால் நாவும்
சொல்லிடும் சரணம் சொல்லிடும்
ஐயன் தரிசனம் சொல்லிடும்
ஜென்மம் என்றும் சாபல்யம்
நெய்யபிஷேகம் செய்து விட்டாலே
வந்திடும் நாளும் சௌபாக்கியம் (சுவாமியே ...)

## பால் முகம் கண்டோம்

பால் முகம் கண்டோம் ஐயப்பா
பரவசம் கொண்டோம் ஐயப்பா
எங்கும் நிறைந்த ஐயப்பா
எல்லாம் உந்தன் அருளப்பா (பால்)

மாலையிட்டு நோன்பிருந்து
மனதை சுத்தம் செய்திடுவோம்
மனதில் உள்ள நினைவே கொண்டு
மகிழ்ச்சி கொண்டே பாடிடுவோம்
இருமுடி தாங்கும் பக்தர்களின்
இதயச்சுமைகள் குறைந்துவிடும்
உன் திருவடி காண வருவோர்க்கு
வாழ்வும் வளமும் பெருகிவிடும் (பால்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சன் கோவில் கொண்டவனே
அச்சம் தவிர்க்கும் ஆண்டவனே
அன்பு கொண்ட மனமெல்லாம்
அபயம் கொண்டு வருபவனே
பம்மை நதியினிலே நீராடி
பாவம் தீர செய்பவனே
குளத்துப் புழையில் குழந்தையென
குறுநகை புரியும் மன்னவனே
காந்த மலையின் மகரஜோதி
கற்பூர ஜோதியும் நீயப்பா
காலமெல்லாம் வருவோர் தன்னை
காத்து நிற்கும் ஐயப்பா
சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா

பொன்னம்பல மேடையிலே ... ஐயப்பா ...
ஒரு புனிதநிலை கனிந்ததப்பா ஐயப்பா - ஒரு
புனிதநிலை கனிந்ததப்பா ஐயப்பா ... ஐயப்பா ....

## குருசாமி சரணம்

காடாள வந்தவரே மணிகண்ட சாமி - உன்
கட்டளையைக் கேட்டவரு என் குருசாமி
பொன்னம்பல வாசனையா மணிகண்டசாமி - உன்
எண்ணமெல்லாம் அறிந்திடுவான் என் குருசாமி
கட்டான கட்டுத்தான் குருசாமி கட்டுத்தான்
முன்னால போகுது முன்னேறிப் போகுது
மெட்டான மெட்டுத்தான் கன்னிச்சாமி மெட்டுத்தான்
காட்டானை கூட்டத்தையும் கட்டிப் போட்டுப் போகுது
சின்னச்சின்ன சாமிங்க சிங்கி நடை போடுது
எங்க குரு கையிலதான் தென்னங்கன்று ஆடுது
குட்டி குட்டி சாமிங்க கும்மாளம் போடுது
குருசாமி கண்ணு மட்டும் கடிவாளம் போடுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
தூங்காமலே பூங்காவனம் தாண்டி வந்தோம் ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
பெருந்தோட்டு மேல பெரும்படையா ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
காளை கட்டி நாதருக்கு சரணம் போட்டு ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
சாமி அழுதையிலே குளித்துப்பிட்டு ஆடிவாரோம் ஐயப்பா
சுவாமியப்பா ஐயப்பா சரணமப்பா ஐயப்பா
சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே

வேட்டைக்கார சாமியடா மணிகண்ட சாமி - உன்
கோட்டைப்படி மதிக்கிறவர் என் குருசாமி
அம்புகளை அடித்துவரும் ஐயப்பசாமி - முழு
ஐம்புலனை அடக்கிவரும் என் குருசாமி
உடம்பு வேர்க்குது உச்சந்தலை வேர்க்குது
சாமி சரணமென்று துடைத்து விட்டுப் போகுது
நாக்கு வரளுது நல்ல தண்ணி கேட்குது
ஐயப்பனின் சரணம் சொல்ல அமுதமெல்லாம் சுரக்குது
வந்தனமாம் வந்தனம் வன்புலிக்கு வந்தனம்
வந்துபோன இடமெல்லாம் மணக்குதையா சந்தனம்
வந்தனமாம் வந்தனம் வாபருக்கு வந்தனம்
வந்துபோன வழியெல்லாம் ஜெவ்வாது நறுமணம்

வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
அழுதமேடு தொழுது ஏறி வாரோமப்பா ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
கல்லும் போடும் குன்று பார்த்து துள்ளி வாரோம் ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
கரிமலையும் ஏறியிறங்கி வாரோமப்பா ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
ஆணைவட்டம் இரண்டு தாண்டி பம்பை கண்டோம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியப்பா ஐயப்பா ... சரணமப்பா ஐயப்பா
சுவாமியே ... ஐயப்பா ஐயப்போ ... சுவாமியே

நெய்த்தேங்காய் கேட்கிறியே மணிகண்ட சாமி - அத
கைமேல் கொடுப்பவரே என் குருசாமி
காணிப்பொன் கேட்கிறியே மணிகண்ட சாமி - அத
கருத்துடனே கொடுப்பவரு என்குரு சாமி
பம்பா ஓடுது பன்னீரா ஓடுது - வணங்கி குளிக்கையிலே
வடகாசி தெரியுது
கணபதி வீட்டில காயு நூறு உடையுது
கன்னி சாமிக்குத்தான் கைலாயம் தெரியுது
அங்கே பாரு ஐயப்ப அனுமானைப் பாரப்பா
அவர வணங்கி ஏறும் போது தேகபலம் தானப்பா
அக்கம் பாரு ஐயப்ப பார்வதியார் தானப்பா
அம்மா சரணம் சொல்ல ஆன்மபலம் தானப்பா

வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
நீலிமலை அப்பாச்சி மேடுதாண்டி ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
சபரிபீடம் சரங்குத்தி தாண்டி வாரோம் ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
பதினெட்டாம் படியேறி ஓடி வாரோம் ஐயப்பா
வந்தோமப்பா ஐயப்பா வாரோமப்பா ஐயப்பா
பகவானே உன் முகத்தை பார்க்க வந்தோம் ஐயப்பா
சாமியப்பா ஐயப்பா சரணமப்பா ஐயப்பா
சுவாமியே ஐயப்போ ஐயப்போ சுவாமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொடி நடையா பொடி நடையா

பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
சாமி சரணம் ஐயப்ப சரணம்
ஐயப்ப சரணம் சாமி சரணம்

ஏற்றி விடப்பா ஐயப்பா
தூக்கி விடப்பா ஐயப்பா
பாதபலம் தா ஐயப்பா
தேகபலம் தா ஐயப்பா ....

பொடி நடையா ... பொடி நடையா ...
போவதென்ன இருமுடியா ...
பொடி நடையா ... பொடி நடையா ...
போவதெல்லாம் இருமுடிதான்
கோட்டைப் படியே வழியில் புகுந்து
போகும் பயணம் சபரிக்கு விருந்து
காட்டில் காட்டில் கட்டுமுடி
காவலுக்கு சாமியுண்டு சரணம் விளி
(ஏற்றிவிடப்பா)

அடைமழையா ... கடுங் குளிரா ...
நடப்பது யாரு சாமிகளா ...
அடைமழையே ... கடுங் குளிரே ...
நடப்பதெல்லாம் சாமிகளே ...
அமுதமேடு அலரவைச்சாலும்
உச்சிக்கரிமலை உருட்டி விட்டாலும்
ஐயனைக் கூப்பிடு சரணத்திலே
பத்திரமா சேத்திடுவான் பம்பையிலே
(ஏற்றிவிடப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலிமலை பெரியமலை
ஏறியது யாரால ....
நீலிமலை பெரியமலை
ஏறியது ஐயனால ....
சபரிபீடம் தாண்டின வேகம்
சன்னதி வாசலில் தரிசன கோஷம்
கண்ணில ஐயனின் பொன்னு முகம்
இனிமே யாருக்கு வேணும் வரம்

சரணம் சரணம் ஐயப்பா சாமியே சரணம் ஐயப்பா
சரணங்களே சரணங்களே சாமி பாதம் சரணங்களே

## மலையாம் மலையாம் சபரி மலையாம்

மலையாம் மலையாம் சபரிமலையாம்
மலையின் மேல் ஒரு சாமியாம்
அந்தச்சாமி வாழும் சபரிமலைக்குச்
சரணம் சொல்லிப் போவோமாம் (மலையாம்)

உடுக்கை கெண்டை கொட்டிக்கிட்டு
ஐயப்ப சரணம் பாடிக்கொண்டு
காடும் மேடும் நடந்து செல்லும்
ஐயப்பன்மார்கள் கோடி உண்டு

எரிமேலைப் பேட்டைத்துள்ளி
அழுதை வழியே நடந்து சென்றால்
கரிமலையின் மேல் நடத்திச் செல்வான்
எங்கள் ஐயப்ப சாமியாம் - கரிமலையின் மேல்
நடத்தச் செல்வான் எங்கள் ஐயப்ப சாமியாம்

நதியாம் நதியாம் பம்பா நதியாம்
பாவம் தீர்க்கும் புண்ணிய நதியாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நதியில் ஆடி ஐயனைத் தேடி
நாமும் போவோம் நீலிமலையாம்
நீலிமலையில் ஏறும் நம்மை ஏற்றும் சாமி ஐயப்பனாம்
குந்திவிடய்யா தள்ளி விடய்யா என்று சொல்ல வைப்பானாம்

பதினெட்டுப் படியும் கடந்து சபரிமாமலைக் கோவில் வந்து
ஐயப்பசாமியின் அழகைக் கண்டு நெய்யபிஷேகம் செய்வோமாம்
(மலையாம்)

## பந்தள ராஜனைத் தேடி

பந்தள ராஜா ஐயப்பா
பம்பா வாசா ஐயப்பா
வில்லாளி வீரா ஐயப்பா
வீரமணிகண்ட ஐயப்பா

பந்தள ராஜனைத் தேடி ஒரு
படையொன்று போகுது சாமி
கானக வாசனைத்தேடி - நல்ல
காணிக்கை போகுது சாமி
அரியாசனம் அறியாதவன் - சிறு
பாலகன் குருசாமி
அவன்மேனியில் நகை சூட்டவே - பரி
மாறப்போகுது சாமி

பந்தள நாட்டு சீதனமாய் ...
போவது சபரிக் கானகமாம் (2)
(பந்தளராஜா)

சிறுமதி படைத்தவன் ஹரிகர சுதன் தனை
காட்டுக்கு அனுப்பி வைக்க
குருமுனி அனயவன் தனிமையிலே நின்று
மாதவம் புரிந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் மனம் நலம் பெற மன்னவன்
பொன்னகை சபரிக்கு போகுதையா
தைமுதல் மாலையும் தங்கமும் பூட்டிட
தவண்டே செல்லுதையா

பந்தள நாட்டு சீதனமாய் ...
போவது சசபரிக் கானகமாம் (2)
(பந்தளராஜா)

மதகரி உதவிடும் சிவஹரி பாலன்
ஆபரணம் காக்க
விருவிருவெனவொரு கருடனும் வானத்தில்
கவரிகளே வீச
அடியவர் நெய்மணம் அணியென அணிந்திடும்
ஆண்டவனைச் சேர
குரும்புவி முழங்கிட பந்தள சேனையும்
புயலாய் விரைந்திருக்க

பந்தள நாட்டு சீதனமாய் ...
போவது சபரிக் கானகமாம் (2)
(பந்தளராஜா)

இருமுடிப்பிரியா ஐயப்பா...
ஈசனின் மைந்தா ஐயப்பா...
சந்தனப்பிரியா ஐயப்பா...
சச்சிதானந்தா ஐயப்பா...
சரணம் சரணம் ஐயப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரியில் மட்டும் தானா ஐயன் இருப்பான்

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

(சரணம்)

சபரியில் மட்டும் தானா ஐயன் இருப்பான்
சரணங்கள் கேட்கும் இடம் எங்கும் இருப்பான்!

(சபரியில்..)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

(சரணம்)

பந்தளத்தில் மட்டுந்தானா ஐயப்பன் இருப்பான்
சந்தன நெற்றியில் கூட இருப்பான்!

(பந்தளத்தில்...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

காந்தமலை மீது தானா ஐயன் இருப்பான்?
மாலையணிந்த சாமி நெஞ்சில் ஐயன் இருப்பான்!

(காந்தமலை ...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

வன்புலிமேல் ஏறித்தானா ஐயன் வருவான்?
நல்லோரின் மனதிலும் ஏறி வருவான்!

(வன்புலி)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையும் அம்பையும் தானா ஐயன் ஐயன் பிடிப்பான்?
அன்னதானத்தையும் ஒரு பிடி பிடிப்பான்!

(வில்லையும்...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

ஜோதியாக மட்டும் தானா ஐயன் வருவான்?
கன்னிச்சாமியாகக் கூடி நம்ம கூட வருவான்!

(ஜோதியாக...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

அழுதா மலைக்குத் தானா ஐயன் வருவான்?
அழுத குரலுக்கும் ஓடி வருவான்!

(அழுதா)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

கரிமலை மீதுதானா ஐயன் இருப்பான்?
கருணையுள்ள நெஞ்சில் கூட இருப்பான்!

(கரிமலை...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

நீலிமலை மீதுதானா ஐயன் இருப்பான்?
நீண்ட பெருமூச்சில் கூட இருப்பான்!

(நீலிமலை...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடிநெய்யைத் தானா அவன் கேட்பான்?
எளியவர் குறைகளைக் கூட கேட்பான்!

(இருமுடி)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

அஞ்சுமலை தாண்டித்தானா ஐயன் இருப்பான்?
நம்பியவர் கண்களுக்கு எங்கும் இருப்பான்!

(அஞ்சுமலை...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

வெள்ளை யானை மீது தானா அமர்ந்திருப்பான்?
கன்னிச்சாமி பூஜையிலும் அமர்ந்திருப்பான்!

(வெள்ளை ...)

சரணம்! சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா
சாமி சரணம்! சரணம்! சரணம்! ஐயப்பா

அன்னதானப் பிரபுவே! சரணம் ஐயப்பா!
காந்தமலை ஜோதியே! சரணம ஐயப்பா!

ஸ்வாமியே! சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலைராஜன் திருக்கோவில்

மலைராஜன் திருக்கோவில் மணியாடுதே
சுகமான அருட்பாடல் இசை கேட்குதே
அபிஷேக மணம் காற்றில் அலை வீசுதே
ஐயப்பன் பதம் தேடி மனம் ஓடுதே

(மலைராஜன்)

வாவென்று வரவேற்கும் ஐயன்மலை
வாழ்நாளில் கடைத்தேற்றும் அருளின் எல்லை
நாள்தோறும் அருள்வேண்டும் அடியார் உள்ளம்
மழைமேகம் போல் பொங்கும் கருணை வெள்ளம்

(மலைராஜன்)

ஓமென்று குளிர்காற்று இசை பாடுதே
சபரிமலை மேகம் ஆனந்த நடமாடுதே
நாம் வாழ நல்மார்க்கம் தெளிவாகுதே
ஆம் என்று ஐயப்பன் அருள் கூறுதே

(மலைராஜன்)

நோன்போடு சாஸ்தாவின் மலை நாடுவோம்
நம்வாழ்வில் அவன்பாதம் துணை தேடுவோம்
அடியாரின் மனம் யாவும் அவன்தானே ஆட்சி
ஐயப்பன் பெருமைக்கு அடியாரே சாட்சி

(மலைராஜன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்ட சாமிக்கும் மார்கழிப்பூவிற்கும்
ஆனந்த அபிஷேகம்
அரிகரசுதனிற்கும் அருந்தவ சுடரிற்கும்
அடியவர் அபிஷேகம்
அபிஷேக ஆராதனை ஐயனுக்கு
அபிஷேக ஆராதனை (2)
நெய்யாலே ஐயன் அபிஷேகம்
மெய்யோடு செய்யும் அபிஷேகம்
மலையான தேசமென்றே மலையாளும் சாமிக்கென்றும்
அடியவர் செய்து வைக்கும் அபிஷேகம் - இது
அடியவர் செய்து வைக்கும் அபிஷேகம்

சுவாமி சரணம் ஐயப்ப சரணம் (2)
சரணம் சரணம் சரணம் சரணம் ஐயப்பா
(அபிஷேக)

சத்தியப்படி மீது வீற்றிருக்கும்
சற்குரு எழில்மேனி அபிஷேகம்
திருநீறு அபிஷேகம் திருச்சாந்து அபிஷேகம்
சுவையூறும் தேன் கொண்டு அபிஷேகம்
பூத்துக்குலுங்கும் துளசி எல்லாம்
பொன்னான அங்கத்திற்கு அபிஷேகம்
பூதநாத சுவாமியவரின் பொன்னடிக்கு
என்மனசு அபிஷேகம் - ஐயன்
பொன்னடிக்கு என்மனசு அபிஷேகம் (சுவாமி)
(அபிஷேக)

தத்துவச் சுடரென்று காட்சி தரும்
சித்திரச் சிலைமேனி அபிஷேகம்
இளநீரில் அபிஷேகம் பன்னீரில் அபிஷேகம்
பழச்சாறு பால் கொண்டு அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு மலர்கள் கூட்டமெல்லாம்
கற்பூரப் பொற்சிலைக்கு அபிஷேகம்
வாசுதேவ ஈசன் மைந்தன் மெய்யழகில்
என் விழிகள் அபிஷேகம் - ஐயன்
மெய்யழகில் என் விழிகள் அபிஷேகம் (சுவாமி)

சுவாமியே .................... சரணம் ....................... (அபிஷேக)
ஐயனே ........................ சரணம் ......................

## பம்பை மன்னவன்

பம்பை மன்னவன் துணையோடு
செம்பை நாதனின் நினைவோடு
பந்த பாசம் இசையோடு
உலகம் எனக்கொரு தாய்வீடு! (பம்பை)

எங்கிருந்தேன்? ஏன் பிறந்தேன் எனக்கொன்றும் தெரியாது!
எங்கிருந்தேன்? ஏன் பிறந்தேன் எனக்கொன்றும் தெரியாது!
நீ நடத்தும் நாடகத்தில் நடிப்பதுதான் பெரும்பாடு!
நீ நடத்தும் நாடகத்தில் நடிப்பதுதான் பெரும்பாடு!
காலம் மாறும்! காட்சி மாறும்! ஐயா! ......
காலம் மாறும்! காட்சி மாறும்! ஐயா! ......

ஐயன் ஆட்சி மாறாதே!
சுவாசம் என்னில் ஓயும் வரையில்
சுவாமி நாமம் ஒன்றே மிஞ்சும்!
சுவாமி நாமம் சந்தோஷம்! (பம்பை மன்னவன்)

ஆட்டுவித்தாய்! ஆடுகின்றேன்!
சாட்டையிலே பம்பரம் நான்!
ஏற்றி வைத்தாய்! பாடுகின்றேன்!
ஏழை மனம்! சம்பளம் தான்! (ஆட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைதோறும் பாடல் மாறும்! ஐயா ...
மேடைதோறும் பாடல் மாறும்! ஐயா ...
தாள நாதம் மாறாதே!
தேசம் கடந்து வாழும் போது
நேசம் மட்டும் உன்னைச் சுற்றும்!
நேசம் உன்னை நீங்காதே! (பம்பை)

## மோகினி தந்த

மோகினி தந்த மனமோகனன் நீயே - அந்த
மாமலையில் சிரிக்கின்ற மாணிக்கம் நீயே
மாதவத்தோர் வணங்கிடும் மங்கலம் நீயே
மகிஷியாலே சாபம் தீர்த்த மன்மதன் நீயே
மனமுருக சரணம் போட வருபவன் நீயே
மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் நீதானே
(மோகினி)

மழலையாக பம்பையில் பிறந்தவன் நீயே
மகிமையோடு பந்தளத்தில் வளந்தவன் நீயே
அரண்மனைக்கு புலியின் மீது வந்தவன் நீயே
அம்மாவின் நோய் தீர்த்து வைத்த ஆண்டவன் நீயே
(மோகினி)

கரை காண முடியாத வேதம் நீ தானே
கலியுகத்தில் கண்கண்ட தேவன் நீ தானே
குருமுனியாய் குன்றின் மேல் கொலுவிருந்தாயே
பொல்லா மனம் நெய்யாய் தினம் உருகுதுன்னாலே
ஐயப்பா பொல்லா மனம் நெய்யாய் தினம் உருகுதுன்னாலே
(மோகினி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம் ஒலிக்குதையா ...

சரணம் ஒலிக்குதையா! சுவாமி
உன்மலைப் பாதையிலே
ஐயப்பன் திருவடிகள், காண
ஆசை பெருகுதையா (சரணம்)

காடுமலைகள் எல்லாம் கடந்தே ஓடி வந்தோமய்யா
பாடும் குரல் கேட்டு பாவம் தீர்க்க வருவாயப்பா! (சரணம்)

சொந்தம் மறந்துவிட்டோம்! எங்கள் சுற்றம் துறந்துவிட்டோம்!
உன்னையே சொந்தமாய்க் கொண்டோமய்யா!
காந்தமலை வாசா! - எங்கள்
கர்வம் தீர்ந்ததப்பா! (சரணம்)

பார்க்கும் இடம் முழுதும் உன்புகழ்
பாரில் விளங்குதய்யா!
யார்க்கும் வணங்காதோர் உன்னடியே
மார்க்கம் என்பாரய்யா! (சரணம்)

பந்தள நாட்டு மன்னா! நீ இந்தப்
பாவிக்கு அருள்வாயப்பா!
பழவினை தீண்டாமல் - என்னை நீ
பார்த்துக் கொள்வாயப்பா! (சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளசிமணி மாலை கட்டி

துளசிமணி மாலை கட்டி, இருமுடியும் தலையில் ஏந்தி
சபரி நோக்கி நடையைப் போடு கன்னிச்சாமி அங்கே
சாஸ்தாவின் அருள் கிடைக்கும் கன்னிச்சாமி
எரிமேலிப் பேட்டையிலே கரிமலையில் நடக்கையிலே
எத்தனையோ இன்பமுண்டு கன்னிச்சாமி
நீயும் வந்து பார்த்து வரத்தைக் கேளு - கன்னிச்சாமி
(துளசி)

பாட்டுப்பாடி பஜனைபாடி பம்பா நதி தீர்த்தமாடி
காட்டுக்குள்ளே குடியிருப்போம் கன்னிச்சாமி - அதிர்
வேட்டு வச்சு வழிநடப்போம் கன்னிச்சாமி!
மலையதிரச் சரணம் போட்டு மனமுருகப்பாட்டும் கேட்டு
அலைஅலையாய் நடந்து வந்தோம் கன்னிச்சாமி அங்கே
ஆனந்த ஜோதி பார்ப்போம் கன்னிச்சாமி!
(துளசி)

## கானக மலையின்

கானகமலையின் பெருவழியில்
காலிடராமல் காத்திடப்பா
கட்டும் எடுத்து வரும் தருணம் - மன
கஷ்டங்கள் மாறணும் ஐயப்பா (2) (கானக)

கல்லிலும் முள்ளிலும் எங்களை நீ
காத்திட வருவாய் ஐயப்பா (2)
புலியதன் மேல் வருவாயே ................ (2)
கலியுகவரதா ஐயப்பா (கானக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பையில் ஓடும் வெள்ளம் போல
என்விழியாகும் ஐயப்பா (2)
கருணா மூர்த்தியே நீயென்றால் ... (2)
கானக வாசா ஐயப்பா (கானக)

சரணம் சரணம் சுவாமி சரணம்
சரணம் சரணம் ஐயப்ப சரணம் (2)

ஐயப்ப சரணம் சுவாமி சரணம்
சுவாமி சரணம் ஐயப்ப சரணம் (4)

## ஐந்துமலை ஆளுகின்ற சபரீசா

ஐந்துமலை ஆளுகின்ற சபரீசா!
அருள் திருவடி சரணம் அருள் ஈசா ஈசா! (ஐந்து)

கார்த்திகை நன்னாளில் மாலையிட்டோம்
காலமெல்லாம உந்தன் சரணமிட்டோம்
இருமுடி தலையேந்தி நடந்து வந்தே
ஈசா உன் சன்னதியில் பேட்டை துள்ளி
வாபரின் துணையோடு சாஸ்தாவாய் உனைக்
காணும் திருத்தலமே எருமேலி! (ஐந்து)

வளம் பெறும் பந்தளத்தின் அரசமர்ந்து - ஒரு
வன்புலி வீரனாக உருவெடுத்து
குருவுக்கு குருவே! நீ ஆளும் இடம்
அச்சங்கோவில் என்னும் அழகுமலை! (ஐந்து)

உலகின் இயக்கத்தை உணர்த்துவதற்கு - திருக்
கல்யாணக் காட்சி தந்து கருணை தந்து
இல்லறம் பூண்டே நீ வாழுகின்ற அருள்
ஈயும் திருத்தலமே ஆரியங்கா (ஐந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சும் சிறுவிழியில் திருவோடு உன்னடி
தஞ்சம் என்றவர்க்கு அருளோடு
குழந்தையின் கோலம் கொண்ட ஒரு மலையாம்
குளத்துப்புழை என்னும் திருமலையாம் (ஐந்து)

துறவு கொண்டு ஞானகுரு உருவில்
திருவடி சரணடைந்தார் துயர் துடைத்து
பார்த்தவர்க்கருள் செய்யும் சபரிமலை
சபரிமலை! திருச்சபரிமலை! (ஐந்து)

## எங்கே பயணம்

எங்கே பயணம் எதற்கு பயணம் சொல்லுங்க சாமி
சபரிமலைக்கு புனிதப்பயணம் போறோம் சாமி
யாரைக்காண யாரைக்காண சொல்லுங்க சாமி
ஹரிஹரபுத்திரன் ஐயனைக்காண போறோம் சாமி (எங்கே)

மாலையிட்டோம் காவி உடுத்தோம் ஐயனை வேண்டி
நாதனை எண்ணி ஜெபங்கள் செய்தோம் நலங்களை வேண்டி
நாற்பது நாட்கள் நோன்புகள் எதற்கு சொல்லுங்க சாமி
உடலும் உள்ளமும் தூய்மை பெறவே தவமிது சாமி (எங்கே)

குருவருள் இன்றி திருவருள் ஏது குருவினை தொழுவோம்
மலைவழி ஏற குருசாமியவர் திருவடி தொடர்வோம்
நல்லது செய்வோம் நல்லது நினைவோம் என்னங்கசாமி
ஐயப்ப தேவன் குடிகொள்ளும் தேகம் அல்லவோ சாமி
(எங்கே)

யாரைப்பாக்கினும் ஐயப்பனாக எண்ணிட வேண்டும்
சாமி சரணம் சாமி சரணம் சொல்லிட வேண்டும்
சாமி சாமி என்பது ஏனென சொல்லுங்க சாமி
யாவும் சாமி எதிலும் சாமி அறிவோம் சாமி (எங்கே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரடி புலியெல்லாம் வருமே எனினும் விலகியே ஓடும்
காப்பாற்றிடவே கூடவே வருவது ஐயப்பசாமி
காடுமேடெல்லாம் கடப்பது எதற்கோ சொல்லுங்க சாமி
கடவுளை நேரில் காண்பது எளிதோ உருகணும் சாமி
(எங்கே)

## சபரிமலை சாஸ்தாவே ஐயப்பா ...

புவிபோற்றும் மலைகளிலே புனிதமலை எந்த மலை?
சேரநன்னாட்டிலே செழிக்கும் மலை எந்த மலை?
நாடி வந்தார் இல்லமெல்லாம் நலமாக்கும் மலை எந்த மலை
கோடிக் கோடியாய் பக்தர் கூடிவரும் சபரிமலை! சபரிமலை!
சபரிமலை!

சபரிமலை சாஸ்தாவே ஐயப்பா
சான்றோர் குலங்காக்கும் மெய்யப்பா - ஐயா
சபரிமலை சாஸ்தாவே ஐயப்பா
எரிமேலி பந்தளம் கரிமலை பம்பையும் - ஐயா (சபரிமலை)

என்றும் அருளைப் பொழிந்திடுமே
தை மகர நன்னாளில் ஜோதியாய் நீ வந்து
தாயாகி அருள்காட்டும் ஐயப்பா!
ஆ.... ஆ.... ஆ.... (சபரிமலை)

குறையிலாக் குணசீலா! குற்றங்களை மறப்பாய்
விரைந்தே எனைக்காக்க நீ வருவாய்
உன்னோடு ஒன்றாகி இரண்டறக்கலப்பாக
முத்தமிழிலும் உனைப் பாடுவேன்
ஆ.... ஆ.... ஆ.... (சபரிமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிகர புத்திரன் ஆனந்த சித்தனை மறவேன் - நான் மறவேன்
பரமனின் திருமகனே! பக்தர்க்கு அருள்பவனே!
பார்ப்பதெல்லாம் உனது மலை - அது சபரிமலை
பாவமெல்லாம் தீர்த்திட உன்னடி சரணமையா
ஐங்கரனின் சோதரனே! ஆறுமுகனின் பின்னவனே
மணம் எது குணம் எது நலம் எது சுகம் எது
சகலமும் உனதொரு கருணையில் வருவது
வருவாய்! அருள்வாய்! ஐயப்பா!
ஆ.... ஆ.... ஆ.... (சபரிமலை)

ஸ்வாமியே சபரிமலை ஐயா! (சபரிமலை)

## ஏற்றிவிடப்பா

ஏற்றி விடப்பா என்றே நானுனை வேண்டுகின்றேன்
தூக்கிவிடப்பா என்றே பலமுறை கதறுகின்றேன்
மலை ஏற்றும் கடினமப்பா துணை என்றும் நீயப்பா
(ஏற்றி)

ஐயப்பா ....................... ஐயப்பா ........................

கதிதரும் தெய்வம் நீயென வந்தேன் (2)
கனவிலும் உனது நினைவினை கொண்டேன் (2)
கால்கள் தள்ளாட கால்கள் தள்ளாட
ஏறுகின்றேன் நான் உன்முகம் காண (2) (ஏற்றி)

தரிசனம் காண தடைகளும் ஏனோ (2)
கரிசனம் காட்ட யோசனை தானோ (2)
சாந்தஸ்வரூபா கோபமென்மீதா
தாமதம் வேண்டாம் உடன் வருவாயே (2)
(ஏற்றி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயல்லால் துணையுமில்லை

நீயல்லால் துணையுமில்லை! எனது ஈசா!
நீக்குவாய் தொல்லை! ஐயா!
நீயல்லால் துணையுமில்லை
ஆ........ஆ........ஆ........ஆ........ஆ........
தானாக வந்து தாயாகிக் காத்தாய்!
தேனாகி அமுதாகிப் பேரின்பமும் தந்தாய்! - ஐயா
நீ என் நெஞ்சில் நிறைந்தாய்! (நீயல்லால்)

காலாற நடந்து கரங்கூப்பித் தொழுது
கண்ணீரால் உனக்கு காணிக்கை தந்தேன்!
வாழ்வினில் ஒளியாய் வாராய் நீ ஐயா!
வாழ்நாளில் நீயே கண்கண்ட தெய்வம்! (நீயல்லால்)

பாவங்கள் செய்தே பாரினில் பிறந்தோம்
பணவெறியால் மீண்டும் பாவங்கள் செய்தோம்
அறிவாகிச் சுடராகி குருவாகி வருவாய்!
ஐயா நீ எனக்கு நல்வழி தருவாய்! (நீயல்லால்)

## காத்து ரட்ஷிக்கணும்

காத்து ரட்ஷிக்கணும் கன்னிமார்களை
கன்னிமூல கணபதியே
பார்த்து ரட்ஷிக்கணும் பரிசு காட்டணும்
கன்னிமூல கணபதியே
காத்து ரட்ஷிக்கணும் கருணை காட்டணும்
பொன்னு பகவதியே அம்மா பொன்னு பகவதியே
மாளிகை புறத்து மஞ்சம்மா
மாணிக்கப்பாதம் தஞ்சம் அம்மா
நெய்மணக்குது மெய்யிருக்குது சபரிமலையிலே
அய்யனே உந்தன் அழகைக் கண்டால் பக்தி பிறக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே ஞானசக்தி பிறக்குது உள்ளத்திலே
நெய்யபிஷேகம் செய்யும் போது
மெய் சிலிர்க்குது மலையிலே
தையினிலே உந்தன் சந்நிதி காண
உள்ளத்திலே ஆவல் பொங்கிடுதே
சத்தியமான பொன்னு பதினெட்டுப்படி பகவானே
சுவாமி பொன்னு பகவானே ஐயா பொன்னு பகவானே
ஷண்முகன் தம்பியே உந்தன் தரிசனம் கிடைக்க வேணுமே
ஸ்வாமியே சரணம் ஐயப்பா
என்று சொல்லி நாங்கள் வந்தோமே
சங்கர மோகினி பாலனே உந்தன்
தரிசனம் தனைக்காண தயை புரிவாய் தேவனே
தயை புரிவாய் தேவியே
ஸ்வாமியே சரணம் ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

## பேட்டை துள்ளி

திந்தகத்தோம் திந்தகத்தோம் சாமி திந்தகத்தோம்
திந்தகத்தோம் திந்தகத்தோம் சுவாமி திந்தகத்தோம்

பேட்டை துள்ளி ஆடுதையா பெரிய சாமி - அதன்
ஆட்டத்திலே மயங்குதப்பா கன்னிச்சாமி
வாபரோட கோட்டையிலே மேளம் கொட்டி - அட
வகை வகையா மேனியில வண்ணம் பூசி
ஆட வாங்க சாமியே ஐயன் பெயரைக் கூறியே
எருமேலி சாத்தனுக்கு ஏற்ற சரணம் கூறியே (பேட்டை)

புலியைப்போல சீறியது வாவரு சாமி - அவர
பசுவைப்போல மாற்றினது ஐயப்பசாமி
இரண்டு பேரும் நண்பரான மண்ணப்பாருங்க - அந்த
நேசம் இன்னும் வளர வேண்டும் பேட்டையாடுங்க
ஐயன்போல மாறுங்க அம்பெடுத்து ஆடுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு வழி ஏற வேணும் கருணை மனு போடுங்க (பேட்டை)

வேற்றுமை வளர்க்கிறது மனித ஜாதிங்க - மத
ஒற்றுமையை வளர்க்கிறது இந்த பூமிங்க
கறுப்பு வேட்டி கட்டும் ஜாதி ஒன்று தானுங்க
காட்டுகிற வாபருக்கு சரணம் போடுங்க
சாமிபோல மாறுங்க சரத்தையெடுத்து ஆடுங்க
சபரிமலை புறப்படணும் சரணகோஷம் பாடுங்க (பேட்டை)

## மணிகண்டன் அருளுக்கு

மணிகண்டன் அருளுக்கு நிகராக உலகத்தில்
எதுவுண்டு சொல் மனமே (2)
அவர் பெயருண்டு பூசிக்க புகழுண்டு நேசிக்க
திடம் கொண்டு நில் மனமே
ஹரியுண்டு ஹரனுண்டு அவர் கொண்ட மகனுக்கு
இனி என்ன சொல் மனமே (2)
அந்த அரிகரன் சபரிக்கு இருமுடி நீ கொண்டு
ஒருமுறை சொல் மனமே - நீ
ஒருமுறை சொல் மனமே

கார்த்திகை ஒரு மாதம் மார்கழி மறுமாதம்
விரதங்கள் இரு மனமே (2)
அந்த மூர்த்தியின் பதம் நாடி கீர்த்தியை தினம் பாடி
மௌனத்தில் நில் மனமே
மெய்யெல்லாம் திருநீறு வழியெல்லாம் அருள்நீறு
பொய்யின்றி செல் மனமே (2)
நீ புலனெல்லாம் ஒன்றாக புண்ணியன் நினைவாக
சரணங்கள் சொல் மனமே - நீ
சரணங்கள் சொல் மனமே (2)
(மணிகண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருமேலி வழியாக அழுதையில் இளைப்பாறி
கரிமலை செல் மனமே (2)
அங்கு பம்பையில் நீராடி சாஸ்தாவின் மலை நாடி
சபரியில் நில் மனமே (2)
பதினெட்டுப் படியேறி திசையெட்டும் புகழெட்டும்
பகவானைப் பார் மனமே (2)
அவன் பத மொன்றில் சதமென்று பக்குவம் தாயென்று
பாட்டொன்று சொல் மனமே - நீ
பாட்டொன்று சொல் மனமே

(மணிகண்டன்)

## சஞ்சலங்கள் தீர்த்து வரும் சபரிமலை வாசா

அம்பலத்தமர்ந்தவனே சபரிமலை ஈசா
ஆயகலை கற்றவனே சபரிமலை ஈசா
அச்சுதனே காத்திடுவாய் சபரிமலை ஈசா
ஆலகாலன் மைந்தனே சபரிமலை ஈசா
கண்ணுக்கு இமை போல் சபரிமலை ஈசா
காவியங்கள் போற்றுகின்ற சபரிமலை ஈசா
காந்தமலை வாசனே சபரிமலை ஈசா
கண்கண்ட தேவனே சபரிமலை ஈசா
பதினெட்டாம் படி மேவும் சபரிமலை ஈசா
பார்புகழ உற்றவனே சபரிமலை ஈசா
துதிப்போர்க்கு துணையானாய் சபரிமலை ஈசா
தொல்லுலகில் வல்லவனே சபரிமலை ஈசா
மஹிஷி சம் ஹாரனே சபரிமலை ஈசா
மணிமகுட தீபனே சபரிமலை ஈசா
மணிகண்டன் பெயரடைந்தாய் சபரிமலை ஈசா
மாதவமே பேரொளியே சபரிமலை ஈசா
பம்பையில் பிறந்திட்டாய் சபரிமலை ஈசா
பந்தள தேவனே சபரிமலை ஈசா
பண்புடன் பாடினோம் சபரிமலை ஈசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் நாதனே சபரிமலை ஈசா
பஞ்சபூத மானவனே சபரிமலை ஈசா
குஞ்சரத்தான் இளையவனே சபரிமலை ஈசா
சஞ்சலங்கள் தீர்த்துவரும் சபரிமலை ஈசா
சாமியே சரணமப்பா சபரிமலை ஈசா

## பம்பா நதிக்கரையோரம்

பம்பா நதிக்கரையோரம் கண்டேன் ஒரு தெய்வரூபம்
பாதம் அதன் பாதமே மனம் ஏனோ விரைந்தோடுமே
திருப்பாதம் அதன் பாதமே மனம் ஏனோ விரைந்தோடுமே
சரணம் .......... சரணம் ........ சுவாமி .......... சரணம்
நாதம் குரு நாதமே அதில் ஜீவன் குடியேறுமே
நாதம் குரு நாதமே அதில் ஜீவன் குடிசேருமே
(பம்பா)

திருப்பாதங்கள் பாற்கடல் தாமரையா - விழி
கார்குழல் நாரென்ன வண்ணங்களா (2)
நீலிமலை போலவே அவன் தோள்கள் அசைகின்றதே
காந்தமலைக் கண்ணிலே அருட்கருணை வழிகின்றதே
மலைத்தேன் குடித்தேன் இனிமையில்லை - அவன்
அருட்தேன் சுவைத்தேன் மயக்கமில்லை (2)
(நாதம் குரு)

ஒரு ராஜனைப் போலவன் தோற்றம் கண்டேன்
சன்னியாசியைப் போலவன் வாழக் கண்டேன் (2)
கழுத்தினில் மணியாரமே அது பாடும் தேவாரமே
ஆனை புலி யாவுமே அதில் ஆன்ம சுகம் தேடுமே
ஹரியோ ஹரனோ ஹரிஹரனோ - என்
மனமதைக் கொடுத்தேன் சரணடைந்தேன் (2)
(நாதம் குரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிகிரி வாழும் ஈசா

சபரிகிரி வாழும் ஈசா உன்னைச்
சரணடைந்தோம் எம்மைக் காத்தருள் நேசா! (சபரி)

சஞ்சலம் தீர்த்திடும் வேதா - நீயே
தஞ்சமளித்தெம்மை ஆண்டருள் நாதா! (சபரி)

அரிஹர மைந்தனே தேவா - உந்தன்
அடியவராம் எம்மைக் காத்திட வாவா! (அரிஹர)

ஆனைமுகன் தம்பி நீயே - எங்கள்
ஆதாரப் பொருளாகி வந்தருள்வாயே! (அரிஹர)

வேலனின் தம்பியே தேவா - எங்கள்
வேதனை தீர்த்திடும் நாதனே காவா (வேலனின்)

வேத முதல்வனே கோவே - உன்னை
வேண்டி நின்றோம் எம்மைக் காத்தருள் தேவே! (வேலனின்)

தேவர்கள் போற்றிய நாதா - உந்தன்
திருவடி தந்தருள் செய்திடல் தீதா (தேவர்கள்)

தீயவினை மாய்த்திடும் ஈசா - இந்தச்
சிறியாரை ஆண்டருள் மலையிடை வாசா (தேவர்கள்)

ஐயப்பா ஐயப்பா வாராய் உந்தன்
அன்பர்கள் வேண்டுதல் கேட்டருள் கூராய் (ஐயப்பா)

மெய்யப்பன் பொன்னப்பன் நீயே எம்மை
மேன்மையாய் வாழ்ந்திடச் செய்தருள்வாயே (சபரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவின் குருவே

கார்த்திகை பிறந்தது நல்ல நேரந்தான்
மாலை அணிந்தது நல்ல காலம் தான்
சுவாமி சரணம் சரணம் பொன் ஐயப்பா
குருசுவாமி கையிராசிதான் நமக்கு இனிமே
நல்ல யோகந்தான்
சுவாமி சரணம் சரணம் பொன் ஐயப்பா
(கார்த்திகை)

சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
கழுத்தில் ஆடிடும் மாலையில் ஆடணும்
தேவன் சரணம் தேவி சரணம்
விளிக்கும் சரண கோஷத்தில் வரணும் (2)

சித்தயோகமோ அமிர்த யோகமோ
வந்திடும் சுபதினமே.....
குருவின் ஓரையதில் மாலையணிந்திட
எல்லாம் இனி ஜெயமே

குருவின் குருவே..... சரணம் ஐயப்பா
துளசி மணி மார்பனே...... சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்ப சரணம் மாலையணிந்திட
இது புது தருணம்
தேவன் சரணம் தேவி சரணம் சரணம் விளித்திட
புதுபலம் தரணும்

சுவாமியே சரணம் ஐயப்ப சரணம்
கழுத்தில் ஆடிடும் மாலையில் ஆடணும்
தேவன் சரணம் தேவி சரணம்
விளிக்கும் சரணகோஷத்தில் வரணும்
(கார்த்திகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் திருவடி போற்றி நடந்திட
எல்லாம் நலமாகும்
குருதேவன் சொல் கேட்டு பணிந்திட
யாவும் சுகமாகும்
சற்குரு நாதனே.... சரணம் ஐயப்பா
சமுத்தாக நாத ரட்ஷகனே...... சரணம் ஐயப்பா

சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
குருசாமி வடிவினில் வரணும்
தேவன் சரணம் தேவி சரணம்
சாமியார்களின் விழி நீர் துடைக்கணும்
சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
கழுத்தில் ஆடிடும் மாலையில் ஆடணும்
தேவன் சரணம் தேவி சரணம்
விளிக்கும் சரண கோஷத்தில் வரணும்

துளசி மாலையில் இறங்கிடுவாய் சுவாமி சரணம் ஐயப்பா
உத்திராட்ச மாலையில் பொலிந்திடுவாய் சுவாமி சரணம் ஐயப்பா
படிக மாலையில் திருமுகம் காட்டுவாய் சுவாமி சரணம் ஐயப்பா
தாமரை மணியில் அமர்ந்தே காப்பாய் சுவாமி சரணம் ஐயப்பா
ஐயப்பா ஐயப்பா என்னுள் கலந்துவிடு
ஐயப்பா ஐயப்பா உள்ளத்தில் நடனமிடு நடனமிடு

சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
குருசாமி வடிவினில் வரணும்
தேவன் சரணம் தேவி சரணம்
சாமியார்களின் விழி நீர் துடைக்கணும்
சுவாமி சரணம் ஐயப்ப சரணம்
கழுத்தில் ஆடிடும் மாலையில் ஆடணும்
தேவன் சரணம் தேவி சரணம்
விளிக்கும் சரண கோஷத்தில் வரணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வா! வா! ஐயப்பா! வந்தாரு ஐயப்பா!

வா! வா! ஐயப்பா! வந்தாரு ஐயப்பா!
கன்னிச்சாமி பூஜையிலே!
ஆடிப்பாடி சரணங்கள் சொன்னோம்!
ராக்கால பூஜையிலே!

வா! வா! ஐயப்பா! வந்தாரு ஐயப்பா!
கன்னிச்சாமி பூஜையிலே!
ஆடிப்பாடி சரணங்கள் சொன்னோம்!
ராக்கால பூஜையிலே!

வா! வா! ஐயப்பசாமி!
மலையாளுகின்ற தேவா ஐயப்பசாமி!

வா! வா! ஐயப்பசாமி!
மலையாளுகின்ற தேவா ஐயப்பசாமி!

பந்தளத்து ராசா! ............ பம்பா நதி வாசா! ........
கண்கண்ட தெய்வமல்லவா?
நீ கன்னிச்சாமி பூஜையிலே

(வா! வா! ஐயப்பசாமி!)

சந்தனத்தைப் பூசியே விரதம் ஐயப்பா!
பந்தளத்துப் பாதையில் வரணும் ஐயப்பா!

சந்தனத்தைப் பூசியே விரதம் ஐயப்பா!
பந்தளத்துப் பாதையில் வரணும் ஐயப்பா!

குருசாமியின் துணையோடவே........
கன்னிச்சாமி வீட்டினிலே பூஜை ஐயப்பா!

(வா! வா! ஐயப்பசாமி!)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாளி வீரா!..... வீரமணி கண்டா!.....
கன்னிச்சாமி முகத்தைப் பாரய்யா! - ஐயா
மனங்குளிர வந்து நில்லு ஐயா! (வா! வா!)

சபரிமலை உச்சியிலே சரணம் ஐயப்பா
நாங்க சரணம் போட வாரோம் அப்பா சாமி ஐயப்பா!

சபரிமலை உச்சியிலே சரணம் ஐயப்பா
நாங்க சரணம் போட வாரோம் அப்பா சாமி ஐயப்பா!

நீயில்லையே நாங்களில்லை!
நீலிமலை இறங்கி வந்து நில்லப்பா! (வா! வா!)

மலையாளும்...... ஆண்டவா!......
விளக்கொளியில் தோன்றிவா!

மலையாளும்...... ஆண்டவா!......
விளக்கொளியில் தோன்றிவா!

அன்னதானம் ஆரம்பிக்கணும் - நீ
வந்து எம்மை ஆதரிக்கணும்!

வா! வா! ஐயப்பா! வந்தாடு ஐயப்பா!
கன்னிச்சாமி பூஜையிலே!
ஆடிப்பாடி சரணங்கள் சொன்னோம்!
ராக்கால பூஜையிலே!

வா! வா! ஐயப்பா! வந்தாடு ஐயப்பா!
கன்னிச்சாமி பூஜையிலே!
ஆடிப்பாடி சரணங்கள் சொன்னோம்!
ராக்கால பூஜையிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா! வா! ஐயப்பசாமி!
மலையாளுகின்ற தேவா ஐயப்பசாமி!

வா! வா! ஐயப்பசாமி!
மலையாளுகின்ற தேவா ஐயப்பசாமி!

## போனால் சபரிமலை

சுவாமி திந்தக்கத் தோம் தோம்
ஐயப்ப திந்தக்கத்தோம் தோம் (2)
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு (2)
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை (2)

போனால் சபரிமலை கேட்டால் சரணகோஷம்
பார்த்தால் மகரஜோதி பார்க்க வேண்டும் - நாம்
பார்த்தால் மகரஜோதி பார்க்க வேண்டும் (4)

மண்டல காலத்தில் மாலை அணிந்து
சாமி சரணம் ஐயப்ப சரணம்
மணிகண்ட நாமம் தினமும் நினைந்து
சாமி சரணம் ஐயப்ப சரணம்
இருமுடி தாங்கி எரு மேலிக்கென்று
சாமி சரணம் ஐயப்ப சரணம்
பேட்டையாடி நாங்க வரணும்
சாமி சரணம் ஐயப்ப சரணம்

போனால் சபரிமலை கேட்டால் சரணகோஷம்
பார்த்தால் மகரஜோதி பார்க்க வேண்டும் - நாம்
பார்த்தால் மகரஜோதி பார்க்க வேண்டும் (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கிருந்தாலும் உன்னைப் பணிவேன்

சுவாமியே சரணம் ஐயப்பா - குரு
சுவாமியே சரணம் ஐயப்பா
காடுமலைகள் கடந்த வந்தோம் குரு
சுவாமியின் சொற்படி நடந்து வந்தோம் (சுவாமியே)

எத்தனை மலைகள் கடந்தாலும் நீ
இருளினில் ஓடி மறைந்தாலும்
சித்தத்தில் அன்பு விளக்கேற்றி நான்
தேடி வந்தடைவேன் உன்னைப் போற்றி (சுவாமியே)

அற்பத்தைப் பெரிதாய் நினைத்து விட்டேன் - உன்
அருமை அறியா திருந்து விட்டேன்
குற்றத்தை நன்றாய் உணர்ந்து விட்டேன் - உனைக்
கூவி வந்தழைக்கத் துணிந்து விட்டேன் (சுவாமியே)

பக்தியெனும் தூய வலை விரித்து - உன்
பாதமலர்களை நான் பிடித்தேன்
சித்தத்தில் உன்னைச் சிறையடைந்தேன் - உன்
திருப்பெயர் மந்திரம் உச்சரித்தேன் (சுவாமியே)

பிறவிப் பெருங்கடல் தாண்டிடவேஉன்
திருப்பெயரே எந்தன் தோணி ஐயா
கருணைக் கடலுனைக்கண்டு கொண்டேன் - அந்த
கடலினில் கலந்தே களித்து நின்றேன் (சுவாமியே)

சந்தன மரமாய் மறுபிறப்பில் - உன்
சபரிமலை மேல் நானிருப்பேன்
சந்தன மலர்களை நாள் முழுதும் - உன்
தாமரைப் பாதத்தில் நானுதிர்ப்பேன் (சுவாமியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலை சரண மழை

சபரிமலை சரணமழை தந்தானே தானே
சுவாமி தவமிருக்கும் புனிதமலை தில்லாலே ஏலோ
மலைப்பயணம் தொடங்கிவிட்டோம் தந்தானே தானே
தலையில் இருமுடியும் ஏந்தி வந்தோம் தில்லாலே ஏலோ
(சபரிமலை)

கணபதிகொரு சூரையிட்டு தந்தானே தானே
மண்ணு சுவாமிகளின் சிந்து பாடி தில்லாலே ஏலோ
குருவாயூர் நடையடைந்தோம் தந்தானே தானே
நாங்கள் மாதவனை வணங்கி வந்தோம் தில்லாலே ஏலோ
சுவாமி வந்து வழிநடந்த தந்தானே தானே
நாங்க சோர்தானிக் கரையடைந்தோம் தில்லாலே ஏலோ
(சபரிமலை)

சிவனுறையும் வைக்கம் வந்தோம் தந்தானே தானே
சுபம் பெருமான் பெயரைச் சொல்லி தில்லாலே ஏலோ
அவனிடத்தில் மனம் செலுத்தி தந்தானே தானே
போய் கவலையெல்லாம் நீங்கவைத்தோம் தில்லாலே ஏலோ
எரிமேலி பதியடைந்தோம் தந்தானே தானே
சுவாமி பேட்டை துள்ளும் பேறு பெற்றோம் தில்லாலே ஏலோ
(சபரிமலை)

வாபரையே வேண்டிக்கிட்டு தந்தானே தானே
ஒரு கருடனைப் போல் மேலெழுந்து தில்லாலே ஏலோ
சரண கோஷம் போட்டுக்கிட்டு தந்தானே தானே
பெயரியானை வட்டம் தேடி வந்து தில்லாலே ஏலோ
பம்பை நதி தீரம் கண்டு தந்தானே தானே
அந்த நதியிலொரு குளியலிட்டு தில்லாலே ஏலோ
தேவருக்கு பலி கொடுத்து தந்தானே தானே
பம்பை விளக்குகளை நதியனுப்பி தில்லாலே ஏலோ
(சபரிமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி உள்ள சாமிக்குத்தான் தந்தானே தானே
பம்பைக்கரையிலொரு படையலிட்டு தில்லாலே ஏலோ
நீலிமலை ஏற்றங்கண்டு தந்தானே தானே
அப்பாச்சி மேடு வந்தோம் தில்லாலே ஏலோ
சபரிபீடம் வணங்கிகிட்டு தந்தானே தானே
சரங்குத்திகளின் அருகில் வந்தோம் தில்லாலே ஏலோ
(சபரிமலை)

ஆலயங்கள் சரங்கள் குத்தி தந்தானே தானே
வழி சரணவெடி போட்டுகிட்டு தில்லாலே ஏலோ
பதினெட்டாம் படிகள் கண்டோம் தந்தானே தானே
ஓர் ஓர் படிகளாக கடந்து வந்தோம் தில்லாலே ஏலோ
சாமிகளின் முன்பிருந்தோம் தந்தானே தானே
சர்ப்ப சங்கடங்கள் தீர்க்கக் கண்டோம் தில்லாலே ஏலோ
(சபரிமலை)

## சாமியப்பா! ஐயப்பா

சாமியப்பா! ஐயப்பா! சரணம்! அப்பா! ஐயப்பா!
வந்தோம் அப்பா! ஐயப்பா! வாரோம் அப்பா! ஐயப்பா!
சபரிமலை அடிவாரத்தில் சாமி திந்தகத்தோம்! (2)
(சாமியப்பா!)
(சபரிமலை)

வளைஞ்சு நெளிஞ்சு ஆடிப்போடு ஐயப்பன் திந்தகத்தோம்!
எருமேலி மேட்டில் ஒரு சாமி திந்தகத்தோம்!
கல்லும் முள்ளும் இருக்கும் பாதையெல்லாம் ஐயப்பதிந்தகத்தோம்!
சரணங்கள் சொல்லிக்கிட்டு
மணிகண்டன் சாமியைக் காண வந்தோம்!
(சாமியப்பா!)
(சபரிமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டை துள்ளும் நேரமெல்லாம் சாமி திந்தகத்தோம்!
காட்டுவழி மேட்டில் எல்லாம் ஐயப்ப திந்தகத்தோம்!
அழுதா மலை மேலும் ஒரு சாமி திந்தகத்தோம்!
கரிமலை மீது மேளங்கொட்டி ஐயப்ப திந்தகத்தோம்!
குருவருளோடு வில்லாளி வீரனைக் காண வந்தோம்
(சாமியப்பா!)
(சபரிமலை)

பம்பை நதிக்கரையோரத்திலே ஒரு சாமி திந்தகத்தோம்!
அலுப்பு தீரக் குளிச்சபின்னே ஐயப்ப திந்தகத்தோம்!
நீலிமலையதன் மீது கூட ஒரு சாமி திந்தகத்தோம்!
பதினெட்டுப் படிகளிலே துள்ளித் துள்ளி ஐயப்பன் திந்தகத்தோம்!
மலையேறி ஐயப்பனின் சன்னதியைக் கண்ணாரக் காணவந்தோம்!
(சாமியப்பா!)
(சபரிமலை)

## ஐந்து மலையில்

ஐந்து மலையில் அருளும் தெய்வம்
ஐயன் நடைவழி திறக்கின்றதே
சரணமழையில் உருகும் தெய்வம்
தரிசனம் அழைக்கிறதே (ஐந்து)

அரிஹர சுதனுக்கு சரணம் ஐயா
ஐயப்ப சாமிக்கு சரணம் ஐயா (ஐந்து)

ஜோதி தரிசனம் அழைக்கிறதே (2)

ஐந்துமலை ஏற்றும் நெஞ்சில் எழும் போது
சஞ்சலங்கள் யாவும் மறைகின்றதே
பம்பைநதித்தீரம் மூழ்கி எழும் போது
பக்தனது பாவம் தொலைகின்றதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுமே ஐயன் புலிக்கூட்டமே
வலிபோக்குமே பூங்காவனத் தோட்டமே
மனம் தேற்றுமே ஐந்து மலை ஏற்றமே
பசியாற்றுமே பச்சைப் பசும் தோற்றமே

அரிஹர சுதனுக்கு சரணம் ஐயா
ஐயப்ப சாமிக்கு சரணமையா (2)

(ஐந்து)

ஜோதி தரிசனம் அழைக்கிறதே (2)

எட்டடுக்குத் தேகம் கட்டெடுக்கும் பொழுது
தொட்ட குறையாவும் விலகிடுமே
நெய்மணக்கும் பாரம் மெய் சுமக்கும் பொழுது
பெய் அழைக்கும் பாதை புரிந்திடுமே.

முடிபாரமே ஒரு முடி சூட்டுமே
படி ஏற்றமே ஒரு படியேற்றுமே
அருள் கூட்டமே ஐயன் எழில் தோற்றமே
வரம் கூட்டுமே அந்த வனத்தோட்டமே

அரிஹர சுதனுக்கு சரணம் ஐயா
ஐயப்ப சாமிக்கு சரணமையா (2)
ஜோதி தரிசனம் அழைக்கிறதே (ஐந்து)
(அரிகர)

## ஐயப்பன் நாமத்தை

ஐயப்பன் நாமத்தைச் சொன்னாலே - தீமை
அஞ்சி நடுங்கியே ஓடுமையா - அந்த
மெய்யப்பன் பாதங்கள் போற்றுவதே - யாரும்
மேன்மை யடைந்திடும் மார்க்கமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பல மேட்டில் வீற்றிருந்தே - அவன்
பூதலமாந்தர்க் கருள்வானாம் - பெரும்
மன்னவன் மைந்தனாய் வாழ்ந்திருந்தே - பல
மாயங்கள் செய்து மறைந்தவனாம்

கங்கை யணிந்த சிவன் மகனாம் - நம்மை
காத்து ரட்சித்திட வந்தவனாம் - என்றும்
மங்களம் நல்கிடும் மாதவனாம் - அந்த
மாயவன் பாதம் சரணடைவோம்

பந்தள வேந்தனின் பாலகனாய் - அவன்
பன்னிரண்டாண்டுகள் வாழ்ந்தானாம் - நின்று
விந்தை பலவும் புரிந்தானாம் - அந்த
மேலவன் பாதம் சரணடைவோம்

ஐயப்பன் என்ற பெயருடையான் - அந்த
அண்ணலின் பாதம் சரண் புகுந்தால் - இந்த
வையத்து மாந்தரின் வாழ்க்கையிலே - என்றும்
வந்து குவிந்திடும் நன்மைகளே

வேதமுணர்ந்த நல்வித்தகனாம் - ஐயன்
வேந்தர்க் குபதேசம் செய்தவனாம் - அவன்
பாதம் சரண் புகும் மாந்தரெல்லாம் - பெரும்
பாக்கியம் பெற்றுத் திகழ்வாரே
சபரிமலை தன்னில் வாழ்பவனாம் - அவன்
சஞ்சலம் தீர்த்திட வந்தவனாம் - எங்கள்
சாமியாம் ஐயப்ப தேவனவன் - நாமம்
சாற்றியே தீவினை தீர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலை மலை மலை

தந்தைக்கு ஒரு மலையுண்டு கைலைமலை
அன்னைக்கு ஒரு மலை உண்டு ஏழுமலை
அண்ணனுக்கு ஒரு மலை உண்டு பழனிமலை
ஐய்யனின் மலையோ சபரிமலை
(தந்தைக்கு)

தந்தைக்கு ஒரு பெயர் உண்டு சிவசம்போ
அன்னைக்கு ஒரு பெயர் உண்டு நாராயணா
அண்ணனுக்கு ஒரு பெயர் உண்டு அரோகரா
ஐயனின் பெயரோ சரணம் ஐயா

தந்தை அணியும் உடை புலித்தோலு (சம்போ)
அன்னை அணியும் உடை பீதாம்பரம் (ஹரி)
அண்ணன் அணியும் உடை காவிமயம்
ஐயன் அணியும் உடையோ நீலபட்டு (ஐயா)

ஐயனே நெஞ்சுக்குள்ளே வா வா
என் ஐயனே நெஞ்சுக்குள்ளே வா வா
ஐயனே கெதி அருள் தா தா
எனக்குள் காணும் திருவடி சரணம்

சாமி சரணம் ஐயப்பா ஐயப்ப சரணம் ஐயா

தந்தைக்கொரு வாகனம் நந்தி உண்டு
அன்னைக்கொரு வாகனம் கருடன் உண்டு
அண்ணனுக்கு வாகனம் மயிலுண்டு
சுவாமி ஐயனின் வாகனம் புலி வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைக்கொரு ஆயுதம் சூலமுண்டு (சம்போ)
அன்னைக்கொரு ஆயுதம் கதையுமுண்டு (ஹரி)
அண்ணனுக்கு ஆயுதம் வேலுமுண்டு (குஹா)
ஐயனின் ஆயுதம் கூரல் மணி
தந்தைக்கொரு விரதம் சிவராத்திரி
அன்னைக்கொரு விரதம் ஏகாதசி
அண்ணனுக்கொரு விரதம் ஸ்கந்தஷட்டி
ஐயனின் விரதம் மகரவிளக்கு

## சபரி மலை

கோடி மலை தனிலே
கொடுக்கும் மலை எந்தமலை
கேரள மணி நாட்டிலே
குளித்தமலை எந்தமலை
தேடி வந்தோர் இல்லமெல்லாம்
செழிக்கும் மலை எந்தமலை
சுவாமிமார்கள் தேடிவரும் சபரிமலை
ஆ....ஆ....ஆ....ஆ....ஆ....ஆ....சபரிமலை

சபரிமலை மாமணியே ஐயப்பா
சாமிமாரின் துயர் தீர்க்கும் ஐயப்பா
மணமிகு சந்தனம் அழகிய குங்குமம்
ஐயா உனது மங்கள மந்திரமே (சபரிமலை)

தைஜோதி நன்நாளில்
ஆவலுடன் உனைக்காண
சாமிமார்கள் கொண்டாடும் சபரீசா (சபரிமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிகள் குவிந்தாலும்
மோகினி பாலனை மறவேன்
நாடி என் வினை தீர நான் வருவேன்
அஞ்சுதல் நிலைமாறி ஆறுதல் உருவாகி
ஏழு பிறப்பிலும் உன்னை எட்டுவேன் (சபரிமலை)

சபரிமலை மாமணியே ஐயப்பா
சாமிமாரின் துயர் தீர்த்த ஐயப்பா ஐயா
திருமால் மகனே சிவனின் குமரா மறவேன் நான் மறவேன்
பக்தி கடலென பக்தி பெருகிட வருவேன்
நான் வருவேன்

பரமனின் திருமகனே அழகிய தமிழ் மகனே
காண்பதெல்லாம் உனது முகம்
அது ஆசை முகம்
காலமெல்லாம் எனது மனம்
உருகுது ஐயப்பா

அதிபதியே குருபரனே
அருள்நிதியே சபரிசனே
பனி எது மழை எது
நதி எது கடலெது
சகலதும் உனதொரு கருணையில் எழுவது
வருவாய் ஐயனே மணிகண்டா
ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...

சாமிமார்கள் வணங்கும்
சபரிமலை நாதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை அதிகாலை நீராடி...

கார்த்திகை அதிகாலை நீராடி
கடவுள் உன் திரு நாமப் பேர்பாடி
கண்களை மூடி உன் கோவிலிலே
இன்னிசை பாடும் என் நாவினிலே
ஹரிஹர மைந்தா உன் சுப்ரபாதம் பாடும்
ஹரிஹர மைந்தா உன் சுப்ரபாதம் பாடும்
வரம் ஒன்று தருவாயோ ஐயப்பனே...

கார்த்திகை...

காலைக் கதிரோனும் கரங்களை நீட்டிய
காலைக் கதிரோனும் கரங்களை நீட்டிய
வேளையிலே உன் தெய்வ சந்நிதியில்
வேளையிலே உன் தெய்வ சந்நிதியில்
ஒரு ராக மாலையை திருவடி மீதினில்
ஒரு ராக மாலையை திருவடி மீதினில்
படைத்திடும் வரம் வேண்டும் ஐயப்பனே
படைத்திடும் வரம் வேண்டும் ஐயப்பனே

கார்த்திகை

இருமுடி தனை ஏந்தி நடந்திடும் பாதையில்
இருமுடி தனை ஏந்தி நடந்திடும் பாதையில்
சிறுகல் போல் நானும் பிறப்பேனோ...
சிறுகல் போல் நானும் பிறப்பேனோ...
வரும் அடியார் உனை வணங்கும் வேளையில்
வரும் அடியார் உனை வணங்கும் வேளையில்
எரிந்திடும் கற்பூரம் ஆவேனோ...
எரிந்திடும் கற்பூரம் ஆவேனோ...

கார்த்திகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கெங்கும் ஐயப்ப கோஷம்

எங்கெங்கும ஐயப்ப கோஷம்
கேட்கின்ற மாமலையில்
சில்லென்ற தென்றலும் வீசும்
உன்திரு சந்நிதியில்...
எப்போதும் உன் முகம் பார்க்கின்ற ஆசை ஐயப்பா...
எந்நாளும் வந்து அணைப்பது உந்தன் கையப்பா...
எங்கெங்கும்

எப்போதும் உன்னை நினைக்க உள்ளது உள்ளமையா
என்னென்று சொல்வது உந்தன் பேரின்ப வெள்ளமையா
என் தேகம் என்கின்ற கோவிலில்
இருப்பது உன் ரூபம்
என் நாவில் எந்நாளும் உன் கீதமையா... (எங்கெங்கும்)
ஏழேழு ஜென்மம் எடுக்க நான் செய்த பாவமென்ன
வெவ்வேறு வேசங்கள் தந்து நீ செய்யும் கோலமென்ன
இனிமேலும் இன்னொரு ஜென்மம்
வேண்டாம் ஐயனே
படைத்தால் உந்தன் கோவில் மணியாய்
படைப்பாய் ஐயனே... எங்கெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகான சபரிமலை ஆண்டவா

அழகான சபரிமலை ஆண்டவா - உனை
அனுதினமும் பாடவந்தேன் ஐயப்பா 2

சபரிமலை நாதனே மங்கள மூர்த்தியே - 2

வர வேண்டும் புலி மீது மணிகண்டனே
ஐயப்பா... ஐயப்பா... ஐயப்பா... ஐயப்பா...

வெள்ளை திருநீறும் நெய் அபிஷேகம் - 2
உள்ளத்தில் தோன்றுமே

சபரி மலையேறி ஐயப்பன் வருவதை - 2
நெஞ்சம் காணுமே

எனை ஆளும் ஆண்டவனே எழில் ஐயப்பா - 2
இனியென்றும் உனைப்பாட அருள்வாய் ஐயா - 2

ஐயப்பா... ஐயப்பா... ஐயப்பா... ஐயப்பா...

நல்லதெல்லாம் என்னை நாடி பெருக
நல்லருள் செய்வாய்

தீயதெல்லாம் தீர்ந்து கருகிட
திருவருள் புரிவாய்
உனையின்றி வேறில்லை தெய்வம் ஐயப்பா - 2
உலகாளும் ஆண்டவனே நீதான் ஐயா - 2
ஐயப்பா.... ஐயப்பா.... ஐயப்பா.... ஐயப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பை கரைதனிலே

பம்பை கரைதனிலே - மணிகண்டனின் அவதாரம்
பக்தரைக் காப்பதற்கு - சபரி மலைமேல் தவக்கோலம்
பந்தள மன்னனுக்கு - பகவான் மகனாய் பலகாலம்
பந்த மகன்றிடவே - முடிவில் புலிமேல் திருக்கோலம்
பதினெட்டு படியேறி - ஐயனை பார்த்து மகிழ்ந்திடுவோம்
பகவான் தரிசனத்தை - நாமும் கண்டு மகிழ்ந்திடுவோம்
நெய்யால் அபிஷேகம் - செய்து நிம்மதி தனை நாடு
ஐயன் திருப்புகழை - என்றும் ஆடி மகிழ்ந்து பாடு
சந்தன காட்டினிலே - ஐயன் சங்கொலி முழங்கிடுதே
சரண கோஷங்கள் - ஜோதியைக் கண்டு வானைப் பிளந்திடுதே

## மார்கழி மாதம் ஊர்வலம்

மார்கழி மாதம் ஊர்வலம் போகும் பக்தர்கள் கோடி ஐயப்பா
மரகத கண்டி சந்தனம் பூசும் மார்புகள் கோடி ஐயப்பா
கருநிறை ஆடையும் புனித விரதமும் கொண்டவர் கோடி ஐயப்பா
கண்ணிற்கினிய மகர விளக்கை கண்டவர் கோடி ஐயப்பா
இருமுடி தாங்கி சபரிமலை ஏறும் கால்கள் கோடி ஐயப்பா
(உன்) தோற்றம் கண்டு மனம் மகிழும் உள்ளம் கோடி ஐயப்பா
பம்பையில் குளித்து பதினெட்டாம்படி ஏறுவர் கோடி ஐயப்பா
பார்வைக்கினிய மகர விளக்கைப் பார்ப்பவர் கோடி ஐயப்பா
கண்ணில் காணும் கரிமலை ஏற்றம் கடினம் கடினம் ஐயப்பா
கஷ்டம் நீக்கி களிப்பு தருவாய் எந்தன் குருவே ஐயப்பா
மோகினி சுதனே மோகன ரூபனே மோட்சம் அருள்வாய் ஐயப்பா
கலியுக வரதனே கண்கண்ட தெய்வமே கஷ்டம் நீக்குவாய் ஐயப்பா
சற்குரு நாதனே சாந்த சொரூபனே சாபம் நீக்குவாய் ஐயப்பா
அச்சங்கோவில் அரசே ஆரியங்காவையனே
அகந்தையை அழிப்பாய் ஐயப்பா
பூலோகநாதனே பூமி பிரபஞ்சனே புண்ணியம் அருள்வாய் ஐயப்பா
பம்மையின் சிசுவே பாற்கடல் வண்ணனே பாவம் நீக்குவாய் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னூஞ்சல் ஆடுகிறார்

பொன்னூஞ்சல் ஆடுகிறார் ஐயப்பன் பொன்னூஞ்சல் ஆடுகிறார்
ஹரிஹர சுதனாக ஆனந்த மூர்த்தியாக
அடியாரைக் காக்க வேண்டி (பொன்)

பம்பை நதி பாலகனாக பார் புகழும் சீலனாக
பந்தள நாட்டில் வந்து (பொன்)

எரிமேலி சாஸ்தாவாக எல்லாம் வல்ல தீரனாக
எங்கள் குல தெய்வம் ஐயன் (பொன்)

வில்லாளி வீரனாக வீரமணி கண்டனாக
வேங்கை மீதமர்ந்த தேவன் (பொன்)

வாபரின் தோழனாக வல்லமை தேவனாக
வரம் யாவும் தந்த ஐயன் (பொன்)

ஐந்துமலை அரசனாக ஆரியங்காவு ஈசனாக
அவனி போற்றும் தேவன் வந்து (பொன்)

மணிகண்ட தெய்வமாக மஞ்சமாதா நேசனாக
மகிமையுள்ள தேவன் வந்து (பொன்)

பதினெட்டாம் படியிலே பக்தர் சொல்லும் சரணத்திலே
பாசமுடன் மகிழ்ந்து (பொன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கும் நிறைந்தாயே

எங்கும் நிறைந்தாயே நீ எங்கு மறைந்தாயோ
எங்கும் உனை நான் தேடி அலைந்தேன்
சுவாமி பொன்னய்யப்பா சரணம் பொன் ஐயப்பா
எங்கும் நிறைந்தாயே

ஹரி ஹர சுதனே சரணம் பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

கலியுக வரதா சரணம் பொன்னய்யப்பா
கருணாகரனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

சரணகோஷ பிரியனே சரணம் பொன்னய்யப்பா
சபரிகிரி வாசனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

காளை கட்டி வனமே சரணம் பொன்னய்யப்பா
கல்லிடும் குன்றே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

எரிமேலி சாஸ்தாவே சரணம் பொன்னய்யப்பா
எதிர் வந்து காப்பவனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

பந்தள பாலகனே சரணம் பொன்னய்யப்பா
பரம தயாளனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

வில்லாளி வீரனே சரணம் பொன்னய்யப்பா
வீரமணி கண்டனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

அச்சங்கோவில் அரசே சரணம் பொன்னய்யப்பா
ஆரியங்காவு அய்யனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரங்குத்தி ஆலே சரணம் பொன்னய்யப்பா
சர்வ பரிபூரணனே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

காந்த மலை ஜோதியே சரணம் பொன்னய்யப்பா
கற்பூர ஜோதியே சரணம் பொன்னய்யப்பா (எங்கும்)

## சபரி வந்தோமையா

வந்தோமையா சபரி வந்தோமையா
கட்டேந்தி சபரிக்கு வந்தோமையா (வந்தோ)
கார்த்திகை நல்ல நாளில் மாலையிட்டு
மார்கழி நல்ல நாளில் கட்டும் கட்டி (வந்தோ)

குங்குமப்பொட்டு சந்தனப்பொட்டு வச்சிக்கிட்டு
சாமி சரண நாம மந்திரம் பாடிகிட்டு
ஐயப்பா திந்திமிக்கு சாமியே திந்திமிக்கு
ஜிகுதாளம் போட்டுகிட்டு, பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உன்னைக்காண வந்தோமையா (வந்தோ)

காட்டானை கூட்டத்தை கண்ணார கண்டுக்கிட்டு
கடுவாய் புலிகளை பார்த்துக்கிட்டு
சாமி சரணம் ஐயப்ப சரணம் பாடிக்கிட்டு
ஐயப்ப திந்திமிக்கு சாமியே திந்திமிக்கு
ஜிகுதாளம் போட்டுகிட்டு, பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உன்னைக்காண வந்தோமையா (வந்தோ)

பம்பா நதியினில் குளித்து விட்டு
பாவங்களை அறவே போக்கிவிட்டு
பக்தியுடன் உந்தன் நாமம் பாடிகிட்டு
ஐயப்ப திந்திமிக்கு சாமியே திந்திமிக்கு
ஜிகுதாளம் போட்டுகிட்டு, பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உன்னைக்காண வந்தோமையா (வந்தோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலை என்று ஒரு மலை

சபரிமலை என்று ஒரு மலை யிருக்குதாம் அங்கு
சகலரையும் காக்கும் தெய்வம் குடியிருக்குதாம்
அபயமென்று சொல்பவர்க்கு அருள்கொடுக்குதாம் - இந்த
அவனியெல்லாம் அவன்புகழே நிறைந்திருக்குதாம்

பம்பை நதியில் மூழ்கிவந்தால் பாவம் விலகுதாம் - நம்மை
பார்ப்பவர்கள் வியக்கமேனி அழகு பெருகுதாம்
நம்மை நாமே மறந்துவிடும் நிலைமை தெரியுதாம் - துன்பம்
நம்மைக் கண்டு அஞ்சி அஞ்சி ஓடி மறையுதாம்

இருமுடியைத் தாங்கிப்பலர் நடந்து செல்லும் வழியில் அவர்
ஐயப்பனே சரணம் என்று முழங்குகின்ற ஒலியிலே
கரடி புலி யானை யாவும் நிறைந்திருக்கும் மலையிலே ஏதும்
தொல்லை தர இதுவரையும் வந்ததில்லை எதிரிலே

## மஞ்சள் மாதா

மஞ்சள் மாதா எங்கள் மஞ்சள் மாதா
மாளிகைப் புரத்தம்மா மஞ்சள் மாதா
மாயகையிலே உருவெடுத்த மஞ்சள் மாதா
உந்தன் மக்கள் குறை தீர்ப்பவளே மஞ்சள் மாதா
(மஞ்சள் மாதா)

மகிஷி என்று மோகினியாய் மஞ்சள் மாதா - நீ
மாடு ரூபம் எடுத்து வந்தாய் மஞ்சள் மாதா
ஐயனுடன் போர் புரிந்தாய் மஞ்சள் மாதா நீ
அடுத்து ரூபம் எடுத்து விட்டாய் மஞ்சள் மாதா
(மஞ்சள் மாதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் பாதம் பட்டவுடன் மஞ்சள் மாதா - நீ
லீலாவதி ஆகிவிட்டாய் மஞ்சள் மாதா
ஐயனிடம் தஞ்சமடைந்தாய் மஞ்சள் மாதா
அதற்கு அவன் இசையவில்லை மஞ்சள் மாதா - ஆனால்
(மஞ்சள் மாதா)

கன்னிச்சாமி வரலையின்னா மஞ்சள் மாதா உன்
கழுத்தில் மாலையிடுவதாக மஞ்சள் மாதா
ஐயனுமே சொல்லிவிட்டார் மஞ்சள் மாதா
அதற்கு நீயும் காத்திருக்காய் மஞ்சள் மாதா
(மஞ்சள் மாதா)

மணிகண்டன் உரைத்த மொழி மஞ்சள் மாதா
மலைமேலே கேட்டதம்மா மஞ்சள் மாதா
ஆண்டுக்கொரு முறையும் மஞ்சள் மாதா - நீ
ஆரவாரத்துடன் வாராய் மஞ்சள் மாதா
(மஞ்சள் மாதா)

மகரஜோதி அன்று நீ மஞ்சள் மாதா
மணிகண்டனைப் பார்க்க வாராய் மஞ்சள் மாதா
சரங்குத்தி மேட்டினிலே மஞ்சள் மாதா - அங்கே
சரங்கள் வந்து குவிந்ததென்ன மஞ்சள் மாதா
(மஞ்சள் மாதா)

தேங்கியிருந்த எண்ணமெல்லாம் மஞ்சள் மாதா
தேங்காய் போல் ஆனதென்ன மஞ்சள் மாதா - விடலை
கன்னிச் சாமிகள் வந்துவிட்டார் மஞ்சள் மாதா
உன் கன்னி ரூபம் நிலைக்கும் அம்மா மஞ்சள் மாதா
(மஞ்சள் மாதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ம் படி பூப்பாடல்

1 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
பவளமல்லி பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
தன்னான்னே தன்னான்னே திந்தக்க திந்தக்க
திந்தக்கத்தோம்.

2 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
பவளமல்லி பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

3 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
செம்பருத்தி பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

4 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
குங்குமப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தன்னான்னே)

5 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
சம்மங்கி பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

6 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
தும்பைப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

7 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
அரலிப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

8 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
இருவாச்சி பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

9 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
மனோரஞ்சிதம் பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தன்னான்னே)

10 - ம் படி  தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
கனகாம்பரம் பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

11 - ம் படி  தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
சாதிப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

12 - ம் படி  தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
மல்லிகைப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

13 - ம் படி  தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
மகிழம்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

14 - ம் படி  தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
செண்பகப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தன்னான்னே)

15 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
நந்தியாவட்டை பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

16 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
ரோஜாப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

17 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
சாதிப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)

18 - ம் படி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
தாமரைப்பூ பறித்துத் தாறேன்
எங்ககூட வாரியா
(தன்னான்னே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இரு மூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்தஸ்வரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே (1)

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே (2)

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக (3)

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருவாய்
பூரணை நாதனே வருக வருக
புண்ணியமூர்த்தியே வருக வருக (4)

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக (5)

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக (7)

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப்பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே (8)

சபரிகிரீசனை நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே கூறிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே (9)

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்க ளெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர் (10)

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (11)

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமூர்த்தி மைந்தன் என் இரு செவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க (13)

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க (14)

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க (15)

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா தொடையினைக்காக்க (16)

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க (17)

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க (18)

மாலின் மகனார் மாலையில் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க (19)

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க (20)

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழித்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க (21)

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் (22)

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பா (23)

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தி பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்
என்றும் காப்பாய் எரிமேலி தேவா (24)

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா (25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச்சர்யமெனும் அறுபெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் (26)

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம் லோபம் துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் (27)

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினமும் சொல்ல அருள் தருவாயே (28)

**நமஸ்காரம்**

அரிஹர புத்ரா அன்பனே நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ (29)

பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியமா நமோ நமோ
கரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ (30)

சரணம் சரணம்சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் (31)

(பிரம்மாண்ட புராணத்தில் கேரளீய மஹாத்மியதத்தில் ஸ்ரீ பரசுராமரால் ஐயப்பனைத் துதிக்கப்பட்ட கவசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை, மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.

## ஶ்ரீ தர்மசாஸ்தா அஷ்டோத்தர சத நாமாவளிகள்

ஆஸ்யாம கோமள விசால தனும் விசித்ர
வாஸோர வஸனம் அருணோத்பல தாம ஹஸ்தம
உத்துங்க ரத்ன மகுடம் குடிலாக்ர கேசம்
சாஸ்தாரம் இஷ்ட வரதம் சரணம் பிரபத்யே

ஓம் மஹா சாஸ்தாரம் நம:
ஓம் விஸ்வ சாஸ்த்ரே நம:
ஓம் லோக சாஸ்த்ரே நம:
ஓம் தர்ம சாஸ்த்ரே நம:
ஓம் வேதசாஸ்த்ரே நம:
ஓம் காலசாஸ்த்ரே நம:
ஓம் கஜாதிபாய நம:
ஓம் கஜாரூடாய நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் வ்யாக்ராரூடாய நம:
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் கோப்த்ரே நம:
ஓம் கீர்வாணஸம்ஸேவ்யாய நம:
ஓம் கதாதங்காய நம:
ஓம் குணாக்ரண்யே நம:
ஓம் ருக்வேதரூபாய நம:
ஓம் நக்ஷத்ராய நம:
ஓம் சந்திரரூபாய நம:
ஓம் வலாஹகாய நம: 20
ஓம் மஹாரூபாய நம:
ஓம் க்ரூரதிருஷ்டியே நம:
ஓம் அனாமயாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | த்ரிநேத்ராய | நம: |
| ஓம் | உத்பலாகார | நம: |
| ஓம் | காலகந்த்ரே | நம: |
| ஓம் | நராதிபாய | நம: |
| ஓம் | கண்டேந்துமௌளிதனயாய | நம: |
| ஓம் | கல்ஹார குஸுமப்ரியாய | நம: |
| ஓம் | மதனாய | நம: |
| ஓம் | மாதவக்தாய | நம: |
| ஓம் | மந்தாரகுஸுமார்ச்சிதாய | நம: |
| ஓம் | மஹாபலாய | நம: |
| ஓம் | மஹோத்ஸாஹாய | நம: |
| ஓம் | மஹாபாப விநாசனாய | நம: |
| ஓம் | மஹாசூராய | நம: |
| ஓம் | மஹாதீராய | நம: |
| ஓம் | மஹாஸர்ப்பவிபூஷணாய | நம: |
| ஓம் | அஸிஹஸ்தாய | நம: |
| ஓம் | சரதராய | நம: |
| ஓம் | ஹாலாஹல தராத்மஜாய | நம: |
| ஓம் | அர்ஜுனேஸாய | நம: |
| ஓம் | அக்னிநயனாய | நம: |
| ஓம் | அனங்கமதனாதுராய | நம: |
| ஓம் | துஷ்டக்ரஹாதிபாய | நம: |
| ஓம் | ச்ரீதாய | நம: |
| ஓம் | சிஷ்டாரக்ஷண தீக்ஷிதாய | நம: |
| ஓம் | கஸ்தூரீ திலகாய | நம: |
| ஓம் | ராஜசேகராய | நம: |
| ஓம் | ராஜஸத்தமாய | நம: |
| ஓம் | ராஜாஜார்ச்சிதாய | நம: |
| ஓம் | விஷ்ணுப்தராய | நம: |
| ஓம் | வனஜநாதிபாய | நம: |
| ஓம் | வாசஸ்கராய | நம: |
| ஓம் | வரருசயே | நம: |
| ஓம் | வரதாய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | வாயுவாஹனாய | நம: |
| ஓம் | வஜ்ரகாயாய | நம: |
| ஓம் | கட்கபாணயே | நம: |
| ஓம் | வஜ்ரஹஸ்தாய | நம: |
| ஓம் | பலோத்ததாய | நம: |
| ஓம் | த்ரிலோகக்ஞாய | நம: |
| ஓம் | அதிபலாய | நம: |
| ஓம் | புஷ்களாய | நம: |
| ஓம் | வ்ருத்பாவனாய | நம: |
| ஓம் | பூர்ணாதவாய | நம: |
| ஓம் | புஷ்களேசாய | நம: |
| ஓம் | பயாபஹராய | நம: |
| ஓம் | பட்காரரூபாய | நம: |
| ஓம் | பாபக்னாய | நம: |
| ஓம் | பாஷண்டருதிராசனாய | நம: |
| ஓம் | பஞ்சபாண்டவசந்தாத்ரே | நம: |
| ஓம் | பரபஞ்சாக்ஷராச்ரிதாய | நம: |
| ஓம் | பஞ்சவக்த்ரசுதாய | நம: |
| ஓம் | பூஜ்யாய | நம: |
| ஓம் | பண்டிதாய | நம: |
| ஓம் | பரமேஸ்வராய | நம: |
| ஓம் | பவதாபப்ரசமனாய | நம: |
| ஓம் | பக்தாபீஷ்ட ப்ரதாயகாய | நம: |
| ஓம் | கவயே | நம: |
| ஓம் | கவீனாமதிபாய | நம: |
| ஓம் | க்லேசநாசனாய | நம: |
| ஓம் | யமாய | நம: |
| ஓம் | அரூபாய | நம: |
| ஓம் | ஸேனான்யே | நம: |
| ஓம் | பக்தஸம்பத்ப்ரதாய | நம: |
| ஓம் | வ்யாக்ரசர்மதராய | நம: |
| ஓம் | சூலினே | நம: |
| ஓம் | கபாலினே | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | வேணுவாதனாய | நம: |
| ஓம் | கலாரவாய | நம: |
| ஓம் | கம்புகண்டாய | நம: |
| ஓம் | கிரீடாதி விபூஷிதாய | நம: |
| ஓம் | தூர்ஜடயே | நம: |
| ஓம் | வீரநிலையாய | நம: |
| ஓம் | வீராய | நம: |
| ஓம் | வீரேந்திரவந்திதாய | நம: |
| ஓம் | விஸ்வரூபாய் | நம: |
| ஓம் | வ்ருஷபதயே | நம: |
| ஓம் | விவிதார்த்தபலப்ரதாய | நம: |
| ஓம் | தீர்க்கநாஸாய | நம: |
| ஓம் | மஹாபாஹவே | நம: |
| ஓம் | சதுர்பாஹவே | நம: |
| ஓம் | ஜடாதராய | நம: |
| ஓம் | ஸனகாதிமுனிஸ்ரேஷ்டதுத்யாய | நம: |
| ஓம் | ஹரிஹராத்மஜாய | நம: |
| ஓம் | மஹாஸாஸ்த்ரே | நம: |

நானாவித பத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி
ஸ்வாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
# நூற்றெட்டு சரணக்கோவை

| | |
|---|---|
| ஓம் கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் உண்மைப்பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊழ்வினைகள் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எங்கள் குல தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏழைப்பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கலியுகவரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவன்மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோவில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலை கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேருத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந்தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதிக்கு திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சிமேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக்குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்தசாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கற்பூரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் நாகராஜப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்னிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குருநாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்களமூர்த்தியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பசாமி பாடல்கள்

## கறுப்பன் வாறான்

கறுப்பன் வாறான் கறுப்பன் வாறான் கறுப்பசாமி
அவன் கார்மேகம் போல வாரான் கறுப்பசாமி
முக்கொண்டைக்காரன் வாறான் கறுப்பசாமி
அவன் முற்கோபக்காரன் வாறான் கறுப்பசாமி
பம்பா நதி காவல்காரன் கறுப்பசாமி
அந்த பதினெட்டு படிகாவல் கறுப்பசாமி
சந்தனப்பொட்டுக்காரன் கறுப்பசாமி
அந்த சபரிமலை காவல்காரன் கறுப்பசாமி
கச்சையைக் கட்டிவாறான் கறுப்பசாமி
அவன் கை அரிவாள் கொண்டு வாறான் கறுப்பசாமி
வில்லுப்பாட்டு பாடி வாறான் கறுப்பசாமி
அவன் விதவிதமாய் ஆடிவாறான் கறுப்பசாமி
மீசையை முறுக்கி வாறான் கறுப்பசாமி
அவன் முச்சந்தியில் ஆடி வாறான் கறுப்பசாமி
பந்தம் கையில் பிடித்து வாறான் கறுப்பசாமி
முந்தியில் உருவமாம் கறுப்பசாமி
அவன் முகத்தழகை காட்டிவாறான் கறுப்பசாமி
சந்தனத்தை பூசிவாறான் கறுப்பசாமி
அவன் சரண கோஷம் போட்டு வாறான் கறுப்பசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பு கறுப்பு கறுப்பு கறுப்பு

கறுப்பு கறுப்பு கறுப்பு கறுப்பு கறுப்பண்ணசாமி
நல்ல விருப்பம் தந்து வாழ வைப்பான் கறுப்பண்ணசாமி (2)

வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி
வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி

வில்லும் வாளும் கையில் ஏந்தி வீர மணிகண்டனுடன்
வீரம் கொண்டு எழுந்து வீரமாக சிரிச்சுக்கிட்டு

வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி
வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி

கட்டிக்காக்கும் காவல் தெய்வம் கறுப்பண்ணசாமி
பதினெட்டுப் படியில வீற்றிருக்கும் கறுப்பண்ணசாமி

சட்டியில் நெருப்பெடுத்து கதிராடும் சாமி
மட்டில்லா பாசம் கொண்ட எங்க கறுப்பண்ணசாமி

வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி
வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி

ஐயப்பனின் பூசையில் கலந்து கொள்ளும் சாமி
ஆவோமாய் ஆடிக்கிட்டு ஆதரிக்கும் சாமி (2)
சங்கெடுத்து ஊதினாலே பில்லி சூன்யம் ஓடும்
கறுப்பு கறுப்பு கறுப்பு கறுப்பு கறுப்பண்ணராமி

சங்கெடுத்து ஊதினாலே பில்லி சூன்யம் ஓடும்
வீரமணி கண்டனின் உள்ளம் துள்ளி துள்ளி ஆடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார் வருகிறார் கருப்பசாமி
வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி
கன்னிசாமி பரமசாமி குருசாமிமார்களும்
கட்டும் கட்டி வீட்டை புறப்படும்போது

தேங்காய் உடைக்கும் சத்தம் கேட்டு
கறுப்பன் ஓடி வாராரு

நாம் குடும்பத்தை கட்டிக்காக்க
வீட்டில் தங்குவாரு

வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி
வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி

எருமேலியில் ஒன்று கூடி பேட்டை துள்ளும் போது
நம்முடனே சேர்ந்து கொண்டு கறுப்பன் ஆடுவாரு

சாமி திந்தகத்தோம் தோம் ஐயப்பதிந்தகத்தோம் தோம்
ஐயப்ப திந்தகத் தோம் தோம் சாமி திந்தகத்தோம்
நம்முடன் சேர்ந்து கொண்டு கறுப்பன் ஆடுவாரு
மானுசடையும் தேர்ச்சியமாய் இருளும் சூழ வாராரு
அகத்தியரின் பாதம் பணிந்து உபதேசம் கொள்வாரு

வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி
வருகிறார் வருகிறார் கறுப்பண்ணசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்க கறுப்பு சாமி

எங்க கறுப்பு சாமி எங்க கறுப்பு சாமி
எங்க கறுப்பு சாமி எங்க கறுப்பு சாமி

அக்கினியில் பிறந்தவராம்
அரனாரின் மைந்தன் அவர் (எங்க கறுப்பு சாமி

முக்கொனர்டை காரரவன் - முன்கோபக்
காரன் அவன்
சந்தனப் பொட்டுக்காரன், சபரிமலை
காவல் காரன் (எங்க கறுப்பு சாமி

சடைமுடிக் காரன் அவன், சுவாமிகளை காத்திடுவான்
சல்லடையை கட்டு வாரான், சாஞ்சி சாஞ்சி ஆடி வாரான்
(எங்க கறுப்பு சாமி

வில்லுப்பாட்டு பாடிவாரான்,
விதவிதமாய் ஆடி வாரான் (எங்க கறுப்பு சாமி

பந்தம் கையில் பிடிச்சு வாரான்,
பாரி வேட்டை ஆடி வாரான் (எங்க கறுப்பு சாமி

அச்சங்கோவில் ஆண்டவர்க்கு எழிலாக இருப்பவனாம்
பதினெட்டுப் படிகளுக்கும் காவலாக இருப்பவனாம்
(எங்க கறுப்பு சாமி

கச்சையை கட்டி வாறான், கையறுவா காட்டி வாறான்
மீசையை முறுக்கி வாறான், முச்சந்தியில் நடந்து வாறான்
(எங்க கறுப்பு சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாளி வீரனுக்கு வீரமணி கண்டனுக்கு
இருமுடியை சுமக்கும்போது பாதுகாக்க வருபவனாம்
(எங்க கறுப்பு சாமி

கற்பூர ஆணி முன்னே, கடவுளாக நின்றிடுவான்
கறுப்பு வேட்டி கட்டிக்கிட்டு, பாவங்களைப் போக்கிடுவான்
(எங்க கறுப்பு சாமி

எங்க கறுப்பன் வாறான் - எங்க கறுப்பு சாமி
கார்மேகம் போல வாறான் - எங்க கறுப்பு சாமி

அந்தாவாறான் இந்தாவாறான் - கறுப்பு சாமி
நாகவழி கொண்டு வாறான் - கறுப்பு சாமி
முன்கோபக் காரன் வாறான் - கறுப்பு சாமி
அருவாலு தூக்கி வாறான் - கறுப்பு சாமி
ஜவ்வாது வாசக் காரன் - கறுப்பு சாமி
வெள்ளிப் பிரம்பு கொண்டு வாறான் - கறுப்பு சாமி
மேகமாக ஆடி வாறான் - கறுப்பு சாமி
வேகமாக ஓடி வாறான் - கறுப்பு சாமி
வாட்டசாட்டமாக வாறான் - கறுப்பு சாமி
பம்பா நதி தீர்த்தத்திலே - கறுப்பு சாமி
கறுப்பன் வரும் வேளையிலே - கறுப்பு சாமி
கரண்ட அளவு தண்ணியிலே - கறுப்பு சாமி
தள்ளிக்கொண்டு வாறானப்பா - கறுப்பு சாமி
சாமி முட்டளவு தண்ணியிலே - கறுப்பு சாமி
மூழ்கி கொண்டு வாறானப்பா - கறுப்பு சாமி
அரையளவு தண்ணியிலே - கறுப்பு சாமி
கருப்புசாமி நீந்தி வாறார் - கறுப்பு சாமி
அந்தளவு தண்ணியிலே - கறுப்பு சாமி
பங்காரமா ஓடி வாறார் - கறுப்பு சாமி
எங்க கருப்பன் ஓடி வாறான் - கறுப்பு சாமி
பம்பையிலே குளிச்சி வாறான் - கறுப்பு சாமி
பாங்காக வாறான் ஐயா - கறுப்பு சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தா வாறான் இந்தா வாறான் - கறுப்பு சாமி
பெரியானை வட்டம் வாறான் - கறுப்பு சாமி
சிறியானை வட்டம் வாறான் - கறுப்பு சாமி
கரிமலையில் ஏறி வாறான் - கறுப்பு சாமி
பகவதியை வணங்கி வாறான் - கறுப்பு சாமி
இளவந்தவனை கடந்து வாறான் - கறுப்பு சாமி
சாமி முக்குழிய தாண்டி வாறான் - கறுப்பு சாமி
அழுதாமேடு உச்சி வாறான் - கறுப்பு சாமி
காளைகட்டி தொட்டு வாறான் - கறுப்பு சாமி
சாமி பூங்காவனம் புகுந்து வாறான் - கறுப்பு சாமி
எருமேலி வாறானப்பா - கறுப்பு சாமி
வாபர் சாமி கூட வாறார் - கறுப்பு சாமி

## வசனம்

எருமேலி வந்து இறங்கிய கறுப்பன் சுற்றும் முற்றும் பார்க்க, எம்பெருமான் கறுப்பனுக்கு மலர்களென்றால் கொள்ளை பிரியம் அவர் மலர்களால் சல்லடை கட்டி வருகின்ற வேளையில் ஆ.. ஆ...ஆ.. ஆ..... காணக் கண்கள் கோடி வேண்டும். அவை என்னென்ன மலர்கள் என்று கேட்டால்,

எடுத்து வைக்கும் கால்களுக்கு சாமந்தி சல்லடையாம்
முன்னே வைக்கும் கால்களுக்கு முல்லம்பூ சல்லடையாம்
பின்னே வைக்கும் கால்களுக்கு பிச்சிப்பூ சல்லடையாம்
அருகில் வைக்கும் காலகளுக்கு அலரிப்பூ சல்லடையாம்
துள்ளி வைக்கும் கால்களுக்கு துளசியாலே சல்லடையாம்
வீசி வைக்கும் கால்களுக்கு குந்தத்தாலே சல்லடையாம்
துள்ளி வைக்கும் கால்களுக்கு அருகம்பூ சல்லடையாம்

உச்சந்தலை கட்டி வாறான் - கறுப்பு சாமி
புலியாட்டம் ராஜா வாறான் - கறுப்பு சாமி
சபரிமலை காவல்காறன் - கறுப்பு சாமி
பங்காரமாய் ஓடி வாரான் - கறுப்பு சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டு எல்லையிலே - கறுப்பு சாமி
தாண்டி தாண்டி வாறானய்யா - கறுப்பு சாமி
செங்கோட்டை கறுப்பன் வாரான் - கறுப்பு சாமி
தென்காசி சுடல வாறான் - கறுப்பு சாமி
ஆம்பூட்டு கடல வாறான் - கறுப்பு சாமி
சாக்கு மர முரட்டன் வாறான் - கறுப்பு சாமி
அங்காரமாய் வாறான் ஐயா - கறுப்பு சாமி
ஆவேசமாய் வாறான் ஐயா - கறுப்பு சாமி
காவலாளி வாறான் ஐயா - கறுப்பு சாமி
பாவநாசம் கோட்டைக்குள்ளே - கறுப்பு சாமி
மனப்பேச்சி கூட வாரான் - கறுப்பு சாமி

**வசனம்**

தேவர்கள் மலர் சொரியும் சொரிமுத்து ஐயனார் கோயிலில் வந்து இறங்கிய எம்பெருமான் கறப்பன். யார் யாரை வணங்குகின்றான் என்று கேட்டால்,

என்னன்னா சட்டாநாத சாமியே
திருமகாலிங்க சாமியாரே ஐயப்போ
தட்சிணா மூர்த்தி சாமி சாமியே
சங்கிலிப் பூதத்தாரே ஐயப்போ
பாதாள பூதத்தாரே சாமியே
மேல்வாசல் பூதத்தாரே சாமியே
சுடர்மாடன் சாமிகளே ஐயப்போ
தலவாய்மான சாமிகளே சாமியே
உண்டிமாடன் சாமிகளே ஐயப்போ
பள்ளிமாட சாமிகளே சாமியே
உக்கிரகாளி தாயாரே சாமியே
வடபேச்சி தாயாரே ஐயப்போ
ஐக்கம்மா தாயாரே சாமியே
வண்டிமலைச்சி தாயாரே சாமியே
கட்டராயன் சாமியாரே சாமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரடிமான சாமியாரே சாமியே
அகஸ்திய மாமுனியும் ஐயப்போ
அங்கரமாய் காட்சி தந்தாய் சாமியே
அகஸ்திய மாமுனியும் ஐயப்போ

**வசனம்**

இப்படியாக தரிசித்துக்கொண்டு வந்த எம்பெருமான் கருப்பன் இந்த ஐயப்பன் பூஜைக்கு வருவதற்கு ஆவல் கொண்டு கன்னிமாரையம், சாமிமாரையம், ஐயப்பமாரையும் மாளிகப்புரங் களையும், ஆன்மீக நெஞ்சங்களையும் வாழ்த்தி ஆருள வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இந்த ஐயப்பன் பூஜைக்கு கறுப்பன் வருகின்றான். பங்காளமாய், பரவசமாய், உக்கிரமாய் ஓடி வருகிறான்

எங்க கறுப்புசாமி... எங்க கறுப்புசாமி
கறுப்பன் வாறான் கறுப்பன் வாறான் கறுப்புசாமி
பங்காரமாய் ஓடி வாறான் கறுப்புசாமி
கறுப்பன் வாறான் கறுப்பன் வாறான் கறுப்புசாமி
பங்காரமாய் ஓடி வாறான் கறுப்புசாமி
ஆவேசமாய் தேடி வாறான் கறுப்புசாமி
கறுப்பன் வாறான் கறுப்பன் வாறான் கறுப்புசாமி
(எங்க கறுப்புசாமி)

சாமியே சரணம் ஐயப்போ
கறுபண்ண சாமியே சரணம் ஐயப்போ
சற்குரு நாதனே சரணம் ஐயப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பண்ண சாமி

கருப்பண்ண சாமி ஐயா கருப்பண்ண சாமி
சங்கிலிக்காரன் ஐயா கருப்பண்ண சாமி

வெள்ளைக் குதிரையேறி வாறாரே
எங்கள் குல தெய்வத் தோழன் கருப்பனே
காடு மேடு தாவி வாறாரே
எருமேலி கோவக்காரன் கருப்பனே
வேட்டையுமாடி பேட்டையும் துள்ளி வீரமாய் வந்தானே
ஆதியுமாகி ஜோதியுமாகி பாதையாய் நின்றானே
சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம், ஐயப்பா
சரணம், சரணம் சரணம் சரணம் சரணம் ஐயப்பா
(கருப்பண்ண சாமி

கறுத்த வைரமே - ஐயா கருப்பண்ண சாமி
கருப்பு சகரமே - ஐயா கருப்பண்ண சாமி
கருப்பண்ண சாமி ஐயா கருப்பண்ண சாமி
சிங்க நடைபோட்டு வாறாரோ
நீலிமலைத் தோப்புக்காரன் கருப்பனே
புலிகள் புடை சூழ வாறாரே
காந்தமலை கூத்துக்காரன் கருப்பனே
பெரியானை வட்டம், சிறியானை வட்டம் வேட்டைக்கு வாறாரே
சந்திரன் போல, சூரியன்போல கோட்டைக்குப் போவாரே
சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம், ஐயப்பா
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம், ஐயப்பா
(கருப்பண்ண சாமி)

வேட்டுச் சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி
அது சலங்கை சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி
காட்டுச் சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி
எங்க பாட்டுச் சத்தமே - ஐயா கருப்பண்ண சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டம் கிடுகிடுங்க வாரானே
அப்பாச்சி மேட்டுக்காரன் கருப்பனே
வானம் கிடுகிடுங்க வாரானே
இரும்புக் கோட்டைக்காரன் கருப்பனே
ஆட்டத்தை ஆடி, கூட்டத்தைத் தேடி காவலனாய் வாரானே
ஆனந்தமாகி தாண்டவமாடி காவலாய் நின்றானே
சாமி சரணம் சாமி சரணம், சாமி சரணம், சாமி சரணம் ஐயப்பா சரணம்
சரணம், சாமி சரணம், சரணம், சரணம்

(கருப்பண்ண சாமி

கருப்பு கருப்பு - கருப்பு.. கருப்பு (கருப்பண்ண சாமி

கறுப்பு சட்டையே - ஐயா கருப்பண்ண சாமி
அது முரட்டு மீசையே ஐயா கருப்பண்ண சாமி
பட்டையக்காரனே - ஐயா கருப்பண்ண சாமி
எங்க பந்தக்காரனே ஐயா கருப்பண்ண சாமி
அழுதா மலையே வாரானே
அங்க மலைக்காத்துப் போல கருப்பனே
கரிமலை இறக்கம் ஓடி வாரானே
ஆனமலை வேட்டுக்காரன் கருப்பனே
சாமிகளோடு சந்தனமாகி சாட்சியும் சொன்னானே
சந்தனத்தோடும் குங்குமத்தோடும் காட்சியும் தந்தானே
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம்
சரணம், சரணம், சாமி சரணம், சரணம், சரணம், ஐயப்பா

(கருப்பண்ண சாமி

மகர ஜோதியே - ஐயா கருப்பண்ண சாமி
மனச உருக வைக்கிறியே - ஐயா கருப்பண்ண சாமி
ஐயா கருப்பண்ண சாமி - ஐயா கருப்பண்ண சாமி
பதினெட்டுப்படிவீரன் வாரானே - கொடிமரக் காப்புக்கட்டி கறுப்பனே
சரங்குத்தி ஆட்டமாடி வாரானே - பெரிய பாதையழகன் கருப்பனே

(கருப்பண்ண சாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டாம் படிப்பாடல்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பதினொராம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பன்னிரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பதிநான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

படிதொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில் லையப்பா

ஓம் சத்தியமான பொன்னு பதினெட்டு
படிகளே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்தா ஆராத்தி தீபமங்களம்

1. தீப மங்கள ஜோதி நமோ நமோ
தூய மங்கள லீலா நமோ நமோ
தேவருஞ்சரிபாலா நமோ நமோ - அருள்தாராய்

02 ஆர்யவம்ச சுஜாதா நமோ நமோ
வீர்ய திவ்ய விலாசா நமோ நமோ
சாஸ்த்ரு தாள் குரு தேவா நமோ நமோ - பஹுகோடி

03. பூதவந்தித தேவா நமோ நமோ
பீதி நாசன ரூபா நமோ நமோ
மோஹனாம்புஜ பாதா நமோ நமோ - மணிகண்டா

04. ராஜசோழ வீரா நமோ நமோ
வாஜவாசன வாஹா நமோ நமோ
நீத நிருத்ய வினோதா நமோ நமோ - வீராதி வீரா

05. கோர ராம வினாஸா நமோ நமோ
வார நூபுரதாரி நமோ நமோ
ஜோதி சந்நதிபீடா நமோ நமோ - ஜயசீலா

06. நயன மங்கள ரூபா நமோ நமோ
தான சுந்தர வாசா நமோ நமோ
வாசவாள் சதர தேவா நமோ நமோ - நிர்லா நானா

07. காந்த துங்க நிவாஸா நமோ நமோ
காந்திக தேவா நமோ நமோ
தேவவந்த்ய கிரிசா நமோ நமோ - பரதேவா

08. மூலமந்த்ர சொரூபா நமோ நமோ
யத்ஹரூவா நமோ நமோ
புத்ரதாயக தேவா நமோ நமோ - வர பாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கேசவ சூனோ நமோ நமோ
பாஷஜன்ம வினாஸா நமோ நமோ
ஆர்த்தி நாஸனமூர்த்தே நமோ நமோ - திவ்யரூபா

10. தீபமங்கள ஜோதி நமோ நமோ
தூயசபரி கிரிஸா நமோ நமோ
பூரணை புஷ்களை நாதா நமோ நமோ - அருள் தாராய்

சுவாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்ம சாஸ்தா காயத்ரி

பூத நாதாய வித்மஹே
பவநந்தனாய தீமஹி
தந்நோ சாஸ்தா ப்ரசோதயாத்

## ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதி ஹருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

விப்ரபூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்பொப்ரியம் ஸுதம்
ஷிப்ர ப்ரலாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

மத்த மாதங்க கமனம்
காருண்யமாம்ருத பூரிதம்
ஸர்வ விக்னஹரம் தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்மத் குலேஸ்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட பர்சாதாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

பாண்யேச வம்ஸதிலகம்
கேரள கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

(சாமியே சரணம் ஐயப்பா)

பஞ்சரத்னாக்கியமே தத்யொ
நித்யசுத்தப்படேன் நரஹா
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சாஸ்தா வசதி மானஸே

(சாமியே சரணம் ஐயப்பா)

ஸ்ரீ பூத நாதா சதானந்த
ஸ்ர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாஹோ
ஸாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ

(சாமியே சரணம் ஐயப்பா)

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக்காத்து இரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொண்ணு பதினெட்டாம் படி மேல் வாழும், ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா, காசி ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம் இலங்கை யாழ்ப்பாண கந்தர்மடம் மணிகண்ட சபையை அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிநடைப்பாடல்

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமி சரணம் | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | சாமி சரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குன்றும் குழியும் |
| ஏந்திவிடப்பா | தூக்கிவிடப்பா |
| தூக்கிவிடப்பா | ஏந்திவிடப்பா |
| தாங்கி விடப்பா | ஏந்திவிடப்பா |
| ஏந்திவிடப்பா | தாங்கிவிடப்பா |
| கடினம் கடினம் | கரிமலை ஏற்றம் |
| கரிமலை ஏற்றம் | கடினம் கடினம் |
| பாதபலம்தா | தேகபலம்தா |
| தேகபலம்தா | பாதபலம்தா |
| கட்டு கட்டு | இருமுடி கட்டு |
| இருமுடி கட்டு | சபரிமலைக்கு |
| ரட்சிக்கணும் | ஐயப்பா |
| பாடுமலை கடினம் | ஐயப்பா |
| பம்பையின் பாலா | ஐயப்பா |
| பந்தளவேந்தா | ஐயப்பா |
| பாசவிநாசா | ஐயப்பா |
| சுவாமியே | ஐயப்பா |
| ஐயப்போ | ஐயப்பா |
| நெய்அபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | நெய் அபிஷேகம் |
| பாலபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | பாலபிஷேகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனபிஷேகம்
சுவாமிக்கே
பன்னீர் அபிஷேகம்
சுவாமிக்கே
கதளீபலமும்
சுவாமிக்கே
கற்பூரதீபம்
சுவாமிக்கு
கருடன் வருவது
சுவாமிக்கே
பகவானே
பகவதியே
தேவனே
தேவியே
ஈஸ்வரனே
ஈஸ்வரியே
காணிப்பொன்னும்
சுவாமிக்கே
ஆபரணப்பெட்டி
சுவாமிக்கு
பேட்டைத்துள்ளல்
சுவாமிக்கே
தேவனே
தேவியே
தேவன் பாதம்
தேவீ பாதம்
தேவன் சரணம்
தேவி சரணம்
பகவானே
பகவதியே
பகவான் பாதம்
பகவதி பாதம்
பகவான் சரணம்

சுவாமிக்கே
தேனபிஷேகம்
சுவாமிக்கே
பன்னீர் அபிஷேகம்
சுவாமிக்கே
கதளீபலமும்
சுவாமிக்கு
கற்பூரதீபம்
சுவாமிக்கே
கருடன் வருவது
பகவதியே
பகவானே
தேவியே
தேவனே
ஈஸ்வரியே
ஈஸ்வரனே
சுவாமிக்கே
காணிப்பொன்னும்
சுவாமிக்கு
ஆபரணப்பெட்டி
சுவாமிக்கே
பேட்டைத்துள்ளல்
தேவியே
தேவனே
தேவன் பாதம்
தேவீ பாதம்
தேவன் சரணம்
தேவி சரணம்
பகவதியே
பகவானே
பகவதி பாதம்
பகவான் பாதம்
பகவதி சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| ஈஸ்வரன் பாதம் | ஈஸ்வரி பாதம் |
| ஈஸ்வரி பாதம் | ஈஸ்வரன் பாதம் |
| ஈஸ்வரன் சரணம் | ஈஸ்வரி சரணம் |
| ஈஸ்வரி சரணம் | ஈஸ்வரன் சரணம் |
| தேவன்மாரே | தேவிமாரே |
| தேவிமாரே | தேவன்மாரே |
| பகவான்மாரே | பகவதிமாரே |
| பகவதிமாரே | பகவான்மாரே |
| ஈஸ்வரன்மாரே | ஈஸ்வரிமாரே |
| ஈஸ்வரிமாரே | ஈஸ்வரன்மாரே |
| சுவாமிமாரே | ஐயப்பன்மாரே |
| ஐயப்பன்மாரே | சுவாமிமாரே |
| சுவாமி பாதம் | ஐயப்பன் பாதம் |
| ஐயப்பன் பாதம் | சுவாமி பாதம் |
| ஐயப்பன் சரணம் | சுவாமி சரணம் |
| ஐயப்பன் சரணம் | சுவாமி சரணம் |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |

எப்போ போறோம் மலைக்கு
ஜோதிக்குப் போறோம் மலைக்கு
யாரைக்காண போறோம்
சுவாமியைக் காணப் போறோம்
சுவாமியைக் கண்டால் மோட்சம் கிட்டும்
எப்போ கிட்டும் - இப்போ கிட்டும்
எங்கே கிட்டும் இங்கே கிட்டும்
அணியோணும் அணியோணும் துளசிமாலை அணியோணும்
துளசிமாலை அணியோணும் அணியோணும் அணியோணும்
போடோணும் போடோனும் அன்னதானம் போடோணும்
அன்னதானம் போடோணும் போடோணும் போடோணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கணும் தெளிக்கணும் பன்நீரைத் தெளிக்கணும்
பன்நீரைத் தெளிக்கணும் தெளிக்கணும் தெளிக்கணும்
பூசோணும் பூசோணும் சந்தனத்த பூசோணும்
சந்தனத்த பூசோணும் பூசோணும் பூசோணும்
வேண்டோனும் வேண்டோனும் ஐயப்பன வேண்டோனும்
ஐயப்பன வேண்டோனும் வேண்டோனும் வேண்டோனும்
துள்ளோனும் துள்ளோனும் கன்னிச்சாமி துள்ளோனும்
கன்னிச்சாமி துள்ளோனும் துள்ளோனும் துள்ளோனும்
ஆடோனும் ஆடோனும் பேட்டை துள்ளல் ஆடோனும்
பேட்டை துள்ளல் ஆடோனும் ஆடோனும் ஆடோனும்
சுமக்கோனும் சுமக்கோனும் இருமுடியை சுமக்கோனும்
இருமுடியை சுமக்கோனும் சுமக்கோனும் சுமக்கோனும்
குளிக்கோணும் குளிக்கோணும் பம்பையில் குளிக்கோணும்
பம்பையில் குளிக்கோணும் குளிக்கோணும் குளிக்கோணும்
போகோணும் போகோணும் பெரியபாதை போகோணும்
பெரியபாதை போகோணும் போகோணும் போகோணும்
ஏறோனும் ஏறோனும் பதினெட்டுப்படிகள் ஏறோனும்
பதினெட்டுப்படிகள் ஏறோனும் ஏறோனும் ஏறோனும்
காணோணும் காணோணும் ஐயப்பன காணோணும்
ஐயப்பன காணோணும் காணோணும் காணோணும்
செய்யோனும் செய்யோனும் நெய்யபிஷேகம் செய்யோனும்
நெய்யபிஷேகம் செய்யோனும் செய்யோனும் செய்யோனும்
காணோணும் காணோணும் மகரஜோதி காணோணும்
மகரஜோதி காணோணும் காணோணும் காணோணும்
பார்க்காதே பார்க்காதே அக்கம் பக்கம் பார்க்காதே
அக்கம் பக்கம் பார்க்காதே பார்க்காதே பார்க்காதே
பேசாதே பேசாதே வீண்வார்த்தை பேசாதே
வீண்வார்த்தை பேசாதே பேசாதே பேசாதே

ஈப்பிஞ்சப்பா ஐயப்பா
லாலல் லோனா ஐயப்பா
லல்லல் லோனா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மாமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கே மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு மங்களம்
இபமுகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யப்பனுக்கு மங்களம்
வெற்றி தரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்
பம்பை நிதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்
கந்தர்மடம் தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
ஸ்ரீ ஐயப்பா மணிகண்ட சேவா சங்க மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம்
நித்திய சுப மங்களம் நித்திய சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிவராசனம்

(சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா)

ஹரிவராசனம் விஸ்வமோஹனம்
ஹரிததீஸ்வரம் ஆராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

சரணகீர்த்தனம் சக்தமாநசம்
பரணலோலுபம் நர்த்தநாலஸம்
அருணபாஸுரம் பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

ப்ரணயஸத்யகம் ப்ராணநாயகம்
ப்ரணத கல்பகம் ஸுப்ரபாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

துரகவாகனம் ஸுந்தரானனம்
வரகதாயுதம் வேதவர்ணிதம்
குருக்ருபாகரம் கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

த்ரிபுவநார்ச்சிதம் தேவதாத்மகம்
த்ரிநயனம் ப்ரபும் திவ்யதேசிகம்
த்ரிதஸபூஜிதம் சிந்திதப்ரதம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பவபயாபஹம் பாவுகாவகம்
புவனமோஹனம் பூதிபூஷணம்
தவளவாகனம் திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே*

*களம்ருதுஸ்மரிதம் ஸுந்தரானனம்
களபகோமளம் காத்ரமோகனம்
களபகேசரி வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே*

*ஸ்ருதஜனப்ரியம் சிந்திதப்ரதம்
ஸ்ருதிவிபூஷணம் ஸாதுஜீவனம்
ஸ்ருதிமனோகரம் கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே*

*(சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா)*

## மங்களம்

பஞ்சாத்றீஸ்வரி மங்களம் ஹரிஹரப் பிரேமாறுதே மங்களம்
பிஞ்சாலங்க்றுத மங்களம் ப்றணமதாம் சிந்தாமணி மங்களம்
பஞ்சாஸ்யத்வஜ மங்களம் த்றிஜகதாமாத்யப்பிறபோ மங்களம்
பஞ்சாஸத்றோபம் மங்களம் ஸ்றுதிசிறோலங்கார சன் மங்களம

ஓம் ஓம் ஓம்

ஓம் ஓம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரத நாட்களில் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பூஜைகளும் பூஜைக் கட்டுப்பாடுகளும்

பூஜைகள் : கார்த்திகை முதலாம் திகதி முதல் 41 நாட்கள் காலை 11.00 மணி தொடக்கம் நடைபெறும்.

எமது சபையின் ஆலயத்தில் அபிஷேகம் பூஜை, படிப்பூஜை, அன்னதானம் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன

யாழ்ப்பாணத்தில் ஐயப்ப பூஜைகள் நடைபெற்று வரும் ஆலயங்களான தட்டாதெரு ஐயனார் ஆலயம், கண்ணாகம் ஐயனார் ஆலயம் கோண்டாவில் சபரீச ஆலயம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயம் மல்லாகம் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், கட்டுவன் ஐயப்பன் ஆலயம் புன்னாலைக்கட்டுவன் ஆலயம், தாவடி ஐயப்பன் ஆலயம், கோப்பாய் மிரியன்தனை வைரவர் ஆலயத்தில் தீக்குளிப்பு, நாவற்குழி ஐயப்பன் ஆலயம், உரும்பிராய் சிவதர்ம சாஸ்த்தா ஆலயம், நவிண்டில் குலனைப் பிள்ளையார் ஆலயம், நவின்டில் சுந்தர ஐயப்ப ஆஞ்சனேயர் ஆலயம், அராலி ஐயனார் ஆலயம், வேலணை துறையூர் ஐயனார் ஆலயம் அனலைதீவு ஐயனார் ஆலயம், வடமராட்சி கற்கோவளம் ஐயனார் ஆலயம், சிறுவிளான் மணிகண்டர் ஆலயம், கிளிநொச்சி செல்வநாதன் ஐயப்பன் ஆலயம், திருமுருகண்டி பிள்ளையார் அன்னதான மண்டப சிறப்பு விழா பஜனை, வவுனியா கோயிற்குளம் ஐயனார் ஆலயம் செட்டிக்குளம் ஐயப்பன் ஆலயம், திருகோணமலை வில்லூன்றி கந்தசாமி ஆலயம் திருகோணமலை விநாயகர் ஆலயம், கொழும்பு மயூரதி அம்பாள் ஆலயம், அளுத்மாவத்தை ஐயப்பன் ஆலயம், ஜம்பட்டா வீதி காளி அம்பாள் ஆலயம், தம்பையா சத்திரம் ஸ்ரீ ஐயப்பன் ஆலயம் போன்ற இடங்களில் எமது சபையினால் பஜனைகள் செய்து வணங்கி ஐயன் அருள் பெற்று வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடுகள்

1. எமது சபையில் மாலை அணியும் சாமியார்கள் கார்த்திகை முதலாம் திகதி முதல் நடைபெறும் பூஜைகளில் நேரம் தவறாது கலந்து கொள்ளவேண்டும். ஏனைய நேரங்களில் ஐயப்பன் ஆலயங்களுக்கு சென்று ஐயன் அருளையும் ஏனைய குருசுவாமி களினதும் சுவாமிமார்களினதும் ஆசிகளைப் பெறவேண்டும்.

2. எமது விரத காலத்தில் காலை 11.00 மணி தொடக்கம் 2 மணி எமது ஆலய பூஜையை தவிர்த்து வேறு பூஜைக்கு செல்லல் ஆகாது.

3. எமது சபையில் மாலை இடும் சுவாமிமார்கள் அழைப்பிற்கு ஏற்ப, அனைத்து சக்தி பூஜைகளிலும், குரு சுவாமி பூஜைகளிலும், கன்னிப் பூஜைகளிலும் கலந்துகொள்ள வேண்டும்.

4. நெய் நிரப்பும் வைபவம் சபையின் சன்னிதானத்திலும், தென் இந்தியா சமயபுரம் ஆலயத்திலும் மட்டும் நடைபெறும்.

5. காலநேரத்திற்கு ஏற்ப மாற்றங்கள் குருசுவாமியும் சபையினரும் தீர்மானிப்பார்கள்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org